2927

T.N.L.A Debates

OFFICIAL REPORT

VOL: 22 NO: 3

April 17th 1986

V211, 31 N86
N86·22·3
136474

2927

வெளியீடு 26-12-1986] [Issued 26-12-1986

90 8/87

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 17, 1986 - தொகுதி 22 எண் 3

Thursday, 17th April 1986 - Volume 22 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George.
Madras - 600009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

தமிழ்நாடு ஆவணக்காப்பக நிலையம்
136474
சென்னை-600 008.
V211,31 N86
N86.22.3.

உள்ளடக்கம்

17–4–1986

| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள் : | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 418—463 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. | 464—489 |
| 2. தகவல் கோரல் : | |
| (அ) உள்ளாட்சி மன்றங்களுக்கு, தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிற உறுப்பினர்களுக்குள்ள உரிமைகளை நியமன உறுப்பினர்களுக்கும் அளித்தல் .. | 490 |
| (ஆ) உள்ளாட்சி மன்றக் கூட்டங்களில் கலந்து கொள்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் நிலை .. .. .. | 491 |
| 3. கவன ஈர்ப்புகள் : | |
| (அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் பகுதி உப்பு உற்பத்தியாளர்களது நிலைமை .. .. .. | 491—494 |
| (ஆ) வேடசந்தூர் வட்டம் ஆர். புதுக்கோட்டையிலுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து அங்குள்ள உயர் தொடக்கப் பள்ளிக்கு நேரடியாக குடிநீர் வழங்கல் .. .. .. | 494—496 |

பக்கங்கள்.

4. வரவு-செலவுத் திட்டம் 1986–87 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

| | |
|---|---|
| கோரிக்கை எண் 17—கல்வி .. .. | 496—572 |
| | 578—600 |
| மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் | 498—499 |
| | 530—513, 535 |
| | 559, 565 |
| | 568—571 |
| | 590—591 |
| திரு. ஏ. எஸ். ரவீந்திரன் .. .. | 498—502 |
| | 504—508 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 502—504 |
| திரு. செ. செம்மலை .. .. | 509—518 |
| திரு. பரிதி இளம்வழுதி .. .. | 518—523 |
| திரு. பாப்பா சுப்பிரமணியன் .. | 523—528 |
| திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் .. | 528—534 |
| | 541—544 |
| திரு. துரை அன்பரசன் .. .. | 544—547 |
| திரு. ஜே. முகம்மது கனி .. .. | 547—552 |
| திரு. குமரி அனந்தன் .. .. | 552—558 |
| திரு. கு. சுப்பராயன் .. .. | 578—591 |
| திருமதி தா. இராசாம்பாள் .. .. | 592—600 |
| 5. அறிவியல்-தொழில் நுட்பவியல் துறையின் செயல்பாடுகள் குறித்து தொழில் துறை அமைச்சரின் விளக்கம் .. .. | 572—578 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 600—601 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986, ஏப்ரல் 17, வியாழக்கிழமை,

சித்திரை 4, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும், அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்குத் தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மின்வாரியத்தில் வேலைப்பளு.**

480—(*வினா எண். 3652) டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சார வாரியத்தில் பணியாற்ற தேவையான அளவு ஊழியர்கள் இல்லாத குறை இருப்பது பற்றி அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது உடனடியாக நிவர்த்தி செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) மற்றும் (ஆ) அண்மையில் தமிழ்நாடு மின்வாரியத்தின் ஊழியர்கள் வேலைப்பளு சீரமைப்பு செய்யப்பட்டு தொழிலாளர் சங்கங்களுடன் உடன்பாடு காணப்பட்டுள்ளது. அதன்படி, போதுமான ஊழியர்கள் வாரியப் பணிகளைக் கவனிக்க அமர்த்தப்பட்டுள்ளனர்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரக் கம்பங்கள் நடுவதற்கும், மின்சாரக் கம்பிகள் இழுப்பதற்கும் தினக் கூலி அடிப்படையில் நியமிக்கப்பட்டு பல ஆண்டு காலமாக தற்காலிகமாக வேலை செய்து வரும் கூலிகளை மின்சார வாரியம் நிரந்தரமாக்க ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ? ஒரேசமயத்தில் அவர்களை நிரந்தரமாக்க முடியவில்லை என்றாலும், ஆண்டுக்கு கொஞ்சம் பேர்களையாவது நிரந்தரமாக்கி அவர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ? அப்படிப்பட்ட திட்டம் ஏதேனும் அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தர இயலும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தில் எவ்வளவு தூரத்திற்கு நிரந்தரத் தொழிலாளிகளை குறைக்க முடியுமோ அந்த அளவுக்கு குறைக்கக் கூடியதுதான் இந்த மின்வாரியத்தின் திட்டம் என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா ? ஏற்கனவே 23 ஆயிரம் போஸ்ட்கள் காலியாக இருக்கின்றன. அவைகளை நிரப்புவதில்லை என்று முடிவுக்கு வந்திருக்கிறது. அதனால் ஒட்டுமொத்தமாக மின்சாரவாரியத்தில் எத்தனை பர்மனென்ட் போஸ்ட்கள் இருக்கிறதோ அத்தனை இடங்களிலும் தொழிலாளர்களை நிரந்தரமாக்குகின்ற ஒரு முறையைக் கையாண்டு, அதற்குமேல் தேவையிருந்தால் அவர்களை வேறு ஏதாவது முறையிலே அங்கே வேலையிலே அமர்த்துவதற்கு அரசு முன் வருமா ? தொழிலாளர்களுக்கு அப்படி ஒரு நியாயம் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, வேலைக்கேற்ப ஆட்களை நியமிப்பதுதான் நடைமுறை. வேலைகளை வைத்துக்கொண்டு ஆட்களைக் குறைக்க வேண்டுமென்பது வாரியத்தினுடைய கொள்கையாக இருக்க முடியாது. நான் ஏற்கனவே தெரிவித்த பதிலின்படி போதுமான அளவு ஆட்கள் இப்போது இருக்கின்றார்கள் என்ற தகவலை மின்சார வாரியம் தந்துள்ளது. கூடுதல் பணியாளர்கள் நியமிக்க வேண்டிய அவசியம் வந்தால் மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்கும்.



திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்திற்குத் தேவையான ஆட்களை தேர்ந்தெடுக்கிறபோது அதற்கென்று மின்சார வாரியத்திற்கு ஆலோசனை சொல்வதற்கும், தகுதி மற்றும் பிற்பட்ட நிலை அல்லது வாரிசுதாரர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது மற்றும் இதுபோன்றவற்றைப் பரிசீலிப்பதற்காக அரசாங்கம் ஏதாவது குழுவை நியமித்து இருக்கிறதா ? எந்த அடிப்படையில் மின்வாரியம் ஆட்களை தேர்வு செய்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, ஆட்களை நியமிப்பது மின்சார வாரியத்தினுடைய முழு அதிகார எல்லைக்குட்பட்டது. அரசு அதிலே தலையிடுவதில்லை. மின்சார வாரியம் ஆட்களை எப்படி நியமிக்கிறது என்பதைப்பற்றி சட்டமன்றத்தின் சார்பிலே, இத்தகைய பொது நிறுவனங்களை ஆய்வதற்கென்று பொது நிறுவனங்கள் குழு ஒன்றைச் சட்டமன்றம் அமைத்திருக்கிறது. இத்தகைய நிறுவனங்கள், அரசின் கொள்கைகளை அமல்படுத்துகின்றனவா என்பது போன்ற நடவடிக்கைகளை அந்தப் பொது நிறுவனங்கள் குழுவின் மூலமாக மின்சாரவாரியத்திடமிருந்து பெறுவதற்கு இயலும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறைக்கு ஆட்கள் தேவைப்படுகிற நேரத்தில், தற்போது பெண்கள் ஐ.டி.ஐ. படித்து விட்டு அவர்களும் பல தொழில் நுட்பங்களில் தேர்வு பெற்றிருக்கிறார்கள். ஆகவே போலீஸ் இலாக்கா, தபால் தந்தி இலாக்கா போன்றவைகளில் பெண்கள் அதிகமாக இப்போது பணியாற்றுகிறார்கள். அந்தமுறையில் இப்போது மின்சார இலாக்காவில் ஐ.டி.ஐ படித்த பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, பெண்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டுமென்று மின்சார வாரியத்தை அரசு வற்புறுத்தும்.

திரு. மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டில் தனியார் துறையில் இருந்த மின்சார விநியோகக் கம்பனிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. அவைகளில் சேலம்-ஈரோடு மின்சார வினியோக கம்பெனி என்பது ஒன்றாகும். 8 ஆண்டுகளுக்கு முன்பு அந்தக் கம்பெனி நாட்டுடைமையாக்கப்பட்டதிலிருந்து அந்த கம்பெனியில் பணியாற்றும் சிப்பந்திகள், களப் பணியாளர்கள், ஓட்டுநர்கள் போன்றவர்கள் ஓய்வு பெற்று இருக்கிறார்கள்,

இறந்து இருக்கிறார்கள், பணி காலத்தில். அப்படிப்பட்ட பணி இடங்கள் காலியாக இருப்பதன் காரணமாக களப் பணிகள் பல காலதாமதம் ஆகிறது, விரிவாக்கப் பணிகள் காலதாமதம் ஆகிறது. மின் இணைப்பு ஒழுங்காக கொடுக்க முடியவில்லை. இவைகளை அரசு உணர்ந்து அத்தகைய காலி இடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலி இடம் இருந்தால் மின் வாரியம் நிரப்பும்.

**திரு. ஆர். செங்காளியப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது போதுமான ஆட்கள் வைத்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அந்த ஆட்கள் எல்லாம் நிரந்தரப்படுத்தப்படாமல் பல ஆண்டு காலமாக டெம்பரரியாக, அப்பரன்டீஸாக இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் நிரந்தரம் செய்யக் கூடிய வகையில் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**கோவை மாநகராட்சிப் பகுதியில் புதிய டிரான்ஸ்பார்மர்கள்.**

481—(*வினா எண். 4648) **திரு. மு. இராமநாதன், மற்றும் திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாநகராட்சியின் எல்லையில் டிரான்ஸ்பார்மர்கள் பழுதுபட்டு அவை சரியான முறையில் இயங்காதபடியால், டிரான்ஸ்பார்மர்களை மாற்றக் கோரி அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியிலுள்ள எல்லைக்குள் 24-க்கு மேற்பட்ட டிரான்ஸ்பார்மர்கள் பழுதுபட்டு இருக்கின்றன என்றும் கடந்த 5 ஆண்டு காலத்தில் மாநகராட்சியினுடைய நிர்வாகத்தின் கீழ் இருக்கின்ற மின் வாரியத்தில் பணியாற்றக் கூடிய என்ஜினியர்கள் 3 முறை இது பற்றி அரசுக்கு எழுதியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இக்கேள்விக்கு இடம் இல்லை என்று சொல்லி விட்டார்கள். அதே போல் கோவை மாநகராட்சியினுடைய மின்வாரியப் பிரிவிலிருந்து அரசுக்கு என்ன தகவல் வந்திருக்கிறது ? பழுதே ஏற்படவில்லையா ? எல்லாம் சரியாகவே இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் மாநகராட்சியின் எல்லைக்கு உட்பட்ட மின் வழங்கும் பகுதி ஒன்று இருக்கிறது. மின் வாரிய எல்லைக்கு உட்பட்ட பகுதி மாநகராட்சிக்குள்ளேயே அடங்கும். நான் சொன்ன பதில் மின் வாரியத்தின் சார்பில் மாநகராட்சியின் பகுதியிலே இருக்கக் கூடிய மின் மாற்றி பழுதுபட்டனவா என்பதற்கு இல்லை என்றும் அப்படி மின் மாற்றி பழுது பட்டால் அவை உடனடியாக மாற்றப்பட்டு மின் வினியோகம் சீராக நடைபெற்று வருகிறது என்றும் தகவல் தந்து இருக்கிறார்கள். மாநகராட்சியின் சம்பந்தமான கேள்வியாக இருந்தால் அதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மூலமாகத்தான் விடை பெற வேண்டும்.

**திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது கோவை மாநகராட்சியோடு சேர்க்கப்பட்ட பகுதியாக இருக்கின்ற பகுதிகளைப் பற்றிச் சொன்னார்கள். அந்தப் பகுதியில் இருக்கின்ற மின் இலாக்காவைச் சேர்ந்த பகுதியையும் மாநகராட்சியிடம் ஒப்படைக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை மாநகராட்சிக்குத் தருவதா அல்லது மாநகராட்சியிடம் இருப்பதை மின் வாரியம் எடுத்துக் கொள்வதா என்பதைப் பற்றி அரசு இன்னும் முடிவு செய்யவில்லை.

## ஓமாம்புலியூரில் துணை மின் நிலையம்.

482—(*வினா எண். 4730) திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) காட்டுமன்னார்கோவில் வட்டம் ஓமாம்புலியூரில் துணை மின் நிலையம் அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## சிவகாசி விஸ்வநாத சுவாமி கோவில்.

(483—*வினா எண். 975) திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிவகாசி விஸ்வநாத சுவாமி கோவிலுக்கு இதுவரை நிர்வாக அதிகாரி நியமிக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) கோவிலைச் சுற்றிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இத்திருக்கோவில், அதன் அருகில் உள்ள ஆலய செயல் அலுவலரின் கூடுதல் பொறுப்பில் 27–4–1984 முதல் 10–4–1985 வரை இருந்தது. 10–4–1985-ல் இக்கோவிலுக்கு தனி செயல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஆ) திருக்கோவிலைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி அவற்றை மீட்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு சிவகாசி விசுவநாத சுவாமி திருக்கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் ஆக்கிரமிப்புச் செய்துள்ள இடத்தின் மொத்த பரப்பு எவ்வளவு ? அதனுடைய பண



மதிப்பு எவ்வளவு? இப்படி பொதுவாக தமிழகத்தில் உள்ள திருக்கோவில்களின் நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர்களிடமிருந்து மீட்டுக் கொள்வதற்கு அரசு விசேஷ செயல் திட்டம் ஏதாவது வைத்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—10)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான சிவகாசி கிராமம் சர்வே எண். 652/1. ஏ-யிலுள்ள ஒரு ஏக்கர் 50 சென்ட்-இல் சுமார் 2 சென்ட் காலி மனை இடம், இந்தத் திருக்கோயில் கடைகள் சன்னதிக்கு முன்புறம் மேற்கே சுவரை ஒட்டி இருக்கிறது. அந்தப் பகுதி ஏலத்திற்கு விடப்பட்டு, உச்ச ஏலத்திற்கு எடுத்தவருக்கு அது ஒதுக்கீடு செய்யப்படுகின்ற சூழ்நிலையில் அதற்கு முன்னாலே அதை வைத்து இருந்தவர் வழக்கு மன்றத்திற்குச் சென்று அதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார். காரணம், அவர் தான் குத்தகையாக எடுத்து உள் குத்தகைக்கு விட்டதாக ஆலயம் அவருக்கு நோட்டீஸ் அனுப்பி இருக்கிறது. அவர் நீதிமன்றத்திற்குச் சென்று தடை பெற்று விட்டு இருக்கிறார். உச்ச ஏலத்திற்கு 8006-க்கு எடுத்தவரை நீதிமன்றத்தின் தடை ஆணை மூலம் அங்கே பிரவேசிக்காமல் தடுத்து இருக்கிறார்கள். இதற்கிடையில், அதைக் குத்தகைக்கு எடுத்தவர் உள் குத்தகைக்கு குதிரை வண்டி ஸ்டாண்டிற்கு கொடுத்திருக்கிறார். அதனால் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று ஒரு தடையைப் பெற்று இருக்கிறார்கள். இதற்கிடையில் நகராட்சி மன்றம் அந்த இடம் தனக்குச் சொந்தம் என்று அவர்களும் நோட்டீஸ் அனுப்பி இருக்கிறார்கள். ஆகவே, இவ்வளவு சிக்கலுக்குரிய இடமாக அந்த இடம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. தக்க நடவடிக்கைகள் நீதிமன்றத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஸ்வநாதசுவாமி கோயிலானது—தனியார்களுக்குச் சொந்தமான கோயிலில் நிர்வாக அதிகாரி போடப்பட்டு இருக்கிறாரா? அல்லது அது அரசுக்குச் சொந்தமான கோயிலா என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில், கோயிலுக்கு வெளியே ஆக்கிரமிப்புக்களை அகற்றுவது பற்றிச் சொன்னார்கள். அதிலே இந்து நாடார்களுடைய டிரஸ்ட் பாதிக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

[1986 ஏப்ரல் 17

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆலயம் தனியாருக்குச் சொந்தமானதா என்ற விவரம் இல்லை. ஆனால், 2—12—1935 ஆம் வருடத்தினுடைய ஒரு நிர்வாகத் திட்டத்தின்படி, அது அறநிலையத் துறை நிர்வாகத்திற்குள்ளே இருக்கிறது. அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு 16—2—1939 இல் அந்தத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு, 21—2—1950-லும் திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, அறங்காவலர்கள் நியமிக்கப்படுகிறார்கள்; அறநிலையத் துறையினுடைய ஆட்சிக்குட்பட்ட ஆலயமாகத் தான் அது விளங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்த இடம், தனியாருக்கு அல்லது வேறு சிலருக்குச் சொந்தமாக இருப்பதாக இங்கே எந்தத் தகவலும் இல்லை. ஆலயத்திற்கு ஒட்டி இருக்கின்ற இடங்கள் ஆலயத்திற்குச் சொந்தம் என்று இவ்வளவு காலம் கருதப்பட்டு வந்த இடம், இப்போது நகராட்சி தனக்குச் சொந்தம் என்று உரிமை கொண்டாடுகிறது. இதற்கிடையில், அதை ஏற்கனவே குத்தகைக்கு எடுத்து உள் குத்தகைக்கு விட்டவர்கள் தங்களுக்குத் தான் உரிமை என்று நீதிமன்றத்திற்கும் சென்று இருக்கிறார்கள். இவ்வளவு சிக்கல்களுக்கிடையே அந்த நிலம் இன்றைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது.

## காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் திருப்பணி.

484—(*வினா எண். 7145) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் திருப்பணி எப்போது முடிவடையும்?

(ஆ) எவ்வளவு செலவில் திருப்பணி நடந்து வருகிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் இராஜகோபுரம் திருப்பணி ஏப்ரல் 1986-ல் துவங்கப்பட உள்ளது. இரண்டு வருட காலத்திற்குள் இத்திருப்பணியினை நிறைவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இத்திருப்பணிக்கு ரூ. 6,00,000 வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.



1986 ஏப்ரல் 17]

## சூரிய ஒளியில் மின் உற்பத்திச் சாதனங்கள்.

485—(*வினா எண். 1742) திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சூரிய ஒளி மின் தயாரிப்புச் சாதனங்கள் மானிய விலையில் வழங்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை. ஆனால் மத்திய அரசு, சூரிய ஒளி மின்கல அமைப்பினால் இயங்கும் ஒரு சில சாதனங்களாகிய நீரிறைப்பி போன்றவற்றினை சோதனை முறையில் செயல் விளக்கமளிப்பதற்கு மானியம் வழங்கியுள்ளது. அதேபோல் எளிதில் மின் தொடர்புகளைக் கொண்டு செல்ல இயலாத தூரத்திலுள்ள மலைப் பகுதி கிராமங்களுக்கு இந்த அமைப்பின் மூலம் தெரு விளக்குகள் அமைப்பதற்கான ஆய்விற்கு மத்திய அரசு போதிய அளவு உதவித் தொகை அளித்துள்ளது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த மானியத் தொகை சாதாரணமாக வீடுகளிலே இப்படிப்பட்ட கருவிகளைப் பொருத்தவேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கும் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது ஒரு ஆய்வு நிலையில்தான் இருக்கிறது. காரணம், இதற்கான உற்பத்திச் செலவு மிக அதிகமாக இருக்கிறது. இதனுடைய 20 வாட் பல்பு கொண்ட ஒரு தெரு விளக்கினை அமைப்பதற்கு ஆகும் அடக்க விலை ரூ. 7,500 ஆகும். அதைப் போல, 1/3 (ஒன்றின் கீழ் மூன்று) குதிரைத் திறன் கொண்ட மின்கல நீரிறைப்பியின் விலை 44 ஆயிரம் ரூபாய். ஆகவே சாதாரணமாக நடைமுறையில் எல்லா மக்களும் பயன்படுத்துகிற வகையில் இது அவ்வளவு சுலபமாக இல்லை. ஆனால் நீண்ட தூரம் நம்முடைய மின் இணைப்புக்களைக் கொண்டுபோய் விளக்கு வசதிகள் செய்யமுடியாத மலைப் பகுதிகளிலே ஆங்காங்கே ஏற்பாடு செய்து இந்தத் திட்டத்தின் மூலமாக அந்த விளக்குகளை எரிய வைக்கிற திட்டத்திற்கு மத்திய அரசு அந்த உதவியைச் செய்கிறது. அது சோதனை நிலையிலேதான் இருக்கிறது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இது சோதனை நிலையில் இருந்தாலும் பல வெளி நாடுகளிலே வீடுகளிலே எல்லாம் பயன்படுத்துகிற அளவுக்கு இது வந்துவிட்டது. எனவே தமிழ்நாட்டில் நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் கட்டப்படுகிற அல்லது அரசாங்கத்திற்

காகக் கட்டப்படுகிற, பொதுத் துறைக்காகக் கட்டப்படுகிற கட்டடங்களாக இருந்தாலும் Photo Voltaic Cells என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருக்கிற அந்தச் சாதனங்களை முதலிலே அரசு தாம் கட்டுகிற கட்டடங்களிலேயாவது பொருத்துவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முன்னாலேயே குறிப்பிட்டேன். அதற்கான அடக்கவிலை 7,500 ரூபாய் ஆகிறது. 100 முதல் 120 ரூபாய் வரை ஆகிறது, ஒரு சாதாரண சிறிய மின்கலத்தினுடைய விலை. ஆகவே அவ்வளவு விலை இருக்கிற சூழ்நிலையில் அரசு அதை ஆங்காங்கே அமைப்பது இயலாது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சூரிய ஒளி மின் சாதனம் பற்றிய வினா. இந்த வினா எப்படி மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரின் கீழ் வருகிறது என்று தெரியவில்லை. ஒரு வேளை இது தொழில் துறை அமைச்சருடைய வினாவாக இருந்து இருக்குமோ என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது. ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது 'பிளானிங்' என்ற தலைப்பில் வருகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஐயத்தைத்தான் கேட்டேன், ஐயத்தை நீக்கியதற்காக நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஐயத்தைப் போக்குவது என்னுடைய கடமை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அதற்கான செலவுகள் அதிகமாக இருந்தாலும் இது பற்றி வெளிநாடுகளிலிருக்கிற தனியார் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இருப்பதாகவும், அது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடந்ததாகவும் எங்களுக்குத் தகவல். ஆம் எனில், அந்தப் பேச்சுவார்த்தை எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது? வெளிநாடுகளில் உள்ள தனியார் நிறுவனங்களின் உதவியோடு அதன்மூலமாகவாவது தமிழகத்திலே அந்தக் கருவிகளை அமைப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற கேள்வியின் முதல் பகுதிக்கு அவருடைய இரண்டாவது பகுதியிலே விடை இருக்கிறது. இது ஆய்விலே இருக்கிற திட்டங்கள்



என்ற வகையில் பரிசீலனை நிலையிலே இருக்கிற காரணத்தினால் திட்டம், வளர்ச்சி துறையிலே இந்தப் பொறுப்பு இருக்கிறது. ஆனாலும் அண்மையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இட்ட ஒரு ஆணையின்படி தொழில் சம்பந்தமான ஆய்வுகள், திட்டங்கள் தொழில் துறைக்கு மாற்றப்படலாம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி இனிமேல் வருகிற கேள்விகளுக்கு தொழில் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கக்கூடும். மத்திய அரசு தெரிவித்து இருக்கிற அந்த ஆய்வுப் பணிகளைத்தான் நாம் இங்கே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோமே தவிர வெளிநாடுகளோடு நேரடியாக எந்தத் தொடர்பையும் மாநில அரசு வைத்துக் கொள்ளவில்லை. வெளிநாடுகளுடன்— அப்படிப்பட்ட கருத்துக்கள் பரிசீலனையில் இருக்குமானால் அது மத்திய அரசிடத்திலே இருக்கக்கூடும், மாநில அரசிலே இல்லை.

**டாக்டர் கே. சமரசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் வழங்கக் கூடிய காரியத்திற்காக மைய அரசு உதவி செய்துள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அப்படியானால் மாநில அரசிற்கு இதுவரையில் மத்திய அரசு இதற்காக எவ்வளவு ரூபாய் சலுகையாகவோ, உதவியாகவோ வழங்கியிருக்கிறது? இந்தியாவிலே இதுபோன்று வேறு மாநிலங்களிலே முயற்சி செய்து இந்த வகையில் வெற்றிபெற்றிருக்கிறார்களா என்ற விவரங்கள் இருந்தால் அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரீட்சை முறையில் நடைபெறுகிற இந்தத் திட்டத்திற்கு தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மத்திய அரசு அந்த உதவியை வழங்கியிருக்கிறது. 44 ஆயிரம் ரூபாய் அடக்கவிலை உடைய பத்து 300 உச்ச வாட் திறன் கொண்ட சூரிய மின்கல நீரிறைப்பிகள் தஞ்சாவூர் மாவட்டத்திலே சிறிய விவசாயிகளுக்கு ரூ. 4 ஆயிரம் வீதமும் இதர விவசாயிகளுக்கு ரூபாய் 5 ஆயிரம் வீதமும் கொடுத்து உதவி உள்ளது. அதைப் போல் மலைவாழ் பகுதிகளில் தெருவிளக்குகளை எரிப்பதற்காகவும் மத்திய அரசு உதவியிருக்கிறது. அதிலே 25 கிராமங்களுக்கு— சேலம் மாவட்டத்தில் 12 கிராமங்களுக்கும் தென் ஆற்காடு மாவட்டத்தில் 13 கிராமங்களுக்கும் — தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கான மொத்தச் செலவு 16 லட்சம் ரூபாய். அதில் 10 லட்ச ரூபாயை மத்திய அரசு மானியமாகத் தந்திருக்கிறது. மிகுதியை தமிழக அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. வேறு மாநிலங்களைப் பற்றிய விவரங்கள் தமிழக அரசிடத்திலே இப்போது இல்லை.

[1986 ஏப்ரல் 17

பயணியர் விடுதிகளில் திரைப்படம் எடுப்பதற்கான சட்டணம்.

486—(*வினா எண். 6320) திரு. கே. பி. கே. சேகர் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள இயற்கை எழிலுடன் கூடிய அரசு பயணியர் விடுதிகளும் அதை சுற்றிலும் திரைப்படங்கள் எடுப்பதற்கான வாடகையை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

(முற்பகல் 9-20)

திரு. கே. பி. கே. சேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற இயற்கை எழிலுடன் கூடிய அரசு பயணியர் விடுதிகளில் திரைப்படங்கள் எடுப்பதன் மூலம் வாடகையாக அரசுக்கு வருகின்ற வருமானத் தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாபுண்மிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, இதன் மூலம் அரசு பெரிய வருமானம் ஒன்றையும் எதிர்பார்க்கவில்லை. ஆகவே, அதைப் பற்றிய விவரங்கள் இப்பொழுது இல்லை. அந்த விவரங்களை விரும்பினால் தனியாக கேள்வி போட்டால் திரட்டித் தர முடியும்.

வேதாரண்யத்தில் உப்புத் தொழிற்சாலை.

487—(*வினா எண். 2415) திரு. எஸ். இராசாராமன், திரு. செ. செம்மலை மற்றும் திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் வேதாராண்யம் பகுதியில் உப்பை மூலப் பொருளாகக் கொண்ட சோடா உப்பு போன்ற இரசாயன சோடாப் பொருட்களை தயார் செய்யும் தொழிற்சாலைகள் தொட்ங்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



1986 ஏப்ரல் 17]

திரு. எஸ். இராசாராமன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் வேதாரன்யம் பகுதியில் உப்பை அதிகமாக உற்பத்தி செய்வதால், அந்த உப்பையெல்லாம் வெளி மாநிலங்களுக்கு மிகவும் குறைந்த விலையில் அனுப்புகிறார்கள். ஆகவே, உப்பு உற்பத்திப் பெருக்கம் அதிகமாக உள்ள காரணத்தினால் இரசாயன சோடா பொருட்களைத் தயாரிக்கின்ற தொழிற்சாலையை அங்கே அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, ஏற்கனவே ''சோடா ஆஷ்'' தொழிற்சாலை ஒன்று தூத்துக்குடி ஆல்கலின் கெமிகல்ஸ் என்ற பெயரால் தூத்துக்குடியில் நடந்து கொண்டு வருகிறது. ஆகவே, வேதாராண்யத்தில் அது போன்ற இன்னொரு தொழிற்சாலையை உருவாக்குகின்ற உத்தேசம் தற்போது அரசினிடத்தில் எதுவுமில்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு இந்திய துணை ஜனாதிபதி திரு. ஆர். வி. அவர்கள் தமிழகத்தின் தொழிலமைச்சராக இருந்த பொழுது வேதாரான்யம் பகுதியில் பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலையை உருவாக்குகின்ற ஒரு திட்டத்தை அந்த நேரத்திலே பரிசீலிப்பதாகச் சொல்லியிருப்பதாக நான் அறிகிறேன். அப்படி அவர்கள் அமைச்சராக இருந்த காலத்திலேயிருந்து அந்தத் திட்டம் பேசப்பட்டு வருகிறதே தவிர இன்னும் அதைச் செயல்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அமைச்சரவர்கள் அப்படிப்பட்ட ஒரு திட்டம் ஏற்கனவே பரிசீலனையில் இருந்தால் அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலையை அமைக்க முன்வருவார்களா? அப்படி அதை அரசாங்கமே அமைக்கவில்லை என்றாலும்கூட, தனியார் அப்படிப்பட்ட தொழிற்சாலையை உருவாக்குவதற்கு முன்வந்திருக்கிறார்களா? அப்படி இதுவரையில் முன் வரவில்லை என்றாலும், இனிமேல் முன் வந்தால் அரசாங்கம் அவர்களுக்கு அனுமதி அளிப்பதற்கான வழிவகைகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, உப்பை வைத்துக்கொண்டு செய்யக்கூடிய தொழிற்சாலை காஸ்டிக் சோடா தொழிற்சாலை அல்லது சோடா ஆஷ் தொழிற்சாலை, ஏற்கனவே, கோத்தாரி லிமிடெட், மேட்டூர் கெமிகல்ஸ் லிமிடெட், விம்கோ லிமிடெட் ஆகிய மூன்று கம்பெனிகள் காஸ்டிக் சோடாவை உற்பத்தி செய்கிறார்கள். மேலும் என்னென்ன செய்யலாம் என்பதற்கு, தற்போதுள்ள மின்துறை இயக்குநராக இருக்கிற விஜயராகவன் தலைமையில் குழு ஒன்று போடப்பட்டு, அந்தக் குழுவின் பரிந்துரைகளை நாம் கேட்டிருக்கிறோம். அந்தப் பரிந்துரைகள் வந்தபிறகு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப்பற்றி அரசு ஆராயும்.

[1986 ஏப்ரல் 17

திரு. போ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் ஆரம்பத்திலேயே இந்தக் கேள்விக்கு இடமில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்பதெல்லாம், 1978 ஆம் ஆண்டு வேதாரண்யத்தில் ரசாயன உப்புத் தொழிற்சாலை அமைப்பதற்கு இடம் சர்வே செய்யப்பட்டது நூறு கோடி ரூபாய் திட்டத்தில். அதையொட்டி 1980 ஆம் ஆண்டு பட்டுக்கோட்டை தாலுக்கா மரவக்காடு என்ற இடத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். ஏழு ஆண்டுகள் ஆகப்போகின்றன. தொடர்ச்சியாக இந்தச் செய்தி மத்திய அரசால் பேசப்பட்டு, பம்பாயிலிருந்து சரணாலய அதிகாரிகள் வந்து பார்வையிட்டு அந்தப் பகுதியில் ரசாயன உப்புத் தொழிற்சாலை அமைத்தால் வேதாரண்யத்தில் வெளிநாட்டுப் பறவைகள் வராது என்றும் தொழிற்சாலையை அமைக்க முடியாது, திருத்துறைப் பூண்டிக்கு அருகில் அமைக்கலாம் என்று ஸ்டேட்மெண்ட் கொடுத்ததாக விவரம் இருக்கிறதே. அதைப் பற்றி அமைச்சரவர்கள் என்ன சொல்கிறார்கள் ? இல்லையென்றால் அதுபற்றிய விவரங்களைச் சேகரித்து, எதிர்காலத்திலேயாவது—உப்பை நம்பி பெரும்பகுதியாக மக்கள் வாழும் பகுதியாக அது இருப்பதால், மத்திய அரசிடம் வலியுறுத்தி அங்கே ரசாயன உப்புத் தொழிற்சாலையை உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்ய அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த முழு விவரமும் தற்போது என்னிடத்தில் இல்லை. முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியிருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தகவல் இப்போது என்னிடம் இல்லை. ஆனால் உப்பைக் கொண்டு பல தொழில்களைச் செய்யலாம் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஆகவே அதையெல்லாம் பற்றி ஆராய ஒரு குழுவை திரு. விஜயராகவன் அவர்கள் தலைமையில் போட்டிருக்கிறோம். அதோடு இந்த காஸ்டிக் சோடா போன்ற தொழிற்சாலைகளை அமைப்பது என்று சொன்னால் அதற்கு மின்சாரம் ஏராளமாகத் தேவைப்படுகிறது. ஆகவே மின்சாரம் அதிகமாகத் தேவைப்படுவதால் அந்த அளவிற்கு மின்சாரத்தைக் கொடுக்க முடியுமா முடியாதா என்பதை ஆராய வேண்டியிருக்கிறது. அதையெல்லாம் பார்த்துத்தான் புதிய தொழில்களை உருவாக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்ட வேதாரண்யம் பகுதியில் உப்பை மூலப்பொருளாகக் கொண்டு இரசாயன சோடா தயார் செய்கிற ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கு இல்லை என்று அமைச்சர் அவர்கள் சுருக்கமாக, அப்படிப்பட்ட சாத்தியக்கூறு இல்லை



1986 ஏப்ரல் 17]

என்று சொன்னதற்காக நான் நன்றி செலுத்துவேன். ஆனால் இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் துவங்கவேண்டுமென்று நீண்ட காலமாக அந்தப் பகுதி மக்கள் கேட்டிருந்தும், அந்தக் குறைபாடு இருந்தாலும் தூத்துக்குடியில் இருக்கிற இரசாயன உப்புத் தொழிற்சாலையினுடைய ஒரு யூனிட் வேதாரண்யம் பகுதியில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா, அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இதற்கு முன்னால் பட்டுக்கோட்டைப் பகுதியில் இப்படிப்பட்டதொரு தொழிற்சாலை துவங்க திட்டமிடப்பட்டு அதிகாரிகள் பலரை நியமித்து துவக்கவேலை துவங்கி இடையில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னது போல் உப்பிலிருந்து பல தொழில்களை உருவாக்கமுடியும் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. இப்போது கூட வாலிநோக்கத்தில் மெக்னீஷியம் மெட்டல் என்று சொல்லக்கூடிய உப்பினுடைய கழிவுப்பொருளிலிருந்து அதை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலையை இராமநாதபுரத்தில் துவங்க திட்டம் போட்டுக் கொண்டுவருகிறார்கள். எல்லாவற்றையும் அங்கேயே செய்துவிட முடியாது. தற்போது இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் போடலாம் என்ற எண்ணம் வரக் காரணமே உப்பு விலை குறைந்திருக்கிறது. இப்போது மழை கிடையாது, நல்ல வெயில் அடிக்கிறது, ஆகவே ஏராளமாக உப்பு தயாராகிறது. ஆகவே இந்தக் கேள்வி எழுகிறது.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் தொழில் வளம் மிகவும் குறைந்திருப்பதால் தஞ்சை மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுக் கூட்டத்தில் பல தொழிற்சாலைகளை தஞ்சை மாவட்டத்தில் துவங்க வேண்டும் என்று அரசுக்கு பரிந்துரை அனுப்பி வைத்திருக்கிறார்கள். எந்தத் தொழிலையும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அங்கு எடுப்பதற்கு இல்லாமலிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி தஞ்சை மாவட்டம் தொழில் வளம் இல்லாத மாவட்டமாக இருப்பதால் உடனடியாக இந்த இரசாயன உப்புத் தொழிற்சாலையை அங்கே உருவாக்க முன்வருவார்களா ? வேதாரண்யத்தில் உற்பத்தியாகிற உப்பை வெளியே எடுத்துச் செல்லாத காரணத்தினால் மழைக் காலத்தில் சேதாரம் ஏற்பட்டு அந்த உப்புத் தொழிலாளர்களுக்கும் உப்பு உற்பத்தியாளர்களுக்கும் பாதகம் ஏற்பட்டு அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே விரைந்து நடவடிக்கை எடுத்து இந்தத் தொழிற்சாலையை அங்கே துவக்கினால் அந்த உப்புத் தொழிலாளர்களுக்கும் உப்பு உற்பத்தியாளர்களுக்கும் பாதுகாப்பாக இருக்கும் என்பதால் அரசு அதற்காக தக்க நடவடிக்கை எடுக்கமுன்வருமா ?

[1986 ஏப்ரல் 17

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர்
அவர்களே, உப்பு ஏராளமாக உற்பத்தியாகிறது. அதை உட
னடியாக வேதாரண்யத்திலிருந்து வெளியே அனுப்ப முடிவதில்லை.
அதில் சில தடைகள் ரெயில்வே இலாகா மூலமும் மற்ற வகை
யிலும் ஏற்பட்டு வருகிறது. ஐந்து மணி நேரத்திற்கு அதிகமாக
ரெயில்வே ஸ்டேஷன் கோடவுனில் உப்பு இருந்தால் டெமரேஜ்
போடுகிறார்கள். அதைக் கட்டமுடியாமல் அல்லல்படு
கிறார்கள். லாரியில் உப்பைக் கொண்டுவருவது சங்கடமாக
இருக்கிறது. ரெயில்வே மூலமாகத்தான் அனுப்ப வேண்டியிருக்
கிறது. அதில் இந்த டெமரேஜ் தொல்லை இருக்கிறது. அதைப்
பற்றியெல்லாம் தற்போது இரயில்வே இலாகாவுடன் தொடர்பு
கொண்டு நாங்கள் பேசிக்கொண்டு வருகிறோம். அதில் இருக்கிற
சில கஷ்டங்களுக்கு பரிகாரம் கிடைத்தால் உப்பு வேதாரண்யத்
தில் தங்காது, உப்பு விளைவிப்பவர்கள் நல்ல பலனைப்
பெறுவார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு உதவி சபாநாயகர்
அவர்களே, வேதாரண்யம் உப்பு பற்றி பேசுகிற காரணத்தி
னால் இதனை நான் கேட்பதற்கு அனுமதிக்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். ஒரே நேரத்தில் எட்டயபுரத்தில் நூற்
பாலை ஒன்றும் வேதாரண்யத்தில் உப்பளம் ஒன்றும் அரசாங்
கச் சார்பில் ஆரம்பிக்கப்படும் என்று தொழில் துறை அமைச்ச
ராக இருந்தவர் முன்பே அறிவித்ததையொட்டி, வேதாரண்யத்
தில் வருகிற அந்த உப்பளத்திற்கு சர்தார் வேதரத்னம் பிள்ளை
உப்பளம் என்றும் எட்டயபுரத்தில் உள்ளதற்கு பாரதி நூற்பாலை
என்றும் பெயர் வைக்கவேண்டும் என்று நான் சொன்னபோது
அவர்கள் எழுதிக்கொடுங்கள், நாங்கள் செய்கிறோம் என்று அரசு
சார்பில் உறுதி அளிக்கப்பட்டது. எட்டயபுரத்தில் பாரதி நூற்
பாலை என்ற பெயர் வந்துவிட்டது. அதேபோல் வேதாரண்யத்
தில் உள்ள உப்பளத்திற்கு சர்தார் வேதரத்னம் பிள்ளை உப்
பளம் என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளதா? வைக்கவில்லை
என்றால் அப்படி வைக்கப்படுமா, அரசு அளித்த உறுதிக்கேற்ப.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தற்போது அந்தக் குறிப்புகள் எதுவும்
என்னிடமில்லை. 13,500 ஏக்கரில் உப்பு உற்பத்தியாகிறது.
அது ஒரு தொழிலாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த
13,500 ஏக்கர் பூராவும் அரசுத் துறையைச் சார்ந்ததல்ல என்று
கருதுகிறேன். ஆகவே பெயர் வைக்கும் பிரச்னை பற்றி அவர்கள்
எழுதிக்கொடுத்தால் அரசாங்கம் ஆலோசிக்கும்.



1986 ஏப்ரல் 17]

(முற்பகல் 9-30)

திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலே உற்பத்தியாகின்ற உப்பு வெள்ளையாகவும், வேதாரண்யத்திலே உற்பத்தியாகின்ற உப்பு மஞ்சளாகவும் இருக்கின்ற காரணத்தினாலே இந்த உப்பு நல்ல விலைக்குப் போவதில்லை என்று சொல்கிறார்களே, அதற்காக ஜப்பானிலிருந்து ஏதாவது குழு மஞ்சளாக இருக்கின்ற உப்பை வெள்ளையாக மாற்றுவதற்கு வந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவர் அவர்களே, வேதாரண்யத்திலே விளைகின்ற உப்பு நல்ல விலைக்குப் போகின்றது. தற்போது நிறைய வெளியில் இருக்கின்ற காரணத்தினாலே, ஏராளமாக உப்பு வளர்ந்திருக்கிறது. ஆகவே, அவைகளை வெளியேற்றுவதற்கான சாதனங்கள் இல்லை. இரண்டாவது ரயில்வே வேகன்கள் இல்லை. ஆகவே, இது தாற்காலிகமான விலை குறைவே அன்றி, நிரந்தரமான விலை குறைவு இல்லை. நல்ல விலைக்குப் போகும் வாய்ப்பிருக்கிறது. தேங்கிக் கிடக்கின்ற உப்பு, வெளி மாநிலங்களுக்குச் செல்லத் தயாராக இருக்கிறது.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் அவர்கள் வேதாரண்யத்திலே உப்பை மூலப் பொருளாகக் கொண்டு தொழில் துவங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று குறிப்பிட்டார்கள். 100 கோடி மூலதனத்திலே தொழில் துவங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக திட்டம் தயாரித்துக் கொடுத்த அதிகாரி யார்? எப்போது கொடுத்தார்கள்? எனவே, இவ்வாறு சொல்வது சரியா? இந்தத் திட்டத்தைத் தயாரித்து அதிகாரி எப்படிக் கொடுத்தார் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா? அடுத்து, வேதாரண்யத்திலே தேங்கிக் கிடக்கின்ற பொருள்கள் வெளியே செல்ல முடியாமல், போதிய வாகன வசதிகள் இல்லாமல், அங்குள்ள உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அதற்குரிய வாகன வசதிகளை ஏற்பாடு செய்வதற்கு, உப்பு ஏற்றுமதி பொறுப்பை மாநில அரசு ஏற்றுக்கொள்வதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனியாக திட்டம் தீட்டுகிறார்கள். தமிழகத்திலே மற்ற மாவட்டங்களில், எந்தெந்த இடங்களில் இந்தத் தொழிற்சாலை இருக்கிறது என்பதை அவர்கள் கவனிப்பதில்லை. அங்கே இருப்பதை வைத்துக்

கொண்டு, அந்த மாவட்டத்தில் என்னென்ன தொழில்களை செய்யலாம் என்பதைத் கண்டறிந்து, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிக்கை தந்திருக்கிறார்கள். ஆகவே, தவறான அறிக்கையில்லை. தமிழகத்திலே ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறபோது, ஏற்கனவே 4 தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மீண்டும் 5-வது தொழிற்சாலையாகத் தொடங்கினால் அது சரியாக வருமா, வராதா என்பதைப் பார்க்க வேண்டும். விற்றால் லாபம் வருமா, அப்படி லாபம் வந்தால்தான் தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்க முடியும். இப்படி இதிலே நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு மாவட்ட மையத்திலும் என்னென்ன தொழில்களை உருவாக்கலாம் என்பதுபற்றி ஒரு புத்தகத்தைத் தயாரிக்கச் சொல்லியிருக்கிறோம். அந்தப் புத்தகத்தைத் தயாரித்த பிறகு, எந்தெந்த மாவட்டத்தில் ஏற்கெனவே அந்தத் தொழில்கள் இருக்கின்றன அல்லது அகில இந்தியாவில் அந்தத் தொழில் அதிகம் இருக்கிறதா, இந்திய மார்க்கெட்டில் அது போகுமா என்பதைப் பற்றியெல்லாம் ஆராய ஏற்பாடு செய்திருக்கிறோம்.

### நாப்தாவிலிருந்து உரம் தயாரித்தல்.

*488—(*வினா எண் 3732)*—திரு. மா. மணிமாறன் : *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் கிடைக்கும் நாப்தாவைக் கொண்டு உரத்தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) நாப்தாவைக் கொண்டு உரத் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாப்தாவைக் கொண்டு உரத் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அதை வைத்துக்கொண்டு வேறு தொழில் தொடங்குவதற்கு முடியுமா என்பதை ஆராய முன்வரவேண்டும். தொடர்ந்து தமிழகத்திலே கிடைக்கும் மூலப் பொருள்களை வைத்து தொழில்கள் தொடங்குவதற்கு முன்வர வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் நிலக்கரி கிடைப்பதாக ஆராய்ச்சி மூலம் தெரிகிறது. ஏற்கனவே இருக்கின்ற மூலப்பொருள்களை வைத்து தொழில்



கள் தொடங்காததால், உற்பத்தி இல்லாத காரணத்தால் பொருளாதார வளர்ச்சி குறைகின்ற காரணத்தினால், தொழில் துறை அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்திலே அக்கறை எடுத்துக்கொண்டு, மத்திய அரசை வற்புறுத்தி, கிடைக்கின்ற நிலக்கரியை வைத்துக்கொண்டு, உரத் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம் மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் கேட்ட கேள்வி, நாப்தாவைக் கொண்டு உரத் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் உள்ளதா என்பது. உரத் தொழிற்சாலை ஏற்கனவே இருக்கிறது. எனவே, அப்படி திட்டம் ஏதும் இல்லையென்று சொன்னேன். ஆனால், நாப்தா கிராக்கர் யூனிட் ஒன்றை தமிழ் நாட்டிலே நிறுவ வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. நாப்தா கிராக்கர் தொழிற்சாலை உருவாகுமானால், 250 கோடி ரூபாயிலிருந்து 500 கோடி ரூபாய் வரைபோகும். அல்லது 1,000 கோடி ரூபாய் வரை வளர்வதற்கு நிரம்ப சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. அதோடு, நிலக்கரியைப் பற்றி உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நிலக்கரியைப் பற்றிய தகவல் எனக்குத் தெரியவில்லை. பெட்ரோல் பற்றிய தகவல் தான் வந்தது. நிலக்கரியைப் பற்றிய தகவல் தற்போது என்னிடத்தில் இல்லை.

### ஆலங்குளம் அரசு சிமெண்ட் தொழிற்சாலை.

*489—(*வினா எண் 3546)*—திரு. ஆர். ரெங்கசாமி : *மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—*

*காமராஜர் மாவட்டம், ஆலங்குளத்தில் உள்ள அரசு சிமிண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் சிமிண்ட் தூசியால் அந்தப் பகுதியிலுள்ள மிளகாய்ச் செடி மற்றும் பயிர்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க அத்தொழிற்சாலையில் Electrostatic Precipitator வைப்பதற்கான திட்டம் ஏதும் உள்ளதா ?*

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஆலங்குளத்தில் உள்ள அரசு சிமெண்ட் தொழிற்சாலையில் இருந்து வெளிவரும் சிமெண்ட் தூசியைத் தடுக்க அத்தொழிற்சாலையில் ஏற்சனவே Electrostatic Precipitator நிறுவப்பட்டு அவை நல்ல முறையில் இயங்கிக் கொண்டு வருகின்றன.

[1986 ஏப்ரல் 17

**திரு. ஆ. நடராசன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது போன்று, சிமெண்ட் ஆலையில் இருந்து வருகின்ற தூசியினால், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் அளவிற்கு விவசாயம் பாதிக்கப்பட்டு வருகிறது. அதற்கு மக்கள் நல்வாழ்வுத் துறையிலிருந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் ஆரம்ப நிலையிலேயே அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, அந்த ஆலைகளை அமைக்கின்றபொழுது இது போன்ற தூசிகள் வெளிவராமல் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாடு என்ற ஒரு இலாகாவே உருவாக்கப்பட்டு, அதற்குப் பிறகு அதிலே அப்படிப்பட்ட தூசிகள் எல்லாம் வருவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நான் நம்புகிறேன். அதே போல, 1981 ஆம் ஆண்டிலேதான் அந்தத் தூசிகளைத் தடுக்கின்ற வகையில், எலெக்டிரோ ஸ்டாடிக் ப்ரெசிபிடேட்டர் என்ற ஒன்றை நிறுவி, அதன் மூலமாக, கொதிகலனிலிருந்து வெளி வருகின்ற தூசிகளைத் தடுப்பதற்கான நல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தத் தூசித் தடுப்பான்கள் மூலமாக தற்போது தூசி பரவாமல் தடுக்கப்பட்டு, ஆலங்குளம் பகுதியில் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, இந்தத் தூசி தடுப்பான் ஏற்படுத்தப்பட்டு, ஓரள வுக்கு தூசி கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்று ஆலங் குளத்தைப் பற்றிச் சொன்னார்கள். தமிழகத்திலே என் சிற்ற றிவுக்கு எட்டிய வரையிலே, துலுக்கப்பட்டியில் இருக்கிற இராஜு பாளையம் ராமசாமி ராஜா நிறுவனத்தாரால் நடத்தப்படுகிற அந்த ஒரு தொழிற்சாலையில் மட்டும்தான் தூசி வெளியே வராமல் இருக்கிறது. பக்கத்திலே ஒரு சின்ன கிராமத்தில் இருந்தாலும் கூட, அந்தத் தூசி பரவுவதில்லை; வேறு எல்லா இடங்களிலும் தூசி வந்து கொண்டுதானிருக்கிறது, பயிர்களை மூடிக் கொண்டுதானிருக்கிறது, சுவாசப் பையை அடைத்துக் கொண்டுதானிருக்கிறது. எனவே, துலுக்கப்பட்டியில் இருப் பதைப் போல டிரை பிராசஸ்ஸை எல்லா இடங்களிலேயும் உடனேயே ஏற்படுத்த அரசு ஆணை இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவர் அவர்களே, எல்லா சிமெண்ட் ஆலைகளிலேயும் அப்படித் தடுப்பான்கள் நிறுவுவதற்கு அரசுத் துறை முயன்று கொண்டு வரு



1986 ஏப்ரல் 17]

கிறது. இதே போனற் கேள்வி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கிறது. அப்பொழுது அவர்கள் அதற்கான விளக்கத்தை அளிப்பார்கள்.

**திரு. கோ. வீரய்யன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஆலங்குளத்திலே ஓரளவு தூசி பரவுவது கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். கரூருக்குப் பக்கத்திலே இருக்கிற புலியூர் சிமெண்ட் ஆலையிலிருந்து வெளிவருகின்ற தூசிகள் அப்பகுதி முழுவதும் நிலங்களை, பயிர்களை பாழ்படுத்துவதோடு, அப்பகுதி மக்கள் சுகாதாரமும் கெட்டு விடுகிறது. தமிழகம் முழுவதும் தூசி இப்படிப் பரவுவதனால் ஏற்படக்கூடிய அபாயங்களைத் தடுப்பதற்கான முயற்சிகளை அரசு துரிதமாக மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவர் அவர்களே, எல்லா சிமெண்ட் தொழிற்சாலைகளிலும் அப்படிப் பட்ட தூசித் தடுப்பான்களை நிறுவுவதில் அரசு அக்கறை காட்டிக் கொண்டு வருகிறது. அதற்கான ஏற்பாடுகளை அரசுத் துறை மேற்கொண்டு வருகிறது.

### வேளச்சேரி சாசன் இரசாயன தொழிற்சாலைக் கழிவு நீர்.

490—(*வினா எண் 1017)—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை வேளச்சேரிப் பகுதியில் இருக்கும் சாசன் இரசாயன கம்பெனியில் இருந்து வெளியேறும் கழிவு நீரினால் ஏற்படும் பாதிப்பு அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) ஆம்.

(ஆ) அரசு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் இந்த நிறுவனம் அதன் கழிவு நீரை சுத்தப்படுத்தச் செய்வதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாசன் கெமிக்கலஸ் நிறுவனத்தில் இருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவு நீர் வேளச்சேரி பிரதான சாலையில் விடப்படுவதால், வேளச்சேரி மற்றும் கே. ஆர். இராமசாமி நகர் போன்ற பகுதி பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அந்த இரசாயனக் கழிவு நீர் அப்பகுதிகளை

அசுத்தப்படுத்துவதாகவும் பல்வேறு வியாதிகளை உண்டாக்குவ தாகவும் சொல்லப்படுகிறது. எனவே, சாலையில விடப்படுகிற அந்தக் கழிவு நீரைத் தடை செய்ய முதலில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த சாசன் கெமிக்கல்ஸ் பிரை வேட் லிமிடெட் வேளச்சேரி பகுதியில் இருக்கிறது. 1977-ஆம் ஆண்டிலிருந்து அது அங்கே இயங்கிக் கொண்டு வருகிறது. "மெட்டானிசால்" ஒரு மாதத்திற்கு 4 டன் அது தயார் செய்கிறது. அங்கு டிரேட் எப்ளுவன்ட் ஏறத்தாழ 13,000 லிட்டர் ஒரு நாளைக்கு வெளியேற்றப்படுகிறது. இதனை உடனடியாக, சுத்திகரித்ததற்குப் பிறகு தான் வெளியே விட வேண்டுமென்று நாம் சொல்லி இருக்கிறோம். அதற்காக "கன்செண்ட்" அனுமதி பெற வேண்டுமென்று இருக்கிறது. The Industry had applied for consent to the Government. 3–9-1984 அன்று கன்செண்ட் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு, சுத்தி கரித்ததற்குப் பிறகுதான் விட வேண்டுமென்று சொல்லியிருக் கிறோம். இப்பொழுது, உடனடியாக, சூவர் மூலமாக, அதை வெளியேற்றுகிறோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்.

(முற்பகல் 9-40)

இன்னொரு தொழிற்சாலையைப் புதுவையில் நிறுவ உத் தேசித்திருப்பதாகவும் ஆகவே, இங்கே இதை விஸ்தரிப்பதாக இல்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். நாம் அதை கண் காணித்து வருகிறோம். நாம் சொல்லுகின்ற சரத்துக்களை மீறினால் எந்தவிதமான தயவு தாட்சணியமும் இல்லாமல் "பீனல் புரொவிஷன்" அடிப்படையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சைதை சா. துரைசாமி :** துணைத் தலைவரவர்களே, அவர்கள் சுத்திகரிப்பு செய்யாமல் சுவரேஜில் கழிவு நீரை விடுவ தால் பொது மக்கள் பாதிக்கப்படுவது மட்டுமின்றி குறிப்பாக சுவரேஜ் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அந்த ஆலையிலிருந்து வெளிவரும் கழிவுநீரை இரசாயன முறையில் சுத்திகரிப்பு செய்ய நடவடிக்கை எடுத்து, சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்க தகுந்த பாது காப்பு அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** துணைத் தலை வரவர்களே, நாம் அந்த விஷயத்தைக் கூட கவனித்து, அதற்கான சோதனைகளை எல்லாம் செய்திருக்கிறோம். அந்த வகையில் "It was noticed that the Trade effluent was treated in equalisation-*cum*-settling Plant through aera'ed lagoon, where aerated lagoon was working."



ஏரியேட்டட் லகூன் என்பது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் நாம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் பி.ஓ.டி. கன் டெண்ட் இருக்கக் கூடாது என்று நிர்ணயித்திருக்கிறோம். அந்தத் தொழிற்சாலையில் நாம் நிர்ணயித்த அளவுக்கு மேல் கொஞ்சம் ஜாஸ்தியாக பி.ஓ.டி. கன்டெண்ட் இருப்பதால் இன்னும் குறைக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். மூன்று மாதங்களுக்குள்ளாக குறைக்கவில்லை என்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சங்கர் நகர் சிமெண்ட் ஆலையிலிருந்து வெளிவரும் புகை.

491—(*வினா எண் 4444)—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் சங்கர் நகர் சிமிண்ட் ஆலையில் இருந்துவரும் புகையினால் அப்பகுதி பாதிக்கப்பட்டு உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், என்ன மாற்று நடவடிக்கைகள் எடுக்க பணிக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் எச் வி. ஹண்டே:** (அ) திருநெல்வேலி மாவட்டம் சங்கர் நகரிலுள்ள திருவாளர்கள் தி இண்டியா சிமெண்ட்ஸ் லிமிடெட் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் சிமெண்ட் தூசிகள் அத்தொழிற்சாலையின் அருகிலுள்ள இடங் களில் படியலாம்.

(ஆ) மேற்படி தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் தூசி யைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** துணைத் தலைவரவர் களே, என்னுடைய கேள்வியின் இரண்டாவது பகுதியே மாற்று நடவடிக்கைகள் என்ன என்பதுதான். அதைத் தெரிந்துகொள் வதற்காகத்தான் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறேன். ஏற் கெனவே அந்த சிமிண்ட் தொழிற்சாலையில் "எலக்ட்ரோஸ் டேடிக் ப்ரிசிபிடேட்டர்" என்று சொல்லக்கூடிய இரண்டு கருவி கள் வைக்கப்பட்டிருந்தும் கூட அவை இயக்கப்படவில்லை. அந் தத் தொழிற்சாலையில் உள்ள 5 சிம்மினிகளில் 4 சிம்மினிகள் இயங்குகின்றபோது இரண்டே இரண்டு எலக்ட்ரோஸ்டேடிக் ப்ரிசிபிடேட்டர்களை மட்டும்தான் வைத்திருக்கிறார்கள். அவை யும் ஒழுங்காக இயக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரி

யுமா ? அந்தக் கருவிகளில் ஒன்றை வைத்து இயக்குவதற்கு கோடிக்கணக்கான ரூபாய் செலவாகிறது என்ற காரணத்தால் அவற்றை அந்த சிம்மினிகளோடு இணைத்து இயக்காமல் இருப்பதை அரசு அறியுமா ? அறிந்திருந்தால் இயக்குவதற்கான நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச் வி. ஹண்டே :** துணைத் தலைவரவர்களே, அந்தத் தொழிற்சாலையில் 5 " கில்ன்ஸ் " இருக்கின்றன. கில்ன் 1 மற்றும் 2 இப்போது செயல்படவில்லை என்று தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. கில்ன்ஸ் 4 மற்றும் 5 மட்டும் எலக்ட்ரோஸ்டேடிக் ப்ரிசிபிடேட்டர்ஸ் பொருத்தப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. கில்ன்ஸ் மூன்றைப் பொறுத்த வரையில் எலக்ரோஸ்டேடிக் ப்ரிசிபிடேட்டர் பொருத்தப்படாவிட்டாலும், " சைக்ளோ செப்பரேட்டர் " என்ற கருவியை வைத்து ஓரளவுக்கு தூசி கட்டுப்படுத்தப்படுகிறது. The industry has written that it has proposed to set up an Electrostatic precipitator for klin No. 3 also. அத ம் நாம் உடனடியாக எலெக்ட்ரோஸ்டேடிக் ப்ரிசிபிடேட்டர் பொருத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதைச் செய்கிறார்களா என்பதையும் கவனித்துக் கொண்டு வருகிறோம்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** துணைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி அங்கே இரண்டு எலெக்ரோஸ்டேடிக் ப்ரிசிபிடேட்டர்ஸ் வைத்திருக்கிறார்கள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அவை சரியாக இயக்கப்படவில்லை. " ரன்னிங் காஸ்ட் " அதிகமாகும் என்பதால் அவர்கள் அந்தக் கருவிகளை இயக்காமல் வைத்திருக்கிறார்கள். அரசு அதை அறியுமா ? அவற்றை சரியாக இயக்க மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமாக ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லை என்றால் இனிமேலாவது நடவடிக்கை எடுப்பார்களா? அந்தப்பகுதியிலே இப்யோது அதிகமாக லங்ஸ் டிசீஸ்-ஆல் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படி பாதிக்கப்பட்டவர்களின் தொகை அதிகமாகிக் கொண்டு வருகிறது என்ற அச்ச உணர்வு மக்களிடத்தில் தோன்றி இருக்கிறது. எனவே, அதற்கு மருத்துவ ரீதியில் மாற்று நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எலக்ட்ரோஸ்டாட்டிக் ப்ரெசிபிட்டேட்டர் என்பதைப் பொறுத்த வரையில் போர்ட் மூலமாக நாம் சில அதிகாரிகளை அனுப்பி சோதனை செய்வதற்காக உத்தரவு போடு



கிறோம். அவர்கள் போய் சோதனை செய்கிறார்கள். அப்படிச் சோதனை செய்து எலக்ட்ரோஸ்டாட்டிக் ப்ரெசிப்பிட்டேட்டர் செயல்பட்டுக்கொண்டிருப்பதாகத் தகவல் கொடுக்கிறார்கள். இப்போது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அங்கேயே இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்குத் தெரிந்து இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் சில தகவல்களைச் சொல்லியிருக்கிறார்கள். சில நேரங்களில் ஏ. சி. போடுவதாகச் சொல்லிவிட்டு பிறகு அது போடப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு சொல்வது மாதிரியாக இந்தத் தகவலையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, எந்த நேரத்தில் வருகிறோம் என்று தெரிவிக்காமல் திடீரென்று சென்று சோதனை செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது மாதிரி, இரண்டு டெம்பரரியாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்ட அவையாவது ஒழுங்காகச் செயல்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு திடீரென்று சென்று சோதனை செய்து செயல்படாமல் இருந்தால் தயவு தாட்சண்யம் இன்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். அப்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறார்கள். ஆகவே, தவறு இருந்தால் அந்தத் தொழிற்சாலை மீதும் கூட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கர் நகர் சிமெண்ட் ஆலையிலிருந்து வெளிவரும் புகையின் காரணமாக இப்போது அங்குள்ள மக்களின் நிறமும் மாறிவிட்டது. அந்தப் பகுதியின் நிறமும் மாறிவிட்டது. விளைச்சலும் குறைந்து விட்டது. அங்குள்ள மக்க்ள் வெளியேறிக் கொண்டே இருக்கிறார்கள். மக்கள் தொகையும் குறைந்து விட்டது. ஏதோ இயந்திரத்தைப் பொருத்தி விட்டார்கள் என்று சொன்னபோதிலும் துர்நாற்றம் இன்னும் அதிகமாக இருந்து கொண்டுதான் இருக்கிறது. கிராமத்திலே பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். சீக்கிரமாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் அவர்கள் சொன்னமாதிரியாக பல ஆண்டுகளாக இது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இப்போதுதான் ஏர் பொல்லூஷன் கன்ட்ரோல் என்ற சட்டத்தின் கீழ் நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதை எல்லாம் சரியாகச் செய்திருக்கிறார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டதற்குப் பிறகுதான் 19–3–1985 அன்று அனுமதி புதுப்பிக்கப்பட்டது. எனவே, நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். பல ஆண்டுகளாக அந்தத் தூசி பரவியதன் காரணத்தால் ஒரு கிரே கலர் அங்கே இருப்பதைப் பார்க்கிறோம். எனவே, இதிலே

நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்னொரு புதிய டெக்னாலஜியையும் நாம் பயன்படுத்தச் சொல்லி இருக்கிறோம். Semi Wet Technology என்ற அந்த டெக்னாலஜியைப் பயன்படுத்தினால் ஈரம் காரணமாக தூசி வெளிவருகின்ற வாய்ப்பு குறையும் என்ற வகையில் புதிய டெக்னாலஜியைப் பயன்படுத்த வேண்டுமென்று யோசனை சொல்லியிருக்கிறோம்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, சங்கர் நகர் சிமெண்ட் ஆலையிலிருந்து வெளிவருகிற புகையின் காரணத்தால் சுற்றுப்புறம் பாதிக்கப்படுவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதுபோன்று ஏற்கெனவே பல முறை கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமாகவும், கேள்விகள் மூலமாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒன்றை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். பவானி ஆற்றில் அதாவது, மேட்டுப்பாளையத்தில் விஸ்கோஸ்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நெல்லை மாவட்டம் பற்றியது. எனவே, பவானி ஆறு பற்றிக் கேட்டால் பதில் இருக்காது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரும், நானும் இருந்து கொண்டிருக்கிற இராதாபுரம் தொகுதியில் திசையன் விளையில் ஒரு சிமெண்ட் ஆலையை நிறுவுகிறார்கள். பக்கத்தில் இருக்கிற நாங்குனேரித் தொகுதியில் பரப்பாடியில் ஒரு சிமெண்ட் ஆலையும் நிறுவுகிறார்கள். அந்த சிமெண்ட் ஆலைகளைப் பொறுத்த வரையில் இப்படிப்பட்ட தூசி வராமல் இருக்க முதலிலேயே கடுமையான நிபந்தனையோடு அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுமா ? அமைச்சர் அவர்கள் கிரே கலர் வந்தது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட வகையில் மானா மதுரையில் ஒரு அச்சம் பரவி அந்த முதலாளியை கிரேவ்-க்கு அனுப்பிவிட்ட ஒரு சூழ்நிலை உருவானதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவார்கள். எனவே, திசையன்விளையிலும், பரப்பாடியிலும் வருகின்ற அந்த ஆலைகளில் அமைச்சர் அவர்கள் சொல்வதுபோன்ற அமைப்புக்களை முதலிலேயே ஏற்படுத்துவதற்கு அரசு உத்தரவிடுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-50]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே ஏற்கெனவே சொன்ன மாதிரியாக, 1981 ஆம் ஆண்டு சட்டம் '' Air (Prevention and Control of Pollution) Act. என்ற





சட்டத்தை 1981-லேதான் கொண்டு வந்தோம். அதிலே செக்ஷன் 21 இருக்கிறது. அந்த செக்ஷன் 21-லே உள்ள சில நிபந்தனைகளின் அடிப்படையிலே அனுமதி கொடுக்கிறோம். அதிலே 2 பிரச்னைகள் இருக்கின்றன. புதியதாக ஆரம்பிக்கப்படக்கூடிய தொழிற்சாலைகள் நம்முடைய அனுமதி இல்லாமல் ஆரம்பிக்கப்படவே கூடாது என்பது ஒன்று. ஏற்கெனவே நடந்து கொண்டு வருகிற தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், அவர்கள் நம்முடைய அனுமதியை இந்த தேதிக்குள்ளே பெற்றாக வேண்டும் என்று தாக்கீது அனுப்பியிருக்கிறோம். அதிலே தாமதம் ஏற்பட்டாலும் நடவடிக்கை எடுக்கிறோம். அதற்குப் பிறகு, அனுமதி கொடுக்கும்போது, சில நிபந்தனைகளைப் போடுகிறோம். அந்த வகையிலே அதை முறைப்படுத்துகிறோம்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்த தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் என்னிடம் விவரம் இல்லை. ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையைப் பற்றித்தான் இங்கே தகவல் தந்திருக்கிறார்கள். ஆகவே எனக்கு அவர்களே முழு தகவல்களையும் கொடுத்தால் உடனடியாக கடிதம் அனுப்பி நடவடிக்வடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## நொய்யலாற்றுப் பகுதியில் தொழிற்சாலைக் கழிவு நீரால் குடிநீர் பாதிப்பு.

492 (*வினா எண். 6555)—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நொய்யலாற்றில் தொழிற்சாலைகளிலிருந்து கெமிக்கல்ஸ் கலந்த கழிவு நீர் கலப்பதால், நொய்யலாற்றின் இருபுறமும் 4 கிலோ மீட்டர் வரையில் உள்ள குடிநீர் கிணறுகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது அரசிற்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : சுத்திகரிக்கப்படாத இரசாயனப் பொருள் கலந்த கழிவுநீர் நிலத்தில் வெளிவிடப்படும்போது, கிணற்று நீர் மாசுறக் காரணமாகலாம். மாசினைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நடுவிலே செல்லுகின்ற நொய்யல் ஆற்றின் இருபுறங்களிலும் பல்வேறு டையிங் பேக்டரிகள் தங்களுடைய இரசாயன கலவைநீரை ஆற்றில் வெளியிடுகிறார்கள். அதன் மூலம் ஏற

குறைய 3 மைல் பரப்பு, இரண்டு கரை பகுதிகளிலும் உள்ள குடிநீர் கிணறுகளும், விவசாயக் கிணறுகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. புதலிப்பாளையம் பகுதியைப் பொறுத்தவரையில் அங்கே உள்ள கால்நடைகள் கூட அந்தத் தண்ணீரைக் குடித்ததனால் இறந்துவிட்டன என்று சொல்லுகிறார்கள். ஆகவே ஆற்றுக்கு உள்ளே விடுகின்ற அந்த இரசாயன தண்ணீரை உடனடியாக தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருப்பூரைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினருக்கு தெரியும் என்றாலும், சற்று விளக்கமாகவும் சுருக்கமாகவும் சொல்லவிரும்புகிறேன். திருப்பூரிலே 90 டெக்ஸ்டைல்ஸ்மில்கள் இருக்கின்றன. நம்முடைய கணக்கின் அடிப்படையில், அதிலே எல்லாவற்றிற்கும் நம்முடைய அனுமதியைப் பெறவேண்டும் என்றும், அப்படிப் பெறவேண்டுமானால் இன்ன தேதிக்குள்ளே சில நிபந்தனைகளை முடித்துத் தர வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம். அதாவது as per Section 26 of the Water Pollution Act the Industries have to obtain the consent of the Board for discharge of the effluents before 31st May 1984 அப்படி 31—5—1984-க்குள்ளே நீங்கள் அனுமதியைப் பெற வேண்டும் என்று, அதற்காக விண்ணப்பிக்க வேண்டும் என்று 90 டெக்ஸ்டைல்ஸ் மில்களுக்கும் நாம் கடிதம் எழுதியிருக்கிறோம். அதிலே 56 டெக்ஸ்டைல்ஸ் மில்கள்தாம் அனுமதி கோரி கடிதம் எழுதியிருக்கிறார்கள். மற்ற மில்களின் மீது நாம் ஏன் அனுமதி கேட்கவில்லை என்று நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதிலே ஒவ்வொரு இன்டஸ்ட்ரி மீதும் தனித்தனியாகவே நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, ரசாயன மருந்துகள் கலந்த கழிவு நீரை வெளியேற்றுவதனால் தமிழ்நாட்டின் பொது சுகாதார நலனுக்கே ஒரு அபாயமான முடிவாக இருக்கிறது என்பதை அரசு உணர்ந்து, மிக குறுகிய காலத்திலே நடவடிக்கை எடுத்து அதைத்தடுக்க சில நிபந்தனைகளை விதித்து அனுமதித்திருக்கிறீர்கள். அப்படி அனுமதி பெற்றதற்குப் பின்னால் கூட முன்புபோலவே இரசாயன மருந்துகள் கலந்த கழிவுநீரை வெளியேற்றுகின்ற தொழிற்சாலைகளின் உரிமங்களை உடனடியாக ரத்து செய்கின்ற முறையிலே நடவடிக்கை எடுப்பதைப்பற்றி அரசு பரிசிலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதிலே நான் இன்னொரு தகவலையும் கொடுக்கிறேன். 56 டெக்ஸ்டைல்ஸ் பிராசசிங் மில்ஸ் சொந்தக்காரர்கள் நம்முடைய அனுமதியைக்கேட்டிருக்கிறார்கள்.





நாம் 27 தொழிற்சாலைகளுக்குத்தான் அனுமதி கொடுத்திருக்கிறோம். அதாவது மொத்தம் உள்ள 90 மில்களில் 56 பேர்கள் கேட்டிருந்தார்கள், அதில் 27 பேர்களுக்குத்தான் அனுமதி கொடுத்திருக்கிறோம். அனுமதி கொடுத்திருக்கிற தொழிற்சாலைகளில் கூட மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல் மானிடரிங் கன்ட்ரோல் சிஸ்டம் முறையில் அவர்கள் எப்படி, என்ன செய்கிறார்கள் என்று பார்த்துக் கொண்டு வருகிறோம். இன்னும் சில தொழிற்சாலைகள் மீது லீகல் புரொசிஜர்படி அதை மூடவேண்டிய அளவுக்கும் நாம் நடவடிக்கை எடுக்கிறோம். அதிலும் பிரச்சினை இருக்கிறது. தொழிற்சாலை மூடப்படுகிற நேரத்தில் தொழிலாளர்கள் பிரச்சினை வரும் ஆகவே அந்த நேரத்தில் இரண்டு, மூன்று தொழிற்சாலைகள் மீது திட்டவட்டமாக நடவடிக்கை எடுத்துக் கொள்கிற நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, திருப்பூரில் இருக்கக்கூடிய டெக்ஸ்டைல் புராசசிங் இண்டஸ்ட்ரீஸ் என்பது நமது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி சாயம் போடுகிற சிறு தொழிற்சாலைகள். அதேமாதிரி பனியன்கள் பூராவும் சலவை பண்ணுகிற நூற்றுக்கணக்கான சலவைப் பட்டறைகள் இருக்கின்றன அவைகள் எல்லாம் சின்ன சின்ன யூனிட்டுகள். அவற்றிலிருந்து வரக்கூடிய கழிவுநீர் சுத்தப்படுத்தப்பட்டு ஆற்றுக்குள்ளே விடக்கூடிய அவ்வளவு பெரிய பொறுப்பை அந்த சிறிய தொழிற்சாலைகள் ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் முதலிலே சிந்திக்க வேண்டும். அடுத்து அந்த நொய்யலாற்றில் வாட்டர் ப்ளோ கிடையாது. Throughout the year there is no water flow. அப்படிப்பட்ட நிலையில் அந்தத் தொழிற்சாலைகள் கழிவு நீரை நொய்யலாற்றில் விடுமானால் பக்கத்திலே இருக்கிற கிணறுகளில் தண்ணீர் கெட்டுவிடும். குடி தண்ணீர் கிடைக்காது. அதனை ஆற்றிலே விடாமலும், இவ்வளவு பெரிய சுத்திகரிப்பு இயந்திரங்களை ஸ்தாபிக்காமலும், தண்ணீரை அப்புறப்படுத்துவதற்கு, தண்ணீரை அதே இடத்தில் சேமித்து பிறகு வெளியே அனுப்புகிற அளவில் துறை ஏதாவது திட்டத்தை உருவாக்குமா ? அமைச்சர் அவர்கள் அதுபோன்ற திட்டத்தை வெளியிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலைகள் கழிவுநீரை சுத்திகரித்ததற்குப் பிறகுதான் வெளியிட வேண்டுமென்று நாம் நிபந்தனை வகுத்

திருக்கிறோம். அந்தப் பொறுப்பையும் அரசாங்கம், இந்த இலாக்கா எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் some hundreds of crores of rupees செலவழிக்க வேண்டியிருக்கும். உலகத்தில் எந்தப் பகுதியிலும் அதுபோல் நடைபெறுவதில்லை. தொழிற்சாலைக்குத்தான் நாம் உணர்த்தலாம். 27 இண்டஸ்ரீஸ்களுக்கு அனுமதி கொடுத்தோம் என்று ஏற்கனவே சென்னேனே அதிலே 4 இண்டஸ்ட்ரீஸ்கள் ட்ரீட்மெண்ட் பிளாண்ட் போட்டிருக்கிறார்கள். In 5 industries the installation of the effluent treatment plant is in progress. ஆகவே அந்த வகையிலே செய்யமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக சொல்கிறேன். தொழிற்சாலைகள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் மிக முக்கியமான பொறுப்பு இருக்கிறது என்பதை திட்டவட்டமாக இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். தொழிற்சாலைகளை ஆரம்பிக்கிற நேரத்தில், தொழிற்சாலைகள் நடந்து கொண்டிருக்கிற நேரத்தில் கழிவுநீரை சுத்திகரிக்கிற பொறுப்பை அந்தத் தொழிற்சாலை ஏற்றுக் கொள்ள வேண்டியது மிக முக்கியமானதாகும். It is a social problem. என்ற வகையிலே அந்தத் தொழிற்சாலையினுடைய பொறுப்பு இருக்கிறது. இங்கே மட்டுமல்ல மத்திய அரசிலும் மற்ற எல்லா மாநிலங்களிலும் இதுதான் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குளச்சல் மருத்துவ மனையை விரிவுபடுத்துதல்.

493—(*வினா எண். 6695) திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் அரசு மருத்துவமனையை அனைத்து வசதிகளும் அடங்கிய பெரிய மருத்துவமனையாக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அத்தகைய செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.



திரு. எப். எம். இராசரத்தினம் : தலைவர் அவர்களே, குளச்சல் மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு கிடையாது. திடீரென்று விபத்து ஏற்பட்டாலோ அல்லது குளச்சல் மருத்துவமனையிலிருந்து நோயாளிகளை அவசரமான நிலைகளில் தலைமை மருத்துவமனைக்கு எடுத்துச்செல்ல வேண்டுமென்றாலோ அதற்கு வசதியாக அங்கே ஆம்புலன்ஸ் வேன் கிடையாது. அதே போல அவசரமான நேரங்களில் தொடர்பு கொள்வதற்கு ஏற்ற வகையில் தொலைபேசி வசதியும் இல்லை. அந்த மருத்துவ மனையில் உள்ள கழிவுநீர் குட்டையாகத் தேங்கி அந்த மருத்துவமனை காம்பவுண்டிற்குள்ளேயே இருக்கிற சூழ்நிலையும் இருக்கிறது. அதை அப்புறப்படுத்த முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. ஆகவே இவைகளை மனதில் கொண்டு இன்றைக்கு பல்வேறு கிராமங்கள் இணைக்கப்பட்டு குமரி மாவட்டத்தின் கடலோரப் பகுதியாக இருக்கிற குளச்சல் நகரினுடைய சிறப்பு கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தனிக்கவனம் செலுத்தி அந்த மருத்துவ மனையை பெரிய மருத்துவமனையாக்குகிற திட்டத்தை உருவாக்கித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களும் நானும் அந்த மருத்துவமனைக்கு சென்றிருக்கிறோம். அந்த மருத்துவமனையை ஏற்கெனவே இருந்த நிலைமையை மாற்றி பல வகையில் சீர்படுத்தி இப்போது எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கிற நல்ல மருத்துவமனையாக ஆக்கியிருக்கிறோம். இன்னும் பல வசதிகள் தேவையென்பதில் யாருக்கும் கருத்துவேற்றுமைகள் இருக்க முடியாது. அதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். அங்கே 32 படுக்கைகள் இருக்கின்றன. The Dental laboratory is functioning. இன்-பேஷண்ட்சை பொறுத்தவரையில் 32 படுக்கைகளில் 28 நோயாளிகள் சராசரியாக இருக்கிறார்கள். அவுட்-பேஷண்ட்சை பொறுத்தவரையில் சராசரியாக 317 நோயாளிகள் ஒரு நாளைக்கு வருகிறார்கள். ஒரு வருடத்திற்கு 314 டெலிவரிகளும், 217 மைனர் ஆபரேஷன்களும் அங்கே செய்யப்பட்டு இருக்கின்றன. ஆகவே இவைகளை எல்லாம் மனதிலே கொண்டு, இன்னும் அதை தீவிரப்படுத்த வேண்டும் என்று சொல்கிற கோரிக்கை நியாயமான கோரிக்கையாக இருக்கிறது என்று கருதுகிறேன். உடனடியாக

[1986 ஏப்ரல் 17

ஒரு ஆம்புலன்ஸ் வேன் அங்கே தேவை என்று ஏற்கெனவே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இந்த ஸ்வரேஜைப் பொறுத்த வரையிலும், அங்கே உள்ள அந்த சாக்கடையை அப்புறப்படுத்த வாய்ப்பு இல்லாத காரணத்தால், இத்தனை நாட்களுக்கு ஒரு தடவை சுத்திகரிப்பு செய்ய வேண்டும் என்று அங்கே இருக்கக் கூடிய லோக்கல் அத்தாரிட்டிகளுடைய ஒத்துழைப்பையும் நாடி இருக்கிறோம். இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே அந்த வகையிலே இந்தப் பிரச்சினை கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளச்சல் மருத்துவமனைக்கு கூடுதலாக 50 படுக்கைககள் கொண்டு தனியாக ஒரு வார்டு அமைக்கப்படுமா? மேலும் சித்த மருத்துவம், ஹோமியோபதி மருத்துவம் போன்ற தனிப் பிரிவுகள் கொளச்சல் மருத்துவமனையில் சேர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் எந்த வகையில் அந்த மருத்துவமனையை விஸ்தரிக்கலாம் என்பதைப் பற்றி நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கொளச்சல் மருத்துவ மனையைப் பற்றிய கேள்வியாக இருக்கிற காரணத்தால் என்னுடைய தொகுதியாக உள்ள பத்மநாபபுரம் அரசு மருத்துவ மனைக்கு அதிகமாக படுக்கை வசதிகள் வேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். ஆகவே அந்த அதிகமான படுக்கை வசதிகளையும் மற்றும் அங்கே ஏற்பட்டுள்ள சுகாதாரக் கேட்டைப் போக்குவதற்கும் அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இது கொளச்சல் மருத்துவமனையைப் பற்றிய கேள்வி. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப் பற்றி தனியாக ஸ்டார்டு கொஸ்டியன் போட்டால், வெகு விரைவில், அதற்கு உரிய பதில் சேகரித்து, அதற்கு விடை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 17]

## பட்டு உற்பத்தி

**494**—(*வினா எண். 3899) திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பட்டுப்புடவை தயாரிக்க கைத்தறிக்கு தேவையான பட்டு நூல் எவ்வளவு?

(ஆ) இறக்குமதி தேவைப்படுகிறதா?

(இ) தமிழ்நாட்டில் கைத்தறியில் தயாரிக்கப்படும் புடவைகளில் புதிய ரகங்கள் தயாரிக்கப்படுகின்றனவா?

(ஈ) அவை ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ) தமிழ்நாட்டில் பட்டுப் புடவை தயாரிக்க சுமார் 185 முதல் 200 டன் பட்டு நூல் தேவைப்படுகிறது.

(ஆ) தற்போது இறக்குமதி தேவைப்படுகிறது.

(இ) தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் பட்டுப் புடவைகளில் புதிய ரகங்கள் தயாரிக்கப்படுகின்றன.

(ஈ) கோ ஆப்டெக்ஸ் இதுவரை ஏற்றுமதி செய்யவில்லை. தனியார்கள் ஏற்றுமதி செய்கிறார்கள்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு பட்டுப்புடவைகள் தயாரிக்கப்படுகின்றன? இறக்குமதி தேவை என்றால், எங்கிருந்து எவ்வளவு இறக்குமதி செய்யப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 30 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பட்டுப் புடவைகள் தயாரிக்கப்படுகின்றன. சைனாவிலிருந்து 100 டன் பட்டு நூல் இறக்குமதி செய்ய மத்திய அரசிடம் மாநில அரசு அனுமதி கேட்டு இருக்கிறது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுத் துணி ஏற்றுமதி செய்யப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. தனியார் துறையில் இருந்துகூட பட்டுப் புடவைகள் ஏற்றுமதி செய்யப்படவில்லையா? என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையில் ஏற்றுமதி செய்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு 5 கோடிக்குக் குறையாமல் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**திரு. டி. என். முருகானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கைத்தறி பட்டுப் புடவைகளுக்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி இருப்பதால், கோ-ஆப்டெக்ஸ் மூலமாக வெளிநாடுகளுக்கு பட்டுப் புடவை ஏற்றுமதியை அதிகரிக்க அல்லது ஏற்றுமதி செய்ய, அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? குறிப்பாக தமிழர்கள் வாழும் நாடுகளில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை ஷோரூம் அல்லது விற்பனை ஏஜென்டுகளை நியமிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேசன் என்ற மத்திய அரசின் வணிக நிறுவனம் மூலம் கோ-ஆப் ஆப்டெக்ஸ் (அசோசியேட்) ஏஜென்ட் என்ற முறையில் ஏற்றுமதி செய்ய, ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*495*—(*வினா எண் *4010*)—**டாக்டர் அ. பொன்னுசாமி, திரு. ச. பாலகிருஷ்ணன், திரு. அ. பெரியசாமி, திரு. யு. பி. மாதையன், மற்றும் திரு. தி. நா. கோ. அ. மனோகரன் :** மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பட்டு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள் எத்தனை உள்ளன ?

(ஆ) தமிழ்நாட்டில் செயற்கைப் பட்டு தயாரிக்கும் நிலையங்கள் எங்கெங்கு உள்ளன ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** (அ) தமிழ்நாட்டில் கூட்டுறவு அமைப்பின்கீழ் 102 பட்டு துணி உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. பட்டு நூல் உற்பத்திக்கு 64 சங்கங்கள் உள்ளன. பட்டு நூல் விற்பனைக்கென காஞ்சீபுரத்தை தலைமையகமாகக் கொண்டு அங்கு ஒரு பட்டு உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு விற்பனை இணையமும், ஆரணி, மதுரை, சேலம் மற்றும் கும்பகோணத்தில் அதன் கிளைகளும் உள்ளன.

(ஆ) தமிழ்நாட்டில் கோயம்புத்தூரில் ''சவுத் இந்தியா விஸ்கோஸ்'' என்ற நிறுவனம் செயற்கைப் பட்டு தயாரிக்கும் நிலையமாக செயல்பட்டு வருகின்றது.





**டாக்டர் அ. பொன்னுசாமி :** பெருமைபெற்ற பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப்புழுக்களைக் கொல்வதால், பட்டு நெசவுக்கலைக்காக செய்யப்படும் கொலையால் கிடைக்கும் பட்டு நூலைக்கொண்டு நெய்யப்படும் சேலைகளைக் கட்டிக்கொள்வதால் உடல் முழுவதும் புழுக்கள் ஊர்வதுபோன்ற உணர்வு ஏற்படுகின்றது என்கின்ற காரணத்தால் இயற்கைப் பட்டுக்குப் பதில் செயற்கைப்பட்டு தயாரிப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் பட்டுப் புழுவினால் வருகின்ற பட்டு நூலைக்கொண்டு நெய்யப்படுகின்ற பட்டுப் புடவையைப்பற்றி ஒரு தவறான அபிப்பிராயத்தை அவர்கள் சொல்கிறார்கள். உலகத்தில் இதுவரையில் தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுகின்ற பட்டு மற்றும் வேறு பல நாடுகளிலிருந்து தயாரிக்கிற பட்டுநூலிலிருந்து தயாரிக்கப்படுகின்ற துணிகளுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. ஆகவே அந்த உணர்வு சரியானதல்ல. ஏற்கெனவே செயற்கைப் பட்டு தயாரிக்கப்பட்டு வருகிறது. புதிதாக அரசு தயாரிக்கத் தேவையில்லை.

**திரு. ச. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப்புடவை உற்பத்திக்கு மூலப்பொருளான அந்த பட்டுக்கூடுகளை விற்பதற்கு, குறிப்பாகச் சொல்லப்போனால் பெரியார் மாவட்டம் போன்ற பகுதிகளில் சரியான விற்பனை நிலையங்கள் இல்லை. அதனால் கொல்லேகால் போன்ற பகுதிகளுக்கு கொண்டுசெல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே பல நஷ்டங்கள் ஏற்படுகின்றன. இதனால் பலரும் இந்த பட்டு உற்பத்தித் தொழிலிலே ஈடுபடுவதற்கு முன்வருவது இல்லை. எனவே இதுபோன்ற குறைகளை நீக்கவும், இந்த பட்டு உற்பத்தியை ஊக்குவிக்கின்ற வகையிலும் அந்தந்தப் பகுதிகளிலே விற்பனை நிலையங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இது ஊரகத் தொழில் வளர்ச்சி அமைச்சர் சம்பந்தமான இலாக்காவை பொருத்தது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர், அவர்களுக்கு வினா போடவேண்டும்.

**திரு. அ. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் பட்டு தயார் செய்யும் நிலையம் ஆரம்பத்தில் தொடங்கப்பட்டு, இப்போது செயல்படாத நிலையில் இருந்து வருகிறது. அந்த நிலையை மாற்றி மீண்டும் பட்டு தயார் செய்யும் நிலையை அரசு ஏற்படுத்த முன் வருமா ? ஆம் எனில், எப்போது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு தயாரிக்கிற அந்தத் தொழில் ஊரகத் தொழில் அமைச்சர் இலாக்காவைச் சேர்ந்தது. அகவே அவருக்கு வினாவைப் போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. யு.பி. மானதயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப்புழு வளர்ப்பதற்குத் தேவையான சாத்தியக் கூறுகள் பெரியார் மாவட்டத்திலே அதிகமாக உள்ளன. குறிப்பாக, பெருந்துறை, சத்தியமங்கலம், தாளவாடி, பெத்தநாயக்கன்பாளையம் மற்றும் பர்கூர் ஆகிய பகுதிகளில் பட்டு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்களை அமைக்க அரசு முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செரி-கல்ச்சர் என்ற பட்டு உற்பத்தி செய்யும் இலாக்கா ஊரக தொழில் அமைச்சரைப் பொருத்தது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர், அவருக்கே அந்த வினாவைப் போடவேண்டும்.

ஜரிகை உற்பத்தி.

496—(*வினா எண் 4424) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஜரிகை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி, கும்பகோணம் ஆகிய ஊர்களில் ஜரிகைத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அரசு ஆய்ந்து வருகிறது.

திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய திட்ட மதிப்பீடு என்ன, உற்பத்தித் திறன் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உற்பத்தியாகிற மொத்த ஜரிகை தமிழ்நாட்டுத் தேவையின் 10-ல் 1 பாகம் ஆகும். 10-ல் 1 பாகம் தான் காஞ்சிபுரத்தில் தயாரிக்கப்படுகிறது. அதேபோல ஆரணியிலும், குடந்தையிலும் புதிதாக ஜரிகை உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.



திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கையில் குடந்தையிலும், ஆரணியிலும் ஜரிகை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்றார்கள். எவ்வளவு முதலீட்டிலே அரசு செய்ய இருக்கிறது? ஜரிகைக்கு வேண்டிய வெள்ளியை அரசு எங்கிருந்து வாங்குகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜரிகைக்கு தங்கமுலாம் இடுகிற வெள்ளி இழை சூரத்திலிருந்து பெறப்படுகின்றது. இந்தியாவில் வேறு எங்கும் அந்த வெள்ளி இழைகளைத் தயாரிக்க ஆலைகள் தோன்றவில்லை. அதை தாங்கள் செய்தித்தாளில் 'டர்ன் கீ C. T. ப்ராஜெக்ட்டில் யாராவது செய்ய முடியுமா என்று விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்து இருக்கிறோம். தற்போது சூரத்திலிருந்துதான் வரவழைக்கப்படுகிறது.

உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்.

497—(*வினா எண் 3265) மாண்புமிகு திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியம் : (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு உதவி செய்யும்பொருட்டு "உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்" (Farmers Economic Development Corporation) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : ஆம், அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்; (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஒன்று மாநிலத்தில் அமைக்கின்ற பரிசீலனை இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அமைக்கப்பட்ட இருக்கிற உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தினுடைய நோக்கங்கள் என்ன? மிக முக்கியமாக விவசாய பெருமக்கள் தங்களுடைய விளைப்பொருட்களை அறுவடை செய்த உடன்

மார்க்கெட்டில் ஏற்படுகிற விலைவிழ்ச்சி தாக்குதல்களால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். உதாரணமாக கடலையை எடுக்கும்போது விவசாயிகள் அறுவடை செய்கிற நேரத்தில் மூட்டை 150 ரூபாய்க்கு விற்கின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆனால் 3 மாதம் கழித்து அதுவே மூட்டை 250 ரூபாய்க்கு போகிற சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த விலை வீழ்ச்சியின் தாக்குதலால் ஒவ்வொரு விவசாயியும் பாதிக்கப்படுகிறார். இப்படிப்பட்ட தாக்குதலிலிருந்து அவர்களை காப்பாற்றுவதற்கு, அவர்களுக்கு கை கொடுப்பதற்கு இப்போது அமைக்கப்பட இருக்கின்ற இந்த உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தில் நடவடிக்கை எடுக்கின்ற செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற அந்தக் கருத்து இந்த மேம்பாட்டுக் கழகம் ஆரம்பிக்கிற நேரத்தில் அதிலே உட் கருத்தாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலே பல கருத்துக்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மூலம் கிடைக்கும் வேளாண்மை பற்றிய முடிவுகளை உடனுக்குடன் உழவர்களுக்கு எடுத்துச் சொல்வது ஒன்று. இரண்டாவது வேளாண்மைப் பற்றிய செயல்முறை விளக்கங்களை உழவர்களுக்கு அளிப்பது. அடுத்து உழவர்களுக்கு நிதி மற்றும் இடுபொருட்கள் அதிகமாக வழங்குவது. அடுத்து உழவர்கள் பதப்படுத்துவது மற்றும் திரட்டி வைப்பது மூலமாக நல்ல நிலை கிடைப்பதற்கு வேண்டிய உதவி செய்து, அதேபோல் உழவர்களுக்கு தங்கள் விளைபொருட்களுக்கு தேவையான நல்ல விலை கிடைக்க இந்த மேம்பாட்டுக் கழகம் வேண்டிய உதவி செய்வது. அடுத்து உழவர்கள் உப தொழில்கள் அதாவது பால் பண்ணை, தேனீ வளர்த்தல் கோழி வளர்த்தல், பன்றி வளர்த்தல், பட்டுப்பூச்சி வளர்த்தல், மீன் வளர்த்தல், தோட்டம் அமைத்தல் போன்றவைகளுக்கு உதவி செய்வது. இப்படி கிராம மக்களுடைய பொருளாதாரத்தில் ஒரு புரட்சிகரமான மறுமலர்ச்சியை ஏற்படுத்த இந்த உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஆரம்பிக்க அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. போ. உத்திரபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழக விவசாயிகளுக்கு பல்வேறு பிரிவுகளில் உதவி செய்யப் போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தில் அங்கம் வகிக்கப் போகின்றவர்கள் யார். யார்? அரசு





அதிகாரிகளா, அதிகாரிகளோடு சேர்ந்து பொது மக்கள் பிரதிநிதிகளும் பங்குகொள்கிறார்களா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அமைக்கவேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையை நாம் இப்போது உருவாக்கியிருக்கிறோம். அது அரசாங்கத்தால் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. அப்படி முடிவு செய்யும்போதுதான் அதை தனிப்பட்ட முறையில் கார்ப்பரேஷனாக நடத்துவதா அல்லது நம்மைப் போன்றவர்களின் ஆலோசனையின்படி நடத்துவதா என்பதைப்பற்றி முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக தமிழக அரசினுடைய விவசாய உயர் மட்டக் குழுவின் பரிந்துரையை அரசு ஏற்குமா? அந்த பரிந்துரைகளின் முக்கியமான நோக்கம்—விவசாயிகளின் கடன்களை ரத்து செய்கின்ற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய பொருளாதாரத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி ஆகவேண்டும் என்றுதான் இந்தத் திட்டத்தை நாம் இப்போது கொண்டு வர இருக்கிறேரம். தள்ளுபடி செய்வதற்காக இந்தத் திட்டத்தை கெரண்டுவரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தினுடைய 4, 5 கருத்துக்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதேபோல் உழவர்கள் செய்யும் பயிர்களில் பூச்சி விழுந்து நாசம் ஆகிவிட்டால் இந்த உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் பரிந்துரை செய்தால் அதை ஏற்று அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தில் அப்படி ஒரு திட்டம் இல்லை. அதற்கு தனியாக இன்ஷூரன்ஸ் திட்டம் இருக்கிறது.

[1986 ஏப்ரல் 17

உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் என்று சொல்லுவது விவசாயிகளுக்கு கிடைக்கவேண்டிய பல சலுகைகள் ஒருமித்தவகையில் விவசாயிகளுக்குப் விரைவாகபோய் சேர்வதற்கு வேண்டிய வழிவகைகளை இந்த உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் செய்யும் என்பதைத் தெரிந்துக் கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய மேம்பாட்டுக் கழகம் அமைக்கும் இந்த அரசு, கடுமையான வறட்சி நிலவுகின்ற இந்த நேரத்தில், அநேக மாவட்டங்களை வறட்சிப் பிரதேசங்களாக அறிவிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்ற நேரத்தில், ஒரு வருடத்திற்காவது அரசு இந்தக் கடன்களை விவசாயிகளிடமிருந்து திரும்ப வாங்குவதை ஒத்திவைக்குமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைக்க வேண்டிய பிரச்சினை இல்லை. வறட்சியா, இல்லையா என்பதைச் சொல்லக்கூடியவர் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### சிங்காரா மின் நிலைய ஊழியர் கூட்டுறவு பண்டகசாலை

498—(*வினா எண். 3458) திரு. கு. ரமணி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், சிங்காரா மின் உற்பத்தி நிலைய ஊழியர்களின் கூட்டுறவு பண்டகசாலையில் ரூ. 70,000-க்கு மேல் கையாடல் நடைபெற்று பண்டகசாலை மூடப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

(இ) மேற்படி பண்டகசாலையில் ரேஷன் பொருட்களைப் பெற்று வந்த 250 குடும்பங்களுக்கு ரேஷன் சப்ளை செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?



1986 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) பைக்காரா மின் ஊழியர் கூட்டுறவு பண்டகசாலையில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக புகார் மனுக்கள் வந்தன. அதன்பேரில், 1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்ட பிரிவு 65-ன் கீழ் விசாரணை செய்யப்பட்டது. விசாரணை அறிக்கையின் அடிப்படையில் குற்றம் புரிந்துள்ள நபர்கள் மீது குற்றப் புலனாய்வு பிரிவில் புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(இ) மாற்று வசதி செய்து, கட்டுப்பாட்டுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நீலகிரி மலையிலே இருக்கிற சிங்காரா என்கிற இடம் ஒரு 'ஐசொலேட்டட் பிளேஸ்' ஆகும். அங்கே இருக்கிறவர்கள், வேறு எங்கேயும் போய் எந்தப் பொருளும் வாங்க முடியாது. அவர்கள் பூராவும் மின் உற்பத்தி நிலையத்தில் வேலை பார்க்கின்றவர்களின் குடும்பங்கள். அந்த ஊழல் செய்த பேர்வழி பற்றி மூன்று வருடத்திற்கு முன்னமேயே, நானே பல மெமோரண்டங்கள் கொடுத்து இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறையிலே பார்த்தால் என்னுடைய மெமோரண்டங்கள் இருக்கும். அந்த நபர் மீது என்ன ' ஆக்ஷன் ' எடுக்கப்பட்டிருக்கின்றது ? அந்தத் தலைவர் என்று சொல்லக்கூடியவர் செய்திருக்கக்கூடிய ஊழல் மீது என்ன ஆக்ஷன் எடுக்கப்பட்டுள்ளது ? இப்போது அந்தப் பண்டகசாலையை திரும்பவும் சரியாக கூட்டுறவுத் துறையின் கீழ் நிர்வகிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெறுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருப்பதுபோல், அவர்களே நிறைய புகார் கொடுத்து இருக்கிறார்கள். அதன் மீது நாங்கள் நிறைய நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். அந்த நிர்வாகம் சம்பந்தப்பட்டவர்கள், அங்கே இருக்கிற செயலாளர், விற்பனையாளர்கள் மொத்தம் ரூ. 30,832 கையாடல் செய்து இருக்கிறார்கள். அவர்கள் மீது 7–6–1985 இல் காவல் துறையிலே புகார் செய்யப்பட்டுள்ளது. இப்போது அவர் சொல்கிற அந்தப் பகுதியில் 116 குடும்ப அட்டைகள்தான் உள்ளன. ஆகவே, இப்போது வாரத்தில் ஒரு நாள் அங்கே வந்து, அத்தியாவசியப் பொருட்களைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். இப்போது அதே இடத்தில் போடவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்வது பற்றி, அங்கே அந்த இடம் வேண்டும் என்று

மின் வாரியப் பொறியாளர் அவர்களிடம் கேட்டு இருக்கிறோம். அவர் இடம் கொடுத்தவுடன், அங்கேயே வைத்து போட ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அந்த இடம் முழுவதும் இந்த அரசுக்குச் சொந்தமான இடம். அல்லது மின் வாரியம் எடுத்துக்கொண்டிருக்கிற இடம். இரண்டைத் தவிர தனியாருக்கோ, மற்றவர்களுக்கோ அங்கே ஒரு 'பிட்' கூட நிலம் கிடையாது. மின் துறையினுடைய தொழிலாளர்கள் அவர்கள். எனவே, மின் துறையிலேயே உடனடியாகக் கேட்டு—அவர்கள் வெளியே பஸ்ஸிலே சென்று பொருள் வாங்கி வர வேண்டுமென்றால், அதற்கு 10 ரூபாய் செலவழித்து வாங்கிக் கொண்டு வரவேண்டும்—அந்த 'புரொவிஷன்கள்' முழுவதும் அந்த இடத்திலேயே கிடைக்கும்படியாக அமைச்சர் அவர்கள் கொஞ்சம் வேகமாக நடவடிக்கை எடுத்து அனைத்துப் பொருள்களையும் அங்கே சப்ளை செய்ய ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர் இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை நாங்கள் புரிந்து கொண்டிருக்கிறோம். அது தனிப்பட்ட ஒரு இடம் என்பதை அவருடைய மனுவிலேயே சொல்லி இருக்கிறார். அந்தக் கருத்திற்கேற்றாற் போல, அங்கேயே தொடர்ந்து வாரம் ஒரு நாள் போடுவதை, தொடர்ந்து போடுவதற்கு முயற்சிகளை நிச்சயமாக எடுப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கே உள்ள அந்த கார்டுக்கு சொந்தக்காரர்கள் தங்களுக்கு போதுமான அரிசி, தேவைக்கேற்றபோது கிடைக்கவில்லை என்று கூறும் குறை இருக்கிறது. அதை நிவர்த்திக்க அங்கே ஸ்டோர் இல்லை என்றாலும் கூட, நடமாடும் ஊர்திகள் மூலம் அவர்களுடைய தேவையினைப் பூர்த்தி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நடமாடும் ஊர்தியில் பொருள் கொண்டு வரச் சொல்கிறார்கள். ஆனால் அது நடமாடுவதற்கே மிக மோசமான பகுதியாகும். வாரத்திலே ஒரு நாள் இப்போது ரேஷன் போட்டுக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்தக் கருத்தை ஏற்று வேண்டிய நடவடிக்கைகளைப் பரிசீலிப்போம்.



### தலைவாசலில் கூட்டுறவு தக்காளிச்சாறு தொழிற்சாலை.

499—(*வினா எண். 3972)—திருமதி தா. இராசம்மாள் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசலில் கூட்டுறவுத் துறையில் தக்காளிப்பழச்சாறு தொழிற்சாலை அமைக்க அரசிடம் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திருமதி தா. இராசம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து மழையினாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ள தலைவாசல் பகுதி விவசாயிகள் தங்களுக்குக் கிடைக்கும் குறைவான தண்ணீரைக் கொண்டு நிறைய காய்கறிகள் உற்பத்தி செய்கிறார்கள். அந்தக் காய்கறிகளுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை. அதிலும் குறிப்பாக தக்காளி ஆண்டு முழுவதும் நிறைய அங்கே பயிராகிறது. ஆகவே, அந்தத் தக்காளியை வைத்து தக்காளி பதனிடும் தொழிற்சாலை ஒன்றை கூட்டுறவு முறையில் அமைக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10020)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே கொல்லிமலை வாழ்ப் பகுதியிலே பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து ஒரு பழம் பதனிடும் ஆலையை நிறுவிக் கொண்டு வருகிறோம். அங்கே அன்னாசிப் பழத்தைப் பதனிடுவதற்குத்தான் திட்டம் இருக்கிறது. அதிலே தக்காளிச்சாறு செய்வதற்கு சரியாக வருமா என்று பார்க்கலாம். நடைமுறையில் அங்கே எவ்வளவு தக்காளி வரும் என்று பார்த்து புதிதாகத் துவக்க இருக்கிற அந்த ஆலையிலே அதைச் செய்ய முடியுமா என்பதைச் சரி பார்த்து தேவை என்றால் அதைப் பரிசீலனை செய்யலாம்.

[1986 ஏப்ரல் 1

திருமதி தா. இராசாம்பாள் : தலைவர் அவர்களே, ஆத்தூர் தாலுகாவை வறட்சிப் பகுதியாக அறிவிக்கக் கோரி விண்ணப்பித்திருக்கிறோம். அதுவும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. டிசம்பர் 1984இல் மழையினால் பாதிக்கப்பட்டதற்கு அதற்கான நிவாரணம் கிடைக்கவில்லை. ஆனால் கூட்டுறவுத் துறை மூலமாக சிறு விவசாயிகள் கூட பாதிக்கப்படுகிற நிலையில் கடன் வசூல் வேகமாக நடைபெற்று வருகிறது. விவசாயிகளின் விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காத காரணத்தினால் தக்காளி கூடை கூடையாக மாட்டுக்குக் கொட்டுகிற நிலை இருக்கிற காரணத்தினால் மீண்டும் அதைப் பரிசீலனை செய்து ஆத்தூர் தாலுகா தலைவாசலிலே பழம் பதனிடும் தொழிற்சாலையை நிறுவ அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தக்காளிப் பதனிடுகிற ஆலையைப் பற்றிக் கேட்டார்கள். முன்பே அதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன். பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக உருவாக்கப்படுகின்ற அந்த ஆலையிலே இதைச் செய்ய முடியுமா என்று அரசாங்கத்திலே கணக்கிட்டுக் கொண்டிருக்கிறோம். அதன் மூலமாகப் போதுமான அளவுக்கு அதற்காக தக்காளி வரும் என்று சொன்னால் பின்னாலே அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. எம். வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவாசல் தொகுதியிலே தக்காளிச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மாநிலத்திலே வேறு எங்காவது அப்படிப்பட்ட தொழிற்சாலை துவக்குவதற்கு எண்ணம் அரசுக்கு இருக்கிறதா ? குறிப்பாக தர்மபுரி மாவட்டத்திலே, அதிகமாக இதுபோன்ற பழங்கள் உற்பத்தியாகிற இடமாக இருப்பதால் அங்கே இதுபோன்ற தொழிற்சாலையைத் துவங்குவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ் . எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வேறு எங்கும் அப்படி ஆரம்பிக்கிற கருத்துரு அரசிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்தைப் பரிசீலனை செய்கிற முறையிலே அந்தப் பகுதியிலே ஆரம்பித்தால் லாபகரமாக இருக்குமா என்று பரிசீலனை செய்து பார்த்து அப்படி இருந்தால் அதற்கான ஏற்பாடு செய்யப்படும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்காளிச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலையை உருவாக்கும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை என்று



1987 ஏப்ரல் 17]

கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தொழிற்சாலை ஆரம்பிக்காவிட்டாலும் பரவாயில்லை. உற்பத்தி செய்யப்படுகிற தக்காளிக்கு அடிப்படை விலை என்ற முறையிலே புளோர் பிரைஸ் என்று கிலோவுக்கு 1 ரூபாய் என்று கொடுப்பதற்கு திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்காளி மட்டுமல்லாமல் தமிழகத்திலே மாம்பழம், திராட்சை போன்ற பழங்கள் அதிகமாக தர்மபுரி மாவட்டத்திலே உற்பத்தியாகின்றன. எனவே பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக ஒரு தொழிற்சாலையை அங்கே அமைத்து விவசாயிகளுக்கு நன்மை செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, உறுப்பினர்களின் கருத்தை ஏற்று அந்தப் பகுதியிலே ஒரு பழம் பதனிடும் தொழிற்சாலையை ஆரம்பித்தால் சரியாக இருக்குமா, லாபகரமாக இயங்குமா என்று பார்த்து லாபகரமாக இருந்தால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையிலே ஒரு பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்கப்படும் என்று சொன்னார்கள். எத்தனை லட்ச ரூபாயில் அது அமைய இருக்கிறது ? அதற்கு மேலும் நிதி தேவைப்படுமானால் அரசு அதைக் கொடுத்து உதவ முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தை ஆரம்பிக்கிற நேரத்திலே 9½ இலட்ச ரூபாய் செலவிலே ஆரம்பிப்பதாக இருந்தது. அதிலே ஒரு சில மாற்றங்களைச் செய்து இப்போது 16 இலட்ச ரூபாய் செலவிலே உருவாக்க உள்ளோம். அதற்கு கட்டட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. தேவையான தொகையை அரசாங்கத்திடம் கேட்டிருக்கிறார்கள். அதை என்.சி.டி.சி. யிடமிருந்து வாங்கிக் கொடுக்க அரசாங்கம் உதவி செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் **தலைவர் :** உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1— கோவிலூற்று பகுதியிலுள்ள மின்சார மோட்டாரை பழுது பார்த்தல்.

வினா 1554—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், கோவிலூற்று பகுதி வாழ் மக்களிடமிருந்து பாது காக்கப்பட்ட குடிநீருக்காகவும், பழுதடைந்த மின்சார மோட் டாரைப் பழுது பார்க்கக் கோரியும் மனு ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், கோவிலூற்று பகுதி வாழ் மக்களிடமிருந்து பாது காக்கப்பட்ட குடிநீருக்காகவும், பழுதடைந்த மின்சார மோட் டாரை பழுது பார்க்கக் கோரியும் மனு ஏதும் வரப் பெறவில்லை.

(ஆ) மேற் குறிப்பிட்ட இடத்தில் மின்சார மோட்டார் பழுதான விவரம், தொகுதி நிர்வாக அலுவலரால் 1985 ஏப்ரலில் தெரிவிக்கப்பட்டு 1985 மே மாதத்தில் பழுது நீக்கம் செய்யப்பட்டு இயங்கி வருகிறது.

2— பாப்பாக்குடி ஒன்றிய கிராமங்களில் தெரு விளக்குகள்.

வினா 1559—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஒன்றியம் குத்தபாஞ்சான் கிராமம், ஆள்வான் துலுக்கப்பட்டி ஐந்தாங் கட்டளை, சிவகாமிபுரம், பிராஞ்சேரி, லெட்சுமியூர் மேலத்



தெரு, திருவள்ளுவர் நகல் வாணியன் குளம், அனைந்த நாடார் பட்டி வடக்குத் தெரு, காளை சுப்பிரமணியம், தெரிந் குடியிருப்பு, இடைக்கால் ஆகிய பகுதி வாழ் மக்களிடமிருந்து சாலைகளில் மின் விளக்கு அமைத்துத் தரக்கோரி மனு ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக் குடி ஒன்றியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிராமங்களில் இடைக் கால் கிராமத்தில் பதினான்கு 4 அடி குழல் விளக்குகள் கோரியும், அனைந்த நாடார்பட்டி வடக்குத் தெரு கிராமத்தில் ஆறு 4 அடி குழல் விளக்குகள் கோரியும் முறையே 24-5-1985, 14-6-1985 ஆகிய தேதிகளில்தான் மனுக்கள் வந்தன. அம் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இவ்விரு கிராமங்களுக்கும் தெரு விளக்குகள் அமைத்துத் தரப்பட்டு விட்டன. மீதி உள்ள கிராமங் களில் இருந்து தெரு விளக்குகள் கோரி மனு ஏதும் பஞ்சாயத் திடமிருந்து வரவில்லை.

3— சாணார்பட்டி ஒன்றியத்தில் சாலை வசதி.

வினா 1669—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார்ப்பட்டி யூனியன், எல்லைப் பட்டிக்கு சாலைகள் அமைத்துத் தரும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

சாணார்ப்பட்டி ஊராட்சி ஒன்றியம் வி. எஸ். கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த எல்லைப்பட்டி வி.ம. பட்டி மார்க்கம் பட்டி மெட்டல் சாலையிலிருந்து புதிய மண்சாலை எல்லைப் பட்டி வரை ஊராட்சி நிதியிலிருந்து போடப்பட்டுள்ளது. இச்சாலை மராமத்து வேலைகளை நடப்பு நிதியாண்டில் ஊராட்சி மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

[1986 ஏப்ரல்

8—

மேலூர் அரசு கலைக்கல்லூரியில் முதுநிலைப் பட்டப் பிரிவுகள்.

வினா 2325—திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதி மேலூர் அரசு கலைக் கல்லூரியில் முதுநிலைப் பட்டப் படிப்பு துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

9—

மேலூர் தொகுதியிலுள்ள சாலைகள்.

வினா 2330—திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மேலூர் சட்ட மன்றத் தொகுதி மேலூர் மற்றும் கொட்டாம் பட்டி ஊராட்சி ஒன்றிய கிராமங்களில் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது பற்றி அரசுக்குத் தகவல் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், பழுது பார்க்க செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : மேலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சாலைகள் பழுது பார்க்க வேண்டியுள்ளது. என்றும் அவ்வொன்றியத்தில் 1984–85 மற்றும் 1985–86 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் வேலைகள் எடுக்கப்



986 ஏப்ரல் 17]

பட்டு, 1984–85ஆம் ஆண்டில் 3 கி.மீ. சாலை மெட்டல்செய்யப் பட்டுள்ளது. மேலும் 1985–86-ஆம் ஆண்டில் 9 கி.மீ. நீளம் சாலை மெட்டல் போட திட்டம் தயாரிக்கப்பட்டு வேலைகள் நடை பெற்றுக் கொண்டு வருகிறது. கீழ்க்கண்ட சாலைகள் 1985–86 ஆம் ஆண்டில் ஸ்தல சாலை திட்டத்தின் கீழ் எடுத்து செய்ய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

| சாலையின் பெயர். | மதிப்பீடு. (ரூ. இலட்சத்தில்.) |
|---|---|
| 1. தனியா மங்கலம்—மன்றலைப்பட்டி சாலை (கி.மீ. 0/0—0/0) | 0.40 |
| 2. தனியாமங்கலம்—மலம் பெரியார் சாலை (0/0—1/0). | 0.40 |
| 3. முத்துச்சாமிபட்டி—கொங்கம்பட்டி சாைல (0/0—1/0). | 0.40 |
| 4. உறங்கான்பட்டி—குறிச்சிபட்டி சாலை (0/0—1/0). | 0.4 0 |
| 5. பட்டி கடைக்கன்பட்டி—நெல்லிக் கோயில் பட்டி சாலை (0/0—1/0). | 0.40 |
| 6. தெற்குத் தெரு—ஆண்டிப்பட்டி சாலை (0/0—1/0). | 0.40 |
| 7. தெற்குத் தெரு—ஆண்டிப்பட்டி சாலை (5/0—6/0). | 0.05 |

கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் 130 கிலோ மீட்டரும் ஊராட்சிகளின் பராமரிப்பில் 57.2 கிலோ மீட்டரும் சாலைகள் உள்ளனவென்றும் 1985–86 ஆம் ஆண்டில் தல சாலை மான்ய திட்டத்தின் கீழ் 83 சாலைகளும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 8 சாலைகளும் பராமரிப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. இவ்வொன்றிய சாலைகளும், ஊராட்சி சாலைகளும் கிடைக்கக் கூடிய நிதி ஆதாரங்களின் அடிப்படையில் நல்ல நிலையிலேயே பராமரிக்கப்பட்டு வருகின்றன.

நிதி நிலைமையைப் பொருத்து வரும் ஆண்டுகளிலும் சாலைகளை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

13—

நீர்க் கோடியக்காடு கிராமத்திலுள்ள உப்பள நிலங்கள்.

வினா 2728—திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தாலுக்கா 133 நீர் கோடியக்காடு கிராமம் சர்வேயாகாத உப்பளம் 454.50 ஏக்கரை தற்பொழுது அரசு ஆணைப்படி யாருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) எந்த ஆண்டில் கொடுக்கப்பட்டது ?

(இ) அரசுக்கு வரவேண்டிய வரி பாக்கி எவ்வளவு ?

விடை—

(அ) திரு. வி. அப்பாக்குட்டி பிள்ளை, வேதாரண்யம்

(ஆ) 1978-ல் கொடுக்கப்பட்டது.

(இ) செலுத்த வேண்டிய வரி பாக்கி ரூ. 1,24,670.

14—

பட்டுக்கோட்டை நகராட்சி திருமணக்கூடம்.

வினா 2819— திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை நகராட்சியில் திருமணக்கூடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) பட்டுக்கோட்டை நகராட்சியில் திருமணக்கூடம் கட்டும் திட்டம் அந்த நகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) பட்டுக்கோட்டை நகராட்சி ஏழாவது திட்டகால மத்திய ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த நகராட்சியில் கல்யாண மண்டபம் கட்டுவதற்கான வரைபடம் துணை நகர் ஊரமைப்பு இயக்குநர், திருச்சி அவர்களால் தரப்பட்டு இதற்கான மதிப்பீடு தற்போதைய கட்டுமான நிலவரப்படி தயாரிக்கப்படுகிறது. இம்மதிப்பீட்டுடன் உள்ளூர் திட்டக் குழு ஒப்புதல் பெற்று நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு ஐ. யு. டி. பி. திட்டத்தின் கீழ் கடன் பெற விண்ணப்பிக்கப்படுமெனவும் பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். இத்திட்டத்திற்கான கருத்துரு நகராட்சியிலிருந்து பெறப்பட்டதும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்



15—

கோவிலூர் அருகில் காட்டோடைகளை இணைத்து சிறிய நீர் தேக்கம் அமைத்தல்.

வினா 3300—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம் கோவிலூர் அருகில் உள்ள தோப்பி மலைப் பகுதியில் இருந்து காட்டோடைகளை இணைத்து சிறிய நிர்த்தேக்கம் அமைக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தை ஆய்வு செய்யும்படி தல அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஆய்வு முடிந்த பின்னர் தேவையான மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

16—

அரசு மருத்துவமனைகளில் குளிர்சாதனம் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்குகள்.

வினா 4174—டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளிலுள்ள அறுவை சிகிச்சை அரங்குகளில் குளிர் சாதனம் ( Air Condition ) பொருத்தப்பட்ட அரங்குகள் எத்தனை ?

விடை—

இம்மாநிலத்தில் அனைத்து மருத்துவமனைகளிலுள்ள அறுவை அரங்குகளில் குளிர்சாதன வசதிகளை படிப்படியாக பொருத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் ஏழு மாவட்ட மருத்துவமனைகளிலுள்ள அறுவை அரங்குகளில் இவ்வசதி செய்யப்பட்டுள்ளது.

17—

பெருந்துறைத் தொகுதியில் தொழிற்பேட்டை.

வினா 4198—டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறைத் தொகுதியில் தொழில்பேட்டை ஆரம்பிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடம் இல்லை.

18—

பேரூர் தொகுதியில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் பயன் பெற்றோர்.

வினா 4325—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984–85 ஆம் ஆண்டு பேரூர் தொகுதியில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தில் பயன் பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) விண்ணப்பித்தும் இன்னும் பயனடையாதவர்கள் எவ்வளவுபேர்?

விடை—

(அ) 812 பேர்.

(ஆ) 159 பேர்.

19—

ஆலந்தூர், பல்லாவரம் நகரங்களில் பூமிக்கு அடியில் மின் இணைப்பு திட்டம்.

வினா 4405—திரு. ம. ஆபிரகாம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலந்தூர், பல்லாவரம் நகரங்களில் பூமிக்கு அடியில் வரும் மின் இணைப்பு (Cable System) கொண்டு வரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இப்பணி எப்போது துவங்கும்?



விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

20—

போளூரில் காகித தொழிற்சாலை.

வினா 4465—திரு. ஜெ. ராஜாபாபு: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போளூரில் காகித தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

21—

நாகையில் திறந்தவெளிச் சிறைச்சாலை.

வினா 4643—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகையில் ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலை ஏற்படுத்த வேண்டும் என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) அதன் விவரம் யாது?

விடை—

(அ) நாகப்பட்டினத்தில் புதியதாக திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

22—

பல்லடம் வட்டத்தில் பரம்பிக்குளம்-ஆளியாறு ஆயக்கட்டு விரிவாக்கப் பணி.

வினா 4849—திரு. கு. ரமணி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம்—ஆளியாறு பாசனத் திட்டத்திலிருந்து பல்லடம் வழியாக திருப்பூர் நகருக்கு வடக்கே செல்கிற வாய்க்கால் விஸ்தரிப்பு திட்டப்படி விவசாயிகளுக்கு பாசனத்துக்கு தண்ணீர் எந்த முறைப்படி விடப்படுகிறது?

(ஆ) இரண்டாண்டு அல்லது மூன்றாண்டு என்று முறை வைத்து விடப்படுகிறதா?

விடை—

(அ) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட ஆயக்கட்டு விரிவாக்கத் திட்டத்தில் பல்லடம் வட்டத்தில் வடக்கு பகுதியில் திருப்பூர்-படியூர்-காங்கேயம் சாலை மற்றும் திருப்பூர்-மங்களம் சாலை வரை ஆயக்கட்டு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆயக்கட்டு விரிவாக்கத்தின் கீழ், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டுள்ள நிலங்களுக்கு, தற்பொழுது உள்ள மண்டல அடிப்படையில், இரண்டாண்டுகளுக்கு ஒரே முறை பாசனத்திற்கு தண்ணீர் வழங்கப்படும்.

(ஆ) ஆயக்கட்டு விரிவாக்கத்தின் கீழ் சேர்க்கப்பட்ட நிலங்களுக்கு மண்டல அடிப்படையில் திட்டத்தில் தற்போது இருக்கும் நீரின் அளவைக் கருத்தில் கொண்டு இரண்டாண்டுக்கு ஒரு முறை அரசின் ஒப்புதலோடு தண்ணீர் வழங்கப்படும்.

23—

வினா 5850—திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம் வட்டம், திருப்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட புதிய வாய்க்கால்களில் தண்ணீர் எப்போது திறந்து விடப்படும்?

விடை—

பல்லடம் வட்டம், திருப்பூர் சட்டமன்றத்தொகுதியில், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட ஆயக்கட்டு விரிவாக்கத்தின் கீழ் சேர்க்கப்பட்ட 4,646 ஏக்கர் நிலங்களுக்கு 1983–84 ஆண்டு முதல் பாசனக்காலத்திலும் மற்றும் 1985–86 ஆண்டு முதல் பாசனக்காலத்திலும் பாசனத்திற்கு தண்ணீர் கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பரப்புக்கு மண்டல அடிப்படையில் முறைப்படி, பரம்பிகுளம் ஆயக்கட்டு திட்ட நீர்த்தேக்கங்களில் அவ்வப்பொழுது இருக்கும் நீரின் அளவைக்கொண்டு பாசனத்திற்கு தண்ணீர் வழங்க ஒப்புதல் வழங்கப்படும்.

24—

**நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட சேலை வேட்டிகள்.**

வினா 5032—திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1984 ஆம் ஆண்டு டிசம்பர் வரை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிவாரணத் திட்டங்களின் மூலம் வழங்கப்பட்ட சேலை, வேட்டிகள் எவ்வளவு?

விடை—

| | |
|---|---|
| வேட்டிகள் .. .. .. | 31,95,550 |
| சேலைகள் .. .. .. | 38,65,797 |



25—

**சங்கராபுரம் தொகுதியில் மணி நதியில் பாலம்.**

வினா 5043—திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் மணி நதியில் தியாகராஜபுரம் எஸ். வி. பாளையத்திற்கு அருகே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) பணி எப்பொழுது துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

26—

**மாத்தூர்—செல்லம்பட்டு பாதையைச் செப்பனிடல்.**

வினா 5045—திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் மாத்தூரிலிருந்து செல்லம்பட்டு வரை உள்ள சாலை பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செப்பனிடப்படும்?

(இ) அதற்கான மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ): இச்சாலையில் முதல் 3.60 கி.மீ. தூரத்திற்குத் தார் போடும் பணி ரூ. 2.71 இலட்சம் செலவில் நடப்பு நிதியாண்டில் (1985-86-ல்) தொடங்கப்பெறும். மீதமுள்ள 3.60 கி.மீ.-க்கு தார் போடும் பணி 1986-87-ம் ஆண்டில் ரூ. 2.76 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

27—

கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

வினா 5091—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 1984-85 ஆம் ஆண்டில் விவசாயத்திற்கான பம்பு செட்டுகள் எத்தனை மின் இணைப்பு கிடைக்கப்பெற்றன?

(ஆ) நிலுவையிலுள்ள பம்பு செட் விண்ணப்பங்கள் எத்தனை?

(இ) 1984-85-ல் தமிழ்நாடு முழுவதும் எத்தனை பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது?

விடை—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 1984-85 ஆண்டில் 152 விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கிடைக்கப் பெற்றன.

(ஆ) 1–11–1985 அன்று வரை 987 விண்ணப்பங்கள் நிலுவையிலுள்ளது.

(இ) 1984–85-ல் தமிழ்நாடு முழுவதும் 50,950 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது.

28—

பெருஞ்சாணி அணையில் புனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம்.

வினா 5094—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் பெருஞ்சாணி அணையில் மிகச் சிறிய புனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) அத்திட்டம் குறித்த அரசின் முடிவு என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டம் பெருஞ்சாணி அணையில் ஒரு சிறிய மின் நிலையம் அமைப்பதற்கான திட்ட அறிக்கையை மின்வாரியம் தயாரித்து வருகிறது.



29—

தாரமங்கலம் ஒன்றியத்தில் குழல் விளக்குகள் அமைக்கும் திட்டம்.

வினா 5164—திரு. சே. செம்மலை : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியத்தில் சாதாரண பல்புகளை குழல் விளக்குகளாக மாற்றி அமைக்கும் திட்டம் இதுவரை நிறைவேற்றி முடிக்காததற்குக் காரணம் யாது?

(ஆ) அந்த ஒன்றியத்தில் உள்ள அனைத்து பல்புகளையும் மாற்றி அமைக்க துரித நடவடிக்கை எடுக்கப்படுமா?

(இ) எந்தக் கால அளவிற்குள் முடிக்கப்படும்?

விடை—

(அ) சாதாரண விளக்குகளைக் குழல் விளக்குகளாக மாற்றும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மொத்தம் உள்ள 1,077 விளக்குகளில் 685 விளக்குகள் இதுவரை மாற்றப்பட்டு உள்ளன.

(ஆ) எல்லா பல்புகளையும் மாற்றி அமைக்கும் வேலை நடந்து கொண்டிருக்கிறது.

(இ) 1986 ஆம் வருடம் ஜனவரி மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

30—

மலையடிப்பட்டி அருந்ததியர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள்.

வினா 5184—திரு. செ. செம்மலை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், குட்டப்பட்டி கிராமம் மலையடிப்பட்டி அருந்ததியர்களுக்கு பூமிதான இயக்கத்தின் மூலம் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டும் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், பட்டாக்கள் எப்போது வழங்கப்படும்?

[1986 ஏப்ரல் 17

விடை—

(அ) தமிழ்நாடு பூதான யக்னா சட்டம், 1958, பிரிவு 11-ன் படி பூதான நிலங்களின் பட்டா உரிமை வாரியத்திற்கே உண்டு. தனி நபர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை. எனவே, மேட்டூர் வட்டம், குட்டப்பட்டி கிராமத்தில் ச. எண். 491 ''சி''யில் உள்ள பூமிதான நிலத்தில் அருந்ததியர் வகுப்பைச் சார்ந்த 12 நபர்களுக்கு தலா 0.03 ஏக்கர் நிலம் வீதம் வீட்டு மனைக்காக 3–1–1986-ல் பூமிதான நிலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

31—

சேந்தமங்கலம் ஒன்றியத்தில் மின் இணைப்பு கொடுக்கப்பட்ட குடிசைகள்.

வினா 5231—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் ஒன்றியத்தில் எத்தனை குடிசைகளுக்கு இலவச மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) இன்னும் நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

விடை—

(அ) சேந்தமங்கலம் ஒன்றியத்தில் 886 குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இன்னும் நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் 6 ஆகும்.

32—

திறந்தவெளிச் சிறைச்சாலைகள்.

வினா 5295—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தற்போது எத்தனை திறந்தவெளி சிறைச்சாலைகள் உள்ளன?

(ஆ) இதன் எண்ணிக்கையை உயர்த்த அரசு திட்டமிட்டு உள்ளதா?



1986 ஏப்ரல் 17]

விடை—

(அ) தற்போது நமது மாநிலத்தில் கோவை மாவட்டத்தில் சிங்காநல்லூரில் மட்டும் ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலை இயங்கி வருகிறது.

(ஆ) திறந்த வெளிச் சிறைகளில் வேலை செய்யக்கூடிய சிறைவாசிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டும், நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டும், திறந்தவெளிச் சிறைச்சாலைகளின் எண்ணிக்கை உயர்த்தப்படும்.

33—

நீலகிரி மாவட்டத்தில் திறந்தவெளி விளையாட்டு அரங்கம்.

வினா 5512—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத் தலைமையிடத்தில் திறந்தவெளி விளையாட்டு அரங்கம் அமைக்கப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) உரிய கருத்துரு விளையாட்டு மற்றும் இளைஞர் பணி இயக்குநரிடமிருந்து வந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

34—

சென்னை தியாகராய நகர் ஹென்ஸ்மேன் தெருவின் பெயரை மாற்றி அமைத்தல்.

வினா 5650—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை தியாகராய நகரில் உள்ள ஹென்ஸ்மேன் தெருவின் பெயரை கவியரசு கண்ணதாசன் தெரு என்று மாற்றி அமைக்கும் கருத்துரு ஏதும் ஆய்வில் உள்ளதா?

விடை—

ஆம்.

35—

ஒன்றியத்துக்கு ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

வினா 5777—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் அனைத்து ஒன்றியங்களுக்கும் ஒன்று என்ற நிலையை அரசு திட்டமிடுமா ?

விடை—

இப்போது 16 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ,என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறையில் எங்கெங்கு விளை பொருள் விற்பனைக்கு வரும் வசதியும், வியாபாரிகள் கூடும் வசதியும் உள்ளதோ அங்கெல்லாம் விற்பனைக் கூடங்கள் அமைக்கப்படுகின்றன. எங்கெங்கு விளை பொருள் விற்கத் தேவை உள்ளதோ அங்கு தேவை எனக் கோரப்பட்டால் நிலைமையை ஆய்ந்து ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் திறக்கலாம். நன்றாக செயல்பட வேண்டும் என்பதைத் தவிர வேறு கட்டுப்பாடு ஏதும் இல்லை. இல்போது மாநில அளவில் 269 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் உள்ளன. இவற்றில் பல விற்பனைக் கூடங்களை இன்னும் விவசாயிகள் முழு அளவில் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

36—

சமூக பொருளாதார நிலை குறித்து மறு ஆய்வு.

வினா 5793—திரு. செ. செம்மலை : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்களின் சமூக பொருளாதார நிலை குறித்து 100 சதவீத ஆய்வு நடத்த மீண்டும் ஒரு கமிஷன் அல்லது பேனல் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

விடை—

(அ) மக்களின் சமூக பொருளாதார நிலைகள் குறித்து 100 சதவீத ஆய்வு நடத்த மீண்டும் ஒரு கமிஷன் அல்லது பேனல் அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழாது.





37—

காடம்பட்டி ஆதி திராவிடர் தெருவுக்கு தனி சத்துணவு மையம்.

வினா 5796—திரு. செ. செம்மலை : மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம் சிக்கம்பட்டி பஞ்சாயத்து பெரிய காடம்பட்டி ஆதி திராவிடர் தெருவுக்கு தனியாக ஒரு சத்துணவு மையத்தை துவக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

இது பற்றிய கருத்துரு எதுவும் அரசால் பெறப்படவில்லை. பெறப்பட்டால் அரசு அதனை விதிகளுக்குட்பட்டு பரிசீலனை செய்யும் என தெரிவிக்கப்படுகின்றது.

38—

திருப்பூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டிடம்.

வினா 5883—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனைக்கு சொந்தக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

ஆம், உள்ளது.

39—

பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

வினா 5984—திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் எத்தனை உள்ளது ?

[1986 ஏப்ரல் 17

விடை—

| | | | |
|---|---|---|---|
| (1) சென்னை மற்றும் புறநகர் | .. | .. | 31 |
| (2) செங்கற்பட்டு மாவட்டம் | .. | .. | 1 |
| (3) தென் ஆற்காடு மாவட்டம் | .. | .. | 4 |
| (4) பெரியார் மவட்டம் .. | .. | .. | 2 |
| (5) நீலகிரி மாவட்டம் .. | .. | .. | 1 |
| (6) தஞ்சை மாவட்டம் .. | .. | .. | 1 |
| (7) கன்னியாகுமரி மாவட்டம் | .. | .. | 1 |
| மொத்தம் | .. | | |

40—

பார்வையற்ற மாணவர்களுக்கு பாலிடெக்னிக்.

வினா 6018—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பார்வையற்ற மாணவர்களுக்கு பாலிடெக்னிக் தொடங்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

41—

மருங்காபுரி பகுதியில் பெண்களுக்கு தையற் பயிற்சி அளித்தல்.

வினா 6061—திரு. க. சோலைராசு: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மருங்காபுரி பகுதியில் பெண்களுக்கு தையற் பயிற்சி அளிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

விடை—

இல்லை.



1986 ஏப்ரல் 17]

42—

சுகுணாபுரம் மக்களுக்கு மனைப்பட்டாக்கள்.

வினா 6194—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி குனியமுத்தூர் பேரூராட்சி சுகுணாபுரம் க. ச. எண் 18/2பி நிலத்தில் குடியிருக்கும் மக்களுக்கு பட்டா வழங்கும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம். கோயம்புத்தூர் மாவட்டம் மற்றும் பேரூர் உள்வட்டம், குனியமுத்தூர் கிராமம், சுகுணாபுரம் புல எண் 18/2பி-ல் உள்ள 72.13 ஏக்கர் பரப்பளவுள்ள "கரடு புறம்போக்கு" நிலத்தில் குடியமர்த்தப்பட்டுள்ள 478 குடும்பங்களுக்கு "வீட்டு மனை ஒப்படை செய்வதற்கான உட்பிரிவு ஆவணங்கள் மற்றும் பட்டா முன் மொழிவுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இம்முன் மொழிவுகள் தயாரிக்கப்பட்டு முடிந்தவுடன் நிலமாற்றம் செய்து பட்டாக்கள் வழங்கப்படும்.

43—

மாதவரம் சதர்ன் அலாய் பவுண்டரீஸ் நிறுவனம்.

வினா 6201—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் சதர்ன் அலாய் பவுண்டரீஸ் தொழிலாளர்கள் 1983 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டவர்கள் எவ்வளவு பேர் ?

(ஆ) அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) 271 பேர்.

(ஆ) சம்பந்தப்பட்ட நிறுவனம் நிரந்தரமாக மூடப்பட்டது பெரும்பான்மையான தொழிலாளர்கள் மூடுதலை ஏற்று தங்கள் கணக்குகளை இறுதியாக முடித்துக்கொண்டனர். அதனால் இக்காவாவில் அரசு தலையிடவேண்டியில்லை

44—

### திருப்பத்தூர் அருகே புல்லூர் அணைகட்டுதல்.

**வினா 6406**—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் அருகே புல்லூர் அணை கட்ட அரசு முடிவு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு செலவில் அணை கட்டி முடிக்கப்படும் ?

(இ) இதனால் கிடைக்கும் பயன்யாது ?

விடை—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் அருகே பாலாற்றின் குறுக்கே புல்லூர் கிராமத்தருகில் நீர் நிரப்பு நீர்த்தேக்கம் அமைப்பது பற்றி பரிசீலனை செய்யப்பட்டது. இந்நீர்த்தேக்கத்தினால் ஆந்திர மாநிலத்தின் பகுதியில் சுமார் 192 ஏக்கர் நிலம் நீரில் மூழ்குவதால், அம்மாநிலத்தின் பகுதிகளில் ஆய்வு செய்வதற்கு ஆந்திர மாநில அரசின் அனுமதி கோரப்பட்டது. ஆந்திர மாநில அரசு அம்மாநிலத்தின் பகுதிகளில் நீரில் மூழ்காமல் இம்மாநிலத்தின் பகுதிகளுக்குள்ளேயே ஆற்றின் கீழே இடத்தை தேர்வு செய்து கொள்ளலாம் என்று கருத்து தெரிவித்துள்ளது. எனவே புல்லூர் கிராமத்தில் அணை கட்ட செயற்குறிப்பு இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

45—

### குமரி மாவட்டத்தில் குடிசைகளுக்கு இலவச மின் சக்தி வழங்கல்.

**வினா 6511**—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் 1982–83, 1983–84, 1984–85 ஆண்டுகளில் எத்தனை குடிசை வீடுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது ?

(ஆ) புதியதாக குடிசைகளுக்கு மின் இணைப்பு வேண்டி எத்தனை மனுக்கள் வந்துள்ளன ?

(இ) அவைகளுக்கு எப்பொழுது மின் இணைப்பு கொடுக்கப்படும் ?



விடை—

(அ) குமரி மாவட்டத்தில் ஆண்டுவாரியாக குடிசைவீடுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டதின் விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1982–83 ஆம் ஆண்டு | .. .. | 519 குடிசைகள். |
| 1983–84 ஆம் ஆண்டு | .. .. | 330 குடிசைகள். |
| 1984–85 ஆம் ஆண்டு | .. .. | 96 குடிசைகள். |

(ஆ) 4/85 முதல் 12/85 வரை 115 மனுக்கள் வந்தன. அவற்றில் 107 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளன.

(இ) மீதி 8 குடிசைகளுக்கு ஜனவரி 86 இல் மின் இணைப்பு கொடுக்கப்படும்.

46—

### மீனளத் துறையில் புதியதாக உருவாக்கப்பட்ட பதிவு பெற்ற பதவிகள்.

**வினா 6605**—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு மீனளத்துறையில், புதியதாக உருவாக்கப்பட்ட பதிவு பெற்ற பதவிகள் (Gazetted Posts) எவ்வளவு?

(ஆ) இந்த எட்டு ஆண்டுகளில் மீனளத் துறை ஈட்டிய வருவாய் எவ்வளவு ?

விடை—

(அ) நாற்பத்தெட்டு புதிய பதவிகள்.

(ஆ) ரூ. 754.81 லட்சம்.

47—

### வழங்கப்பட்ட உரத்தின் மதிப்பு.

**வினா 6704**—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1984–85 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு ஊக்க தொகைக்குப் பதிலாக அளிக்கப்பட்ட உரத்தின் மதிப்பு என்ன

விடை—

தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில், காவேரி டெல்டா பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு 1984–85 ஆம் ஆண்டில் குறுவைப் பருவத்தில் ரூ. 739.803 இலட்சம் மற்றும் சம்பா பருவத்தில் ரூ. 472,492 இலட்சம், ஆக ரூ. 1,212.295 இலட்சம் மதிப்புள்ள இடுபொருள்கள் உற்பத்திப் பெருக்க ஊதிய திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

48—

பாலிதீன் பைகளில் இறைச்சி விற்பனை.

வினா 6752—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாலீதின் பைகளில் இறைச்சி விற்கும் திட்டம் விரிவுபடுத்தப்படுமா?

விடை —

தமிழ்நாடு இறைச்சிக் கழகம் சென்னையிலும் மற்றும் சில மாவட்டத்தலைமையிடங்களிலும் நவீன இறைச்சிக்கூடம் அமைக்கும் பணியினை ஏற்றுச் செய்யும் முக்கிய நோக்கத்துடன் நிறுவப்பட்டுள்ளது. இறைச்சியைச் சில்லறையில் விற்பது அதனுடைய முக்கிய நோக்கமல்ல. ஆனாலும் பரிட்சார்த்தமாக சென்னை நகரில் மட்டும் இரு இடங்களில் பாலிதீன் பைகளில் இறைச்சி விற்பனை தொடங்கப்பட்டது. இதன் வெற்றியை அனுசரித்து நிதிநிலைக்கேற்ப, பாலிதீன் பைகளில் இறைச்சி விற்கும் திட்டத்தை விரிவுபடுத்துவது பற்றி பரிசீலிக்கப்படும்.

49—

சென்னையில் கதவடைப்பு செய்துள்ள தொழிற்சாலைகள்.

வினா 6603—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985 ஆம் ஆண்டில் சென்னையில் கதவடைப்பு செய்துள்ள தொழிற்சாலைகள் எவ்வளவு ?

(ஆ) அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?



விடை—

(அ) 1985 ஆம் ஆண்டில் சென்னையில் கதவடைப்பு செய்துள்ள தொழிற்சாலைகள் 5.

(ஆ) கதவடைப்பு செய்துள்ள தொழிற்சாலைகள் இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், சென்னை மற்றும் இண்டஸ்ட்ரியல், ரப்பர் ப்ராடக்ஸ், சென்னை என்ற இரண்டு நிறுவனங்களிலும் சமரச அதிகாரிகள் மேற்கொண்ட பேச்சு வார்த்தைகளின் பயனாக தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12 (3)-ன் கீழ் ஒப்பந்தம் ஏற்பட்டு, தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியுள்ளார்கள்.

மீதமுள்ள ஈஸ்வரன் அண்ட் சன்ஸ், சென்னை, ஆட்டோ லைனர்ஸ் (பிரைவேட்) லிமிடெட், சென்னை மற்றும் மெட்ராஸ் ஜிம்கானா கிளப், சென்னை போன்ற மூன்று நிறுவனங்களின் கதவடைப்பு குறித்து சமரச அதிகாரிகள், நிர்வாகம் மற்றும் தொழிலாளர்களுடன் பிரச்சினை சுமூகமாக தீரும் பொருட்டு பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

50—

நல்லாசிரியர்களுக்கு வழங்கும் ஊக்கத் தொகை.

வினா 7019—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நல்லாசிரியர் விருதுடன் வழங்கப்படும் ஊக்கத் தொகையை 500 ரூபாயிலிருந்து ஆயிரமாக உயர்த்தும் செயத் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன,

---

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1986 ஏப்ரல் 17

### 2. தகவல் கோரல்.

(அ) உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிற உறுப்பினர்களுக்குள்ள உரிமைகளை நியமன உறுப்பினர்களுக்கும் அளித்தல்.

திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் மானியக்கோரிக்கையின் மீது பதிலளிக்கிற நேரத்திலேயும் அதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு விளக்கம் தருகிற அடிப்படையிலேயும் தெரிவிக்கிற போது ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் நாமினேஷன் முறையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும், ஒன்றியக் குழுவாலே கோ-ஆப்ஷன் முறையிலே சேர்த்துக்கொள்ளப்பட்ட உறுப்பினர்களுக்கும் ஒன்றியத் துணைப் பெருந்தலைவர் தேர்தலில் வாக்களிக்க உரிமை உண்டு என்று இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள்.

அப்படியானால் அந்த உறுப்பினர்களுக்கு— சேர்த்துக்கொள்ளப்பட்ட உறுப்பினர்களுக்கும், நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும்—ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் பதவிக்கு நிற்கின்ற உரிமையும் இருக்கிறது என்று இந்த அரசு அறிவிக்க இருக்கிறதா? அப்படி அறிவிக்குமேயானால், அந்த அறிவிப்பு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் உரிமைகளை மறைமுகமாக உருக்குலைக்கின்ற முயற்சியாக இருக்காதா? என்பதை இந்த மன்றமும், மக்களும் அறிய விரும்புகிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, மக்களாட்சியில், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு உண்டான மரியாதையை அரசு மதிக்கிறது. அதைக் குறைக்க வேண்டுமென்று நினைக்கவில்லை. ஏற்கனவே, ஊராட்சி ஒன்றியச் சட்டத்திலே—57-58 ஆம் ஆண்டிலே இயற்றப்பட்ட சட்டத்திலே, சேர்க்கப்பட்ட உறுப்பினர்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு இருக்கின்ற சகல உரிமைகளும் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே உரிமைகளைத்தான் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற உறுப்பினர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்களுக்கும், தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களுக்கு என்ன என்ன உரிமைகள் உண்டோ அந்த உரிமைகள் என்று போட்டிருக்கிறோம். அதைத்தான் இப்பொழுதும் சொல்கிறேன், அன்றும் சொன்னேன்.



1986 ஏப்ரல் 17]

(ஆ) உள்ளாட்சி மன்றக் கூட்டங்களில் கலந்து கொள்கிற சட்ட மன்ற உறுப்பினர்கள் நிலை.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் பேசுகின்ற பொழுது நகர்மன்றக் கூட்டத்திலே தொகுதி சட்ட மன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளலாம், ஆனால் வாக்களிக்கக்கூடாது என்று குறிப்பிட்டார்கள். அதுபற்றி ஒரேயொரு விளக்கத்தை மட்டும் அவர்களிடத்தில் கேட்க ஆசைப்படுகிறேன். அப்படி கலந்து கொள்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தீர்மானம் ஏதேனும் கொண்டுவருவதற்கு உரிமை உண்டா என்பதைப்பற்றித் தெளிவுபடுத்தமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதைக்குறித்து நகராட்சி சட்டத்தைத் திருத்த வேண்டியிருக்கிறது. திருத்தங்கள் இந்த அவையிலே வருகின்றன அப்பொழுது விவாதிக்கலாம். தீர்மானம் கொண்டு வருவதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை. தீர்மானம் கொண்டு வர முடியாது. தேவைப்பட்டால் தீர்மானத்தை அங்குள்ள ஆணையாளரிடத்தில் சொல்லி, அவர் மூலமாகத் தீர்மானத்தை வைக்கலாம்.

### 3. கவன ஈர்ப்புகள்.

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் பகுதி உப்பு உற்பத்தியாளர்களது நிலைமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. சுப்பராயன், மா. மீனாட்சிசுந்தரம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''உப்பு விலை சரிவால், தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் லட்சக்கணக்கான உப்பு மூட்டைகள் தேங்கியுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

தமிழ்நாட்டில் தூத்துக்குடிக்கு அடுத்தப்படியாக தஞ்சை மாவட்டத்திலுள்ள வேதாரண்யத்தில் அதிக அளவு உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. 1985-ம் ஆண்டில் 1,32,853 மெ. டன். உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் உப்பு இரயில் மற்றும் ரோடு மூலமாக மங்களூர் திருச்சி, சென்னை முதலிய இடங்களுக்கு விற்பனைக்காக எடுத்துச் செல்லப்படுகின்றது. இரயில் மூலமாக அனுப்புவதற்கு உப்பு மூட்டைகள் இரயில்வே நிலையத்தில் 5 மணி நேரத்திற்கு அதிகமாக வைக்கக்கூடாது என்றும், வைத்தால் அதற்கான வாடகை செலுத்த வேண்டும் என்றும் இரயில்வே இலாகாவில் சட்டம் அமுலில் இருப்பதால், உப்பு உற்பத்தியாளர்கள் இந்தக் கட்டணத்தை செலுத்த இயலாதவர்களாக இருக்கின்றனர். இதனால் வேதராண்யம் உப்பை இரயில் வேகன்கள் மூலமாக அனுப்புவதற்கு உற்பத்தியாளர்கள் சிரமப்படுகிறார்கள்.

2. தஞ்சை மாவட்டத்திலுள்ள உப்பு உற்பத்தியாளர்களுக்கும் மற்றும் இரயில்வேக்கும் இடையே மங்களூருக்கு உப்பு ஏற்றுமதி செய்வதற்கு வாகன்கள் ஒதுக்கீட்டில் சுச்சரவு ஏற்பட்டுள்ளதால் உப்பு ஏற்றுமதி தடைப்பட்டுள்ளது. உப்பு ஏற்றுமதியில் தடை காரணமாக உப்பு விற்பனை விலையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. உப்பு உற்பத்தியாளர்கள் இது குறித்து இரயில்வே அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

3. மேலும் ரோடு மூலமாக லாரியில் உப்பு அனுப்புவதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. தேவையான அளவிற்கு லாரிகள் கிடைப்பதில்லை. கொள்முதல் சமயத்தில் அரிசி மற்றும் அத்தியாவசியமான உணவுப் பண்டங்கள் லாரிமூலம் அனுப்ப வேண்டியிருப்பதால் உப்பைக் கொண்டு செல்வதற்கு வாடகை லாரிகள் கிடைப்பது கிரமமாக இருக்கிறது. அப்படி கிடைத்த போதிலும் அதிக வாடகை செலுத்த வேண்டியுள்ளது.

மேலும் வேதாரண்யம் கடற்கரை பகுதியில் அமைந்துள்ளதாலும், உப்பைக் கொல்முதல் செய்யும் இடங்களுக்கு வெகு தொலைவிலிருப்பதாலும் போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவாக உள்ளது. மேலும் வேதாரண்யத்திற்கு அருகாமையில் துறைமுக வசதி, நல்ல ரோடுகள் மற்றும் ரெயில்வே வாகின்கள் ஒதுக்கீடு முதலியன இல்லாததால் உற்பத்தியாகும் உப்பு விலையில் சரிவும் ஏற்றுமதியில் மந்த நிலையும் ஏற்பட்டுள்ளது.

5. உப்பு உற்பத்தி பருவக்காலத்தில் இம்மாதிரியான சிரமங்கள் ஏற்படுவதுண்டு. தற்போது ஏற்பட்டுள்ள சிரமங்கள் தற்காலிகமானதாகும். ஓர் இரு மாதங்களில் இந்நிலைமை மாறி உப்பு விற்பனையில் அபிவிருத்தி ஏற்படலாம்





திரு. மா. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, வேதாரண்யம் உப்பளம் தமிழகத்திலே இரண்டாவது இடத்தை வகிக்கிறது. ஆனால் வருஷா வருஷம் உப்பு விலை குறைந்து கொண்டே வருகிறது. உப்பு உற்பத்தியாகும் நேரத்தில், அந்த உப்பை உற்பத்தி செய்யும் விவசாயிகளும், தொழிலாளர்களும் அதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? வெளி நாடுகளுக்கு உப்பை ஏற்றுமதி செய்வதற்கு அரசு குறிப்பு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, தனியார் அல்லது அரசு மூலம் தொழில் துவங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதையும் அமைச்சரவர்கள் விளக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்த ஆண்டு மழை இல்லாததன் காரணமாகவும், வெயில் அதிகமாக அடித்ததன் காரணமாகவும் உப்பு விளைச்சல் அதிகமாக இருக்கிறது. இதுதான் காரணம். இதைத் தவிர வேறு காரணம் இல்லை. உப்பின் விலை தற்காலிகமாகக் குறைந்து இருக்கிறது; ஆனால் நல்ல விலை கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் நிரம்ப இருக்கின்றன. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடு, உப்பைப் பொறுத்தவரையில் தற்போது ஒன்றுமில்லை.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், "வேதாரண்யத்திற்கு அருகாமையில் துறைமுக வசதி, நல்ல ரோடுகள் மற்றும் இரயில்வே வாகின்கள் ஒதுக்கீடு முதலியன இல்லாததால் உற்பத்தியாகும் உப்பு விலையில் சரிவும் ஏற்றுமதியில் மந்த நிலையும் ஏற்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பலஹீனங்கள் தற்காலிகமான பலஹீனங்கள் அல்ல; நிரந்தரமான பலஹீனங்கள்தான். இந்த நிரந்தரமான பலஹீனங்களைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா? துறைமுக வசதியை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசை மாநில அரசு நிர்ப்பந்திக்குமா? நல்ல ரோடு வசதிகளை உருவாக்குவதற்கு மாநில அரசு முயற்சியை மேற்கொள்ளுமா என்பதையும் அறிய விரும்புகிறேன். உப்பு ஏற்றுமதியைப் பொறுத்தவரையில், பல்வேறு மாநிலங்களில் இலாபகரமாக நடத்தப்படுகிறது. இங்கேயும் இலாபகரமாக நடத்துகின்ற வகையில் ஏற்றுமதிக்குரிய நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ளுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, வேதாரண்யம் பகுதியில் அடிக்கடி புயல் ஏற்படுவதாலும், மற்றவைகளினாலும் பாதைகள் பயனற்று, சீரடைந்து கொண்டிருக்கிறது என்பதை ஒப்புக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்

கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாங்கள் முயற்சி செய்வோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு இரயில்வே சம்பந்தமாகவும் சில பிரச்னைகள் இருக்கின்றன என்பது பற்றி ஏற்கனவே கேள்வி நேரத்திலேயே சொன்னேன். இரயில்வே பிரச்னைகளுக்கும் நாங்கள் பரிகாரம் தேடுவதற்கு, இரயில்வேயோடு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்; அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ஆ) வேடசந்தூர் வட்டம், ஆர். புதுக்கோட்டையிலுள்ள மேல் நிலைத் தொட்டியிலிருந்து அங்குள்ள உயர்தொடக்கப் பள்ளிக்கு நேரடியாகக் குடிநீர் வழங்கல்.**

*(முற்பகல் 10-30).*

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வேடசந்தூர் வட்டம், குஜிலியம்பாறை ஒன்றியம், ஆர். புதுக்கோட்டையில் உள்ள மேல்நிலை தொட்டியில் இருந்து அங்குள்ள உயர் தொடக்கப்பள்ளி மாணவர், மாணவியர்களுக்கு இதுவரை பயன்படுத்திக்கொண்டிருந்த நிலையைத் தடுத்து குடி தண்ணீர் எடுக்கக் கூடாது என்று தடுக்கப்படுவதால் சுமார் 500 மாணவ, மாணவியர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு மற்றும் அப்பகுதி வாழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

ஆர். புதுக்கோட்டை நடுநிலைப்பள்ளி மாணவ, மாணவியர் மற்றும் ஊர்ப் பெருமக்கள் ஆகியோரின் புகார் மனு தொடர்பாக குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றிய ஆணையர், ஒன்றிய பெருந் தலைவர் மற்றும் தொடர்புடைய உதவிக் கல்வி அலுவலர் ஆகியோர் 9–4–1986 அன்று மாலை 3.30 மணி அளவில் ஆர். புதுக்கோட்டை நடுநிலைப் பள்ளியைப் பார்வையிட்டனர். அப்போது பள்ளித் தலைமை ஆசிரியையின் முயற்சியால் கடந்த ஓராண்டாகப் பள்ளிக் கட்டிடத்திற்குப் பக்கத்திலுள்ள மேல்நிலை நீர்த் தொட்டியிலிருந்து பள்ளியானது குடி நீரை ''ஓஸ் பைப்'' வழியாக எடுத்து பள்ளி மாணவ, மாணவியர் குடிக்கவும் பள்ளி



மதிய உணவுக் கூடத் தேவைக்கு வழங்கியும் வந்ததென்று பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பொது மக்களின் விசாரணையில் தெரிய வந்தது. இப்படி மேல்நிலைத் தொட்டியிலிருந்து ''ஓஸ் பைப்'' வழியாக நீரை எடுப்பதற்கு ஊராட்சி மன்றத்தின் இசைவைப் பெறவில்லை என்று ஊராட்சி மன்றத் தலைவர் விசாரணையின் போது கூறினார். இதற்கான ஊராட்சி மன்றத் தீர்மானமும் இல்லை என்றும் அவர் கூறினார். பள்ளிக் கட்டிடத்தின் பக்கத்திலேயே குடிநீர்க் குழாய் ஒன்று நிலையாக அமைக்கப் பட்டிருப்பதாலும் ''ஓஸ் பைப்'' வழியாக மேல்நிலைத் தொட்டியிலிருந்து நீரை எடுப்பதால் தண்ணீர் தட்டுப்பாடு வரக் கூடாது என்று எண்ணியும் நேரடியாக மேல்நிலைத் தொட்டியிலிருந் நீரை ''ஓஸ் பைப்'' வழியாக எடுக்கப்படுவது தடுக்கப்பட்டது என்று ஊராட்சிமன்றத் தலைவர் விசாரணையின் போது கூறினார்.

பள்ளிக்குப் பக்கத்திலுள்ள நிலையான குழாயிலிருந்து நீரை எடுப்பதற்குத் தனியாக ஆள் இல்லாததால் அக்குழாயில் இருந்து நீரை எடுக்க முடியவில்லை என்றும் எனவே மேல்நிலைத் தொட்டியிலிருந்து நேரடியாக ''ஓஸ் பைப்'' வழியாக நீர் எடுக்கப் பட்டதென்றும் தலைமை ஆசிரியை விசாரணையின் போது கூறினார். நேரடியாக மேல்நிலைத் தொட்டியிலிருந்து ''ஓஸ் பைப்'' வழியாக நீர் எடுப்பது 1–4–1986-லிருந்து தடுக்கப் பட்டது. ஆயினும் பள்ளிக்குப் பக்கத்தில் இருக்கும் நிலையான குழாயிலிருந்து பள்ளியானது அந்நாளிலிருந்து நீரை எடுத்ததால் மேல்நிலைத் தொட்டியிலிருந்து ''ஓஸ் பைப்'' வழியாக நீர் எடுப்பது தடுக்கப்பட்டிருந்த காலத்தில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கும் மதிய உணவுத் திட்டத்திற்கும் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை.

ஊராட்சி ஒன்றிய ஆணையர், ஒன்றியப் பெருந்தலைவர் மற்றும் உதவிக் கல்வி அலுவலர் ஆகியோர் கலந்தாலோசித்து மேல்நிலைத் தொட்டியின் கீழ்ப் பகுதியிலிருக்கும் இணைப்புக் குழாயிலிருந்து நேரடியாக ''ஜி. ஐ. பைப்'' புதைத்து பள்ளிக்கு நீர் வழங்குவதென்று முடிவு செய்துள்ளனர். அது வரை தற்காலிகமாக மேல்நிலைத் தொட்டியிலிருந்து ''ஓஸ் பைப்'' வழியாக நீரை எடுக்க அனுமதிக்குமாறு ஊராட்சி மன்றத் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டார். அவரும் இதற்கு வாய்மொழியாக இசைந்துள்ளார். இப்பொழுது மேல்நிலைத் தொட்டியில் இருந்து ''ஓஸ் பைப்'' வழியாக பள்ளியானது நீரைத் தடையின்றி 10–4–1986-லிருந்து பெற்றுக்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலேயே

[திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்] [1986 ஏப்ரல் 17

அதிகாரிகள் சில முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். ஊராட்சி மன்றத்தினுடைய தலைவர் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் என்ற காரணத்தால் அதைத் துண்டித்ததாகச் சொல்லியிருக்கிற அதே நேரத்தில், அந்தப் பள்ளியினுடைய மாணவர்களும் மாணவிகளும் ஊர் பொதுமக்கள் அனைவருமே சேர்ந்து மகஜர் கொடுக்கிறார்கள், தண்ணீர் பள்ளிக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

அதோடு சத்துணவு மையங்கள் தண்ணீர் இல்லாமல் அவதிப் படக்கூடாது என்ற வகையில், அரசாங்கமே 16–7–1982 ஆம் ஆண்டு, அரசினுடைய உள்ளாட்சித் துறை செயலாளர், ரூரல் வாட்டர் ஸ்கீமிலே இவைகளுக்கெல்லாம் இணைப்புகள் கொடுக்கப்படவேண்டுமென்று சொல்லி இருக்கிறார். ஆகவே, சத்துணவுக் கூடங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற இணைப்புகளைத் திடீர், திடீர் என்று இப்படி ஊராட்சி மன்றத் தலைவர்கள் துண்டிக்கிற நிலையை மாற்றுவதற்கு சத்துணவுக் கூடங்களுக்குக் கொடுத்திருக்கிற இணைப்புகளைத் துண்டிக்கக் கூடாது என்று அரசு தமிழகம் முழுவதும் இருக்கிற எல்லா ஊராட்சி மன்றத் தலைவர்களையும் அறிவுறுத்துமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிமன்றத் தலைவர்களுக்கு, அதுபோல, தண்ணீர் குழாய் இணைப்பைத் துண்டிக்கின்ற அதிகாரம் நிச்சயமாகக் கிடையாது. அதிலும் குறிப்பாக சத்துணவுக் கூடங்களுக்கோ, பள்ளிசாலைகளுக்கோ செல்கின்ற குழாய் இணைப்புகளை நிச்சயமாகத் துண்டிக்கக் கூடாது. துண்டிப்பதும் குற்றமாகும், தவறாகும். அதுபற்றி அந்த ஆணையர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4 வரவு–செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 17—கல்வி.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,50,66,38,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.



1986 ஏப்ரல் 17]

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களின் குறைகளைக் காலத்தில் அரசு களையத் தவறியதால் மாணவர்களின் கல்வி பாதித்துள்ளது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

'' மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,50,66,38,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, எல்லா ஆசிரியர்களுக்கும் தங்களது வகுப்பறையில் மேசை, நாற்காலி முதலிய வசதிகளை செய்து தர வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,50,66,38,000–இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,50,66,38,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும் .''

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 17—கலவி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,50,66,38,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசே நேர்முக தேர்வு செய்து, அரசு கல்லூரிகளுக்கும், தனியார் கல்லூரிகளுக்கும் மாணவர்களை ஒதுக்கீடு செய்யும்போது அரசு கல்லூரிகளை விட தனியார் கல்லூரிகளில் ரூபாய் நாலாயிரம், ஐயாயிரம், என்று அனுமதிக் கட்டணம் கோருவதால் பெற்றோர்களுக்கு ஏற்படும் இன்னல்கள் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை 'மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,50,66,38,000–இல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி என்கின்ற அறிக்கை @ வைக்கப்பட்டிருக்கிறது அதை நான் படித்ததாகக் கருதி, குறிப்பேட்டில் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றும் நாளையும் நடைபெறுகின்ற விவாதத்திற்காக, புதிதாக வர இருக்கிற கல்விக் கொள்கைப் பற்றிய ஒரு புத்தகமும் @மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அதுபற்றி கருத்துக்களைச் சொல்ல விரும்புகிற மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த வாய்ப்பையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறை மானியத்தின் மீது நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்களை இந்த அவையின் முன் வைக்க ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மைய அரசு புதிய ஒரு கல்விக் கொள்கையை நாடு தழுவிய முறையில் அறிமுகப்படுத்த எண்ணிக்கொண்டிருக்கும்போது, இந்த நேரத்தில் இந்த மானியக் கோரிக்கை விவாதத்திற்கு வந்திருக்கிறது. இன்று புதிய கல்விக் கொள்கையை வரவேற்கின்றபோது இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒருசில அறிவிப்புகள் இருக்கின்றன. ஆனால் 551 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது இது மொத்த நிதி ஒதுக்கீட்டில் ஒரு குறிப்பிடத்தக்க விழுக்காடு என்று இருந்தாலும் கூட இந்த விழுக்காட்டின் மூலம் சரியான கல்வி பயிற்சிக்கு வழி வகை இருக்கிறதா என்று பார்க்கும்போது இல்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. சத்துணவு, சீருடை போன்றவைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது கல்விக்கான அடிப்படை வசதிகளை ஆய்வுக்கூடங்கள், கல்விக் கூடங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றின் நிலையை மேம்படுத்த போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

---

@ 602—716ம் பக்கத்தில் இணைப்புகளாக அச்சடிக்கப் பெற்றுள்ளன.





இந்த நேரத்திலே எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ஒரு தந்தை தன் மகளுக்கு திருமண ஏற்பாடு செய்தார். ஏராளமான பொருள் செலவிலே திருமணத்தை வெற்றிகரமாக நடத்தி வைக்கவும் முன் வந்தார். சிறந்த கலைஞர்களை வைத்து கலை நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்தார். தேர்ந்த சமையல்காரர்களை வைத்து உணவு சமைக்க வைத்தார். மிகச் சிறந்த முறையிலே தஞ்சாவூர் பந்தல் என்று சொல்வார்களே அதைப் போன்று பந்தல் எல்லாம் போட்டார். ஆனாலும் மணமகள் சோகமாக இருந்தார். அதைப் பார்த்த தந்தை, இவ்வளவு தொகை செலவு செய்து இந்த நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் ஏற்பாடு செய்தும் இன்னும் ஏன் முகத்திலே வாட்டம் என்று மகளிடம் கேட்டார். அப்போது மகள் என்ன செய்து என்ன பிரயோஜனம், மணமகன் தகுதிவாய்ந்தவராக இல்லையே என்று சொன்னாள். அதைப் போன்றுதான் இருக்கிறது இந்த சீருடை, சத்துணவு வழங்குவதெல்லாம் இருக்கிறது. சத்துணவு, சீருடை எல்லாம் கல்வி பயிலுகின்ற மாணவர்களுக்கு உதவியாக இருக்கலாம். ஆனால் அதற்காக செலவிடுகின்ற தொகை மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகச் செலவிடுகின்ற தொகையோடு ஒப்பிடப்பட்டு பார்க்கும்போது பின்னது மிகவும் குறைந்த விகிதாச்சாரத்தில் இருக்கிறது என்று பார்க்கும்போது இந்த கதை தான் எனக்கு நினைவுக்கு வருகிறது.

ஓரளவுக்காவது ஆய்வுக்கூடங்களை நிர்வகிப்பதற்கும், கல்விச்சாலைகளைப் பராமரிக்கவும் புதிய கட்டிடங்களை நிர்வகிப்பதற்கும் அரசு அதிகமான தொகையை ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் மும்மொழிக் கொள்கை பற்றி ஒரு விளக்கம் காணப்படுகிறது. நான் இந்த அரசிடம் திட்டவட்டமாக ஒன்றைக் கேட்க ஆசைப்படுகிறேன். உங்களுக்கு மும்மொழிக் கொள்கையில் உடன்பாடு உண்டா இல்லையா? உண்டு என்றால் ஒப்புக்கொள்ளுங்கள். இல்லை என்றால் தெளிவாகத் தெரியப்படுத்திவிடுங்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிற ஒரு தீர்மானம் இரு மொழிக் கொள்கை என்பது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இரு மொழிக் கொள்கை தான். மும்மொழிக் கொள்கையை நாங்கள் எதிர்க்கிறோம், அதை ஆதரிக்கவில்லை. இதுபற்றி பலமுறை இந்த சட்டமன்றத்தில் சொல்லியாயிற்று. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இதிலே சந்தேகம் தேவையில்லை.

[1986 ஏப்ரல் 17

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மொழிக் கொள்கைப் பற்றிய கருத்தை அரசு அறிவித்திருக்கிறது இந்த மன்றத்தில். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கொண்டு வந்த தீர்மானம் அனைத்தையும் பார்த்த பிறகுதான் இந்த வினாவைக் கேட்கிறேன். ஏனென்றால் புதிய கல்வித் திட்டத்தை, நாடு தழுவிய கல்வித் திட்டத்தை மைய அரசு கொண்டுவந்திருக்கிற இந்த நேரத்தில் மொழிக் கொள்கையில் இந்த அரசின் கருத்து என்ன என்று அறிய நான ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில் ஒன்றை மட்டும் உறுதியாக, தெளிவாக வலியுறுத்த விரும்புகிறேன. காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவர்கள் மொழிப் பற்றிலே இங்கே இருக்கின்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் எந்த வகையிலும் குறைந்தவர்கள் அல்ல. ஆனால நாம் அணுகுகின்ற முறையானது சரியாக இருக்க வேண்டும். எதிர்கால சந்ததியினர் நலமாக வாழக்கூடிய வகையில் இருக்க வேண்டும், என்று நாங்கள் கருதுகிறோம். இந்தித் திணிப்பை நாங்கள் எதிர்க்கிறோம். அதே நேரத்தில் இந்தியை விரும்பிப் படிக்கின்ற மக்களின் அல்லது மாணவர்களின் வசதிகளை, வாய்ப்புகளை இந்த அரசு தடுக்கக் கூடாது என்பது எங்களுடைய கொள்கை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று மும்மொழிக் கொள்கையை ஆந்திரம் ஏற்றுள்ளது; கேரளம் ஏற்றுள்ளது; கர்நாடகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த மாநிலத்து மக்கள் மொழி உணர்விலே நம்மைக் காட்டிலும் எந்த வகையிலும் தாழ்ந்தவர்களாக இருக்க மாட்டார்கள். அதே நேரத்தில் அவர்களுடைய எதிர்கால சந்ததியினர் வாழ்க்கையை எண்ணிப் பார்த்து, இந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய உணர்வை நாம் கட்டுப்படுத்தக் கூடாது. நீங்கள் இந்தியை ஆதரிக்க வேண்டாம். ஆனால் விரும்பி படிக்கின்றவர்களுக்கு வாய்ப்பு வசதிகளைத் தடுக்காமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு கல்வி மேம்பாட்டிற்கு அடிப்படை வசதியாக இருக்கக்கூடிய கட்டிடங்களுக்கு போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை. மைய அரசு ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு மாதிரிப் பள்ளி ஏற்படுத்துவது இந்த அறிக்கையிலே வரவேற்கப்படவில்லை என்பது வருந்தத் தக்கது. மாதிரிப்



1986 ஏப்ரல் 17] [திரு. ஏ. எஸ். ரவீந்திரன்]

பள்ளி ஒன்றை மத்திய அரசு நிறுவுவதால் எந்த விதத்தில் இந்த அரசுக்குப் பாதகம் ஏற்பட்டு விடப் போகிறது? அல்லது அதனால் தமிழர்களுக்கு என்ன ஊறு ஏற்பட்டு விடப் போகிறது? இன்னொரு மொழி கற்பதால் நிச்சயமாக யாருக்கும் எந்தவிதமான தொல்லையும் ஏற்படாது. விருப்பப்பட்டவர்கள் பயில்வது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான் என்று நான் கூறிக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–40)

இந்த அறிக்கையைப் பார்க்கிறபோது சிறுவர்களுக்கு இது பெரும் சுமையாக இருக்கும் என்று அதாவது 3 மொழி கற்பது சுமையாக இருக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. நான் நிச்சயமாகச் சொல்கிறேன். 3 மொழிகளைக் கற்பதால் சிறுவர்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. என்னுடைய மகன் நான்காவது வகுப்புப் படிப்பவன். அவன் இன்று இந்தி மொழியில் நல்ல தேர்ச்சி பெற்று பரீட்சைக்குப் போகிற அளவுக்கு ஆகி இருக்கிறான். அதே நேரத்தில் தமிழிலும், ஆங்கிலத்திலும் அவன் சோடை போகவில்லை. முதல் மாணவனாகத்தான் இருக்கிறான். எனவே குழந்தைகளுக்குச் சுமை என்ற பெயரால் இந்த வாய்ப்பினை வருங்கால சந்ததியினருக்குத் தராமல் தடுத்து விடாதீர்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரத்தைப் பொறுத்த வரையில் இந்த அரசின் கொள்கை என்ன என்று நான் பலமுறை கேட்டேன். அதற்கு இன்றுவரை பதில் இல்லை. அந்த விகிதாச்சாரம் 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்றிருந்த நிலை மாறி 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் ஒட்டு மொத்தமாக தமிழகம் முழுவதும் இருக்கின்ற நிலைமையைப் பார்த்தால் 80 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர், 90 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற வகையில்தான் விகிதாச்சாரம் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் மாணவர்களின் கல்வித்தரம் மேம்படும் என்று எப்படி எதிர் பார்க்க முடியும்? எனவே உடனடியாக ஆசிரியர்களை நியமனம் செய்ய இந்த நிதிநிலை அறிக்கையிலேயே வழிவகை செய்ய வேண்டும்.

இப்போது செகண்டரி கிரேட் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் பற்றாக்குறை இருக்கிறது. இந்தப் பற்றாக் குறையைப் போக்க நான் முன்பே ஒரு யோசனை கூறினேன். செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் கிடைக்காத இடத்தில் பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்துவிட்டு பின்னால் பட்டதாரி ஆசிரியர்களுக்கு உத்தியோக உயர்வு கிடைக்கும் போது அதே

134474

பள்ளியில் அவர்களுக்கு அளிக்கலாம் என்று ஒரு யோசனை
கூறினேன். ஆனால் அரசு அதுபற்றி இன்று வரையில் எந்த
விதமான திட்டவட்டமான அறிக்கையும் கொடுக்கவில்லை.
ஒரு பக்கம வேலையில்லாத் திண்டாட்டம்: இன்னொரு பக்கம்
ஆசிரியர் பற்றாக்குறை. இப்படி இரண்டும் இருக்கின்ற கார
ணத்தால் இந்த இரண்டையும் சமாளிக்கக்கூடிய வகையில்,
இந்த ஒரு கண்ணோட்டத்தில் இந்தப் பிரச்சினையை அரசு
அணுக வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்கள் பிரச்சினை விரும்பத்தக்க அளவுக்கோ அல்லது
மகிழ்ச்சிகரமான அளவுக்கோ இன்று இருக்கவில்லை. ஆசிரியர்
கள் போராட வேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு விட்
டார்கள். இந்த ஆசிரியர்கள் போராட்டத்தைப் பற்றி நினைக்
கும்போது இன்னொரு கருத்தும் என் நினைவுக்கு வருகிறது.
ஆசிரியர்கள் போராட்டம் ஆரம்பித்து ஒரு வழியாக ஓய்ந்து
விட்டது. ஒரு நபர் கமிஷன் போடப்பட்டது என்று குறிப்பிட்
டார்கள். ஆனால் அந்த ஒரு நபர் கமிஷனின் பரிந்துரை இன்று
வரை வெளியிடப்படவில்லை. அதற்கு எவ்வளவு காலமாகும்
என்பதையும் நிர்ணயம் செய்யவில்லை. ஆனால் அதே நேரத்
தில் இந்த ஆசிரியர்கள் போராட்டத்தில் தங்களுடைய ஒத்
துழைப்பை நல்கிய காரணத்தால் தலைமைச் செயலக ஊழி
யர்கள் சங்க அமைப்பாளர்கள் பழி வாங்கப்பட்டு இருக்கிறார்
கள். இன்று வரையிலும் 35 பேர் தற்காலிக வேலை நீக்கத்தில்
இருக்கிறார்கள். அந்தச் சங்கத்திற்கான அங்கீகாரமும்
கொடுக்கப்படவில்லை. கேட்டால், மன்னிப்புக் கடிதம் எழுதித்
தாருங்கள் என்று கேட்கிறார்கள். எனவே நான் கேட்கிறேன்"
இத்தகைய மனப்பான்மை ஒரு அரசுக்கு இருக்கலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுடைய
கோரிக்கைகளுக்கு மற்றவர்கள் ஆதரவு தருவதைப் பற்றி
ஆட்சேபணை இல்லை. ஆனால் கடமை தவறி, விதிமுறை
களையும் மீறி வேலையே செய்யாமல், வேலையில் இருப்பவர்
களையும் வெளியே இழுத்துக் கொண்டு வந்து விதியை மீறி
உண்ணாவிரதம் இருந்து அதாவது கையெழுத்துப் போட்டு
விட்டு வெளியே வந்து இப்படி இவ்வளவு குற்றங்களைச் செய்
ததை மத்திய அரசு ஆதரிக்குமா? அல்லது நீங்கள் ஆதரிக்கிறீர்
களா? இதை எந்த ஒரு அரசும் ஆதரிக்க வேண்டுமா? எனவே
அவைகளுக்காகத்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அலு
வலகத்தில் வேலை செய்கிற 3,000 பேர் மீது நடவடிக்கை
எடுக்கப்படவில்லை. எவ்வளவோ பேர் வேலை செய்கிறார்கள்.
அவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.



யாரெல்லாம் சட்டங்களை மீறினார்களோ அவர்கள் மீது
சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதே தவிர
இதில் பழிவாங்கும் நடவடிக்கை எதுவுமில்லை. ஆசிரியர்களை
ஆதரித்தார்கள் என்பதற்காக அல்ல. நாட்டிலே எவ்வளவோ
பேர் ஆதரிக்கிறார்கள். 3½ இலட்சம் ஆசிரியர்கள் இருக்கிறார்
கள். அத்தனை ஆசிரியர்களும் கைது செய்யப்படவில்லை. நட
வடிக்கை எடுக்கப்படவில்லை. சட்டத்தை மீறி நடப்பவர்கள்
மீது, சட்டத்திற்குப் புறம்பாக போகிறவர்கள் மீது சட்டப்படி
நடவடிக்கை எடுக்கப்பட்டது. அது எந்த ஆட்சியிலும் நடை
பெறுகிற ஒன்றுதான். காங்கிரஸ் ஆட்சியிலும் நடைபெற்ற
ஒன்றுதான். எவ்வப்போதெல்லாம் அவ்வாறு நடவடிக்கை
எடுத்திருக்கிறார்கள் என்பதற்கான புள்ளிவிவரங்களை
வேண்டுமானால் என்னால் தர முடியும். ஆக அந்தக் காரணத்தை
வைத்து இது ஆணவம் பிடித்த அரசு, அக்கிரமம் படைத்த
அரசு என்று சொல்லிவிட்டுப் போவது உங்களுக்கே நல்லதல்ல.
நீங்களும் பொறுப்பிலே இருந்திருக்கிறீர்கள், இனிமேலும் இருக்
கக்கூடும் என்ற ஆசையும் உங்களுக்கு இருக்கிறது. அதுபோக
மத்தியிலேயும் இருந்துக் கொண்டிருக்கிறீர்கள். இவ்வளவு
இருக்கும்போது இப்போது இப்படிப் பேசுவது நல்லதல்ல.
எடுத்த நடவடிக்கைகள் முறைப்படி எடுக்கப்பட்டதே தவிர
அதிலே பழி வாங்குகின்ற தன்மையே இல்லை என்றும் சொல்லிக்
கொள்கிறேன்.

அவர்கள் வருத்தம் தெரிவித்து எழுதினால் சரியாகிவிடும்.
அவர்கள் மீது நடவடிக்கைதான் எடுக்க வேண்டும் என்றால்,
வழக்கு மன்றத்திலே கொண்டு நிறுத்தி 3, 4 மாதம் சிறையிலே
தங்க வைத்து வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்கிற அளவுக்கு
நடவடிக்கைகளை எடுக்க சட்டத்திலே எவ்வளவோ இடம்
இருக்கிறது. ஆனாலும் வருத்தம் தெரிவித்து எழுதிய 1,800
பேர்கள் வேலைக்கு திரும்பவும் எடுக்கப்பட்டிருக்கிறார்கள்.
மிஞ்சியிருக்கிற 35 பேர்களிலும் கூட 9, 10 பேர்கள் வருத்தம்
தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் வேலையில் சேர்க்கப்பட்
டிருக்கிறார்கள். அவர்கள் மீது வேறு விசாரணைகள் நடை
பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதுதானே தவிர அவர்கள்
மீது பழி வாங்கும் நோக்கமே இல்லை என்றும், எவ்வளவுக்
கெவ்வளவு கருணையோடு நடக்க வேண்டுமோ, அவ்வளவுக்
கவ்வளவு கருணையோடுதான் இந்த அரசு நடந்து வந்திருக்
கிறது. ஒரு கட்டுக்கோப்பு வேண்டும் என்பதற்காக, கட்டுக்
கோப்பு இருந்தால்தான் நல்லது. அதிலும் தலைமைச் செய
லகத்தில் கட்டுக்கோப்பு இருந்தால்தான் எல்லா இடங்களிலும்
எதிர்காலத்திலே கட்டுக் கோப்பு இருக்கும். கோட்டையைச்
சுற்றி ஊர்வலம் வருவதை சரி என்று மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் எண்ணுகிறார்களா? தடையை மீறி

உண்ணாவிரதம் இருக்க வேண்டும் என்று சொல்வதை சரியென்று சொல்லுகிறார்களா? உள்ளே வேலை செய்து கொண்டிருப்பவர்களையும் வெளியிலே போராட்டம் நடத்த இழுத்துக் கொண்டு வருவதை சரி என்கிறார்களா? இவைகளில் எல்லாம் காங்கிரஸ் கட்சிக்கு உடன்பாடுதானா? காங்கிரசுக்கு உடன்பாடு என்று கூட நான் கருதவில்லை. மாண்புமிகு உறுப்பினருக்கு தனிப்பட்ட முறையில் அதில் உடன்பாடு உண்டா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : துணைப் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. ஒன்றை மட்டும் தெளிவாக இங்கே நான் கூற ஆசைப்படுகிறேன். ஒழுக்கம் இன்மை, ஒழுக்கக் கேடு கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதிலே நிச்சயமாக எனக்கும் சரி நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் இயக்கத்திற்கும் சரி கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் ஒரு பிரச்சினையை முடியச் செய்வதற்காக அதனை முழுவதுமாக தடுப்பதோ, அல்லது அந்தப் பிரச்சினை சுமுகமான முடிவிற்கு வந்ததற்குப் பிறகு, அந்தப் பிரச்சினைக்கு ஆதரவு அளித்தவர்கள் மீது பழி வாங்குதலோ இல்லாமல், ஓரளவுக்கு மனிதாபிமானத்துடன் நடந்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்தே தவிர ஒழுக்கக் கேட்டை நான் ஆதரிக்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் காங்கிரஸ் இங்கே ஆட்சியில் இருந்தவர்கள், இனிமேலும் நிச்சயமாக இருக்கப் போகிறோம், அதிலே எங்களுக்கு கருத்து வேறுபாடு கிடையாது. அமைச்சர் அவர்களுக்கும் அந்தக் கருத்து இருப்பதை ஓரளவு அவர்கள் தெரியப்படுத்தியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். .. .. ..

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு அந்த விருப்பம் இருக்கக்கூடும் என்றுதான் சொன்னேனே தவிர, எனக்கு அந்த உறுதியான எண்ணம் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை.

திரு. எம். அண்ணாதாசன் : துணைத் தலைவர் அவர்களே, ஆணவம் பிடித்த அரசு என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, மும்மொழிக் கொள்கையை ஆதரிக்கின்ற வரையில் நீங்கள் தமிழகத்தில் ஆட்சிக்கு வர முடியாது.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, அதை முடிவு செய்ய வேண்டியது அமைச்சர் அல்ல, மக்கள் மன்றம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





ஆகவே, நான் கூறிக் கொள்வதெல்லாம் தயவுசெய்து அந்தப் பிரச்சனையை சற்று மனிதாபிமானத்தோடு கூர்ந்து பாருங்கள் என்றுதான் கேட்கிறேன். மன்னிப்புக் கடிதம் கொடுத்தால மட்டும் பிரச்னை தீர்ந்து விடும் என்று இந்த அரசு கருதுகிறதா என்று அறிய ஆசைப்படுகிறேன். ஓரளவுக்கு பிரச்னை தீர்ந்து விட்ட காரணத்தால் இதையே மீண்டும் ஒரு பிரச்னையாக ஆரம்பித்து, இதற்கே ஒரு போராட்டம் நடத்துகின்ற அளவுக்கு ஆளாக்க வேண்டாம் என்றுதான் கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்து, பள்ளிகளைப் பொருத்த மட்டில், தமிழகத்தில தனியார் பள்ளிகளும் நிறைய இருக்கின்றன. தனியார் கல்லூரிகளும் நிறைய இருக்கின்றன. ஆனால், இதிலே இருக்கிற ஒரு பிரச்னை என்னவென்றால் மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷன் என்ற பெயரால் தனியார் கல்லூரிகளிலே சிறுபான்மை வகுப்பினர்களுக்கு சில உரிமைகள் தரப்பட்டிருக்கின்றன. என்னைப் பொறுத்த வரையில், நான் சார்ந்திருக்கின்ற இயக்கத்தைப் பொறுத்தவரையில சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பதிலே நாங்கள் மனதார உடன்படுகிறோம். ஆனால, அதே நேரத்திலே சில உரிமைகளை சிறுபான்மையினருக்கு மட்டும் கொடுத்துவிட்டு, பெரும்பான்மை சமூகத்தைச் சார்ந்த கல்லூரிகளுக்கும், பள்ளிகளுக்கும் அந்த உரிமைகள் கிடையாது என்று கூறுவது வருந்தத்தக்கது.

(முற்பகல் 10–50)

உதாரணத்திற்கு ஒன்றைக் கூற ஆசைப்படுகிறேன். திருவண்ணாமலையிலே பி.டி.எஸ். ஜெயின் ஸ்கூல் என்ற பெயரால் ஒரு தனியார் பள்ளி ஆரம்பிக்கப்பட்டிருகிறது. அங்கே, ஆசிரியர்களை நியமனம் செய்தார்கள். அந்த நியமனத்திற்குக் கல்வி இலாகா அதிகாரிகள் அங்கீகாரம் அளித்து, மூன்று ஆண்டுகள் ஆசிரியர்கள் பணிபுரிந்த பிறகு, இப்போது இந்த ஆண்டு ஒரு விளக்கம் கேட்டு கடிதம் வருகிறது. நீங்கள் ரோஸ்டர் முறையை பின்பற்றவில்லை. எனவே, ஆசிரியர்களை பள்ளியிலிருந்து நீக்குங்கள் என்று சொல்கிறார்கள். அதிகாரிகள் செய்த தவறுக்கு ஆசிரியர்கள் பலியாக வேண்டுமா ? மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய பிறகு அந்த ஆசிரியர்கள் வேலையிழக்க வேண்டுமென்றால் அதற்கு காரணமாக இருந்த கல்வித் துறை அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? அதிகாரிகள் செய்த தவறுக்கு ஆசிரியர்களை பழிவாங்குகிற மனப்பான்மை கூடாது. ஆகவே, இதனை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு அந்த ஆசிரியர்களை மீண்டும் பணியில் சேர்ப்பதற்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன.

அதே நேரத்தில அந்தப் பள்ளியின் அங்கீகாரத்தை ஏன் ரத்து செய்யக்கூடாது என்று கேட்டு ஒரு கடிதம் அரசாங்கத்திலிருந்து வந்திருக்கிறது. மாணவர்களுடைய நன்மையை இதில் கருத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நேரத்தில் நான் எந்த ஒரு தனிப்பட்டவருக்கும் வழக்காடவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அங்கே பயில்கிற மாணவர்களின் நன்மையை கருத்தில் கொண்டு, இந்தத் தவறுக்கு அடிப்படை காரணம் அதிகாரிகள் என்பதை கருத்தில் கொண்டு, அந்த ஆசிரியர்களை மீண்டும் பணியில் அமர்த்தி, அந்தப் பள்ளியின் சமாதான கடிதத்தை ஏற்று, பள்ளியினுடைய அங்கீகாரத்தை நிரந்தரமாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தனியார் பள்ளிகளில மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷன்ஸ் என்று சொல்கிற அந்தப் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு எந்தவிதமான பணிப் பாதுகாப்பும் இல்லை. இந்த நேரத்தில் ஒன்றை குறிப்பிட ஆசைப்படுகிறேன். சென்னை, தியாகராயர் கல்லூரியை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று ஏற்கெனவே முடிவிற்கு வந்து விட்டது. கடைசியாக கிடைத்த தகவலின்படி நேற்றைக்கு முன்தினம் நிர்வாகத்தினர் அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டு போடப்பட்ட ரிட் மனு தள்ளுபடியாகிவிட்டது. எனவே, உடனடியாக அந்த தியாகராயர் கல்லூரியை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் அந்த நிர்வாகத்தில நடக்கிற ஒழுங்கீனங்கள் கணக்கில் அடங்காதவையாக இருக்கின்றன. அந்த கல்லூரியின் விளையாட்டு திடலை ஒரு பெட்ரோல் கம்பெனிக்கு நிர்வாகம் குத்தகைக்கு விட்டிருக்கிறது. அதேபோல தகுதியில்லாத மாணவர்களை, பல்கலைக் கழகத்தால் ஏற்றுக்கொள்ள முடியாத மாணவர்களை அந்தக் கல்லூரியில் சேர்த்திருக்கிறார்கள். உதாரணமாக ரவிச்சந்திரன் என்ற மாணவன் பிளஸ்-2 பரீட்சையிலேயே தேர்வு பெறவில்லை. அந்த மாணவனுக்கு அந்தக் கல்லூரியில் அட்மிஷன் கொடுக்கப்பட்டது. பின்னாடில அந்த அட்மிஷன் குறித்து பல்கலைக்கழகம் விளக்கம் கேட்டு அந்த மாணவனுக்கு பரீட்சை எழுத அனுமதி தராத போது, மாணவன் உயர்நீதிமன்றத்தில் அனுமதி கேட்டிருக்கிறான். இந்த வெட்கக்கேட்டை சுட்டிக்காட்டிய நீதிபதி, நிர்வாகம் தவறுக்கு கதவினை திறந்து விட்டது என்ற காரணத்தால் நீதிமன்றமும் திறந்து விடாது என்று குறிப்பிட்டிருக்கிறார். இவ்வாறு முறைகேடாக ஐந்து மாணவர்களை பல்கலைக் கழக விதிமுறைகளுக்கு மாறாக பரீட்சையில் தவறியவர்களை சேர்த்திருக்கிறார்கள்.

அதேபோல அந்தக் கல்லூரியில் ஏற்பட்ட ஒழுங்கீனங்களுக்காக அந்தக் கல்லூரி தேர்வு மையமாக இருக்கக்கூடாது என்ற தடையுத்தரவு பல்கலைக் கழகத்தால் போடப்பட்டிருக்கிறது. அதேபோல மூன்று ஆண்டுகளில் ஆறு முறை கலூரி



முதல்வர்களை மாற்றிய பெருமையும் அந்தக் கல்லூரிக்கு இருக்கிறது. அங்கே இருக்கிற ஆசிரியர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டு வருகிறார்கள். மாலை நேரக் கலலூரியில் பணியாற்றுகின்ற பேராசிரியர்களுக்கு நான்கு மாதங்களாக ஊதியம் தரப்படவில்லலயென்பது இங்கே குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இன்னும் கேட்டால் நம்முடைய மாண்புமிகு கலவியமைச்சரைக் கூட அவர்கள் சந்தித்து இருக்கிறார்கள். அப்போது அங்கே ஒரு பாஸ்கரராவ் நாடகமே நடத்தியதாக நான் அறிய வருகிறேன். கல்லூரியை, நிர்வாகத்தை அரசாங்கம் ஏற்கக் கூடாது என்று ஆசிரியர்கள் விரும்புவதாக கூறிவிட்டு ஆசிரியர்கள் அல்லாதவாகளைக்கூட அணிவகுத்து அமைச்சர் முன்னால் நிறுத்தியதாக நான் கேள்விப்படுகிறேன. இத்தகைய நிலையில் உடனடியாக அந்தக் கல்லூரியை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சுயநிதி கல்லூரிகளைப் பொறுத்த வரையில் ஏற்கனவே நான் குறிப்பிட்ட விஷயம்தான். ஏராளமான சுயநிதி கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகள் துவங்கப்பட்டு விட்டன. தனிப்பட்டவர்கள் பணம் சுரண்டுவதற்கு காரணமாக, அவை அமைந்து விட்டனவே தவிர நம்முடைய நோக்கம் நிறைவேறவில்லை.

படிக்க வேண்டிய மாணவர்களிடம் 2 இலட்சம் ரூபாய் கொடு, 3 இலட்சம் ரூபாய் கொடு என்று சந்தையிலே மாடு விற்பதைப் போல, சீட்டு விற்கப்படுகிறது என்ற நிலை நிச்சயமாக கல்வியினுடைய தரத்தை உயர்த்துவதற்கு வழிவகை செய்யாது என்பதை மட்டும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதிக்குப் பக்கத்துத் தொகுதியிலே ஒரு தொழில் நுட்ப கல்லூரி ஆரம்பித்தார்கள். ஒரு மாதத்திற்குள் ஆசிரியர்கள் நியமனம் செய்வதற்கு வசூல், மாணவர்களைச் சேர்ப்பதற்கு வசூல் என்று ஏறக்குறைய 3 இலட்சம் ரூபாயை வசூலித்துக்கொண்டு, தலைமறைவாகி விட்டார்கள். போலீசில் குற்ற வழக்கு பதிவாகி விசாரணை நடந்து வருகிறது. இத்தகைய நிலை, தனியார் கல்லூரிகளை ஆரம்பிக்க தூண்டுவதன் மூலமாக ஏற்பட்டு விடுகிறது. எனவே, இதை அரசு களைய வேண்டும்.

அடுத்து ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். துறை மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரிலே என்னுடைய நண்பர் ஒருவருக்கு வெளிநாடு செல்லக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. இந்திய தேசிய விஞ்ஞானக் கழகம் என்ற அமைப்பு அனுப்பியது. ஆனால், அவர் ஏற்கெனவே இந்தத் துறை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 5 ஆண்டுகள் பணி புரிய வேண்டும் என்ற கட்டாயத்தின் காரணமாக அந்த நண்பருக்கு 3 மாத காலம்

வெளிநாடுகளுக்கு மத்திய அரசின் செலவிலே செல்லக்கூடிய அந்த வாய்ப்பு தடுக்கப்பட்டு விட்டது. இவ்வாறான நிலைமை தமிழகத்தைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. எனவே, இப்படி உயர் படிப்பு படித்தவர்கள், தகுதி வாய்ந்த அறிஞர் பெருமக்கள் ஆகியோர் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு உள்ள தடைகளை உடனடியாக நீக்க வேண்டும்.

கடைசியாக சட்டக் கல்லூரியைப் பொறுத்தவரையில், எம்.எல்., பரிட்சைக்கு 1975 ஓல்டு ரெகுலேஷன் 1975 ரிவைஸ்டு ரெகுலேஷன் என்று இரண்டு முறைகள் இருக்கின்றன. இரண்டுக்கும் சேர்த்து, இப்போது பரிட்சைக்கு செல்லுகின்றவர்களுக்கு பொதுத் தேர்வுத் தாள் வழங்கப்படுகிறது. ஆனால், ஓல்டு ரெகுலேசனிலே தேர்வுக்குச் செல்லுகின்றவர்கள், குறிப்பிட்ட பாடத்திலே 40 சதவீதம் எடுத்தால் பாஸ். அதே தேர்வுத் தாளை எழுதுகின்ற ரிவைஸ்டு ரெகுலேஷன் மாணவர்கள் 50 சதவீதம் எடுக்காவிட்டால் பெயில். என்ன விசித்திரம்? ஒரே பேப்பர். 2 மாணவர்கள் எழுதுகிறார்கள். ஒருவர் 40 சதவீதம் எடுத்தால் பாஸ். இன்னொருவர் 49 சதவீதம் எடுத்தாலும் கூட பெயில். இந்த நிலையை தயவு செய்து கல்வி அமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு, இந்தக் குறைபாடுகளைப் போக்க வேண்டும். மேலும் விளையாட்டுத்துறைக்கு என்று ஒரு தனி அமைச்சரைப் போட வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடித்து விடுங்கள். உங்களுக்கு 20 நிமிடங்களுக்கு மேல் கொடுத்தாகிவிட்டது. இன்னும் 15 பேர்கள் பேசவேண்டியிருக்கிறது.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, ஆகவே, விளையாட்டுத் துறைக்கு என்று தனி அமைச்சர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். சென்னை எழும்பூர் விளையாட்டுத் திடலுக்கு, இந்த விளையாட்டுத் துறைக்கு பெரும் சேவை செய்து வருகின்ற திரு. சிவந்தி ஆதித்தன் அவர்கள் பெயரை வைக்கவேண்டும்.

மேலும், திருவண்ணாமலையில் ஒரு பாலிடெக்னுக்கும், அரசுக் கல்லூரியில் எம்.காம். பட்டப் படிப்பும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் இராணிப்பேட்டையில் மகளிர் கல்லூரியில் பி.காம்., பட்ட படிப்புக்கு ஏற்பாடு செய்தாலும் கூட, இன்னும் அங்கே பேராசிரியர்கள் நியமனம் செய்யப்படவில்லை. அதையும் உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நேரத்தை நீட்டித்துக் கொடுத்த, துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.





**திரு. செ. செம்மலை :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று ஒருசில கருத்துக்களை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கல்வியினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கிற நாம், கல்வியிலே, கல்வி முறையிலே மாறுதல் வேண்டும் என்ற எண்ணத்தை இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலே பெற்று இருக்கிறோம் என்பதை இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு முன்பாக நான் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நம்முடைய மரியாதைக்குரிய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் சமீபத்திலே லக்னோ பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவிலே பேசுகிறபோது ஒரு கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். 'கற்கும் கல்விக்கும் வேலைக்கும் நேரடி இணைப்பு இருக்கும் வகையில் கல்வி முறை மாற்றப்பட வேண்டும்' என்கிற அந்தக் கருத்தை அவர்கள் வலியுறுத்தி, அதன் அடிப்படையில் இன்றைக்கு புதிய கல்விக் கொள்கை உருப்பெற்று, இன்றைக்கு நாடு முழுவதும் இந்தப் பொருள் குறித்து விவாதங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆனால் அதே கருத்தை நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னாலே எடுத்துச் சொல்லி, பள்ளிப் படிப்பை முடித்த பின்பு, சுயதொழிலில் ஈடுபடுகின்ற தன்னம்பிக்கை ஏற்பட வேண்டும். அப்படிப்பட்ட கல்வி முறை வகுக்கப்பட வேண்டும் என்ற அந்தக் கருத்தை வலியுறுத்தி, மாநில அரசாங்கத்தால், முடிகிற அளவிற்கு 'லைப் ஓரியன்டட் எஜுகேஷன்' அதாவது வாழ்க்கைக் கல்விக்காக முதலமைச்சர் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி, கடந்த இரண்டு ஆண்டுகாலமாக பல பள்ளிக்கூடங்களில் நடைமுறைப்படுத்தி, அதிலே வெற்றிகண்டு இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

(முற்பகல் 11-00)

அந்த வகையில் பார்க்கிறபோது மத்திய அரசினுடைய புதிய கல்விக் கொள்கையிலே கண்டுள்ள நல்ல கொள்கைகளுக்கு நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு வழிகாட்டியாக இருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சரின் திட்டம் கிட்டத்தட்ட 750 பள்ளிக்கூடங்களிலே பரிட்ச்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டு

அதிலே வெற்றியும் கண்டு இன்றைக்கு பயன் உள்ளதாக அமைந்திருக்கிறது. எனவே அந்தத் திட்டத்தை அனைத்து பள்ளிக்கூடங்களிலும் அறிமுகப்படுத்த வேண்டுமென்று சொன்னால் கிட்டத்தட்ட ஆயிரம் கோடி அளவுக்கு நிதியுதவி தேவைப்படுகிறது. எனவே புதிய கொள்கையை உருவாக்கி அதை அமல்படுத்த வேண்டுமென்ற ஆர்வத்தோடு இருக்கிற மத்திய அரசு அதிலே சரிபாதியை ஏற்று மீதி பாதிக்கு உலக வங்கி போன்ற நிறுவனங்களுடைய உதவியைப்பெற்று மாநில அரசுக்கு இந்தத் திட்டத்தை நல்லமுறையிலே பயன்படுத்துவதற்கு ஊக்கத்தைக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே இன்றைக்கு இருக்கிற எஜுகேஷன் சிஸ்டத்தைப் பொறுத்தவரையில் "The instrument of examinations screens the individuals into 'desirable' and 'undesirable' instead of educating everybody." என்ற நிலமையில்தான் இருக்கிறது என்பதைத் துணைத் தலைவர் மூலமாக இந்த மன்றத்திற்கு நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்வுமுறை ஒரு சடங்கிற்காக நடத்தப்படுவதாகத்தான் இன்றைக்கு நாம் அதைக் கருதிக் கொண்டு இருக்கிறோம். அறிவாற்றலை வளர்ப்பதற்கு அந்தத் தேர்வுமுறை பயன்படுவதாக நான் நிச்சயமாக ஒப்புக்கொள்ள மாட்டேன். காரணம் தேர்வு மட்டுமே ஒரு மாணவனின் அறிவைச் சோதிக்கும் கருவியாகக் கருதிவிடக்கூடாது. 1987 ஆம் ஆண்டில் அன்றைய தீர்க்கதரிசியாக விளங்கிய சுவாமி விவேகானந்தர் அவர்கள் இதே சென்னை மாநகரத்திலே, ஒரு கூட்டத்திலே பேசிய கருத்தை மாண்புமிகு துணைத் தலைவர் மூலமாக இந்த மன்றத்திற்கு எடுத்துச் சொல்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். அதாவது 1987 ஆம் ஆண்டில் அவர் இங்கே பேசியிருக்கிறார், "உங்கள் பல்கலைக் கழகங்கள் கடந்த 50 ஆண்டுகளில் என்ன சாதித்து இருக்கின்றன; சுயமாகச் சிந்திக்கும் உண்மையான மனிதன் ஒருவனைக்கூட அவை உண்டாக்கியதாகத் தெரியவில்லை. அவைகள் வெறும் தேர்வுகளை நடத்தும் நிறுவனங்களாக மட்டுமே இயங்கிக் கொண்டிருக்கின்றன. பொது நலத்திற்காக நம்மைத் தியாகம் செய்ய வேண்டுமென்ற கருத்து நம் நாட்டிலே வளராமல் இருப்பதற்கு இதுவே காரணமாகும்" என்று 1897-ல் சுவாமி விவேகானந்தர் அவர்கள் ஒரு தீர்க்கதரிசனமான உண்மையை அன்றைக்கு இங்கே சொல்லியிருக்கிறார்கள். நாம் இன்றைக்கு இருக்கிற இந்தத் தேர்வு முறையை எண்ணிப்பார்க்க வேண்டும்.

இன்றைக்குத் தேர்வு மையங்கள் போலீஸ் பந்தோபஸ்துடன் நடந்து கொண்டிருக்கின்றன. ஆசிரியர்கள் தாக்கப்படுகிறார்கள் என்று செய்திகள் வந்திருக்கின்றன. காப்பி அடித்த மாணவன் பிடிபட்டான் என்ற செய்திகள் எல்லாம் வந்திருக்





கின்றன. அப்படியெல்லாம் இருக்கிற நிலைமையை பார்க்கிறபோது இந்தத் தேர்வுமுறை தேவைதானா என்கிற வினா இந்த புதிய கல்வி கொள்கையை உருவாக்குகிற நேரத்தில், அமல்படுத்துகிற நேரத்தில் நமக்கெல்லாம் கேள்விக்குறியாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில்நான் இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். சொல்லித்தருவது ஒரு ஆசிரியர்; கேள்வித் தாளைத் தயாரிப்பது ஒரு ஆசிரியர்; விடைத் தாளைத் திருத்துவது ஒரு ஆசிரியர். 35 மார்க்கை ஒரு மாணவன் எடுத்தால், அவன் பாஸ். 33 மார்க் எடுத்து ஒரு மாணவன் பெயிலானால் அவன் முட்டாள் என்று சமுதாயத்திலே தூற்றப்படுகிறான். 35 மார்க் எடுத்தவன் அறிவாளி என்று போற்றப்படுகிறான். இந்த நிலைமகள் எல்லாம் தேவைதானா என்பதை நாம் இந்த நேரத்திலே சிந்தித்துப் பார்க்க வேண்டும். சீனாவிலே ஒரு ப்ராவர்ப் உண்டு.

"When I hear I forget
When I see I remember
When I do I know"

என்று சொல்வார்கள். எனவே கேட்டுத் தெரிந்துகொள்வதைவிட, பார்த்துத் தெரிந்து கொள்வதைவிட செய்து தெரிந்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் மனிதனுக்கு அந்த அறிவாற்றல் வளரும் என்ற அடிப்படையில்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தொழில் கல்வியை நல்லமுறையில் அமல்படுத்தி மாணவர்களுக்கு அறிவாற்றல் வளருகின்ற ஒரு வாய்ப்பை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த வகையிலே நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை இந்தப் புதியக் கல்வி முறைக்கு ஏற்ப தேர்வு முறைகளிலே மாற்றம் செய்வதற்கான வழிமுறைகளை, ஒரு சிறந்த கல்வி வல்லுநர் குழுவை அமைத்து பரிசீலனை செய்து ஒரு மாற்றுமுறை கொண்டுவரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நாம் கல்விக்காக கிட்டத்தட்ட கோடிக் கணக்கான பணத்தை செலவு செய்கின்றபோது அந்த கல்வியினுடைய தரம் சரியாக இருக்கிறதா என்பதை நாம் இந்த நேரத்தில் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

இன்றைக்கு துவக்கப்பள்ளிகளுடைய தரத்தை எடுத்துக் கொண்டால் உண்மையிலேயே வெட்கப்பட வேண்டிய சூழ்நிலை தான் நாட்டில் இருக்கிறது, என்பதை நாம் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். அஸ்திவாரமே ஆட்டம் கண்டு போனால் அதற்கு மேலே என்ன தான் பளப்பளப்பான கட்டிடங்களை எழுப்பினாலும் அந்த கட்டிடங்களால் எந்தவிதமான பயனும் இல்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து

[திரு. செ. செம்மலை] [1986 ஏப்ரல் 17

பார்க்க வேண்டும். சமுதாய சிற்பிகள், எதிர்கால சிற்பிகளாகிய மாணவர்களை உருவாக்குகிற அந்தப் பணியில் ஆசிரியர்கள் வெற்றி கண்டு இருக்கிறார்களா என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

துவக்கப்பள்ளியினுடைய கல்வியைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட நிலைமை இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு 'டிவோஷன் மைண்டு' இப்போது இல்லை. இன்னும் சொல்லப்போனால் அவர்களுக்கு பைண்டிங் கிடையாது. வேறு எந்த தொழிலை செய்கின்ற அதிகாரியாக இருந்தாலும் சரி அவர்கள் அந்த வேலை செய்யவில்லை என்று சொன்னால் அதற்கு அவர்கள் பதில் சொல்லி ஆகவேண்டும், அதற்கு பொறுப்பு ஏற்க வேண்டும். ஆனால் துவக்கப்பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் மாணவன் ஏன் பெயில் ஆனான் என்று கேட்டால் நான் சொல்லித்தான் தந்தேன், அவன் படிக்கவில்லை நான் என்ன செய்வது என்றுசொல்லித் தப்பித்துக் கொள்ளக்கூடிய நிலைமை தான் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே துவக்கப் பள்ளியின் கல்வித் தரத்தை உயரத்த வேண்டிய வழி முறைகளை நாம் ஆராயவேண்டும். அதற்காக பல்வேறு காரணங்களை சொல்லுகிறார்கள். நான் ஆசிரியர்களை மட்டும் குறை சொல்ல மாட்டேன். ஆசிரியர்கள் அதற்கு பொறுப்பா, மாணவர்கள் பொறுப்பா அல்லது பெற்றோர்கள் பொறுப்பா என்பது இன்றைக்கு விவாதத்திற்கு உரிய ஒரு பொருளாக இருக்கிறது.

இன்னும் சில பிரச்சினைகளை பொது மக்கள் சொல்லுகிறார்கள். 1முதல் 5 வகுப்பு வரை உள்ள பள்ளிகளுக்கு ஒரு ஆசிரியர் இரண்டு ஆசிரியர் என்ற ஒரு துர்பாக்கியமான நிலை இன்றைக்கு இருக்கிறது. ஆசிரியர்கள் இல்லாத ஒரு நிலைமையில் அங்கே ஒரு ஆசிரியரே 5 வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு கல்வி அறிவை போதிப்பதில் சங்கடங்கள் இருக்கின்றன. இதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு 1 முதல் 5 வகுப்பு வரை உள்ள பள்ளிகள் இருக்குமானால் அதிலே 5 ஆசிரியர்களை கட்டாயமாக போட வேண்டும். 2 அல்லது 3 ஆசிரியர்கள் மட்டும் இருப்பார்களானால் அந்த பள்ளியில் 3-வது வகுப்பு வரை வைத்துக் கொண்டு மீதி உள்ள 4-வது, 5-வது வகுப்புகளை பக்கத்தில் உள்ள 5 ஆசிரியர்கள் உள்ள பள்ளிகளுக்கு அவர்களை சேர்த்து கொஞ்ச தூரம் நடந்து சென்று கல்வி அறிவை பெற்றுக் கொள்ளலாம்—ஆசிரியர்களை தேவையான அளவுக்கு நியமிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1986 ஏப்ரல் 17] [திரு. செ. செம்மலை]

அதேபோல் கல்வித் தரம் உயர வேண்டும் என்று சொன்னால் இப்போது இருக்கின்ற அந்த பாட திட்டப்படி துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியரை, ஒரு பட்டப் படிப்புப் பெற்றவரை நியமித்தால் நன்றாக இருக்கும் என்ற ஒரு கருத்து பேசப்படுகிறது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் உயர்நிலைப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர் தகுதிக்கு பட்டம் பெற்றவர்களை நியமிக்க வேண்டும். அப்போதுதான் கல்வித் தகுதி தரம் கொஞ்சம் கூடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் மிக முக்கியமான பிரச்சினை இந்த துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் தங்களுடைய சொந்த ஊரிலேயே பணியாற்றுகிறார்கள். அதனால் அவர்கள் அந்த ஆசிரியர் தொழிலை ஒரு உப தொழிலாக கருதிக் கொண்டு ஒரு முக்கியத்துவம் கொடுக்காமல் தனியாக வேறு ஒரு தொழிலை செய்து கொண்டு இருக்கிறார்கள். இந்த ஒரு நிலை பரவலாக இருக்கிறது. இந்த உண்மையை நான் சொல்லித்தான் ஆக வேண்டும். சில பேர் ஆசிரியர் தொழிலை உப தொழிலாகவும், முக்கியமான தொழிலாக வேறு ஒரு தொழிலை வைத்துக் கொண்டு அதில் தி நாட்டம் செலுத்தி கல்விக்கு அதிகமான அக்கறை கொடுக்காமல் இருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எல்லா ஆசிரியர்களும் அங்கே சொல்லித் தரவில்லை இந்த மாதிரி மோசமாக இருக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. ஒரு சிலர் நடந்து கொள்கிற முறையிலே மற்ற ஆசிரியர்கள் அத்தனை பேருக்கும் கெட்ட பெயர் ஏற்படுகிறது. எனவே முடிந்த அளவுக்கு வெளி ஊர்களில் வேலை என்று வந்தால் தான் அவர்களுக்கு பொறுப்புடனும் கடமையுணர்ச்சியுடனும் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கும். எனவே அந்த முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அதே போல் பெற்றோர்களைப் பொறுத்த வரையில் இன்றைக்கு பெற்றோர்களுக்கும், பொதுமக்களுக்கும் அந்த கல்வியில் 'இன்வால்வ்மெண்டு' என்று சொல்லுவார்களே அது இல்லை. பொதுமக்கள் கல்வி நிறுவனங்களோடு சம்பந்தம் இல்லாமல் இருக்கிறார்கள். அது ஒரு பெரிய குறையாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

முன்பு எல்லாம் பொதுமக்கள் கல்வி நிறுவனங்களை நிருவகிக்கின்ற சூழ்நிலை இருந்து இருக்கிறது. ஆனால் இப்போது காலப் போக்கில், எல்லாம் அரசாங்கம் என்ற அளவில் அந்த முறை மாற்றப் பட்டு அதிக உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. பெற்றோர்களுக்கு, பொது மக்களுக்கு பள்ளிகளில் என்ன நடக்கிறது, நம்முடைய பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் என்றுகூட

(முற்பகல் 11-10)

தெரியாமல் இருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே பெற்றோர்களின் பங்கு அவசியம் தேவை. இன்னும் சொல்லப்போனால் கல்வி நிறுவனங்களை நிருவகிக்கின்ற பொறுப்பு கூட பெற்றோர்களுக்கும் பொதுமக்களுக்கும் இருக்க வேண்டும். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். துவக்கப் பள்ளியைப் பொறுத்த வரையில், அதனை தனி அமைப்பின்கீழ் கொண்டு வந்தால்கூட நன்றாக இருக்கும். காரணம், சி.இ.ஓ., அல்லது டைரக்டர் ஆஃப் ஸ்கூல் எஜுகேஷன்' என்று ஹையர் செகண்டரி, மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளைப் பார்க்கின்ற ஒரு டைரக்டரால் அதைக் கன்ட்ரோல் செய்ய முடியாது. எனவே, தொடக்கப் பள்ளிக்கென்று தனி டைரக்டரேட் என்ற ஒரு அமைப்பை அமைத்து, மாவட்ட அளவில், மாநில அளவில் தனி அமைப்பின்கீழ் கொண்டு வந்து துவக்கப்பள்ளிகளுடைய கல்வித் தரத்தை உயர்த்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுநான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், நம்முடைய மத்திய அரசு இப்போது அறிவித்துள்ள புதிய கல்விக் கொள்கையில், மாவட்டம் முழுமைக்கும் மாதிரிப் பள்ளிகளை ஆரம்பிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது தேவைதானா என்ற ஒரு வினா இப்போது எல்லா மாநிலங்களிலும் இருந்து கேட்கப்பட்டு வருகிறது. அதனுடைய நோக்கம் நமக்குப் புரியவில்லை. நோக்கம், நல்ல நோக்கம் என்று அவர்கள் விளக்கினால் கூட அதைப் புரிந்து கொள்ளலாம். அவர்கள் நோக்கத்தைச் சொல்கிற போது, மாதிரிப் பள்ளிகளை ஏன் ஆரம்பிக்கிறோம் என்றால், To provide quality education to talented children in rural areas என்று சொல்கிறார்கள்.

நான் கேட்கிறேன். ஒரு மாவட்டத்திலே ஒரு பள்ளியை ஆரம்பித்து, அந்த மாவட்டத்திலே இருக்கிற ரூரல் ஏரியாக்களில் இருக்கிற அத்தனை ஏழை எளிய மாணவர்களுக்கும் அவர்கள் கல்வி புகட்டிவிட முடியுமா என்பதைத்தான் நான் கேள்வியாக வைக்க விரும்புகிறேன்.

எனவே, நோக்கம் நமக்குப் புரியவில்லை. அதனால், மத்திய அரசு அந்தக் கொள்கையை மீண்டும் பரிசீலனை செய்து, அந்தத் தொகையை மாநில அரசுக்கே கொடுத்து விட்டால், இப்போது இருக்கிற பள்ளிகளின் கல்வித் தரத்தை உயர்த்துகிற அளவுக்கு செய்யமுடியும். இன்னும் ஒரு அச்ச உணர்வு தமிழ் மக்களிடையே மட்டும் அல்லாமல், பல்வேறு தென்னக மாநிலங்களிலும் உள்ளது. அதாவது, இந்த மாதிரிப் பள்ளிகளை



ஆரம்பிப்பது, இந்தியைத் திணிப்பதற்கோ என்ற அச்சம் இருக்கிறது. அமெரிக்காக்காரன் இந்து மாக்கடலில் ஒரு பேஸ் அமைப்பதைப் போல, மாதிரிப் பள்ளி ஆரம்பித்து, இந்தியைத் திணிப்பதற்கு பேஸாக மத்திய அரசு அமைத்துக் கொள்கிறார்களோ என்று இன்றைக்கு பரவலாகப் பேசப்படுகிறது, அப்படிப்பட்ட அச்ச உணர்வு இருக்கிறது.

எனவே, அந்த ஐயப்பாட்டை மத்திய அரசாங்கம் போக்கிட வேண்டும். அந்த வகையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வது, ஒன்று மாதிரிப் பள்ளிகளை அமைக்காமல் அந்த உதவியைப் பெற்று நம்முடைய பள்ளிகளுடைய தரத்தை உயர்த்தி,செலவைக் சரிக்கட்ட பயன்படுத்திக் கொள்ளலாம், அல்லது என்னதான் தடுத்தாலும், மத்திய அரசு மாதிரி பள்ளிகளை நிறுத்தமாட்டார்கள் என்ற நிலை இருக்குமானால், அதிலே போதனா மொழியாக மாநில மொழி நிச்சயமாக இருக்கவேண்டும். அதுதான் சரியாக இருக்கும். அப்போதுதான் தமிழ்நாட்டில் இருக்கிற ஏழை எளிய மாணவர்களுக்கு கிராமப்புற மாணவர்களுக்கு அவர்களுடைய நோக்கம் அங்கே நிறைவேறுகிற அளவுக்கு வசதியாக இருக்கும் வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் மாதிரிப் பள்ளிகளிலே போதனா மொழியாக நம்முடைய மாநில மொழிதான் இருக்க வேண்டும் என்ற நிலையை மாநில அரசாங்கமும், குறிப்பாக நம்முடைய அமைச்சர் அவர்களும் உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்று, நம்முடைய இந்த தொழில் கல்வியிலே தொழிற்கல்விக் கூடங்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கு சுயநிதி ஆதாரத்துடன் இயங்கும் பொறியியல் கல்லூரிகள், அதேபோல் தொழில்நுட்பப் பயிலகங்கள், இவைகளை எல்லாம் தனியாரிடம் விட்டு, ஓரளவுக்கு படிக்கக்கூடிய மாணவர்களுக்கு வாய்ப்புக்களை உருவாக்கித் தருவதற்கு அரசாங்கம் முழு முயற்சியோடு ஈடுபட்டு இருக்கிறது. இதனை நான் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

காரணம், இன்றைக்கு $2\frac{1}{2}$ இலட்சம் எஸ்.எஸ்.எல்.சி. மாணவர்கள் படித்துவிட்டு வெளியே வருகிறார்கள். தொழில் கல்வித்திட்டத்தின்மூலம் அவர்கள் அனைவரும் பிளஸ் 2 முடித்துவிடுகிறார்கள். அதற்குப்பிறகு கலைக் கல்லூரிகளுக்கு போவது என்றால், கலைக் கல்லூரிகள் அதிகமாக ஆரம்பிப்பது இல்லை. கலைக் கல்லூரிகளாலே பயன் இல்லை என்று யாரும் படிக்க மறுக்கிறார்கள். எனவே, வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. அந்த வகையில், எல்லாம் அரசாங்கத்தினால் முடியும் என்று சொல்ல முடியாத நிலையில், தனியார்களைப் பயன்படுத்திக் கொண்டு இந்தக் கல்வியை புகட்டுகிற ஒரு காரியத்தில் நாம் ஈடுபட்டிருக்கிறோம்.

அந்த தனியார் நிறுவனங்கள் எல்லாம் நல்ல முறையில் செயல்படுகின்றனவா என்று பார்க்க ஒரு 'ரெவ்யூ கமிட்டி' கண்காணிப்புக் குழு அமைத்து இருப்பதாகத் தெரிகிறது. அந்தக் குழுவைப் பொறுத்த வரையில், இப்போது நம்முடைய அரசு விதித்து இருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்கள் நடத்துகிறார்களா, கல்வியின் தரம் சரியாக இருக்கிறதா என்பதைத் தீவிரமாக அவர்கள் கண்காணிக்க வேண்டும். அந்தக் குழு இன்னும் வேகமாக இயங்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அந்த நிறுவனங்களிலே ஒரு சில குறைபாடுகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருவது, அதைப் போக்க வேண்டும் என்பதற்காகத் தான். சில தனியார்கள் பொறியியல் கல்லூரிகளில் பயிற்சிக் கட்டணம் கூடுதலாகக் கேட்பதாகப் புகார் சொல்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட புகார்கள் வராமல் எல்லாக் கல்லூரிகளிலும் அரசு நிர்ணயித்த அந்தத் தொகையை வசூலிக்கிற வகையில் பார்த்துக் கொள்வது, இந்த இயக்குநருடைய, மாண்புமிகு கல்வி அமைச்சருடைய கடமை என்று கருதி நல்ல முறையில் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, தனியார் பாலிடெக்னிக்குகளில், அவைகளை அரசாங்கம் ஒத்துக்கொண்டதனுடைய நோக்கமே, 50 சதவிகிதம் தகுதியின் அடிப்படையில் ஏழை எளிய மாணவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டும் என்றுதான். ஆனால் இன்றைக்கு 50 சதவீதம் தனியார்கள் எடுத்துக் கொண்டு, மீதி 50 சதவீதம் தகுதியின் அடிப்படையில் எடுத்துக் கொள்வதாகச் சொல்லி, தகுதி உள்ள மாணவர்களுக்கு 'அட்மிஷன் கார்டு' அனுப்புகிறார்கள். அட்மிஷன் கார்டு அனுப்புவதாக ரிக்கார்டு செய்து கொண்டு அனுப்பாமலேயே குறிப்பிட்ட தேதியிலே, குறிப்பிட்ட நேரத்திலே வந்து சேரவில்லை என்ற காரணத்தைக் காட்டி, இன்றைக்கு அவர்களுக்குத் தேவையான ஆட்களை, அவர்கள் வாங்கவேண்டிய 'காபிடேஷன் பீஸை' வாங்கிக் கொண்டு சேர்த்துக் கொள்கிறார்கள் என்ற புகார் பரவலாக இருக்கிறது.

எனவே அந்த முறையை மாற்றுகிற வகையில் எப்படித் தனியார் பொறியியல் கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்க்கிறபோது டைரக்ட்ரேட்டிலிருந்து செலக்ஷன் கார்டுகள் அனுப்பி அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்களோ அதைப்போன்று தனியார் பாலிடெக்னிக்குகளிலேயும் அதே டைரக்ட்ரேட்டிலிருந்து அந்த மாணவர்களைத் தேர்வு செய்யக் கூடிய முறையைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தைப் பொறுத்த வரையில் தேர்வுகள் எல்லாம் விரைவிலே நடத்தப்பட்டு தேர்வு முடிவுகள் விரைவிலே அறிவிக்கப்பட்டு சான்றிதழ்களை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது. அதை நான் பாராட்டுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் அதற்காகப் பல்வேறு பத்திரிக்கைகள் பாராட்டியிருக்கின்றன. அதைப்போலவே தொடர்ந்து அந்த நடைமுறையைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

வொக்கேஷனல் கோர்சில் ஆசிரியர் பயிற்சி அறிமுகப் படுத்தப்பட்டு நல்ல முறையில் நடத்தப்படுகிறது. ஏற்கனவே நான் சொன்னதைப்போல் தனியார் ஆசிரியர் பள்ளிகளிலே தங்களுக்குத் தேவையான மாணவர்களை அவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். அதனால் தகுதியானவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற குறை சொல்லப்படுகிறது. அதையும் மாவட்டக் கல்வி அலுவலர் அளவிலே அப்ளிகேஷன்கள் கால்பார் பண்ணி அவர்களை அந்த அந்தப் பள்ளிகளுக்கு பிரித்து அனுப்பினால்தான் தரம் பாதுகாக்கப் படும், தகுதியானவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். வொக்கேஷனல் கோர்சிலே படித்துவிட்டு வருகிற மாணவர்களுக்கு தொழில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களுக்கு, வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. படித்து விட்டு வெளியே வருகிற அந்த மாணவர்களுக்கு அந்தத் தொழிலைச் செய்தே அவர்கள் பிழைக்கவேண்டுமென்ற நிலை இருப்பதால் எப்படி ஐ.டி.ஐ. படித்தடன் அவர்களுக்கு சர்டிபிகேட் கொடுக்கப்படுகிறதோ அதைப்போன்று ஈக்குவலைசாக சர்டிபிகேட் கொடுக்க வேண்டும். அப்போதுதான் வேலை வாய்ப்பு பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும். அதோடு அப்படிப்படித்து விட்டு வெளியே வருகின்ற மாணவர்களுக்கு அரசாங்கம் அவர்களுக்கு கடன் உதவி செய்து வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தாரமங்கலம் தொகுதியிலே அமரவல்லி மல்லியகுண்டம் ஆகிய இரண்டு ஊர்களிலே உயர்நிலைப் பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டு பொது மக்கள் இதற்குத் தேவையான நிதியை கொடுத்துவிட்டார்கள். நடப்பு ஆண்டிலேயே இந்த இரண்டு ஊர்களிலும் இரண்டு உயர்நிலைப் பள்ளிகளையும் உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குள்ளமுடையனூரில் உயர்நிலைப்பள்ளிக்கு கட்டட வசதி இல்லையென்ற குறை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு கூடுதல் வகுப்பறை கட்டித்தரவேண்டுமென்று

கேட்டுக் கொள்கிறேன். தாரமங்லம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித்தர வேண்டுமென்று வேண்டுகோளை வைத்து என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள கல்வி மானியக் கோரிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை வழங்குவதற்கு வாய்ப்புத் தந்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்வி அமைச்சர் அவர்கள் ரொம்பவும் நல்லவர். எப்போதுமே அமைதியாக இருப்பார். நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கூட சூடாகப் பேசினார். ஆனால் நான் சூடாகப் பேசப்போவதில்லை. அப்படிப் பேசினாலும் அதை அமைதியாக அவர் பரிசீலிப்பார் என்ற நம்பிக்கையிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு நாட்டின் வாழ்வையும், வளர்ச்சியையும், வலிவையும் கல்வியை அடிப்படையாகக் கொண்டே நாம் பார்க்க வேண்டும். நிகழ்காலம் மட்டுமல்ல. எதிர்காலமும் கல்வியைத்தான் நிலைகளாகக் கொண்டு அமைந்திருக்கிறது. அப்படிப்பட்ட கல்வி இந்த மாநிலத்தில் வளர்ச்சியடைய இந்த அரசாங்கம் என்ன செய்திருக்கிறது, என்ன செய்ய இருக்கிறது என்பது இந்த அவை விவாதித்துக்கொண்டு இருக்கிற பிரச்சினையாக இருக்கிறது. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த கல்வி நாட்டு மக்களுக்கு கிடைக்க வேண்டுமானால் நல்ல ஆசிரியர்கள் வேண்டும், அந்த ஆசிரியர்கள் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் இருக்கவேண்டும். நலிவற்ற வாழ்க்கை வேண்டும். வாழ்க்கையிலே வசதிவேண்டும், வறுமை அவர்களைத் தீண்டக் கூடாது. காலையிலே இங்கே உப்பு பற்றிப் பேசினார்கள். உப்புக்கும்-புளிக்கும் ஒப்பாரி வைத்துக்கொண்டு இருந்தால் உன்னைப் பாடுவது எக்காலம் தாயே பராசக்தி என்று மகாகவி பாரதியார் பாடினார்.

ஆசிரியர்களின் நிலை அவல நிலையாக இருப்பதற்கு இந்த அரசுதான் முழுக் காரணம், அரசாங்கத்தின் அணுகுமுறைதான் காரணம். எண்ணும் எழுத்தும் அறிவித்தவன் இறைவன் ஆகும் என்பார்கள், அப்படி எண்ணையும் எழுத்தையும் அறிவித்தவர்களை கழுத்தைப் பிடித்துக் காராகிரகத்தில் தள்ளி கம்பிகளை எண்ணவைத்த பெருமை இந்த ஆட்சிக்குத்தான் உண்டு.





(முற்பகல் 11-20)

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில், கல்விக்காக 551 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்றும், இது மொத்த பட்ஜெட்டியில் 22 சதவிகிதம் என்றும் பெருமையோடு குறிப்பிடப்பட்டுள்ளது. ஒதுக்கியவரையில் எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால் இது பட்ஜெட்டில் இருந்தால் மட்டும் போதுமா? ஏட்டிலேயும், எழுத்திலேயும் மட்டும் இது இருந்தால் போதுமா? வீட்டிலேயும் நாட்டிலேயும் என்ன நிலைமை? எத்தனை மாதங்கள் பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டிருந்தன? எத்தனை ஆசிரியர்கள் சிறையில் இருந்தார்கள்? எத்தனை நாட்கள் தேர்வுகள் தள்ளி வைக்கப்பட்டன? ஆசிரியர்கள் சிறையில் இருந்தார்கள்; மாணவர்கள் தெருவில் இருந்தார்கள். இந்தப் போராட்டத்தில் உயிரிழந்த ஆசிரியர்கள் எண்ணிக்கை எத்தனை? இவையெல்லாம் கல்வித் துறையில் இந்த அரசாங்கம் செய்த சாதனைகள். ஆசிரியர்களின் நிலை இப்படி என்றால் மாணவர்களின் நிலை என்ன? இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை ஆதரித்து, தங்களுடைய இன உணர்வை வெளிப்படுத்துவதற்காக ஊர்வலமாக அந்த மாணவர்கள் வந்தார்கள். அந்த மாணவர்களை அடித்து நொறுக்கினார்கள்; மண்டையைப் பிளந்தார்கள். இப்படியெல்லாம் செய்வது இந்த அரசாங்கம் மாணவர்கள்மீது கொண்டுள்ள அக்கறையையும் கனிவையும் காட்டுகிறது.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு பாட்டில் பாடுவார்கள், ''நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி'' என்று. இப்படிப் பாட்டிலேதான் அந்தக் கருத்து இருக்கிறதே தவிர, அந்தப் பிள்ளைகள் தங்களுடைய உணர்வுகளைக் காட்டுவதற்காக ஊர்வலமாக வந்த நேரத்தில் அடித்ததும், மண்டையைப் பிளந்ததும் முறைதானா என்று கேட்க ஆசைப்படுகிறேன். கல்வியின்பால் கொண்டுள்ள கரைகடந்த ஆர்வத்தில், காவல் துறையினரின் வீர தீர பாரம்பரியத்தைக் காட்டுகின்ற வகையில் வரலாற்று ஏடுகளில் இடம் பெறத்தக்க அளவிற்கு உள்ள ஈடு இணையற்ற நிகழ்ச்சியாகும் அது.

அடுத்து, ஊதிய உயர்வு வேண்டுமென்று அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் கோரினார்கள். அதற்காக சம்பளக் கமிஷன் அமைக்கப் பட்டது. அதில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். கமிஷனின் அறிக்கையும் வந்தது. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் சம்பளத்தை உயர்த்தி சலுகைகள் வந்தன. ஆனால், எதிர்பார்த்துக் காத்திருந்த ஆசிரியர்களுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. இதுகுறித்து ஆசிரியர்கள் முறையிட்டார்கள், கோரிக்கை விடுத்தார்கள்.

அது கோட்டையிலே இருப்பவர்களின் செவிகளுக்கு எட்டவில்லை. கொடிகளைப் பிடித்தார்கள், கோஷங்களைப் போட்டார்கள், போரட்டத்தில் ஈடுபட்டார்கள். தனித்தனி சங்கங்களாக 48 சங்கங்களாகப் பிரிந்திருந்த அவர்கள் ஓரணியில் ஒன்றிரண்டு போராடினார்கள். ஊதியக்குழு தங்களைப் புறக்கணித்துவிட்டது என்று போர்க்குரலை எழுப்பினார்கள். ஆனால் ஆசிரியர்களுக்கு நிறைவளிக்கும் முடிவை இந்த அரசாங்கம் தரவில்லை. மாறாக எச்சரிக்கைகளும் மிரட்டல்களும் விடப்பட்டன. இதனால் அவர்களின் போராட்டம் உச்ச கட்டத்தை அடைந்ததே தவிர பிரச்னையைத் தீர்க்க அரசு தயாராக இல்லை, போராட்டம் நடத்தினார்கள். அதன் காரணமாக சிறையில் அடைக்கப்பட்டார்கள். அப்படி அவர்கள் சிறை சென்ற பிறகு, எட்டு ஒன்பது பேர்கள் இறந்ததற்குப் பிறகு ஊதியக் குழுவின் முரண்பாடுகளைக் களைவதற்காக ஒரு நபர் கமிஷன் என்று நியமித்தார்கள். அது என்ன ஆனது ? அதனுடைய அறிக்கை என்ன ஆயிற்று ? அது எப்பொழுது வரும் என்ற விவரம் இதுவரையில் தெரியவில்லை நிலைமைகள் இப்படியே இருந்தால் நாட்டிலே கல்வி எட்ட வளரும் ?

கல்வியைப் பொறுத்த வரையில், ''கல்வி ஒரு சவால்'' என்று இரண்டு புத்தகங்கள் தரப்பட்டிருக்கின்றன. அதில் மத்திய அரசின் தேசீயக் கல்விக் கொள்கை பற்றி விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. நல்ல வேளையாக அவைகள் தமிழில் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. ''கல்வி ஒரு சவால்'' என்ற அந்த அறிக்கை மும்மொழிக் கொள்கையை வலியுறுத்தி உள்ளது. கல்வியமைச்சரின் கருத்து 6, 7, 8 பக்கங்களில் கூறப்பட்டிருக்கின்றன. மத்திய அரசின் கொள்கை என்ன என்பதைப் பற்றிச் சொல்லிவிட்டு, நாம் கடைபிடித்து வருகின்ற அண்ணாவின் இருமொழிக் கொள்கையைப் பற்றிக் கூறிவிட்டு, கூறுகிறார்கள். ''புதிய கல்விக் கொள்கையின் இறுதி வடிவத்தை உருவாக்குமுன் மேற்கண்டவற்றையும் பிறவற்றையும் கவனமாகப் பரிசீலித்துப் பின்னரே மைய அரசு முடிவுகளை எடுக்கும் என இவ்வரசு நம்புகிறது. முக்கிய அம்சங்கள் குறித்து நாடு தழுவிய முழுமையான கருத்தொற்றுமையுடையதாக புதிய கல்விக் கொள்கை அமைந்து நம் நாடு 21ஆம் நூற்றாண்டை நோக்கி முன்னேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.'' என்று கூறப்பட்டுள்ளது. எங்களைப் பார்த்து எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுகின்ற நீங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் போராட்டத்தில் கொஞ்சம்கூட விட்டுக் கொடுக்காமல் ஆணித்தரமாகப் பேசிய நீங்கள், சொர்க்கம் தான் நரகம், நரகம் தான் சொர்க்கம் என்று நம்ப வைக்கின்ற அளவிற்கு நாநயம் படைத்த, எண்ணிக்கை பலம் பெற்றுள்ள நீங்கள், இந்தக் கலாச்சார ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போர்க்குரல் எழுப்பவில்லை. மத்திய அரசின் தேசீயக் கல்விக் கொள்கை





யை நாங்கள் கண்டிக்கிறோம். எதிர்க்கிறோம் என்று நீங்கள் உரிமை முழக்கம் இடுவதற்குத் தயாரானால் அதை நாங்கள் வரவேற்கிறோம், அதை வழிமொழியவும் தயாராக இருக்கிறோம். இன்னொரு விஷயம், உழைக்கின்ற வர்க்கம் உரிமைக் குரலை எழுப்பினால் அதை ஒடுக்குவதில் இந்த அரசு முனைப்பாக இருக்கிறது. ஆனால், நமது மாநிலத்தின் உரிமைகள் ஒவ்வொன்றையும் பறிப்பதில் மத்திய அரசு முனைப்பாக இருக்கிறது. மாநிலப் பட்டியலிலிருந்து கல்விப் பொதுப் பட்டியலுக்குப் போகிறது. இனி இது மத்திய பட்டியலுக்குப் போக அதிக நாள் ஆகாது. இந்த அதிகார ஆக்கிரமிப்பை எதிர்த்து, இந்த அரசு என்ன செய்தது ? கடிதம் எழுதினோம், கேட்டுக் கொண்டோம், முறையிட்டோம், நம்புகிறோம் என்றெல்லாம் கூறிப் பயன் இல்லை. மத்திய அரசின் இந்த அதிகார ஆக்கிரமிப்பைக் கண்டித்து, மாநிலத்தின் உரிமையை வலியுறுத்தி, ஒரு கண்டனத் தீர்மானத்தை இந்த அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து ஒரு விஷயம். நான், இப்பொழுது உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பைப் பற்றி கூற விரும்புகிறேன் ; தீர்ப்பை விமர்சிக்கலாம், கண்டிக்கலாம் என்று கடந்த வாரம் இந்த மன்றத்திலே பேசப்பட்டது ; ஒரு உயர்நீதி மன்ற நீதிபதியின் தீர்ப்பு குறித்து இங்கே கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இந்தியாவின் உச்ச நீதிமன்றம் மருத்துவக் கல்லூரி பட்ட மேற்படிப்பு வகுப்புக்கு மாணவர்களைச் சேர்ப்பது பற்றி ஒரு தீர்ப்பு அளித்திருக்கிறது. கடந்த ஆண்டு இந்தத் தீர்ப்பை அமுல்படுத்த முடியாவிட்டாலும் வருகின்ற ஆண்டில் இந்தத் தீர்ப்பை அமுல்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். அந்தத் தீர்ப்பைப் பற்றி ஒரு கண்டனக் குரல் இந்த அரசின் சார்பில் எழுந்தது உண்டா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். இந்த அரசு மாநிலத்தின் உரிமைகளைப் பாதுகாக்கப் போகிறதா அல்லது தாரை வார்க்கப் போகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

அடுத்து, கொள்கை விளக்கக் குறிப்பில், தமிழ் வளர்ச்சி, தமிழ்ச் சங்கம் என்றெல்லாம் ஏராளமான தலைப்பிலே, தாராளமாக, பல விஷயங்கள் தரப்பட்டிருக்கின்றன. தமிழ் வளர்ச்சியைப் பொறுத்த வரை மாறுபட்ட கருத்து கிடையாது. ஆனால், தமிழ் வளர்ச்சியிலே இந்த அரசு எப்படி ஆக்கபூர்வமாகச் செயல்படுகிறது என்பதை ஆடிட்டர் ஜெனரல் ஆப் இந்தியா, 1983-84 ஆம் ஆண்டு அறிக்கையிலே 117 ஆம் பக்கத்திலே கூறுகிறார்.

1981ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மதுரையில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டின் நிறைவு விழா நிகழ்ச்சியின் பொழுது, தமிழ் அன்னையின் சிலை திறந்து வைக்கப்பட்டது. சிலையை நிரந்தரமாக நிறுவுவதற்கு ஒரு

பீடம் அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. அலங்காரமான சித்திர வேலைப்பாடமைந்த ஒரு பீடத்தைத் தயாரிக்க மாநிலச் சித்திரைக் கலைக் கல்லூரியினால் அந்த வேலை ரூ. 1.58 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டது. அதன்பிறகு 13 மாதங்கள் கழித்து, அந்தப் பீடத்தில் சில மாற்றங்கள் செய்ய வேண்டும், எனவே, ஏற்கனவே போட்ட மதிப்பீட்டை மாற்றி, ரூ. 2.50 இலட்சமாக உயர்த்துகிறார்கள். இந்த வேலை 1984 ஜனவரி 16 ஆம் தேதிக்குள் முடிவடைய வேண்டுமென்றும் கூறுகிறார்கள். ஆனால், 1984 மே மாதம் வரை பீடமும் செய்யப்படவில்லை, சிலையும் நிறுவப்படவில்லை. அதற்கான காரணத்தைப் பொறுப்பான அதிகாரி இதுவரை தெரிவிக்கவில்லை. இதுதான் இந்த அரசு தமிழ் அன்னைக்குச் செலுத்திய அஞ்சலியா என்று நான் கேட்கிறேன்.

அடுத்து, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு துறை பற்றி ஆடிட்டர் ஜெனரல் ஒரு சர்ட்டிபிகேட் தருகிறார். தமிழிலே கலைக் களஞ்சியம் 12 தொகுதிகளாக வெளியிடுவதற்காக அரசாங்கம் 1977ஆம் ஆண்டு ரூ. 2 இலட்சத்தை தமிழ் அக்காடமி என்ற அமைப்பிடம் வழங்குகிறது. அந்த வேலை 4 ஆண்டுகளுக்குள் முடிக்கப்பட வேண்டுமென்று கூறி, 1982 ஆம் ஆண்டில் பணி முடிக்க, 6 ஆண்டுகள் ஆகும் என்றும் ஆண்டுக்கு ரூ. 12½ இலட்சம் தேவை என்றும் கூறுகிறது. அரசாங்கம் மேலும் ரூ. 3 இலட்சம் நிதி தருகிறது. ஆனால், 1979 ஆம் ஆண்டு, இந்த வேலை நிறுத்தப்பட்டு, அதிலேயிருந்த ஊழியர்களெல்லாம் வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள். இந்த வகையில், ரூ. 3.33 இலட்சம் விரயம் ஏற்படுகிறது. ரூ. 5 இலட்சம் வரை நிதி தந்து இந்த அரசாங்கம் அந்தப் பணியைச் செய்வதற்கான இந்த உத்தரவைப் பிறப்பிக்கவில்லையாம். இதனால் அக்காடமி கலைக்கப்பட்டு விட்டது என்றும் சொல்கிறார்கள்.

1982 ஆம் ஆண்டு இந்த வேலை தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநரிடத்திலே ஒப்படைக்கப்பட்டு, 1983 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. 1984 ஆம் ஆண்டு மே மாதம் வரை எந்த அளவுக்கு இந்தப் பணி நடந்திருக்கிறது என்பதற்கான தகவலும் இல்லை என்கிறார் ஆடிட்டர் ஜெனரல். இலட்சக் கணகக்கில் நிதி ஒதுக்கிய காரியமே இந்த இலட்சணத்தில் நடந்திருக்கிறது என்றால், இப்பொழுது உலகத் தமிழ்ச் சங்கத்திற்குக் கோடிக் கணக்கில் நிதியை ஒதுக்குகிறோம் என்று சொல்கிறீர்கள். அதன் நிலைமை என்ன ஆகும் என்பதை இன்னும் 4 ஆண்டுகள் கழித்து வருகின்ற ஆடிட்டர் ரிப்போர்ட்டை வைத்து நாம் அறிந்துகொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன்.





அடுத்து மொழிபெயர்ப்பு பற்றி எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதிலும சிறப்பாக தமிழ் மொழியிலுள்ள சிறந்த இலக்கியங்களை பிற மொழிகளிலும், அதைப் போல பிற மொழிகளிலுள்ள சிறந்த இலக்கியங்களை தமிழ் மொழியிலும் மொழிபெயர்த்து வெளியிடும் திட்டம் தமிழ் வளர்ச்சித் துறையிலேயே தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது என்று இந்த கொள்கை குறிப்பில் கூறப்பட்டுள்ளது. நீங்கள் இலக்கியங்களை மொழி பெயர்ப்பது இருக்கட்டும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை மொழி பெயர்த்து வழங்க மத்திய அரசு நிதி உதவி வழங்கியது. அதைச் செயல்படுத்த முடியாதது பற்றி என்னுடைய பட்ஜெட் உரையின்போது தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மொழி பெயர்ப்பு இந்த நிலையில் இருக்கிறது.

(முற்பகல் 11-30)

அடுத்து, பள்ளிக்கூடங்களில் படிக்கின்ற மாணவர்களுக்கு எல்லாம் சத்துணவு போடுகிறோம் ; இலவச புத்தகம் தருகிறோம்; இலவச சீருடை தருகிறோம். ஆனால் அந்த பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் நுழைவதற்கு நன்கொடை தரவேண்டும். பள்ளி நிர்வாகம் நன்கொடை வாங்குவதில்லை. ஆனால், அவர்கள் பெற்றோர்-ஆசிரியர் சங்கம் என்று வைத்து, அந்தச் சங்கம் அந்தக் காரியத்தைச் செய்கிறது. அந்தச் சங்கம் பெற்றோர்களுக்கும் நன்மை செய்வதில்லை ; ஆசிரியர்களுக்கும் நன்மை செய்வதில்லை. ஆனால் கட்டிட வசதிக்கு என்று ஆயிரக்கணக்கில் பணத்தை வசூல் செய்கிறது. 3,000 கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போடுகிறபோது பள்ளிக் கட்டிடங்களுக்கு என்ற பெயரால் இப்படி வசூல் செய்ய வேண்டுமா? அதை அனுமதிப்பது முறை தானா என்று கேட்கிறேன்.

இருப்பவர்கள் கொடுக்கட்டும். இருப்பவர்கள் கொடுப்பது பற்றி எங்களுக்கு ஆட்சேபம் இல்லை. நாங்கள் இல்லாதவர்கள் பற்றித்தான் கவலைப்படுகிறோம். மண்ணுக்கு ஈடு பொன் கேட்டால் வழியில் மனிதர் என்செய்வார் ? எனவே இந்த நன்கொடையை தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெற்றோர்-ஆசிரியர் சங்கம் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுவதை தடுத்து நிறுத்த வேண்டும்; நன்கொடை வசூல் செய்யும் முயற்சியில் ஈடுபடக் கூடாது என்ற கருத்தைத் தெரிவித்து, பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

என்ற வள்ளுவன் வாய்மொழிக்கேற்ப மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காஞ்சிப் பல்கலைக்கழகம் பேரறிஞர் அண்ணா இடத்திலே பயின்று, தான் பயின்றதை முறையாக கசடறப் பயின்று— பலர் காஞ்சிப் பல்கலைக் கழகத்தில் பயின்றிருந்தாலும் அவர்கள் கசடறப் பயிலவில்லை— தான் பயின்ற படிப்பை தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேரும் புரிந்துகொள்ளுகின்ற வகையில், தெரிந்துகொள்ளுகின்ற வகையில் திட்டங்களைத் தீட்டி, செயல்பட்டு வருகின்ற எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைய தினம் மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். ஒரு இரக்கமற்ற, இதயமற்ற மனிதர் வெளியிலே பேசும்போது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைச் சாடுகின்ற ஒரு வகையிலே உடல் வலிமை இருந்துவிட்டால் போதாது; இதய பலமும் மூளை வளமும் வேண்டுமென்று பேசியிருக்கிறார். ஆனால் தமிழ்நாட்டு மக்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு இதய பலமும் இருக்கிறது, மூளை வளமும் இருக்கிறது, இரண்டையும் சேர்த்து காப்பதற்கு உடல் வளமும் இருக்கிறது என்பதை நன்றாக அறிந்த பிறகுதான் தமிழக முதலமைச்சராக, மூன்றாவது முறையாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் இதய பலமும், மூளை வளமும், உடல் வளமும் இல்லாதவர்களை தமிழக மக்கள் அரசுக்கும் இலாயக்கில்லை, முதலமைச்சராவதற்கும் இலாயக்கில்லை என்று தெரிந்துதான் தூக்கி எறிந்திருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியிலே கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய் அளவுக்கு, நிதி ஒதுக்கீட்டில் கிட்டத்தட்ட 25 சதவீத அளவுக்கு தமிழகத்தினுடைய வருவாயை கல்விக்காக ஒதுக்கி மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை யாரும் மறந்து விட முடியாது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு 'இளமையில் கல்' என்ற கூற்றுக்கு ஏற்ப இன்றைக்கு சிறந்த முறையிலே செயல்பட்டு வருகிறது. மனிதனுடைய வளர்ச்சியில் மூளை வளர்ச்சி' என்பது 1 வயது முதல் 8 வயது வரையில்தான் வேகமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவேதான் இந்த நிலையில் குழந்தைகள் மூளை வளர்ச்சி நன்றாக இருக்கின்ற வகையிலே, குழந்தைகளின் மூளை வளர்ச்சி நன்றாக அமைய வேண்டுமென்ற வகையில், அப்படிப்பட்ட சூழ்நிலையிலே குழந்தைகள் பயில வேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து செயல்படுத்திவருகிறார்கள். கிட்டத்தட்ட தமிழ்நாட்டில் ஒரு கோடி மக்கள் பயன்படக்கூடிய அளவுக்கு, ஒரு கோடி பள்ளி மாணவர்கள் பயன்படுகின்ற அளவுக்கு இந்தத் திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு



வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைச் செய்து காட்ட முடியாதவர்கள், திக்கற்றவர்கள், திறனற்றவர்கள் ஆகியவர்கள் எல்லாம் இந்தத் திட்டத்தைப் பார்த்து, தட்டுத்தூக்குகிற திட்டம், பிச்சைக்காரத் திட்டம் என்றெல்லாம் கேவலமாகப் பேசினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் முதன் முதலாக இந்தத் திட்டத்தை இதே சட்டமன்றத்தில் அறிவித்தபோது சிரித்தவர்களும் உண்டு; ஏளனம் செய்தவர்களும் உண்டு. புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் ஏதோ சினிமா என்று நினைத்துக்கொண்டு இந்தத் திட்டத்தை அறிவித்துவிட்டார், இது நடக்கிற காரியமா என்றெல்லாம் பேசியபோது புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நான் பச்சிளங்குழந்தையாக இருந்து பசி, பசி என்று பசிக் கொடுமையால் கதறியபோது என்னுடைய தாயார் பக்கத்து வீட்டிற்குச் சென்று அரிசி வாங்கி வந்து அந்த அரிசியினைச் சமைத்து உணவளித்த காட்சியை பார்த்திருக்கிறேன்; இந்தத் தமிழகத்தில் கோடிக்கணக்கான தாய்மார்கள் என்னுடைய தாயைப்போல வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் எனவே என்னுடைய தாய்க்கு ஏற்பட்ட அவல நிலைமை நான் முதலமைச்சராக இருக்கும் வரையில் தமிழகத்திலுள்ள எந்தத் தாய்க்கும் ஏற்பட விடமாட்டேன் என்று சொல்லி இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக குழந்தைகளுக்கு எல்லாம் நல்ல சத்தான ஆகாரம் கிடைக்கின்ற காரணத்தால் வளர்கின்ற குழந்தைகளை எல்லாம் பாலர் பள்ளிகளுக்கு அழைத்துச் சென்று அவர்களுக்குக் கல்வி ஊட்டுவதன்மூலமாக இயற்கையிலேயே அந்தக் குழந்தைகளுக்குப் படிக்கவேண்டுமென்ற உணர்வு ஏற்படுகிறது. அதன் காரணத்தால் அந்தக் குழந்தைகளுக்கு இளமையிலேயே கல்வி கற்பிக்கப்படுகிற ஒரு காட்சியும் புரட்சித்தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் வந்திருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

மேலும் இந்தக் குழந்தைகளுக்கு உண்ண உணவு கொடுத்தால் மட்டும் போதாது. அந்தக் குழந்தைகளில் ஏழையாக இருப்பவர்கள் பலர் உடை இல்லாமல் இங்கே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஒரே ஒரு டிரஸ்ஸை வைத்துக்கொண்டிருப்பதன் காரணத்தால் அதைத் துவைத்துப் போடுகின்ற காரணத்தால் மறுநாள் பள்ளிக்குச் செல்ல முடியாத நிலைமை இருப்பதை உணர்ந்த மாண்புமிகு புரட்சித்தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் எட்டாவது வகுப்பு வரையில் படிக்கின்ற அனைத்து குழந்தைகளுக்கும் பள்ளியில் சீருடை தர வேண்டுமென்ற வகையில் கிட்டத்தட்ட 15 கோடி ரூபாய் அளவுக்கு செலவிடுகின்ற வகையில் ஒரு திட்டத்தை ஏற்படுத்தி இன்றைய தினம் அரசு செம்மையாகச் செயல்படுத்திக்கொண்டு வருகிறது என்றால் அது மாண்புமிகு திரு. எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசுதான்.

[திரு. பாப்பா சுப்பிரமணியன்] [1986 ஏப்ரல் 17

அந்தக் குழந்தைகளுக்குச் சீருடை தந்துவிட்டால் மட்டும் போதாது. உழைகின்ற வர்க்கத்திற்கும். பாட்டாளி வர்க்கத்திற்கும் சொந்தக்காரர்களாக இருக்கின்ற அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய குழந்தைகளைப் படிக்க வைக்கக்கூடிய வாய்ப்பு இல்லாமல் புத்தகங்கள் வாங்கிக் கொடுக்க முடியாத அவல நிலைமையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களின் குழந்தைகளுக்கெல்லாம், அவர்கள் நன்றாகப் படிக்கவேண்டும் என்பதற்காக கிட்டத்தட்ட 15, 16 கோடி ரூபாய் செலவில் புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அரசு இலவசமாகப் புத்தகங்களைத் தர ஏற்பாடு செய்திருக்கிறது. இந்தத் திட்டத்தையும் புரட்சித்தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் அரசு மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

புரட்சித்தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியில் தான் கிட்டத்தட்ட 4,500 பள்ளிக்கூடங்களுக்கு தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக அரசு கட்டிடம் கட்டித் தந்திருக்கிறது. இந்தியா சுதந்திரம் பெற்று 39 ஆண்டுகள் ஆனாலும் கூட பல்வேறு கிராமங்களில் சொந்தக் கட்டிடம் இல்லாமல் ஓலைக் குடிசைகளில் குழந்தைகள் எல்லாம் ஒண்டிக்கிடந்த காட்சி இருந்தது. புரட்சித் தலைவர் ஆட்சி தான் அந்த நிலைமையை மாற்றியது. இப்படி சத்துணவுத் திட்டம், குழந்தைகளுக்கு இலவசப் பாடப்புத்தகம் வழங்குகிற திட்டம் என்ற பல சிறப்பான திட்டங்களை எல்லாம் கொண்டு வந்து அந்தக் குழந்தைகள் நல்ல முறையில் தங்கிப் படிக்க வேண்டும் என்ற வகையில் 4,500 கட்டடங்களைப் பக்கா கட்டடங்களாகக் கட்டித்தந்தது புரட்சித்தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் அரசு தான் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

மேலும் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில்தான் ஆசிரியப் பெருமக்களுக்கு பல்வேறு சலுகைகள் தரப்பட்டிருக்கின்றன என்பதையும் யாரும் மறந்துவிட முடியாது. இங்கே பேசியவர்கள் சொன்னார்கள், ஆசிரியர்கள் இந்த ஆட்சியில் அலைக்கழிக்கப்பட்டார்கள் என்று. ஒன்றை நான் உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக்காலத்தில் ஆசிரியர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டு சிறைச்சாலையிலே மன்னிப்புக் கடிதங்களை எழுதிப் பெற்றுக்கொண்டபின் அவர்கள் விடுதலை செய்யப்பட்ட கொடுமை நடந்தது என்பதை மாண்புமிகு மாற்றுக்கட்சி நண்பர்கள் மறந்துவிட முடியாது. இன்னும் சொல்லப்போனால்



1986 ஏப்ரல் 17] [திரு. பாப்பா சுப்பிரமணியன்]

ஆசிரியர்களுக்கு அதிகப்படியான சலுகைகளைக் கொடுத்தது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியிலே தான். ஒரு காலத்திலே ஊராட்சி ஒன்றியத்திலே பணியாற்றிய ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் பூராவும், அந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய பஞ்சாயத்து போர்டு பிரசிடென்ட் வந்தாலும் சரி, ஊராட்சி மன்றத் தலைவர் வந்தாலும் சரி உடனடியாக அவர்களைப் பார்த்து வணக்கம் போடவேண்டும். ஒரு சல்யூட் அடிக்க வேண்டும். அப்படி அந்த ஆசிரியர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கோ அல்லது ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெரும் தலைவருக்கோ வணக்கம் செலுத்தவில்லை என்று சொன்னால், அவர்கள் இடுகின்ற கட்டளைகளை செயல்படுத்தவில்லை என்று சொன்னால், அந்த ஊராட்சி ஒன்றிய பெரும் தலைவரின் கையாட்களாக அந்த ஆசிரியர்கள் இல்லை என்று சொன்னால் அல்லது குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு ஆள் பிடிக்கவில்லை என்று சொன்னால், அந்த ஆசிரியர்கள் பல ஊர்களுக்கு மாற்றப்பட்ட கொடுமை இருந்தது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11—40)

அப்படி எல்லாம் இருந்தவர்களை புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் தான், ஊராட்சி ஒன்றிய அனைத்து ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக மாற்றி அவர்களுக்கு அனைத்து சலுகைகளையும் தந்த ஒரே ஒரு அரசு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசு என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. அது மட்டும் அல்ல புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் ஆசிரியர்களுக்கு, மத்திய அரசு எப்போது அதன் ஊழியர்களுக்கு டி.ஏ. அறிவித்தாலும் உடனுக்குடனே மாநில அரசும், மாநில அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் டி.ஏ. அறிவித்து ஆணைபிறப்பித்த ஒரே அரசு என்பதோடு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தான் ஒரு டி.ஏ. கூட நிறுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே 1976-க்கு முன்னாடி 7 டி.ஏ. நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. எமர்ஜென்சி காலத்திலும் ஒரு டி.ஏ. நிறுத்திவைக்கப்பட்டது. அப்படி 8 டி.ஏ. நிறுத்திவைக்கப்பட்டதன் விளைவாகத் தான் இன்றைக்கு அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கும் ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பது புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அல்ல அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

இப்படி புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்திலே தான் பல்வேறு திட்டங்கள் மாணவர்களுக்காக, ஆசிரியர்களுக்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்வதோடு, புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே நிறைய தனியார் பாலிடெக்னிக்குகளும், என்ஜினீயரிங் கல்லூரிகளும் திறக்கப்பட்டு அதன் மூலம் மாணவர்கள் அதிகம் பேர் பயன்பெறக்கூடிய வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. அப்படி திறந்திருக்கும் அந்த தனியார் பாலிடெக்னிக்குகளில் 50 சதவீத கோட்டாவை அரசாங்கத்திற்கு கொடுத்து எலிஜிபிலிட்டி அடிப்படையில் மாணவர்களை சேர்க்க வேண்டும் என்று நிபந்தனை கொண்டு வந்ததன் காரணமாக, அரசு செய்ய வேண்டிய, அரசு பாலிடெக்னிக்கில் கையாள வேண்டிய பணிகள் நடவடிக்கைகள் அந்த தனியார் பாலிடெக்கினிக்குகளிலும் நிறைவு செய்யப்பட்டு விடுகிறது. எனவே தனியார் பாலிடெக்னிக்குகளை தடை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்வதோடு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தான் பல்வேறு வகையான கல்லூரிகளை, பல்கலைக் கழகங்களை திறந்திருக்கிறோம். பாரதியார் பல்கலைக் கழகத்தை திறந்திருக்கிறோம், பாரதிதாசன் பல்கலைக் கழகத்தைக் திறந்திருக்கிறோம், அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழகத்தை திறந்திருக்கிறோம் அன்னை தெரசா பல்கலைக் கழகத்தை திறந்திருக்கிறோம். அழகப்பா பல்கலைக் கழகத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். தமிழ் பல்கலைக் கழகத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இத்தனையும் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தான் ஏற்பட்டது. புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி தான் இப்படி கல்விக்காக மிகச் சிறப்பாக பாடு பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்து வாய்ப்பு தந்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

* திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின் மீது ஜனதா கட்சியின் சார்பாக கருத்துக்களை கூற வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கல்வி மானியக் கோரிக்கையானது 551 கோடி ரூபாய்க்கு கோரப்பட்டிருக்கிறது. அதைத்தவிர மற்றும் பல இனங்கள் மூலமாக சேர்த்து மொத்தம் 678 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருப்பதாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த 678 கோடி ரூபாயிலே 17 வயது வரையில் உள்ளவர்களுக்காக மட்டும் 400 கோடி ரூபாய் ஆகிறது என்றும் உணவிற்காக 93 கோடி ரூபாய் ஆகிறது என்ற காரணத்தாலே கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய் வரையிலே உயர்நிலைப் பள்ளி வரை



படிக்கின்ற மாணவர்களுக்காகச் செலவிடப்படுகிறது. ஆனால் இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, இந்தப் பள்ளிகளிலேயெல்லாம், அது கிராமங்களிலே உள்ள பள்ளிகளானாலும் சரி நகரங்களிலே உள்ள நகராட்சி பள்ளிகளானாலும் சரி, தரையே கிடையாது. அங்கே உள்ள சிமென்ட் தரைகள், எல்லாம் உடைந்து போய் மண் தரையிலேதான் பையன்கள் உட்கார்ந்திருக்கிற சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட பள்ளிகளில் மேல் கூரைகள் இல்லாமல் மழை பெய்கிற பொழுது பையன்கள் நனைந்தும், வெயில் நேரத்தில் காய்ந்தும் அவதிப்பட்டுக் கொண்டிக்ருகிறார்கள். இதற்கெல்லாம் சரியான ஒதுக்கீடு இந்த மானியக் கோரிக்கயில் இருப்பதாகத் தெரியவில்லை. கல்விக்காக 550 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறீர்கள். மொத்தச் செலவில் 22 சதவிகிதத்தை கல்விக்காக செலவழிக்கிற நீங்கள் பள்ளிகள் எல்லாம் ஒழுங்காக நடைபெறுவதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல பள்ளிகள் கிராமப்புரங்களில் மரத்தடியில் தான் நடந்து கொண்டிருக்கின்றன. பல பள்ளிகளில் ஆசிரியர்கள் ஒழுங்காக வேலைக்கு வருவதே இல்லை. அவர்களுக்கு இருக்கிற அரசியல் செல்வாக்கின் காரணமாக எப்போதாவது வந்து கையெழுத்து போட்டு விட்டுச் செல்கிறார்கள். பையன்களுக்கு பாடம் சொல்லித் தருவதில்லை. இந்த நிலை அநேகமாக எல்லா இடங்களிலும் இருந்து கொண்டிருக்கிறது. இதனை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சுயநிதி கல்லூரிகளைப் பற்றி சொல்லி இருக்கிறீர்கள். 71 தனியார் பாலிடெக்னிக்குகளும், 23 பொறியியல் கல்லூரிகளும் வந்திருப்பதாக விளக்கக் குறிப்பில் இருக்கிறது. மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இதில் கேபிடேஷன் பீஸ் வாங்கக் கூடாது என்று உத்தரவு போட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். உங்களுக்கே தெரியும், பத்திரிகைகளில் விளம்பரம் போட்டே பணத்தை வாங்குகிறார்கள். சுயநிதி கல்லூரிகள் என்று ஆரம்பிக்கப்பட்ட பிறகு அவர்களால் இதையெல்லாம் வாங்காமல் எப்படி செய்ய முடியும் என்பது என்னுடைய கேள்வியாகும். அப்படி பணத்தை வாங்குபவர்கள் எந்த அளவிற்கு வாங்குகிறார்கள், எந்த அளவிற்கு கல்லூரிகள் பராமரிக்கப்படுகின்றன., வசூல் செய்த பணத்தில் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கிறதா, எக்குப்மெண்ட்ஸ் வாங்கப்பட்டிருக்கிறதா என்பதையெல்லாம் நாம் பார்க்க வேண்டும். பல கல்லூரிகளை ஆரம்பித்தவர்கள் அங்கே இருக்கிற மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களை படித்து வரச் சொல்கிறார்கள். வேண்டிய விஞ்ஞான கருவிகள் அவர்களிடம் இல்லாமல் இருப்பது தான் இதற்கு காரணம். இந்த நிலையெல்லாம் இருக்கிறது. ஆகவே இந்த சுயநிதி கல்லூரிகள் சரியாக இயங்கவில்லை. பணத்தை முதலில் பையனிடம் வாங்கிவிடுகிறார்கள். வசதிகள் எதுவும்

செய்து தருவதில்லையென்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசாங்கம் இதில் தக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல பள்ளி சாராக் கல்வி, முதியோர் கல்வியைப் பற்றி சொல்லியிருக்கிறீர்கள். பள்ளி சாராக் கல்வியை நான் ஆதரிக்கிறேன். அது அவசியம் தேவை. இந்த நாட்டில் 100-க்கு 85 சதவீத மக்கள் ஏழைகளாக இருப்பதால் சிறு வயதில் தீப்பெட்டி தொழிலுக்கும், களையெடுப்பதற்கும், மாடு மேய்ப்பதற்கும், அவர்கள் சென்று விடுகிற காரணத்தால் அவர்கள் கல்வி அறிவைப் பெறுவதற்கு உதவுகிற வகையில் பள்ளி சாராக் கல்வி மையங்கள் நடத்துவதில் ஆட்சேபனை இல்லை. அடுத்து முதியோர் கல்வி என்று போட்டிருக்கிறீர்கள். ஆனால் நடைமுறையில் முதியோர் கல்வி கொடுப்பதாக ஒரு கணக்கு தான் காட்டப்படுகிறது. கணக்கு காட்டுவது, அரசு பரிசுகள் வாங்குவது போன்றவை தான் நடைபெறுகின்றன. மற்றபடி முதியோர் கல்வி நடப்பதாகவே எனக்குத் தெரியவில்லை. ஆகவே இந்த முதியோர்கள் படிப்பு எதற்காக என்றால் கல்வியறிவு பெற்றவர்கள் தமிழ் நாட்டில் இத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று அந்த விகிதாச்சாரத்தை கூட்டிக் காட்டுவதற்குத்தான் இருக்கிறது. அந்த முதியோர்கள் சாதாரணமாக கையெழுத்து தான் போடுவார்கள். மற்றவைகளை படிக்க வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. இதை ஒரு மானப் பிரச்னையாக எடுத்துக் கொண்டு, அகில இந்திய அளவில் தமிழ் நாட்டில் கல்வி கற்றவர்களின் விகிதாச்சாரத்தை உயர்த்துவதற்காகதான் இது இருக்கிறது. இது தேவையில்லையென்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாற்றுத் தலைவர் அவர்களே, முதியோர்கள் படிக்கக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்களா ?

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்வது தவறு. முதியோர்கள் படிப்பதை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. பத்து பேர் படிப்பதாக சொல்லி பி.டி.ஓ. விடம், தாசில்தாரிடம் கையெழுத்து வாங்கி பணத்தை வாங்குகிறார்களே தவிர முதியோர்கள் உண்மையில் படிப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவர்கள் படிப்பதாக கணக்கு தான் இருக்கிறது இது தேவை தானா என்று தான் கேட்டேன்.

மாண்புமிகு செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, முதியோர் கல்வி நடப்பதிலே குறைபாடுகள் இருக்கின்றன, சரியாக நடைபெறவில்லையென்றால் அவற்றை திருத்தி சரியாக நடைபெறுகிற முயற்சியில் நாம் ஈடுபட வேண்டுமே தவிர உலகமே ஒப்புக் கொண்ட, எல்லோரும் ஒப்புக்கொண்ட



எல்லோரும் விரும்புகிற கருத்துக்கு மாறாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏன் தன்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. முதியோர்கள் படிக்க வேண்டும், வயது வந்தவர்கள் படிக்க வேண்டும், வயது வந்தவர்கள் படித்தால் தான் தமிழ் நாட்டில் சமுதாயத்தில் இருக்கிற சில பிரச்னைகளை தீர்க்க முடியுமென்று நாம் நம்புகிறோம். எனவே குழந்தைகள் எப்படி படிக்க வேண்டுமென்று நினைக்கிறோமோ அதே போல வயது வந்தவர்களும் படிப்பது என்பது சமுதாயத்திற்கு இன்றியமையாததாகும். ஆகவே அதிலே கருத்து வேறுபாட்டிற்கு கொஞ்சம் கூட இடமே கிடையாது. அந்தத் திட்டம் நடைபெற்றே ஆகவேண்டும். அதிலே இருக்கிற குறைபாடுகளைப் போக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைப்பு தர வேண்டும்.

(முற்பகல் 11–50)

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொண்டாலும், நான் சொல்ல வருவது என்ன என்றால், இளமையில் படித்தால்தான் மனிதிலே பதிந்து விடுகிறது. வயதானவர்களுக்கு எவ்வளவுதான் சொல்லிக் கொடுத்தாலும் அவர்கள் வெறும் கையெழுத்து போடுவதற்கு மட்டும் தான் கற்றுக்கொள்கிறார்கள். இதை நான் பல இடங்களில் பார்த்ததால்தான் சொல்கிறேனே தவிர, அந்தக் கருத்திலே எனக்கு மாறுபாடு இல்லை. இது சரியாக செயல் படவேண்டும் என்றுதான் நான் சொன்னேன்.

அடுத்து சத்துணவுக் கூடங்கள். இதைப் பற்றி பல தடவை இந்தமன்றத்திலே சொல்லியாகிவிட்டது. இன்னும் மேலும் மேலும் இதைப்பற்றிச் சொல்வதாலே எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. சோதனை போடுவதைப் பற்றி நேற்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் ப. உ. ச. அவர்கள் சொன்னார்கள். நாங்கள் சோதனை போடுவதைக் கட்டுப்படுத்துவதைப் பற்றி கவலையில்லை. நான் இதற்கு முன்னாலே சோதனை செய்தபோது 10 கிலோ அரிசி போட்டு விட்டு 30 கிலோ அரிசி போட்டதாக எழுதிவிடுகிறார்கள். நான் அங்கே உள்ள குறிப்பு புத்தகத்தில் கூட இதைப்பற்றி எழுதி வைத்துவிட்டு வந்திருக்கிறேன். இதைப்பற்றிக் கேட்டால் கல்வி இலாக்காவிலே சொல்லவேண்டும் என்று சொல்கிறார்கள். அங்கே சொல்லியாகி விட்டது. இதைப்பற்றி பி. டி. ஓ. அவர்களிடம் சொல்லியாகி விட்டது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் சொல்லியாகிவிட்டது. ஆனால் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் அங்கே சோதனை போட்டும், உரிய அதி

காரிகளிடத்திலே சொல்லியும் கூட, அந்தச் சத்துணவு மையத்திலே வேலை பார்க்கக்கூடிய அந்த அமைப்பாளர்கள், அல்லது அந்தப் பணியாளர்களுக்கு எந்தவிதமான பயமும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்திர்கள் என்று கேட்டும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்தோ அல்லது கல்வி இலாக்காவைச் சேர்ந்த அதிகாரிகளிடமிருந்தோ, அல்லது பி. டி. ஓ. அவர்களிடமிருந்தோ எந்தவிதமான பதிலும் வரவில்லை. அப்படி என்றால் இதனுடைய நடைமுறையில் எங்களுக்கு சந்தேகம் எழும்புகிறது. ஏதோ ஒரு சக்தி அவர்களுக்கு பின்னாலே இருக்கிற காரணத்தாலே தான் அவர்களுக்கு எந்தவிதமான பயமும் இல்லை. கேட்டால், 'அப்படிதாங்க, சரியாகத்தாங்க போட்டோங்க' என்று சொல்லி சமாளிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருக்கும்போது, நீங்கள் தடை விதித்து இருப்பதைப் பார்க்கிறபோது, இந்தச் சத்துணவுச் கூடங்கள் ஒழுங்காக நடைபெறுமா என்ற சந்தேகம் எங்களுக்கு வருகிறது.

மேலும் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சப்பளம் 150 ரூபாய்தான். இப்படிக் கொடுக்கக்கூடிய அந்த 150 ருபாய் சம்பளம் கட்டுப்படியாகுமா என்ற கேள்வியை அவர்கள் கேட்கிறார்கள். அதேபோல் இந்த பாலர்பள்ளிகளில் இருக்கின்ற ஆயாக்கள் குடும்ப நல திட்டத்திற்கு ஆட்கள் கிடிக்க மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் செலவாகிறது என்று சொல்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது, இந்தச் சத்துணவு என்பது ஒரு பெரிய சுமையாக இருக்கிறது என்பதை நான் சொலவிக் கொள்ள விரும்புகிறேன். மதிய உணவை நான் எதிர்க்கவில்லை. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கூட........

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதற்குத் தான் நேற்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டத்தின் மேலே அக்கறை இல்லாமல், ஆர்வம் இல்லாமல், இந்தத் திட்டத்தையே சுமை என்று சொல்லக்கூடியவர்கள், அதிலே சோதனை போட்டு என்ன பயன் வரும் என்று அதைத்தான் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது வேறு. இந்தத் திட்டத்தைக் குறை சொல்வதற்கு என்ன காரணம் என்றால், அரசாங்கப் பணம், மக்களுடைய வரிப் பணம் இப்படி வீணாகப் போய் விடக்கூடாது என்பதற்காகத்தான். திட்டத்தைப் பற்றி குறை சொல்ல உரிமையிருக்கிறது. அதே நேரத்தில் திட்டத்தைப்பற்றி, அங்கே என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது என்பதை நான் சொல்லவிரும்புகிறேன். நீங்கள் சோதனை



போடுவதை தடை செய்தால், இன்னும் பல தப்புகள் அங்கே நடக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். இந்தத் திட்டத்தினுடைய பலன் மக்களுக்குச் சென்று அடையாமல் போய்விடும் என்றுதான் சொல்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடத்தை சோதனை போடவேண்டுமே தவிர, சத்துணவுத் திட்டத்தைச் சோதனை போடுகிற அளவிற்கு நிலைமை வந்துவிடக் கூடாது.

திரு. மு. ராமநாதன் : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு விளக்கம் சொல்கிறபோது, சத்துணவுத் திட்டத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் சோதனை போட்டு என்ன செய்யப் போகிறார்கள் என்ற கருத்துப்பட சொன்னார்கள்........

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாற்றுத்தலைவர் அவர்களே, என்ன செய்யப் போகிறார்கள் என்று சொல்லவில்லை, இந்தத் திட்டத்திற்கு குந்தகம் ஏற்பட்டு விடக்கூடாது. அதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம், அப்படி சோதனை போட்ட நிலைமை திருப்திகரமாக இல்லை என்று நாகரிகமான சொற்களிலே, இருக்கிற நிலைமையைச் சொன்னார்கள்.

திரு. மு. ராமநாதன் : மாற்றுத் தலைவர் அவர்களே, தவறான முன்மாதிரி வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த விளக்கம். தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடம் கேட்கவிரும்புவது, 'ஆண்டவன் இல்லை என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள், அதனாலே ஆலயத்திலே கொள்ளை போவதைப் பற்றி யாருமே பேசக்கூடாது என்று இருக்கிறதா,' என்பதை அமைச்சர் அவர்கள் மூலம் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாற்றுத் தலைவர் அவர்களே, அப்படி கொள்ளை போவதைத் தடுப்பதற்கு உரிய நிர்வாக அமைப்புகள் இருக்கின்றன. அது சரியாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. ஆனால் நேற்றைய தினம் நண்பர் ரகுமான்கான் அவர்கள் சொன்னதைப் போல, எங்களுக்கு மடியிலே கனம் இல்லை வழியிலே பயம் இல்லை. அதே நேரத்திலே மடியிலே பூனையை வைத்துக்கொண்டு சகுனம் பார்ப்பது சரியில்லை. அதுதான் எங்களுக்கு உள்ள நிலைமை

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

[1986 ஏப்ரல் 17

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களுடைய தலைவர்கள், நகராட்சிகளினுடைய தலைவர்கள், இவர்கள் எல்லாம் மக்களால் நேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், மடியிலே இருக்கக்கூடிய அபாயகரமான பூனைகள் என்று அமைச்சர் அவர்கள் சொல்வது மக்களுடைய பிரதிநிதிகளை கேவலப்படுத்துவதாகும். இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் சத்துணவுத் திட்டம் தவறானது என்ற கருத்தை நாங்கள் என்றைக்குமே சொல்லவில்லை. ஆனால் அந்தத் திட்டத்தினுடைய குறைகளைத்தான் நாங்கள் இந்த மன்றத்திலே பல தட்வைகள் சொல்லியிருக்கிறோம். மறைந்து போன பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் இந்தத் திட்டத்தை மறுத்து, சிவசங்கரி பேட்டி எல்லாம் வந்திருக்கிறது. நான் அந்தப் பிரச்னைக்குள்ளே போகவில்லை ஆனால் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த ராமநாதன் அவர்கள் சொன்னதைப் போன்று, நாங்கள் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்கிறோமா இல்லையா என்பது வேறு விவகாரம். ஏற்றுக்கொள்கிறோம். தப்பைத்தான் கண்டிக்கிறோம்.

ஆனால் அதற்காக பிரதிநிகள் எல்லாம் பூனைகள், நாங்கள் சகுனம் பார்ப்பதற்கு, ஊழல் செய்வவதற்கு அவர்கள் தடையாக இருக்கிறார்கள் என்று பொருள்பட சொன்னால், ஊழல் செய்கின்ற காரியம், சகுனம் இருந்தால் அவர்கள் பூனைகள்தான் : அதைத் தடுக்கிற பூனைகள்தான்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஊழலை யார் ஆரம்பித்து வைத்தார்கள் என்பதைப்பற்றி நேற்றைய தினம் அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்து இருக்கிறார்கள். நான் அதற்குள்ளே போகவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அத்தனை பேரையும் குறிப்பிடவில்லை. நான் பூனைகளை மட்டும்தான் குறிப்பிடுகிறேன்.

திரு. எ. எஸ் ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சத்துணவு திட்டத்துக்கு நாங்கள் எதிரிகள் அல்ல. பெருந்தலைவர் காமராஜர் காலத்தில் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் போட்டது ஏழைகளுக்கு ; ஏழைகள் என்றால் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள். அவர்களைப்பற்றிய கணக்கை நேற்று கொடுத்தீர்கள். வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு உணவு கொடுப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. அப்படி கணக்கெடுத்தால் மாவட்டத்துக்கு ஒரு இலட்சம் குழந்தைகள் கூட வரமாட்டார்கள். இதைத்தான் நான் ஏற்கனவே நிதித்துறை பட்ஜெட்டிலே பேசும்போதும் சொல்லியிருக்கிறேன். ஒரு மாநிலத்துக்கு 20 இலட்சம்



1986 ஏப்ரல் 17] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

பேர்களுக்கு உணவு போட்டால் போதும். 84 இலட்சம் பேர்களுக்கு உணவு போடுவதாக எழுதப்படுகிறது. 84 இலட்சம் குழந்தைகளில் பணக்காரவீட்டு பிள்ளைகளும் வசதிபடைத்த வீட்டு பிள்ளைகளும் சாப்பிடுகிறார்களா என்று நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். 20 இலட்சம் குழந்தைகளுக்கு போடுவீர்கள் என்று சொன்னால் செலவழிக்கக்கூடிய 200 கோடி ரூபாயிலே, 150 கோடி, அல்லது 125 கோடி ரூபாய் மிச்சப்படும். அதை வேறு நிவாரண திட்டங்களுக்கு நீங்கள் பயன்படுத்தலாம் என்று தான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதைப் போல சீருடைகள் . . . . (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. கெ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, இப்போது நடைபெற்றுக் கொண்டிருப்பது சத்துணவுத் திட்டம். பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே நடைபெற்றது மதிய உணவுத் திடடம். சத்துணவுத் திட்டம் என்பதிலே, குழந்தைகளுடைய வளர்ச்சிக்கு, மூளை வளர்ச்சி உட்பட அத்தனை வளர்ச்சிக்கும் தேவையான சத்துக்கள் அடங்கியப் பொருட்கள் இருக்கவேண்டுமென்கிற கருத்திலேதான் இந்தத் திட்டம் நடைபெறுகிறது. பணக்காரவீட்டுப் பிள்ளைகளுக்கும். சத்துணவு கிடைப்பதில்லை ; வீட்டிலேயும் கிடைப்பதில்லை. இன்னும் சொல்லப் போனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் கிடைப்பதில்லை. மந்திரியாக இருக்கும் எனக்கும் கிடைப்பதில்லை. இந்த சத்து என்று அளந்து சாப்பிடுகிற ஒரு வாய்ப்பு இன்றைக்கு இந்தச் சத்துணவுத் திட்டத்திலே இருக்கிற குழந்தைகளுக்குத்தான் இருக்கிறதே, தவிர பணக்காரர்களுக்கும் இல்லை, வசதி படைத்தவர்களுக்கும் இல்லை. பதவி உயர்ந்தவர்களுக்கும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த சத்துணவுத் திட்டம் என்பது ஏழைக் குழந்தைகளுக்குப் பொருந்துவதைப்போல பணக்காரக் குழந்தைகளுக்கும் பொருந்தக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்ற கழக உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் தங்களுக்கு சத்துணவுத் திட்டத்திலே நம்பிக்கை இருக்கிறது என்று சொன்னார்கள். நேற்றே சொல்லியிருக்கலாம் என்று இருந்தேன். நேரம் போதாத காரணத்தால் சொல்லவில்லை. அவர்களுடைய கட்சியினுடைய தலைவர் அவர்கள், இந்தச் சத்துணவுத் திட்டம் அமுலுக்கு வந்தபோது எழுதினார்கள். எம். ஜி. ஆர்.ருக்கு ஏற்பது இகழ்ச்சி என்று ஒளவை எழுதியிருக்கின்ற பாட்டு தெரியாது. தமிழ்நாட்டு பிள்ளைகளை பிச்சைக்காரர்களாக ஆக்கிவிட்டார்

ஔவை பற்றி இவருக்கு எப்படித் தெரியும், என்று எழுதினார்கள். அப்படி எழுதியது உண்மைதானா? அப்படி எழுதியிருக்கும்போது, சத்துணவுத் திட்டத்தில் நம்பிக்கை இருக்கிறது என்று சொல்வது எப்படிப் பொருந்தும் என்று எனக்குப் புரியவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு எங்கள் கட்சியின் நிலையை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்த சத்துணவுத் திட்டம் பற்றி எங்களுக்கு அடிப்படைக் கொள்கை ஒன்று இருக்கிறது. இந்த சத்துணவு வழங்குவதற்கு பதிலாக ஒவ்வொருவரும் தன்னிறைவு பெருகின்ற விதத்தில் அவர்களுக்கு தொழிற்சாலையிலே வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்து தன்னிறைவு பெற வைக்க வேண்டுமென்ற ஒரு கருத்து.

இரண்டாவது, நீங்கள் சத்துணவுத் திட்டத்தின் மூலம் ஏழை எளிய பிள்ளைகளுக்கு சாப்பாடு போடுகிற ஒரு நிலை ஏற்படுகிறபோது நாங்கள் அவர்களுக்கு எல்லாம் விரோதிகளாக இருக்கிறோம் என்கிற கருத்து ஏற்பட்டு விடக்கூடாது என்கிற காரணத்தாலே, அந்த அளவிற்காகவாவது நீங்கள் அதைச் செய்கிறீர்கள் என்று சொன்னால் அந்த சத்துணவு வழங்குவதற்கு பதிலாக அதற்கானத் தொகையை அவர்களுடைய பெற்றோர்களிடத்தில் கொடுத்து விடலாம் என்று எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் இந்த அவையிலே குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சத்துணவுத் திட்டத்திற்கு விரோதிகள் என்று தேனியிலே, அப்போது பெரியகுளம் நாடாளுமன்ற தேர்தலுக்கு பிரச்சாரம் நடை பெற்றுக் கொண்டிருந்த நேரத்திலே இதே அவையிலே நான் பேசியிருக்கிறேன், இந்தச் சத்துணவுத் திட்டத்திற்கு நாங்கள் விரோதிகள் அல்ல, ஆனால் இந்தச் சகதுணவுத் திட்டம் இன்றைக்கு குறைபாடுகளையுடையதாகத் இருக்கிறது, அதனுடைய பயன் போய் சேரவில்லை, சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையிலும், கொள்ளை அடிக்கப்படுகிறது, லஞ்ச லாவண்யத்திற்கு வழி வகுக்கிறது என்ற கருத்தைத்தான் சொன்னோம். அடிப்படைக் கொள்கை, இந்த சத்துணவுத் திட்டம் ஒவ்வொருவரும் உணவு பெறுகிற திட்டமாக இருப்பதால், வரவேற்கிறோம் ; அரசாங்கம் கொண்டு வந்து விட்டதற்குப் பிறகு அது சரியாக இருக்க வேண்டும் என்பது தான் எங்களுடைய கொள்கை.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெரிந்து கொள்ள விரும்புவது, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. கருணாநிதி



அவர்கள் முரசொலி பத்திரிகையில் கடிதம் எழுதியிருந்தார். அதற்கு நான் பதில் கடிதத்தை அண்ணா பத்திரிகையில் எழுதியிருந்தேன். தமிழ்நாட்டுப் பிள்ளைகளை எம்.ஜி. ஆர். பிச்சைக்காரர்களாக ஆக்கி தட்டை ஏந்தச் செய்து பிச்சைக்காரர்களைப் போல் பள்ளிக் கூடங்களில் வரிசையாக நிற்க வைத்து விட்டார். ஏற்பது இகழ்ச்சி என்று ஔவை சொன்னார். இது எம்.ஜி.ஆர்.-க்கு எப்படி தெரியும், ஔவை தமிழகத்து தமிழ் தாய் அல்லவா எழுதியிருந்தார்கள். நான் அதனால் தான் கேட்கிறேன். சத்துணவுத் திட்டத்தை ஒரு பிச்சைக்காரத் திட்டம் என்று சொன்னவர்களுக்கு இதில் எப்படி நம்பிக்கை வந்தது என்று எனக்குப் புரியவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன், இங்கே இருக்கக் கூடிய இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் உட்பட, நாங்கள் உட்பட, நம்முடைய அருமைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் உட்பட இந்த அடிப்படைக் கொள்கையைப் பொறுத்த வரையில், சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், அடிப்படைக் கொள்கை என்ன என்று கேட்டால், நான் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன், சத்துணவுத் திட்டம் போடுவதற்குப் பதிலாக ஒவ்வொருவரும் தன்னிறைவு பெறும் வகையில் பொருளாதாரத்தில் வேலை வாய்ப்பு உள்ளவர்களாக ஆக்கி பெற்றோர்களே சத்துணவு போடுகின்ற நிலையை உருவாக்க வேண்டும் என்பது பொது கொள்கை. ஆனால் அந்தத் திட்டத்தை அறிவித்ததற்குப் பிறகு நாங்கள் சொன்னால் எந்த அடிப்படையில் சொல்கிறோம் என்று சொன்னால் இந்த தமிழகத்துப் பிள்ளைகளை எல்லாம் பிச்சைக்கார பிள்ளைகளாக போகின்ற நிலைமையை ஆக்காமல் நாங்கள் சொல்லுகின்ற திட்டத்தை பரிசீலனைச் செய்யுங்கள் என்று தான் வாதம் செய்தோம். இப்படி வாதம் செய்வதாலே பிள்ளைகளுக்கு கருணாநிதி சத்துணவு போடுவதை எதிர்க்கிறார் என்று பிரச்சாரம் வந்தபோது தேனி கூட்டத்திலும் இதே சட்டசபையிலும் நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். தேனி கூட்டத்தில் எங்கள் தலைவர் அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆக சத்துணவுத் திட்டத்தினுடைய நோக்கம் போய் சேரவில்லை, அதற்கு நாம் ஆலோசனை சொல்லுகிறோம் என்று தான் இங்கே தொகையை குறிப்பிட்டுச் சொன்னோம். சத்துணவுக்கு செலவாகின்ற தொகையை பெற்றோர்களிடம் கொடுத்து விடுங்கள் என்று சொன்னோம். அதையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கு பிறகு தான் இப்போதும் சொல்கிறோம். இதில் லஞ்ச லாவண்யம் இருக்கக் கூடாது என்பதைத் தான் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலவீனமான வாதத்திற்கு இங்கே பலம் உள்ள பல பேரை பக்கத் துணையாக அழைப்பது சரியல்ல. ஆக மதிய உணவுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டவர்கள், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தொடங்கிய அந்தத் திட்டத்தை ஒத்துக் கொண்டவர்கள், ஏழை எளியவர்களுக்கு அப்படி ஒரு உணவு போடப்படுவதை ஏற்றுக் கொண்டவர்கள்தான் அத்தனை பேரும். நாம் அதை விரிவாக்கம் செய்து இருக்கிறோம். அதை சத்துணவு என்ற பெயரால் வழங்கிக் கொண்டு இருக்கிறோம். தன்னிறைவு கொண்டு இருக்க வேண்டும், எல்லோரும் நிறைவோடு இருக்க வேண்டும், அவரவர்கள் குழந்தைகளை அவர்களே பேணிபாதுகாக்க வேண்டும் என்ற வகையில் பல முயற்சிகள் தனியாக நடைபெறுகின்றன. அது வேறு. ஆனால் பசியிலே துடிக்கின்ற இளம் குழந்தைகளுக்கு, உழைக்கிற வயது வராத குழந்தைகளுக்கு உடனடியாக நிவாரணம் கொடுக்கப்பட வேண்டுமே தவிர பசிக்கிறது என்று சொல்லுகிறபோது விதைக்கிறோம் என்று சொல்லுவதும், தீ பிடித்துக் கொண்டு இருக்கும்போது நான் தீயை அணைப்பதற்கு கிணற்றை தோண்டுகிறேன் என்று சொல்லுவதும் சரியல்ல. அந்த வகையில் உடனடியாக சமுதாயத்தின் தேவையை நிறைவேற்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். (கைத் தட்டல்).

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தைப் பற்றி அவருடைய தலைவர் சொன்னதாக தொழிற்சாலை வைக்கலாம் அல்லது குழந்தைகளுக்கு ஆகும் செலவை பெற்றோர்களிடம் நிவாரணத் தொகையாக பணமாக கொடுக்கலாம் என்று சொன்னார்கள். நான் தெரிந்து கொள்வதற்காக வேறு ஒன்றை மாற்றி கேட்கிறேன், கடந்த பொதுத் தேர்தலில் பேசும்போது நான் முதலமைச்சராக வந்தால்,— திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் பேசினார்கள்—எம். ஜி. ஆர்.-க்கு பிள்ளை குட்டி இல்லை எனக்கு பிள்ளை குட்டிகள் இருக்கின்றன, நான் முட்டையோடு சத்துணவு போடுவேன், வடை பாயசத்தோடு போடுவேன் என்று சொன்னார்கள். முட்டையோடு சத்துணவு போடுகிறேன் என்று சொல்கிறாரே-நான் கூட ஆச்சரியத்தோடு கூட்டங்களில் கேட்டது உண்டு—84 இலட்சம் குழந்தைகள் அன்றாடம் தமிழ் நாட்டில் சாப்பிடுகிறார்கள். அதற்கு 84 இலட்சம் முட்டைகள் வேண்டும். இந்த நாட்டில் சேவல் எல்லாம் சேர்ந்து முட்டை போட்டால் கூட 84 இலட்சம் முட்டை ஆகாது என்று கூட்டத்தில் அப்போது சொன்னது உண்டு. எனவே சத்துணவுத் திட்டத்தில் நம்பிக்கை இல்லை என்று சொன்னவர்கள், பிச்சைக்காரர்கள் திட்டம் என்று சொன்னவர்கள், நான் முதலமைச்சராக வந்தால் வடை பாயசத்தோடு போடு-



வேன் என்று சொன்னவர்கள், முட்டை போடுவேன் என்று சொன்னவர்களுக்கு இவ்வளவு குழப்பம் ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை. (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதத்தை இத்தோடு முடித்து விடலாம். It is not an allegation.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதே அவையில் பேசிய பேச்சு—அப்போது இவர் அமைச்சராக, உறுப்பினராகக் கூட இல்லை என்று நினைக்கிறேன்— சபைக் குறிப்பில் இருக்கிறது. நினைவு படுத்த விரும்புகிறேன். வேண்டுமானால் உங்களிடத்தில் நான் தருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான் கான் அவர்கள் பேசிய பேச்சை நான் மறுக்கவில்லை. நீங்கள் இதே அவையில் பேசியிருக்கிறீர்கள். உங்கள் கருத்தை எடுத்துக் கொள்ளுவதா ? உங்கள் தலைவர் கருத்தை எடுத்துக் கொள்ளுவதா அது, தான் தெரியவில்லை.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் இலங்கைப் பிரச்சினையில் ஒரே கருத்து தான். ஆனால் ராணுவத்தை அனுப்ப வேண்டும் என்பதில் அமைச்சரவையில் நம்முடைய முதலமைச்சருக்கு ஒரு கருத்தும், அமைச்சர் காளிமுத்துவிற்கு ஒரு கருத்தும் இருப்பது போல் எங்களுக்குக் கிடையாது. எங்களுக்கு ஒரே கருத்து தான்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** வாதத்தில் ஒழுங்காக இருக்க வேண்டும். நழுவி இலங்கைக்கு ஓடக் கூடாது. இப்போது கேட்டதற்கு பதில் சொல்லுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல விரும்புவது, உங்களைப் போல ஒரு பிரச்சினையில் இரண்டு கருத்து எங்களுக்குக் கிடையாது. இரட்டை நிலை எங்களுக்கு இல்லை. எங்களுடைய தலைவர் சொல்லியது, எங்கள் கட்சியின் கொள்கை எல்லாம் ஒன்று தான். நான் சத்துணவுத் திட்டத்தைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர்
அவர்களே, கல்வி மானியக் கோரிக்கை நடைபெற்றுக்
கொண்டிருக்கிறது. ஆகவே, சத்துணவைப் பற்றி அதிகமாகப்
பேசினால், மாலை 4 மணிக்கு மறுபடியும் வரவேண்டி இருக்கும்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, தமிழ்
நாட்டின் நிதிநிலையில் மிகப் பெரிய அளவுக்கு பணம் ஒதுக்கப்
படுகிறது கல்விக்கு. ஏறக்குறைய 500 கோடிக்கும் அதிகமாக
ஒதுக்கப்படுகிறது. ஆனால், அது இங்கே மிகப் பின் தங்கிய
நிலைக்கு தள்ளப்பட்டு விடுமோ—ஏனென்றால், சாப்பாட்டி
லேயே நம்முடைய நேரம் போய்விடுமோ—என்ற கவலை இருப்ப
தால், நம்முடைய சித்தன் அவர்கள் சொல்வது போல, தனியாக,
இதை ஒரு அரை மணி நேர விவாதமாக வைத்தால், அது
நன்றாக இருக்கும். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் அந்தப்
பிரச்சினையை முடித்து விடுவோம். கல்வியைப் பற்றிப் பேச
லாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய தலைவர்
அவர்களே, சத்துணவைப் பற்றி ஒரு கருத்து.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர்
சொன்னார்கள். அதற்கு நீங்களும் சொன்னீர்கள். ஒரு
விவாதமாக வைத்துக்கொண்டோம். (குறுக்கீடு) இதிலே குற்
றச்சாட்டோ, குறைபாடோ இல்லை. (குறுக்கீடு).

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய தலைவர்
அவர்களே, கடைசியாக நான் சொல்ல விரும்புவது, இதற்கு
மேல் அவர்கள் பேசினால் நான் பேசக் கூடாது என்ற உத்தரவை
நான் ஏற்றுக் கௌர்ள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தை பொறுத்த வரையில், நம்முடைய
மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் எடுத்துச்
சொல்லியது போல், ''நீங்கள் பேசியிருக்கிறீர்கள்'' என்று அவர்
கள் சொன்னார்கள். நான் தெளிவாகவே மீண்டும் இரண்டு
நிமிடத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்தச் சத்துணவுத்
திட்டத்தைப் பற்றி பேசுகிற போது, எங்கள் கட்சியின் சார்பாக
இங்கே சொல்லிய கருத்தே, நம்முடைய நீதிக் கட்சி வரலாற்
றைக் கொண்டு வந்த, தியாகராயர் காலத்திலேயே சத்துணவுத்
திட்டம் இருந்து பள்ளிக்கூடங்களிலே போடப்பட்டிருக்கின்றது.



காமராஜர் காலத்திலே போடப்பட்டிருக்கிறது. எனவே
இந்தத் திட்டம், ''எக்ஸ்டன்ஷனே'' தவிர, மற்றப்படி புதிய
கண்டுபிடிப்பு மாதிரி பேச வேண்டாம் : மார்கோனி ரேடியோ
வைக் கண்டுபிடித்ததைப் போல என்று சொல்ல வேண்டாம்
என்று சொல்லிவிட்டுச் சொன்னேன்—இந்தச் சத்துணவுத் திட்
டம் அல்ல. இலவச இட்லித் திட்டத்தைக் கொண்டு வந்தாலும்
கூட, நாங்கள் ஆதரிப்பதற்குத் தயாராக இருக்கிறோம். அடிப்
படைக் கொள்கை வேறு. ஆனால், கொண்டு வந்திருக்கிறீர்கள்
அது சீராகவும், சிறப்பாகவும் இருக்க வேண்டும். அது ஊழலின்
ஊற்றுக் கண்ணாக இருக்கக் கூடாது என்பது தான் எங்கள்
கொள்கை.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொல்லும்
போது, தவறு நடந்தால், பூனைகளாக இருந்து போய் நாங்கள்
தடுப்போம் என்றார். எந்த நல்ல குடும்பப் பெண்ணும் குழந்தை
களுக்குத் தயார் செய்து வைத்து இருக்கிற உணவுக்குப் பக்கத்தில்
பூனைகளை அனுமதிக்க மாட்டார்கள். பூனையை விரட்டுவார்
களே தவிர, பூனையைக் கொண்டு போய், பாலுக்கு பக்கத்திலே
விட மாட்டார்கள்.

**டாக்டர் கே. சமரசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்
கள் சத்துணவுத் திட்டத்தைப் பற்றி பல கருத்துக்களைச்
சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்
தலை வாழை இலையைக் கொண்டு வந்து, முட்டையை வைத்து
சோறு போடுகிறேன் என்று எல்லாம் சொன்னார்கள். அது
வேறு விஷயம், ஆயிரம் இருக்கட்டும். இங்கே ஒரு விஷயத்தை
அவர் சொல்கிற போது சொன்னார். சத்துணவுத் திட்டத்தைக்
கண்காணிப்பதற்கு சகல கட்சிகளையும் கொண்ட ஒரு கண்
காணிப்புக் குழு அங்கே இருக்கிறது. அது பொது மக்கள் குழு.
மக்கள் குழுவை அவர் வெறுக்கிறாரா, அல்லது ஆதரிக்கிறாரா ?
சத்துணவுத் திட்டம் ஒரு பொதுவான திட்டம் என்பதாலும்,
அரசாங்கத் திட்டம் என்றா ..........
லும்

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, மாண்பு
மிகு கல்வித்துறை அமைச்சர் அவர்கள் சொல்லும்போது
பணக்காரர்கள் சாப்பிடும்படியாக இந்தச் சத்துணவுத் திட்டத்
தைக் கொடுக்கிறோம் என்றார்கள். பல இடங்களிலே நானே
நேரில் சென்று பார்த்திருக்கிறேன். ................

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்
களே, தவறான கருத்து வருகிற வகையில் பேசுகிறார். பணக்
காரர்களும் அதிலே பயன் பெறலாம் என்று சொன்னார்களே
தவிர, பணக்காரர்களுக்காக இந்தத் திட்டம் அல்ல. முழுக்க
முழுக்க, ஏழைகளுக்காகத் தான். அதிலே பணக்காரர்களும்
இந்த சத்துணவைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பது
தான் அவருடைய கருத்து.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே
நானும் அதைத் தான் சொல்கிறேன். பணக்காரர்களும் உப
யோகப்படுவதாகச் சொன்னார். பல சத்துணவுக் கூடங்
களுக்கு நானே நேரில் சென்று பார்த்து இருக்கிறேன். மாண்புமிகு
அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் ஆண்டிப்பட்டி தொகு
திக்குச் சென்று பார்த்தார். அது குழந்தைகள் சாப்பிடுகிற
அளவில் சத்து இல்லை என்பதை தெரிவித்துக் கொள்வதற்காகச்
சொன்னேன். சத்துணவுத் திட்டம் சரியாகச் செயல்படவில்லை
என்பது தான் என் கருத்து.

அதே போல் சீருடைகள் கொடுக்கிறார்கள். அதைப் பற்றி
வரவேற்கிறோம். அதை காலா காலத்தில், சீருடைகளோ,
புத்தகங்களோ, கொடுக்கப்படவில்லை. சீருடைகள் தைத்த
தையல்காரர்களுக்கு கூலி போய்ச் சேரவில்லை. ஒரு மாதத்
திற்கு முன்பு என்று அறிகிறேன். அதைக் கூட்டுறவு முறையில்
கொடுத்து இருக்கிறார். அந்த ஊழியர்களுக்கு கூலி வந்து
சேரவில்லை. அந்தத் துணிகள் எல்லாம் வெளியில் கடைகளில்
விற்பதாகப் பத்திரிகையில் செய்தி வருகிறது. எனவே, அத
னைச் சரி பார்த்து, எந்தவிதமான தவறும் நடக்காத வகையில்
இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தான் என்
கோரிக்கை.

(பிற்பகல் 12-10)

சட்டப் படிப்பு படிக்கும் மாணவர்கள் 3,000 பேர் தான்
மாநிலத்தில் இருக்கிறார்கள். அந்தக் கல்லூரிகளை அதிகப்
படுத்தலாமோ என்ற நினைவு எனக்கு வருகிறது: அதற்கு
வாய்ப்பிருந்தால் அதிகப்படுத்துங்கள். சட்டக் கல்வி
பயில்கின்ற மாணவர்களுக்கு ஒரு வேளை தான் படிப்பு
சொல்லிக் கொடுக்கிறார்கள் என்று தெரிகிறது. அதனால்
மாணவர்கள் கட்டுப்பாடு விட்டுப்போய்விடுமோ கல்வியின் தரம்
குறைந்து போய்விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. ஆகவே
இரண்டு வேளைகளிலும் அவர்களுக்கு சட்டக் கல்வி போதிக்க
வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மற்ற மாநிலங்களிலே தமிழ் படிப்பதற்கு பல்கலைக் கழகங்
களிலே ஏற்பாடு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள், நான்
பாராட்டுகிறேன். ஆந்திராவிலும், அரித்துவாரத்திலும் தான்





நீங்கள் அந்த உதவியைக் கொடுத்திருக்கிறீர்கள். இந்தியா
பூராவும் உள்ள அனைத்து மாநிலங்களிலும் தமிழ் படிப்பதற்கான
வழி வகைகளை ஏற்படுத்தி கல்வி அமைச்சர் அவர்கள் அங்கெல்
லாம் சென்று வேண்டிய மானியங்களைக் கொடுத்து தமிழ்
கற்பிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விழாக்கள் நடத்துகிறீர்கள், விருது கொடுக்கிறீர்கள்.
அதை எல்லாம் பாராட்டுவதோடு அதை எல்லாம் முறையாக
நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆசிரியர்கள் இடமாற்றுப் பிரச்சினை.
அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் அரசியல்
புகுந்து விடுகிறது, அதனால் தான் சிரமம் ஏற்படுகிறது. ஏதாவது
காரணம் காட்டி இவர் நமக்குச் சரியில்லையா அந்த இடத்தை
விட்டு மாற்றிப் போடு. இவர் எதிர்க்கட்சிக்கு வேலை பார்த்தாரா
அந்த ஆளைத் தூக்கி தண்ணீர் இல்லாத இடத்திற்குப் போடு
என்று செய்து கொண்டு இருக்கிறார்கள்.

நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். விருதுநகர் ஒன்றி
யத்திலே நடுவப்பட்டி என்ற ஒரு ஊர் இருக்கிறது. கணவனும்
மனைவியும் வேலை பார்க்கிறார்கள். கணவனை ஒரு இடத்
திற்கும் மனைவியை ஒரு இடத்திற்கும் மாற்றி விட்டார்கள்.
கணவன் விபத்திலே காலை இழந்து கட்டைக்கால் பொருத்தி
யவர். நான் என்ன சொல்கிறேன் என்றால் மனிதாபிமானத்
தோடு அணுகவேண்டும். அங்கே மாற்றம் செய்யப்பட்டிருப்ப
வர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் என்று புகார் வந்திருக்கிறது.
அதனால் தான் சொல்கிறேன், இதையெல்லாம் பார்த்து மாற்
றம் செய்யவேண்டும்.

சேலம் ஜில்லாவிலே சேந்தமங்கலம் என்ற ஊரிலே திரு.
எஸ். குப்புசாமி பிள்ளை என்ற ஒரு ரிடையர்டு டீச்சர் இருக்
கிறார். அவர் 1979ஆம் ஆண்டிலிருந்து 7 ஆண்டுகளாக தன்
னுடைய மகனையும் மகளையும் மருமகளையும் பள்ளி ஆசிரி
யர்களாக இருந்தும் கூட ஒரு சேரப் பார்க்காமல் திண்டாடிக்
கொண்டிருக்கிறார். சென்ற வருடமே நான் அமைச்சரிடத்திலே
கொடுத்திருக்கிறேன். இன்னும் மாற்றல் உத்தரவு வராமல்
இருக்கிறது என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. கணவன்
மனைவியை ஒன்று சேர்த்து வைக்க வேண்டும் என்று சட்டமே
இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே சட்டப்படி
அதை மாற்றிக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்து பெரியார் மாவட்டத்திலே வெள்ளக் கோவில் யூனியனில் பள்ளிக்கூட நடத்தாட்டிகள் இருக்கிறார்கள். அவர் களுக்கு நவம்பர் மாதத்திலிருந்து சம்பளமே வரவில்லையாம். சென்ற ஒரு வருடமாகவே சரியாக சம்பளம் கொடுக்கவில்லை யாம். 1967ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் பணிபுரிகிறார்கள். இதையெல்லாம் முறையாகப் பார்த்து அவர்களுக்கு சம்பளம் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரே ஒரு வார்த்தை. எங்கள் காமராஜர் மாவட் டத்திலே எந்தக் கல்லூரியும் அரசுக் கல்லூரி இல்லை. அங்கே இருக்கிற கல்லூரிகள் வெள்ளிவிழாக் கொண்டாடிய கல்லூரிகள். சில வெள்ளி விழா கொண்டாட இருப்பவை. ஆனால் அவை இந்த அரசாலோ அல்லது இதற்கு முன்பு இருந்த எந்த அர சாலுமோ அமைக்கப்படவில்லை. அதைப்போலவே பள்ளி கள் வைர விழக் கொண்டாடிய பள்ளிகள், பவள விழாக் கொண் டாடிய பள்ளிகள், நூற்றாண்டு விழாக் கொண்டாடிய பள்ளி கள் என்ற முறையிலே இருக்கின்றன. அரசு இவைகளில் எதை யும் அமைக்கவில்லை. ஆகவே அரசு மருத்துவக் கல்லூரியை யும், எஞ்சினியரிங் கல்லூரியையும், சட்டக் கல்லூரியையும் அங்கே நிறுவவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெறுகின்ற கல்வி மானியக் கோரிக்கையின் மீது பேச நேரம் தந்தமைக்கு நன்றி கூறி என் கருத்தினைத் தொடங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலை வரின் அரசு பொறுப்பேற்ற காலத்திலே இருந்து அறிவியலிலும் தொழில் நுட்ப இயலிலும் கடும் விரைவான வளர்ச்சிகள் நடை பெறும் இக்காலத்தில் வளர்ச்சி பெற்ற நாடுகளின் மாணவர் களைப் போல, நாமும் முன்னேற வேண்டுமாயின், நமது மாணவ மாணவியர்கள் மொழிகளைக் கற்கச் செலவிடும் காலத்தைச் குறைத்துப் பாடங்களைக் கற்கச் செலவிடும் காலத்தை அதி கரிப்பதுதான் பொருத்தமானதாகும் எனும் கருத்தினை அடிப் படையாகக் கொண்டு செயல்பட்டு வருவது மாற்றாரும் போற் றத் தக்கதாகும்.

''இளமையில் கல்'' எனும் முது மொழிக்கிணங்க. புரட்சி தலைவரின் அரசு இளம் வயதிலேயே பள்ளி செல்லும் மனப் பாங்கை வளர்க்கவும், சிறுமியர், தம்பி தங்கைகளைக் கவனித் துக் கொள்ள வீட்டிலேயே நிறுத்தப்படுவதைத் தவிர்க்கவும் முன்வந்த தாயுள்ளம் கொண்ட இந்த அரசு ''இளஞ்சிறார் பள்ளி வகுப்பினை'' நடத்தி வருவதோடு, சத்துணவும் தந்து, இலவச சீருடையும் பாட நூல்களையும் வழங்கிவருவது பாரதியாரின் ''வயிற்றுக்குச் சோறிட வேண்டும், பின் வையகம் முழுதும் பயிற்றும் கல்வி புகன்றிட வேண்டும்'' என்னும் கருத்துக்கு செயல்வடிவம் தந்துள்ளமையை எவராலும் மறுக்கமுடியாது.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

1980 முதல் 1983 முடிய மூன்று ஆண்டுகளில் 30 கோடி செலவில் 4,500 ஊராட்சி, ஒன்றிய தொடக்கப் பள்ளிகளை அமைத்து தந்துள்ள இந்த அரசு, பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப, மிகக் குறைவான தொடக்கப் பள்ளிகளைக் கொண்டுள்ள நெல்லிக்குப்பம் தொகுதி அண்ணா கிராமம் கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு மேலும் பல தொடக்கப் பள்ளிகளை அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள் கிறேன்.

இன்றைய இளம் தலைமுறையினரும், எதிர்கால தமிழகத் தின் நிர்வாகிகளுமான மாணவச் செல்வங்களுக்கு அறிவுக் கண் திறக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கு, தொடக்கப்பள்ளி ஆசிரியர்களையும், ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக்குதல்; தமிழ் கற்றுத் தரும் ஆசிரியர்களின் திறன் வளர்க்க அஞ்சல் வழி, மற்றும் வானொலி பயிற்சி அளித்தல், ஆசிரியர்கள் குறை தீர்க்கும் நோக்குடன் ஆலோசனை குழுக்கள் அமைத்தல்; ஆசிரியர்களுக்கென வீட்டு வசதி வாரியம் அமைத்தல் ; இது போன்ற எண்ணற்ற சலுகைகளையும், ஊக்குவிக்கும் பொருட்டு விருதுகளையும் வழங்கியது புரட்சித் தலைவரின் பொற்கால அரசில் மட்டுமே, ஆசிரியர்களுக்கு வழங்கப் பட்டது என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாகக் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தமிழக அரசின் தீவிரக் கல்வி வளர்ச்சித் திட்டத்தின் பயனாக, தொடர்ந்து படிக்க முடியாமல் நின்று விடுவோர் விழுக்காடு 1977-78 இல் 40 விழுக்காடாக இருந்த நிலை தவிர்த்து, 1984-85இல் 23 விழுக்காடாகக் குறைந்துள்ளது. கல்வி நிலையில் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மலின் அரசு கண்டுள்ள மேம்பாட்டினை உணர்த்துகிறது.

தமிழகக் கல்வி நிலையினை உலக நாடுகளிடையே மேம் பட்டதாக, எழுச்சி மிக்கதாக, முதன்மை பெற்றதாக விளங்கிட வேண்டுமெனும் நோக்கில், ''எங்கும் தமிழ், எதிலும் தமிழ்'' என்ற இலக்கோடு அரசு நிர்வாகத்திலும், கல்வி, அறி வியல் துறைகளிலும் தமிழ் மொழியின் பயன்பாட்டினை முழு மையாக்க தமிழ் வளர்ச்சித் துறையினை நிறுவிய இவ்வரசு சங்கச் சான்றோர்களின் நினைவைப் போற்றும் வகையிலும், அவர்களின் பாடல்களும், அறிவுரைகளும் பொறித்து நினைவு கூரும் வகையிலும், ''நினைகல் நிறுவு திட்டம்'' அமைத்துள்ள இந்த அரசை நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

[திரு. துரை அன்பரசன்] [1986 ஏப்ரல் 17

தமிழாக்கம் தமிழுக்கு ஆக்கம் எனும் வகையில் தமிழ் வளர்ச்சிப் பணிக்காக ''மொழி பெயர்ப்புத் துறை''யை உருவாக்கியுள்ள இந்த அரசு, சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமையையும், திராவிட நாகரிகத்தின் ஊற்றுக் கண்ணாய் திகழும் மதுரை மாநகரில் 14, 15 ஏக்கர் நில ஒதுக்கீடு செய்து, உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவி சரித்திரப் பெருமை கண்ட இந்த அரசு, உலகப் பொதுமறையாம், திருக்குறளின் கருத்துக்களை மக்களிடமும், குறிப்பாக மாணவர்களிடம் பரப்ப திருக்குறள் நெறி பரப்பு மையத்தைத் தோற்றுவித்த இந்த அரசு, ஆதி திராவிடர்-பழங்குடியினர் கல்வி நிலையில் கற்றோரின் நிலை 1971 ஆம் ஆண்டில் இருந்ததைவிட 12 விழுக்காடு உயர்ந்துள்ள இந்நிலையில், தனிப் பள்ளிகளும், இலவசக் கல்வியும் தரும் இந்த அரசு, பள்ளி நேரம் முடிந்ததும் செயல்படும் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டத்தினை நெல்லிக்குப்பம் தொகுதி யிலே செயலாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நெல்லிக்குப்பம் தொகுதி மக்கள் தொகையில் பாதி அளவை உடைய இங்கு ஆதிதிராவிடர் மாணவர்களுக்கான தங்கும் விடுதி, வசதிகளற்ற ஒரே ஒரு விடுதி மட்டும் உள்ளதால், படிக்க வருவோரின் எண்ணிக்கையைக் குறைக்கிறது. இந்நிலை தவிர்க்க வசதிமிக்க விடுதிகளை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த விடுதி வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதைச் சொந்தக் கட்டிடத்திலே உருவாக்கினால் இன்னும் பல மாணவர்கள் தங்கிப் படிக்க வழிவகை ஏற்படும். அந்த நிலையை உருவாக்கித் தரவேண்டு மென்றும் இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லிக் குப்பத்தில் பழைய நிலையிலும், இடவசதி அற்றதுமான பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாற்றுக் கட்டிடம் அமைத்துத் தரவும், பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஒன்றினை அமைத்துத் தரவும் வேண்டுமென்று எனது வேண்டுகோளை முன் வைக்கிறேன். பெண்கள் மேல் நிலைக் கல்வி படிக்க வேண்டு மென்றால் நெல்லிக் குப்பத்தில் ஒரு பள்ளி இல்லை. அவர்கள் மேல் நிலைக் கல்வி படிக்க, வேண்டுமென்றால் 11 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள கடலூருக்குச் சென்றுதான் மேல்நிலைப் படிப்பு படிக்க முடியும். இந்த நிலையை மாற்ற நடப்பு ஆண்டிலேயாவது அல்லது வரும் ஆண்டிலேயாவது எங்களுக்கு பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஒன்றை நெல்லிக்குப்பம் நகரத்தில் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டு, இதைக் கவனத்தில் கொண்டு அவர்கள் செயல் பட வேண்டுமென்றும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

1975-76ஆம் ஆண்டில் 325 ஆக இருந்த பாலிடெக்னிக்குகளின் எண்ணிக்கை 1982-83 வரையில் 515 ஆக உயர்ந்துள்ளதில் மிகப் பெரும்பாலானவை தமிழ்நாட்டிலேயே இருக்கின்றன என்று பாராட்டப்படுகிறது.



1986 ஏப்ரல் 17] [திரு. துரை அன்பரசன்]

(பிற்பகல் 12-20)

1983-84-ல் நாட்டிலிருந்த 1,600 தொழிற் கல்வி கூடங்களில் பாதி அளவு, தொழிற் கல்வியில் முன் மாதிரியாக விளங்கும் தமிழகத்தில் மட்டுமே இருந்தன என்றும், மைய அரசால் கூறப்படுவதை, பாராட்டப்படுவதை எண்ணும்போதும், நேரே காணும் போதும் தமிழகம், புரட்சித் தலைவரின்—அண்ணாவின் அரசின் கல்வி நிலையில் எய்தியுள்ள, மேம்பாட்டிற்கு நிலைக் களனாக, சான்றாக அமைகிறது என்பதோடு,

'' அறம் கிடந்து பண்பாடும்,<br>
அன்பிருந்து சதிர் ஆடும்,<br>
திறங் கிடந்த நாகரிகம்,<br>
செய்து தந்த தமிழ்நாடு ''

எனும் பாரதிதாசனின் பாட்டினுக்கு உருவம் தந்து, உன்னத நிலையைக் காணுகின்ற, மக்களாட்சி தத்துவத்தின் மனித தெய்வம், புனித ஆட்சி காணும் புரட்சித் தலைவரின் அரசு அளித்துள்ள கல்வி மானியக் கோரிக்கையை வரவேற்று வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு கல்வி மானியத்திலே காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே பேசுவதற்கு வாய்ப்பினைத் தந்தமைக்கு நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்த போது தமிழகத்தின் மொத்த வருவாயில் 35 சத வீதம் கல்விக்காகச் செலவு செய்தார்கள். ஆனால், இன்றைய அரசு மொத்த வருமானத்திலே 22 சதவிகிதம்தான் கல்விக்குச் செலவு செய்கின்றது. வருகின்ற ஆண்டுகளிலே 30 சத வீதத்திற்கு மேல் கல்விக்குச் செலவு செய்யவேண்டுமென்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களையும் கல்வி அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்திந்திய அளவில் 91 சத விகிதம், 1 முதல் 5 வரையில் உள்ள வகுப்பிலே படிக்கின்ற மாணவர்களாகவும், அதிலே 98.66 சத விகிதம் தமிழகத்திலும், 6 முதல் 8 வயது வரை அனைத்து இந்திய அளவில் 51 சதவிகிதம், அதில் தமிழகத்தில் 72.18 சதவிகிதம் மாணவர்கள் படிப்பதாகவும் 6 வயது முதல் 14 வயதுவரை 2.97 இலட்சம் மாணவர்கள் படிக்கின்றார்கள் என்று நிதிநிலை அறிக்கையில் தெரிவித்து இருக்கிறார்கள். அதில் பிளஸ் 2-ல் படிக்கின்றவர்கள் 50 சத விகிதத்திற்கு மேல் பாஸ் செய்துவிட்டு வெளியேறுகின்றவர்களைக் கல்லூரிகளில் சேர்க்க இயலவில்லை என்ற காரணத்தாலே, பல கல்லூரிகளைப் புதிதாக தமிழக அரசு கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜே. முகம்மது கனி] [1986 ஏப்ரல் 17

பாரதிதாசன் பல்கலைக் கழகம் செயல்படுகின்ற திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங்களில் உள்ள மொத்தக் கல்லூரிகளின் எண்ணிக்கை 30. இதில் புதுக்கோட்டை மாவட்டத்திலே உள்ள கல்லூரிகள் இரண்டே இரண்டுதான். கல்வித் துறையைப் பொறுத்தவரை இந்த அரசு புதுக்கோட்டை மாவட்டத்தைப் புறக்கணிக்கிறது என்றே சொல்கிறேன்.

பணிக்காலத்திலே இறந்த ஆசிரியர் குடும்பங்களுக்குக் குடும்பப் பென்ஷன் இன்றுவரை வழங்கப்படவில்லை. உதாரணமாக, 1974 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம், இராயபுரம் உயர்நிலைப் பள்ளியில், ஆசிரியராக இருந்து மரணம் அடைந்த உத்தரியம் என்பவர் குடும்பத்திற்கு இன்று வரை குடும்பப் பென்ஷன் — 12 ஆண்டுகள் ஆகியும் — வழங்கப்படவில்லை. அதைப் போல இன்னும் பல இறந்த ஆசிரியர் குடும்பங்களுக்குக் குடும்பப் பென்ஷன் கொடுக்காத காரணத்தால், அந்தக் குடும்பங்கள் மிகவும் சிரமப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வளர்ந்து வரும் மாணவர் சமுதாயத்தின் தொழில் நுட்ப அறிவு வளர வேண்டும், இதற்கு அரசு இன்னும் பல தொழில் நுட்பக் கல்லூரிகளைத் துவங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை நகரம், கந்தர்வகோட்டை போன்ற பின் தங்கிய பகுதிகளில் தொழில் நுட்பக் கல்லூரி துவங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் பல ஆசிரியர் இடம் காலியாகவே இருக்கிறது. இன்றுவரை நிரப்பப்படவே இல்லை. உதாரணமாக, புதுக்கோட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த சொக்கநாதன்பட்டி என்ற ஊரில் உள்ள ஆரம்பப் பள்ளியிலே ஒரே ஒரு ஆசிரியர்தான் கிட்டத்தட்ட 300-க்கு மேற்பட்ட பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார். 1 முதல் 5 வரை உள்ள எல்லா வகுப்புகளுக்கும் இவர் மட்டும்தான் பாடம் நடத்த வேண்டும். இதுபோன்று உள்ள நிலைமைகளை மாற்றி, பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியர்களை உடனடியாக நியமனம் செய்ய வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரிக்கு 1986—87 ஆம் ஆண்டு எம். ஏ. பொருளாதாரமும், எம்.எஸ்ஸி. பௌதிகமும் போன்ற முதுகலைப்பட்டப் படிப்பு வகுப்புகள் வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். மேலும் அந்தக் கல்லூரிக்குக் கூடுதலாக வகுப்பறைகள் கட்டித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். புதுக்கோட்டையில் உள்ள அரசினர்



1986 ஏப்ரல் 17] [திரு. ஜே. முகம்மது கனி]

மகளிர் கலைக் கல்லூரிக்கு இந்த ஆண்டு பி.காம் வகுப்பு தருவதாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டைக்கு வரும்போது தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கு முதலிலே நன்றியினைச் சொல்லிக்கொள்கிறேன்.

மேலும், 1986—87 ஆம் ஆண்டு எம்.எஸ்ஸி. உயிரியலும் சேர்த்து வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

விளையாட்டுத் துறையை பொறுத்தவரை, விளையாட்டுக்கு ஒரு தனி அமைச்சரை நியமிக்கவேண்டுமென்று தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வரைக் கேட்டுக் கொள்கிறேன். அதைப் பொறுத்தவரையில் நல்லமுறையில் ஏற்று செயல்படுத்திக் கொண்டிருக்கிற செந்தில் ஆதித்தன் அவர்களையே விளையாட்டுத் துறை அமைச்சராக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டையில் உள்ள மாவட்ட விளையாட்டுத்திடலை 10 ஆண்டுகளுக்குமுன் அரசு கிட்டதட்ட 11 இலட்சம் ரூபாயில் கட்ட அனுமதி அளித்திருந்தது. ஆனால் இன்றுவரையில் அந்த ஸ்டேடியம் கட்டப்படவில்லை. அந்த விளையாட்டுத் திடலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் இருக்கின்ற பகுதியில், சுமார் 100 ஏக்கர் வெற்றிடம் இருக்கிறது, அங்கே அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாமன்னர் கலைக்கல்லூரியைப் பொறுத்தவரையில் அங்கே சுற்றுச் சுவர் இல்லை. விளையாட்டுத் திடலுக்கு தடுப்புச் சுவர் வேண்டுமென்று மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் பலமுறை மனு கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தடுப்புச் சுவரை இந்த ஆண்டிலாவது கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டையிலுள்ள மகளிர் கலைக்கல்லூரி விளையாட்டுத் திடலை நல்லமுறையில் செப்பனிட வேண்டும். நீண்டநாட்களாக செப்பனிடப்படாமல் இருப்பதால் அந்த மாணவிகள் விளையாட முடியவில்லை. மேலும் அங்கே படிக்கின்ற மாணவிகள் தரையிலே உட்கார்ந்து படித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதி செய்து கொடுக்க வேண்டும். இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னாலே இருந்த பலகை, சேர்கள்தான் இன்றுவரையில் வகுப்பறைகளில் இருக்கின்றன. ஆகவே, எல்லா பள்ளிகளுக்கும் மேசை, நாற்காலி, பலகைகள் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த அரசை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜே. முகம்மது கனி] [1986 ஏப்ரல் 17

புதுக்கோட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த ஆதனகோட்டை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டும். அந்த நடுநிலைப் பள்ளியைச் சுற்றி 17 கிராமங்களில் 13 தொடக்கப்பள்ளிகளும் 4 நடுத்தரப் பள்ளிகளும் இருக்கின்றன. அங்கே படிக்கின்றவர்கள் கிட்டதட்ட 10 கிலோ மீட்டர் தூரம் சென்று, வெளியூருக்குச் சென்று உயர் கல்வி படிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அந்த ஆதனகோட்டை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று புதுக்கோட்டை ஒன்றியத்தில் ஏமாத்தூர் நடுநிலைப் பள்ளியை இந்த அரசு உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டும். அந்தப் பள்ளியைச் சுற்றியிருக்கிற கிராமங்களில் பெரும்பாலும் ஆதிதிராவிட மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கிருந்து 15 கிலோமீட்டர் தூரம் சென்றுதான் உயர் கல்வி பெறவேண்டியிருக்கின்ற காரணத்தால், மாத்தூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று புதுக்கோட்டை ஒன்றியத்தில் பூத்தாமூர் செம்பாட்டூர் உயர்நிலைப் பள்ளிகளும், பல ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தே கேட்கப்பட்டும், இன்றுவரையில் போதுமான கட்டிட வசதி இல்லாமல் அங்கே படிக்கின்ற மாணவர்கள் எல்லாம் மரத்தடியிலே இருந்து படித்துக்கொண்டிருக்கிறார்கள். பழங்காலத்தில் குருகுல கல்வி என்று சொல்வார்களே, அதைப் போன்று மரத்தடியில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த பள்ளிகளுக்கு போதுமான கட்டிட வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டையிலுள்ள இராணியர் மகளிர் உயர்நிலைப் பள்ளியில் 3,000-க்கு மேற்பட்ட மாணவிகள் படிக்கின்றார்கள். அங்கே அவர்கள் நிற்பதற்குக்கூட இடம் இல்லை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அந்தப் பள்ளியின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்திற்கு வந்தபோது நானே அழைத்து சென்று காட்டினேன். நிற்பதற்குக் கூட இடவசதி இல்லாமல் இருக்கிற அந்தப் பள்ளிக்குப் போதுமான வகுப்பறைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று சந்தைப்பேட்டையில் இருக்கிற இன்னொரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியின் கட்டிடம் எந்த நேரத்தில் இடிந்து தலையில் விழுமோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. அந்த அளவுக்கு மிகவும் பழமையான கட்டிடமாக



1986 ஏப்ரல் 17] [திரு. ஜே. முகம்மது கனி]

இருக்கிறது. ஆகவே, அந்தக் கட்டிடத்தை இடித்துவிட்டு, அந்த இடத்தில் புதிதாக வேறு கட்டிடத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று புதுக்கோட்டை நகரில் நகராட்சிக்குச் சொந்தமான இராஜகோபால்புரம், பிள்ளை தண்ணீர் பந்தல், காமராஜர்புரம், திருகோகர்ணம், திருவப்பூர் போன்ற நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்ற வேண்டும். அதற்காக அரசுக்கு கட்ட வேண்டிய பணத்தை உடனடியாக அந்த நகராட்சி கட்ட வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று, தனியார் பள்ளியான குலபதி பாலையா நடுநிலைப் பள்ளியை உயர் நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டும். பிள்ளை தண்ணீர் பந்தல், இராஜகோபால்புரம் நகராட்சிப் பள்ளிகளில் தற்போது உடற்பயிற்சி ஆசிரியர்களும், தமிழ் ஆசிரியர்களும் இல்லை. அதைப் போன்று ஆசிரியர்கள் இல்லாத எல்லாப் பள்ளிகளுக்கும் உடனடியாக ஆசிரியர்களை நியமிக்க தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, புதுக்கோட்டை நகரில் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் பள்ளிக்கு ஒதுக்கியுள்ள இடத்தில் அல்லது மகளிர் கலைக் கல்லூரிக்கு அருகில் ஏற்கனவே பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் தமிழக அரசு பெண்கள் முன்மாதிரி உயர்நிலைப் பள்ளி ஒன்றைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று புதுக்கோட்டை நகரில் ஒரு பொறியியல் கல்லூரியை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற பகுதிகளில் மட்டுமே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கடைக்கண் பார்வை இருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தைப் போன்ற பிற்பட்ட மாவட்டங்களிலும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கடைக்கண் பார்வை மூலம் பல கல்வி நிறுவனங்களை தொடங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12—30)

தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. துரை கிருஷ்ண மூர்த்தி அவர்கள் ஒரு வேண்டுகோளை என் மூலமாக அமைச்சருக்குத் தெரியப்படுத்தச் சொல்லியிருக்கிறார்கள். தஞ்சை

மாவட்டத்தின் தலைநகரில் உள்ள அரசு விளையாட்டுத் திடல் மிகவும் பழுதடைந்து கிடக்கிறது. அது செப்பனிடப்படாத காரணத்தால் விளையாட்டுக்கு இடையூறாக இருக்கிறது. அதை செப்பனிட்டுத் தரவேண்டும் என்பதோடு அங்கே விளையாட வருகின்றவர்கள் தங்க ஹாஸ்டல் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து திருமயம் சட்டமன்ற உறுப்பினர் திரு. புஷ்பராசு அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் அரிமளம் ஒன்றியத்தில் கும்பங்குளம் தனியார் உயர்நிலைப் பள்ளியை அரசுப் பள்ளியாக ஆக்கி அங்கே எல்லாவிதமான வசதியும் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு நபர் கமிஷன் அறிக்கையை உடனடியாக அரசு அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். 1981 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பப் பள்ளியில் இன்னும் மாணவ, மாணவியர் அமர்வதற்கு நாற்காலி, மேஜை போன்றவை வழங்கப்படாமல் இருக்கிறது. அவற்றை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்திற்கு ஒரு மாத காலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதனை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே விரைவிலே மாவட்ட ஆட்சித் தலைவரை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

*திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, கல்வியமைச்சர் அவர்கள் இங்கே அமர்ந்து உறுப்பினர்கள் சொல்கிற கருத்துக்களைக் குறிப்பெடுத்துக் கொண்டிருப்பதையும், அதிகாரிகள் வரிசையில் அனைவரும் அமர்ந்திருப்பதையும் நான் பார்த்து பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இந்தப் பழக்கம் நல்லது என்று முதலில் பாராட்டுவதோடு ஒரு வேண்டுகோளையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்களின் பல்வேறு கருத்துக்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே விளக்கம் தருவார்கள். ஆனால்



எப்படி நாங்கள் கண்டதையும், கேட்டதையும் அதாவது அனைத்தையும் இங்கே வந்து சொல்லிவிட முடியாதோ அதே போல் நாங்கள் இங்கே எழுப்புகின்ற அத்தனை பிரச்சினைகளுக்கும் ஒரு குறிப்பிட்ட, குறைந்த காலத்தில் பதில் சொல்லி விடவும் முடியாது. என்னதான் மிகத் திறமையாகச் சொன்னாலும் கூட சில இடங்களில் காலத்தின் அருமையினால், காலம் கிட்டாததால் அவர்கள் அதை விட்டுவிடக் கூடும். ஆதலால் தான் நான் பணிவாக ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். இங்கே உறுப்பினர்கள் யார், யார் பேசுகிறார்கள் என்று பார்த்து, ஒரு இரண்டு மூன்று நாட்களுக்குள் அமைச்சர் பெருமகனார் அவர்கள் அதிகாரிகளையும் உடன் வைத்துக் கொண்டு பேசிய உறுப்பினர்களையும் அழைத்து வைத்துக் கொண்டு, நீங்கள், இதை, இதைப்பற்றிப் பேசினீர்கள். அதற்கு இது இது விளக்கம் என்று குறிப்பிட்டால் இங்கே விட்ட குறை தொட்ட குறை எல்லாம் நிறைவு செய்யப்படும், எங்களுக்கும் மனநிறைவு ஏற்படும். நாங்களும் இங்கே சொல்கிறபோது மிகுந்த எச்சரிக்கையோடு சொல்வோம். அதற்காக இப்போது எச்சரிக்கையோடு சொல்லவில்லை என்று பொருள் அல்ல. இருந்தாலும் கூட அங்கே பதர்கள் இருக்கக் கூடும். எனவே துருவித் துருவி ஆராய்ந்ததற்குப் பிறகு அதனை எடுத்து வந்து உங்கள் முன்னால் நாங்க சமர்ப்பிப்போம். எனவே இந்த வேண்டுகோளை இந்த அமைச்சருக்கு மட்டுமல்ல; எல்லா அமைச்சருக்கும் வைக்கிறோம். இதன் மூலம் அனைவரும் பின்பற்ற முடியுமேயானால், அதாவது முதலமைச்சரின் ஆணையின்படி பின்பற்ற முடியுமேயானால், நான் மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன் என்றும் அந்த முறை பயனுடையதாக இருக்கும் என்றும் நான் சொல்ல விரும்புகிறேன்.

கல்விக்காக 22 சதவீதம் அதாவது 100 பைசாவிலே 22 பைசா கல்விக்காக நாம் செலவிடுகிறோம். கல்விக்காக இவ்வளவு அதிகமாகச் செலவிடுவதோடு மட்டுமல்லாமல் அதிகமான அதிகாரிகளும் அதிலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டாலும் விளைவுகள் என்னவோ நாம் எதிர் பார்க்கிற அளவுக்கு, கல்வியமைச்சர் எதிர் பார்க்கிற அளவுக்கு இல்லை என்பதுதான் மனக்குறையாக இருக்கிறது.

கட்டடத்திலே வைக்கப்பட்டிருக்கிற ஜன்னலிலோ, கதவிலோ குறையைக் காண முடியாது. அதாவது வெளியே குறை தெரியாது. ஆனால் மழை பெய்து விட்டால் ஒழுகுகிறது; சூரியன் உச்சிக்கு வந்துவிட்டால் கொளுத்தும் வெய்யிலும் உள்ளே சேர்ந்து வருகிறது. இவைகளைப் பார்க்கிற போது இவற்றில் சிலவற்றை உங்களுடைய பார்வைக்குக் கொண்டு வர வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பீடிகையை நான் சொல்கிறேன். எவ்வளவுதான் சங்கீதம் படித்தாலும் அரங்

கேற்றம் செய்கின்ற நாளில்தான் சங்கீதம் எப்படி இருக்கிறது என்று பார்த்து முடிவு செய்வார்கள். அதைப்போலே ஒருவர் வாழ்க்கையிலே அவர் வாழ்ந்து காட்ட வேண்டும் என்பதற்காக எல்லாவிதமான வசதிகளையும் கொடுத்ததற்குப் பிறகு வாழ்க்கையின் அத்தியாயத்தை எழுதுவதற்காகத் தொடங்குகிற போது சில தேர்வுகளில் வெற்றி பெற்றாக வேண்டும் என்பது மட்டுமல்லாமல் வேலை வாய்ப்புக்கான தேர்விலும் வெற்றி பெற வேண்டும். அப்படி வேலை வாய்ப்புக்கான தேர்வில் வெற்றி பெறுவதற்காக என்று நுழைகிறபோது அவரிடத்தில் போடப்படுகிற வினாக்களுக்கு அவர் என்ன பதில் சொல்கிறார் என்பதில்தான் பட்டதாரியிலிருந்து சாதாரணமானவர்கள் வரை அத்தனை பேரும் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் எப்படி எப்படி பதில் சொல்கிறார்கள் என்பதைப் பார்க்கிற போது மிகவும் வேதனையாகத்தான் இருக்கிறது. தயவு செய்து அவைகளை நான் குறிப்பிடுவதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று நான கேட்டுக் கொள்கிறேன். தமிழ் லேங்வேஜ் மற்றும் லிட்டிரேச்சர்-தமிழ் மொழியும் இலக்கியமும் என்பதிலே தமிழ்நாடு தேர்வாணைக்குழு கேட்ட கேள்விகளுக்கு அதிலே வெற்றி பெறுவோம் என்று சொல்லி உள்ளே புகுந்து மார்பு நிமிர்த்தி நின்ற நம் தோழர்கள் எனன பதில் அளித்திருக்கிறார்கள் என்று சொன்னால், கவிஞர் தேசிக வினாயகம் பிள்ளையும், தமிழ்த் தென்றல் திரு.வி.க.வும் நாவல் ஆசிரியர்கள் என்று எழுதியிருக்கிறார்கள்.

20-ஆவது நூற்றாண்டிலே தலைசிறந்த இலக்கியத்தைப் பற்றி எழுது என்று சொல்கிறபோது, 20ஆவது நூற்றாண்டின் சிறந்த இலக்கியம் சிலப்பதிகாரமும், சீவக சிந்தாமணியும் என்று எழுதுகிறார்கள். கால்டுவெல் தஞ்சையில் ஐயர் ஜாதியில் பிறந்து கிறிஸ்துவர் ஆனார். ஆனாலும் விடாமல ஐயர் என்ற பட்டத்தைப் போட்டுக்கொண்டு கால்டுவெல் ஐயர் என்றே தன்னை அழைத்துக் கொண்டார். முஸ்லீம்களில் ஒருவர் எழுதிய தமிழ் நூல் துக்ளக். அது படமாகக் கூட வந்திருக்கிறது. அதைப் போலவே பொது அறிவிலே மிக அழகாக ஒருவர் எழுதியிருக்கிறார். ஜார்ஜ் பெர்னாட்ஷா மத்திய மந்திரி. அவர் ராஜ் நாராயணனுடைய நண்பர். இதற்கிடையிலே ஒருவர் இன்னும் மேலே சென்று இராமயணத்திற்கு உரைஎழுதியவர் பரிமேலழகர் தேம்பாவணி சிவபெருமானின் வரலாற்றைக் கூறுகிறது. உலக தமிழ் சங்கத்தை நாம் ஏற்படுத்துகிறபோது ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று போட்டு கீழே திருக்குறள் என்று சொல்லி ஓலைச் சுவடியையும் வைத்திருக்கிறோம். நமது சகோதரர் என்ன எழுதுகிறார் என்று சொன்னால், திருக்குறள் தமிழ் நூல் என்று நம்பப்படுகிறது. தமிழ் நூல் என்று நம்பப்படுவதாக எழுதுகிறார்.



நாலடி உயரம் உள்ளவரால் எழுதப்பட்ட காரணத்தால் அது நாலடியார் என்று பெயர் வந்தது. அந்தப் புலவரே உயரம் 4 அடி தான். எனவே அவர் எழுதியதால் நாலடியார் என்று பெயர் வந்ததாக எழுதுகிறார். ஷேக்ஸ்பியர் தமிழிலே பல நாடகங்களை இயற்றி உள்ளார். மறைமலை அடிகள், திரு.வி.க. பரிதிமாற்கலைஞர் இவர்கள் எல்லாம் தமிழுக்கு தொண்டாற்றிய ஐரோப்பியர்கள். (சிரிப்பு).

நீங்கள் வியப்பால் விரிந்த விழிகளோடு இருக்கிற நேரத்தில் இன்னொன்றைத் தூக்கிப்போடுகிறார்கள். இராமாயணத்தை இயற்றிய வியாசமுனிவரும் ஐரோப்பியரே. ஆனா இவர் இராமாயணத்தைப் பற்றி தவறாகச் சொல்லிவிட்டாரே என்று கவலைப்படுகிறபோது விளக்கமும் தருகிறார். கம்பர் தன் இராமாயணத்திலே கண்ணகி பற்றியும் இளங்கோவடிகள் பற்றியும் எழுதியிருக்கிறார் என்று. சரோஜினிநாயுடு என்பவர் யார் என்று கேட்டால் வொய்ப் ஆப் ஜி.டி. நாயுடு. கவிக்குயில் சரோஜினியைப் பற்றி இப்படி (சிரிப்பு) இது ஆங்கிலத்திலே வந்த விடை. தமிழிலே தன்னுடைய புலமையை காட்டி விட்டார் எனவே ஆங்கிலத்திற்கு வந்திருக்கிறார்.

அடுத்தாற் போல மிக முக்கியமான மொழி பெயர்ப்பிலே அவர்கள் என்ன எழுதியிருக்கிறார்கள. என்றால், கோவலனும் கண்ணகியும் பெண்கள். அவர்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்தார்கள். கோவலனும் கண்ணகியும் பெண்கள் என்றே எழுதி அவர்களுக்குக் கல்யாணத்தையும் முடித்து விட்டார்கள். அத்தோடு, இளங்கோ அடிகள் இளமைக் காலத்திலேயே இறந்து விட்டார். அவர் இராமாயணத்தை இயற்றிய கம்பருக்கு மகன். நெப்போலியன் இந்திய வரலாற்றிலே மிகச் சிறந்தவராக திகழ்ந்தவர். கோவலனும் மாதவியும் ஆற்றோரத்தில் அமர்ந்து பிடில் வாசித்தார்கள். இவைகளையெல்லாம் அவர்கள் எழுதியிருக்கிறார்கள்:

"The Vice President of India is Jayaprakash Narayanaswamy"
"Bhoodan Movement was started 2500 years ago by Gurunanak"

2500 வருடங்களுக்கு முன்பு குருநானக்காலே பூதான இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. கொலம்பஸ் டிஸ்கவர்ட் வாஸ்கோடகாமா; மேன் என்ற ஆங்கில வார்த்தைக்கு பன்மை என்ன என்று கேட்டால் மேன்ஸ் என்று சொல்லுகிறார்கள். இவைகளை இங்கே சுட்டிக் காட்டுவதற்கு வேறு ஒரு காரணமும் இல்லை, ஒரு ரூபாய்க்கு 22 பைசா வீதம் அவர்களுக்கு நாம் செலவழிக்கிறோம். ஆனால் விடைகள் இப்படி. அங்கே வந்திருப்பவர்கள் ஒன்றும் ஆரம்ப பாடசாலை மாணவர்கள் அன்று. அவர்கள்

வளர்ந்தவர்கள். இனிமேல் வாழ்க்கையை தொடங்கப்போகிறோம், எங்களுக்கு வாழ வசதி செய்து தாருங்கள் என்ற வேண்டுகோளோடு உளளே வருகின்றவர்கள், எந்த வினாவைத் தூக்கிப் போட்டாலும் எங்களிடம் விடை இருக்கிறது, எங்களை அப்படி தயாரித்து அனுப்பியிருக்கிறார்கள் அல்லது நாங்கள் தயாரித்துக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லுகின்றவர்கள் இப்படி எழுத என்ன காரணம் என்பதை தயவு செய்து சிந்திக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

(பிற்பகல் 12—40)

படிப்புச் சொல்லிக் கொடுக்கின்ற ஆசிரியர்களுக்கு மட்டும் அல்ல, இந்தப் பள்ளிக் கூடங்களை எல்லாம் நடத்திக் கொண்டிருக்கிற அரசாங்கத்தை மட்டும் அல்ல, இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிற நம்மைப் போன்றவர்கள் மட்டும் அல்ல, அந்தக் குழந்தையைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் மட்டும் அல்ல, எல்லோரையும் சேர்ந்த ஒரு பொதுப் பிரச்னையாகத்தான் இது இருக்கிறது என்று நான் சொல்ல விரும்புகிறேனே தவிர, யாரையும் குற்றம் சாட்டிப் பேசுவதற்காக நான் சொல்லவில்லை. அவர்களிடையே பல நல்ல குணங்களும் எல்லாமும் இருந்திருக்கின்றன. நல்ல விடைகளும் இருந்திருக்கின்றன. ஆனாலும் கூட கல்வியிலே எங்கோ ஒரு கோளாறு இருந்து கொண்டிருப்பதை திருத்தியாக வேண்டும். ஏனென்றால் வெளியிலே இருந்தும் அந்த அறிவுச் செல்வம் வரவேண்டும். உள்ளேயிருந்து வெளிப்பட வேண்டும். வெளியேயிருந்து வருகிற அறிவுச் செல்வம்தான் நீதிநூல்களை எல்லாம் எடுத்துச்சொல்லி, மற்றவர்களுடைய வரலாற்றை எல்லாம் எடுத்துச் சொல்லி, நம்முடைய நெஞ்சத்திலே புதுப்புது செய்திகளைத் தருவது, உதாரணமாகச் சொல்லப் போனால் குளத்திலேயிருந்து களிமண்ணை எடுத்து இங்கே கொண்டுவந்து, எதுவும் இல்லாத இடத்தில் அந்தக் களிமண்ணைக் கொண்டு வந்து போட்டு நன்றாக பிசைந்து கை வைத்து, கால் வைத்து, மூக்கு வைத்து, முகம் வைத்து, இடுப்பு வைத்து அப்படி ஒரு உருவத்தை செய்து விடுவது வெளியே இருந்து கொண்டு வருவதைப் போன்ற ஒரு நிலை. இங்கே இல்லாததை வெளியேயிருந்து கொண்டு வந்திருக்கிறோம். இதை விட்டு வாசலில் ஏற்கெனவே இருக்கிற ஒரு சதுரக் கல்லை சிற்றுளியால் தேவையில்லாத பகுதிகளை அடித்து அடித்துச் செதுக்கி விட்டால் தேவையான உருவம் வெளியே வந்துவிடுவதைப் போல, மனிதனுடைய இயற்கையாக இருக்கிற அஞ்ஞானத்தையும், அறியாமையையும் அடித்து செதுக்குகிற போது அறிவு ஒளிச்சுடர் அங்கே தோன்றுகிறது. அறிவு வெளியே இருந்து உள்ளே வர வேண்டும். உள்ளே மறைந்து கிடப்பது வெளியே வர வேண்டும். இந்த இரண்டையும் செய்து கொடுக்கிற ஒரு கல்வியை நாம் என்று போதிக்கத் துவங்குகிறோமோ அன்றைக்குத் தான், எந்தத் தேர்வாணைக் குழுவாக இருந்தாலும்



தேர்வாணைக் குழுவிலே மட்டுமல்ல, வாழ்க்கையிலே அவன் தேறுகிறானா என்பதைப் பார்ப்பதற்குக்கூட அவன் தன்னை தகுதியுள்ளவனாக ஆக்கிக் கொள்ள முடியும். முதலாவதாக, நாம் செய்ய வேண்டியது என்ன ? இதைச் சிந்தித்துப் பார்ப்பீர்களானால் தாய் மொழிக் கல்வி நமக்கு மிகத் தேவையாகும். அந்தத் தாய்மொழியை எல்லாம் கடந்து ஆங்கிலத்திற்குப் போய், அகில உலகத்திற்கும் போய் விடலாம் என்று இருக்கிற நேரத்திலேதான் கம்ப இராமாயணம் எழுதியது யார் என்று வருகிறது. ஆங்கிலத்தில் மேன் என்ற சொல்லுக்கு புளூரல் ''மேன்ஸ்'' என்று சொல்லுகிற நிலைமை வந்து கொண்டிருக்கிறது. இப்படி இருக்கிற நிலையில் இரண்டையும் தெளிவாகக் கொண்டு வர வேண்டும். அதனால்தான் தமிழிலும் திறமையுள்ளவனாகவில்லை, ஆங்கிலத்திலும் திறமையுள்ளவனாகவில்லை. அதனால் தான் அறிவிலும் திறமையுள்ளவனாகவில்லை. ஏனென்றால் C l mbus discovered Vascoda Cama எங்கேயும் புல்ஸ்டாப்பைக் காணோம். ஆகவே, எல்லா இடத்திலும் காமாவாக தான் இருக்கிறது. ஆகவே, அறிவைப் புகட்டுகிற நேரத்திலே அது விஞ்ஞானமாக இருக்கட்டும், வேறு எதுவாக இருக்கட்டும் அதைப் புகட்டுகிறபோது தாய் மொழியிலே புகட்டட்டும். தாய் மொழிப் பாடத்திற்கு முக்கியத்துவம் கொடுப்போம். ஆங்கிலத்தை ஒரு மொழியாக, not medium of insruction ஒரு மொழியாக படித்துக் கொடுப்போம். ஆங்கிலத்தில் புலமையுள்ளவனாக வல்லமையுள்ளவனாக, ஆற்றல் உடையவனாக, The command over the language என்று சொல்வார்களே அது அவர்களுக்கு வரட்டும். சரியாக அவனுக்குச் சொல்லிக் கொடுப்போம். அதைவிட்டு medium of instruction என்று சொல்கிற போதனா மொழியாக ஆக்கி இரண்டிலும் திறமை இல்லாதவனாக போவதைவிட ஒவ்வொன்றில், நீ இதிலே திறமையுள்ளவனாக வேண்டும், நீ இதிலே திறமையுள்ளவனாக வேண்டும் என்று ஒன்றிலே அவனை திறமையுள்ளவனாக ஆக்க வேண்டும்

இதற்கு முதல் காரியம் எல்லா மட்டத்திலும் பாலர் பள்ளியிலிருந்து பல்கலைக் கழகம் வரையிலும் தாய் மொழியிலே பயிற்று மொழியென்று சொல்கிற நிலையை நாம் எடுத்தாக வேண்டும். இப்போதும் இருக்கிறதே என்று சொல்கிறோம் அது எந்த அளவிற்கு இருக்கிறது? கிராமப்புறங்களில் கூட எல்.கே.ஜி. யு.கே.ஜி. வந்து விட்டது. கிராமங்களில் அது நுழைந்தாயிற்று. இதைத் தடுத்து நிறுத்த முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை ஆனால் ஒன்று செய்ய முடியும். இதைஒழுங்குப்படுத்தலாம். ஒழுங்கு

படுத்துவதோடு இன்னொன்றும் செய்யலாம் குழந்தைகள் காப்பகம் என்று வைத்திருக்கிறீர்களே, பால்வாடிகள் என்று சொல்கிறோமோ அந்தக் குழந்தைகள் காப்பகத்தில் பாலர் பள்ளியிலே இவைகளை எல்லாம் சேர்த்து வைத்து விடுங்கள். யார் யாருக்கு இரண்டரை வயதிலே தங்களுடைய பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று ஆசை வருகிறதோ, கற்றுத் தெரிய வேண்டுமென்று எண்ணம வருகிறதோ அவர்கள் எல்லாம் அந்த வகுப்புகளிலே சென்று விடட்டும். என்று அரசாங்கத்தினுடைய குடையின் கீழ் அது வந்துவிடட்டும். இங்கே தமிழிலே போதனா மொழியைக் கொண்டு வந்துவிடுங்கள், இன்றைக்கு நாம் படிப்படியாக என்ன சொல்லிக் கொண்டு வருகிறோம் என்றால் சிறுபான்மை மொழியினராக இருந்தால் அவர்கள் ஆங்கிலத்தை போதனா மொழியாக ஏற்றுக் கொள்ளலாம். தங்களுடைய தாய் மொழியிலே படிக்கட்டும் என்று சொல்கிறோம், சிறுபான்மை மொழியினருக்கு, ரொம்ப மகிழ்ச்சி, யாராக இருந்தாலும் அவர்கள் தாய் மொழியைப் புறக்கணிக்க வேண்டுமென்று சொல்கிற சூழ்நிலை ,தமிழ்நாடு உருவாக்கவே கூடாது.

அவர்கள் எந்த மொழியினராக இருந்தாலும், எந்த மொழி அவர்களுடைய தாய் மொழியாக இருந்தாலும், அவர்களுக்கு அதனைப் படிப்பதற்குரிய வாய்ப்பை கொடுக்க அந்தத் தாய்மை உணர்வு என்பது இந்த தமிழக அரசுக்கு இருக்கவேண்டும்' அதைப் பாராட்டுகிறோம். ஆனால் அவர்கள் ஒன்றை மறந்து விடக்கூடாது. அவர்கள் தங்களுடைய தாய் மொழியை படிக்கட்டும். ஆனால் தமிழ் நாட்டிலே இருக்கிற ஒரு மாணவன் ஆங்கிலத்தையும் தனது தாய்மொழியையும் மட்டும் படித்து விட்டு அத்தனை வகுப்புகளுக்கும் கடந்து சென்று விடலாம் என்ற நிலை இருக்கக்கூடாது. தமிழ்நாட்டிலே இருக்கிறவர்கள் நிச்சயமாக தமிழையும் படித்தாக வேண்டும், தமிழை இவர்கள் படித்தாக வேண்டுமென்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். நம்மவர்கள் வெளியே இருக்கிறார்கள், வெளி மாநிலங்களில் இருக்கிறார்கள். வெளிமாநிலங்களில் இருக்கிறபோது அந்த சூழ்நிலை தான் உருவாகிறது.

இன்னும் சொல்லப் போனால் நமது தாய் மொழியை படிப்பதற்கு கூட வாய்ப்பு இல்லாமல், உரிமையில்லாமல் இருந்து கொண்டிருக்கிற தமிழன் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்திலே மற்றவர்களையும் துன்பப்படுத்த வேண்டுமென்று நான் சொல்லவில்லை. எல்லோரும் இன்புற்று இருப்பதே நோக்கம் என்று சொல்லுகிறோம் அல்லவா, அந்த சமதர்ம கொள்கையை எல்லா இடத்திற்கும் நாம் பரப்ப வேண்டுமென்று சொன்னால் இங்கே இருக்கிறவர்கள் தமிழ் மொழியைப் படிக்கட்டும். யாராக இருந்தாலும் வெளியே இருந்து வருகின்றவர்கள் தமிழ் மொழியை படித்து இருக்கிறார்கள் என்ற நிலை வரட்டும் அந்த நிலையைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத்தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை நாம் எண்ணிப்பார்க்காமல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் சொல்கிற கருத்தை நாம் ஏற்றுக் கொள்வோமானால் மும்மொழித் திட்டத்திற்கு கதவு திறந்துவிடுவது போலாகும். ஆகவே அதை ஏற்றுக்கொள்ளவில்லை, ஏற்றுக்கொள்ள முடியாது. இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். மாநில அரசின் கீழ் யார் வேலைக்குச் சேர வேண்டுமென்று விரும்பினாலும் தமிழ் படித்திருக்க வேண்டுமென்ற நிபந்தனையை நாம் போட்டிருக்கிறோம். அப்படிப்பட்டவர்கள், தங்கள் பள்ளி நேரத்திற்கு அப்பால், தமிழைப் படித்து, அதிலே தேர்ந்திருந்தால், நம்முடைய அரசிலே வேலை கிடைக்கும். அதற்குப் பதிலாக மற்ற மொழியைப் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழைப் படித்துத்தான் ஆக வேண்டுமென்ற ஒரு நிபந்தனையைப் போடுகிறபோது தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இந்தியைப் படிக்க வேண்டிய நிலைமையும், அந்த அடிப்படையிலே மும்மொழித் திட்டம் வருவதும் தவிர்க்க முடியாது. ஆகவே அதை நாம் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை.

திரு. குமரி அனந்தன் : துணைச் சபாநாயகர் அவர்களே, இதனை அவரவர்களுடைய தாய்மொழியோடு அவர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிற பகுதியிலே இருக்கிற மொழியை படிக்க வேண்டும் என்று சொல்கிற காரணத்தாலே, அது இங்கே பரவலாக பேசப்பட்டுக் கொண்டு வருகிற மும்மொழித் திட்டமாக ஆகிவிடாது. மும்மொழித் திட்டம் என்று சொன்னாலே, நீங்கள் வேறு ஒன்றுக்கு கதவு திறந்துவிடுகிறோம் என்று சொல்கிற அந்த திணிப்பு வந்துவிடுமோ என்று சொல்கிற அச்சம் அமைச்சர் அவர்களுடைய உள்ளத்திலே இருப்பது இங்கே தெரிய வருகிறது. ஆனால் நான் சொல்ல விரும்புவது எல்லாம் நீங்கள் ஏன் மும்மொழி என்று சொல்கிறீர்கள்? உங்களைப் பொறுத்தவரையிலும் நீங்கள் தாய்மொழியைப் படியுங்கள், ஆங்கிலத்தைப் படியுங்கள், ஒரிசாவிலே இருக்கிறவன் என்ன செய்கிறான் ? ஆங்கிலமும், இந்தியும் என்று சொல்லிவிட்டு, இந்தியை மட்டுமே படித்துக் கொண்டிருக்கிறான் அல்லவா ? மும்மொழித் திட்டம் என்று ஒன்று அங்கே இருக்கிறதே தவிர, நீங்களே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறீர்கள், மும்மொழித் திட்டம் என்ற பெயர் இருக்கிறது, ஆங்கிலமும் இந்தியும் படிக்க வேண்டும் என்று சொல்கிற அளவிற்கு சொல்லி, ஆரம்பிக்கிறார்கள், பிறகு இந்தியை மட்டுமே படித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்திய அரசுக்கு உட்பட்ட மாநிலத்திலே ஒற்றை மொழியைப் படித்துக்கொண்(டு) மும்மொழித் திட்டம் என்று சொல்கிற நேரத்திலே, நீங்கள் ...று. மொழியையும் ஆங்கிலத்தையும் மட்டுமே படித்துக் கொ... தங்கிபதிலே, மற்றவர்கள் விரும்பினால் எந்த மொழி...யத்தோடு ...மானாலும், எப்போது வேண்டுமானாலும், எங்கு ...ந்தும் இருக்

கின்ற பாரதமாக ஒன்றோடு ஒன்று இணைந்து நிற்கிற பாரதமாக வருகிற அளவிற்கு இசையிலே எழுப்பிக் காட்டுகிறார்கள். ஆகவே ஜனகண மன என்று சொல்கிற சந்தத்தை, சங்கீதத்தை, அந்த சத்தத்தை மாற்றவேண்டாம். உள்ளே இருக்கிற சத்து என்ன என்பது தெரிகின்ற அளவிற்கு முத்தான தமிழிலே இந்தப் பாடல் மொழி பெயர்த்து மாணவர்களுக்கு சேர்த்தே சொல்லிக் கொடுத்துக் கொண்டு வாருங்கள்.

(பிற்பகல் 12 50)

இசையிலேயே சொல்லிக் கொடுத்துக்கொண்டு வாருங்கள். "தீர்த்தக் கரையினிலே என்று" நமது வைத்தியநாதன் பிடிலிலே வாசித்தால், "தீர்த்த கரையினிலே" என்று நமக்கு காதினிலே விழுகிறது அல்லவா, அதைப்போல தமிழிலே வருகிறது அல்லவா "தலைவாரி பூச்சூடி." என்று சொல்கிறபோது அவர் பிடிலிலே வாசித்தால் நமக்குத் "தலைவாரி பூச்சூடி." என்று விழுகிறது அல்லவா, அதைப்போல இசையிலே இதயம் அந்தப் பொருளைப் புரிந்துகொள்ளும். நமது நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றிக்கொள்ளும். மீண்டும் சொல்கிறேன். 'ஜன கண மன, என்று சொல்லும் அந்த தேசீய கீதத்திற்கு, அதே சந்தத்தோடும் சங்கீதத்தோடும் தமிழ் சத்திலே பொருளைச் சொல்லி, அப்படியே இசையை அமைத்துக் காட்டுகின்ற அளவிற்கு பள்ளிக் கூடங்களிலே சொல்லிக் கொடுங்கள்; ஒருமைப்பாடு வளரும்.

அடுத்து நான் சொல்ல வருவது என்ன என்று சொன்னால்; இங்கே நாம் பல்வேறு கல்விகளைப் பற்றி பேசுகிறோம். கல்வி பற்றிப் பேசுகின்ற நேரத்திலே, ஆவணக் காப்பகங்களைப்பற்றி நமது அருமைக்குரிய அமைச்சர் பெருமகனார் சொல்லியிருக்கிறார். அந்த ஆவணக் காப்பகங்கள் 37 இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். அண்மைக்காலத்திலே பத்திரிக்கைகளிலே செய்திகள் வருகின்றன. வெளிநாடுகளிருந்து வருகின்றவர்கள் இங்கே இருக்கின்ற முக்கியமான ஆவணங்களையெல்லாம் எடுத்துப்போய் விடுகின்றார்களாம். அதைக் தடுப்பதற்கு என்ன வழி என்று நீங்கள் பாருங்கள். சரஸ்வதி மகாலில் இருந்து போனது ஏராளம். நீங்களே அதற்கு ஒரு விளக்கம் அழகாகச் சொன்னீர்கள். வீரபத்திரனைப்பற்றிச் சொல்கிற நேரத்திலே சொன்னீர்கள். இந்திரத்தைப் பற்றி சொல்கிற நேரத்திலே சொன்னீர்கள். இந்த வீரபத்திரன் என்பவர் சரஸ்வதி மகாலிலே வேலை செய்தவர். அவர் 2 லட்சம் பாக்களை அப்படியே மனப்பாடம் பண்ணிவிட்டார். மனப்பாடம் பண்ணுகிற பழக்கம் இப்போது குறைந்துகொண்டே வருகிறது. தயவு செய்து இதனைச் சிந்திக்கவேண்டும். குழந்தைகளை மனப்பாடம் பண்ணச் சொல்ல வேண்டும். ஒரு குறிப்பிட்ட வயது வரை மனனம் செய்கிற அந்தச் சக்தி அவர்களுக்கு வரவேண்டும்.





இந்த மனம், நீண்டு, பரந்து, அகன்று, ஆழ்ந்தது. அதிலே எத்தனையோ கருத்துக்களை பதித்து வைத்துக்கொள்ள முடியும். அந்தக் கருத்துக்களையெல்லாம் பதித்து வைத்துக்கொள்ள முடியாமல் இப்போது நுனிப்புல் மேய்வதுபோல் போய் கொண்டிருக்கிறார்களே அதனை மாற்றவேண்டும். மனனம் செய்கின்ற வழக்கத்தை மீண்டும் கொண்டு வரவேண்டும். ஒவ்வொரு மாணவனுக்கு மனனம் செய்கின்ற வழக்கம் வர வேண்டும். வீரபத்திரனைப்பற்றிச் சொல்கிறபோது சொன்னார்கள், மதுரையிலே, உலகதமிழ் சங்கத்தை தொடங்குகிற நேரத்திலே சொன்னார்கள். அவர் 2 லட்சம் பாக்களை, 2 லட்சம் கவிதைகளை மளமள வென்று சொல்கிறார். அதற்கு ஒப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றுசொன்னால் கணிதமேதை சகுந்தலாவைத்தான் சொல்லவேண்டுமென்று சொன்னார்கள். 2 லட்சம் பாக்களை ஒருவர் சொல்கிறார். அந்தப் பாக்கள் இருக்கிறதா என்று சரஸ்வதிமகாலிலே தேடிப்பார்த்தால் அந்தப் பாக்களை எழுதிய ஏடுகளைக் காணோம் என்று சொன்னார்கள். சில ஏடுகளாவது காணாமல் இருக்கக்கூடும். அந்த ஏடுகள் எங்கே போயிற்று. அவர் பார்த்துத்தானே மனப்பாடம் பண்ணியிருப்பார். மனப்பாடம் பண்ணியதற்குப்பிறகு அவர் இப்போது அந்த ஏடுகளை பார்க்கவேண்டிய தேவை இல்லாமல் இருந்திருக்கக் கூடும். ஆனால் ஏடுகளைப்பார்த்துத்தானே நெஞ்சத்திலே எழுதிக்கொண்டார் அத்தனையும். அந்த ஏடுகள் எங்கோ போகின்றன. அந்த சரஸ்வதி மகாலில் இருந்து போனவை போல 37 ஆவணங்களிலிருந்து ஏதேது போகிறதோ என்று எனக்குத் தெரியாது. தயவுசெய்து அதனை கண்காணிக்கவேண்டுமென்று நான் சொல்லிக்கொள்கிறேன். அப்படிப்பட்ட கண்காணிப்பு மிகத் தேவை.

அதைப்போல 28 இடங்களிலே அருங்காட்சியகங்கள் மாவட்டங்களிலே போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். பல இடங்களில் அந்தப் பெயர்ப் பலகைகள் மட்டும்தான் இருக்கின்றன. உள்ளே சிலைகள் கூட வைக்கப்படவில்லை என்பது உங்களுடைய கவனத்திற்கு வந்திருக்குமென்று நான் நினைக்கிறேன். அந்த அளவிற்கு பல இடங்களிலே அருங்காட்சியகங்கள் இருந்து கொண்டிருக்கின்றன.

அடுத்து, உலகத் தமிழ்ச்சங்கம் தொடங்குகின்ற நேரத்திலே, அருமையான காரியத்தை செய்தீர்கள். உலகத் தமிழ் சங்கம் தொடங்குகிறபோது அங்கே ஒரு நூலகம் அமைக்கப்படுமென்றும், உலகத்தில் எந்த மூலையில் யார் எழுதிய நூலாய் இருந்தாலும் அது அங்கே வந்துசேரும் என்று சொன்னீர்கள். இதையும் அதுபோல ஒரு கிழமை ஏடு வேண்டுமென்று நாங்கள் காலையிலே கேட்டோம். நீங்கள் மாலையிலே உலகத் தமிழ் என்று சொல்கிற திங்கள் ஏடு வரும் என்று சொன்னீர்கள்.

நான் பணிவோடு மீண்டும் கேட்கிறேன். இங்கள் ஏடு எதற்காக வருகிறது என்று தெரியாது. தமிழை வளர்ப்பதற்காகத்தான் நிச்சயமாக வரும். ஆனால் பிழைபட அதிகமாக எழுதுகிறார்கள். தமிழகம் முழுவதும் பிழைபட எழுதிக்கொண்டிருப்பவர்கள் அதிகமாகப் போய் விட்டார்கள். இலக்கணம் தேவையில்லை என்று கருதுகிறார்கள். சந்தியும், ஒற்றும் தேவையில்லாதது என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை நாம் போக்குவதற்கு, தமிழகத்தில் எந்தெந்த ஏடுகளில் என்னென்ன பிழைகள் வருகின்றனவோ, அந்தப் பிழைகளையெல்லாம் எடுத்துச் சுட்டிக்காட்டி இவைகள் திருத்தப்படவேண்டியவை, இப்படித் திருத்தப்படவேண்டும் என்று சொல்கிற ஒரு ஏட்டினை அமைச்சர் அவர்கள் கொண்டுவரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

புலவர்களுக்கெல்லாம் நினைவுச் சின்னம் எழுப்புகிறார்கள். அதைத்தான் அன்றும் நான் ஒரு வேண்டுகோளாகச் சொன்னேன். பக்கத்திலே இருக்கிற திருப்பரங்குன்றம் மலையைச் சுற்றி அருமையான பாறைகள் இருந்துகொண்டிருக்கிறனவே, அவைகளை படிமங்களாக்கிவிடுங்கள்; அது பரங்குன்றம் அல்ல; படிமக்குன்றம் என்று ஆக்கி விடுங்கள். வெறும் மலை அல்ல, சிலை மலை என்று ஆக்கி விடுங்கள் (a hill of statues) என்று ஆக்கி விடுங்கள். திரிபுரம் எரித்த விரிசடை கடவுள் என்று தொடங்கினாலும் சரி, நெற்றிக் கண்ணைத் திறந்தாலும், குற்றம் குற்றமே என்ற நக்கீரனிடமிருந்து தொடங்கினாலும் சரி, இன்றைய கண்ணதாசன் வரையில் அல்லது அதற்குப் பின்னாலே இருந்து நீங்கள் கொண்டுவந்தாலும் சரி, காலாகாலத்திலே நாம் தொடங்குவோம். அந்தப் பரங்குன்றத்தைச் சுற்றி ஒவ்வொரு சிலையாக அமைக்க ஆரம்பிப்போம். நினைவுத் தூண்கள் நீங்கள் வைப்பதோடு இதையும் சேர்த்து வையுங்கள், என்று அங்கேயே கேட்டது போலவே இங்கேயும் நான் கேட்கிறேன்.

இன்னொன்று சிறுபான்மையினருக்காக. இங்கே சில விளம்பரங்களை வெளியிடுகிறபோது, அந்த மொழியிலேயே வெளியிடுகிறார்கள். ஆனால் நம்மவர்கள் வாழ்கின்ற மற்ற இடங்களிலும் நமது மொழியிலே வெளியிடுகிறார்களா என்று சற்று பாருங்கள்; வெளியிடக்கூடும். இங்கே சிறுபான்மை மொழியினர் ஒருவர் இருக்கிறார் என்று சொன்னால் ஒரு அறிவிக்கையோ, இன்னொன்றோ நீங்கள் வெளியிட்டிருக்கிறபோது அவர்களுடைய மொழியிலே வரவேண்டுமென்று மொழி பெயர்த்து வெளியிடுகிறீர்கள். நம்மவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற பிற பகுதிகளிலே அப்படி நடைபெறுகிறதா என்று சற்று கவனியுங்கள் என்றுதான் உங்களை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.





அதைப்போல மெட்ரிக்குலேசன் என்பது இவ்வளவு நாளும் யுனிவர்சிடியினுடைய பொறுப்பிலே இருந்து கொண்டிருந்தது. இப்போது டைரக்டர் ஆப் ஸ்கூல் எடுகேஷனுக்கு வந்து விட்டது. கல்வி இலாகாவுக்குவந்து விட்டது. அப்படி வந்ததற்குப்பிறகும் அங்கே தமிழ் பிரிவு தொடங்குவதற்கு அனுமதிக்க மாட்டேன் என்கிறீர்களே ஏன் (Medium of instruction) ஆங்கிலம் என்று சொல்கிறீர்களே ஏன்? ஏன் ஒரு தமிழ் பிரிவை சேர்த்து வைத்தால் என்ன? அண்ணா நகரில் 1969—70-ல் ஒரு பெரிய உலக பொருட்காட்சி போட்டது உங்களுக்கு எல்லாம் நினைவில் இருக்கும். அந்த உலக பொருட்காட்சிக்குப் பிறகு இப்போது அண்ணா நகர் என்று பெயரிட்டு..........

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழில் இப்போது பள்ளிக்கூடங்கள் நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே ஆங்கில வழியில் குழந்தைகள் படிக்கவேண்டும் என்று பெற்றோர்கள் வருகிறபோது நாங்கள் ஆங்கில வழியில் சொல்லித் தர முடியாது என்று அங்கே சொல்லுகிறோம். அவர்கள் மேலும் வற்புறுத்துகிறபோது நீங்கள் பணம் கொடுத்து படிக்கின்ற வசதியை செய்து தருவோம் என்று சொல்லித்தான் இந்த 'மெட்ரிகுலேஷன்' பள்ளி வந்தது. ஆகவே தமிழ் மொழியில் பாடம் நடக்கின்ற பள்ளிகள் நிறைய இருக்கும்போது ஆங்கில வழியில் படிப்பதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால் அந்த வாய்ப்பை கேட்கிற பெற்றோர்களுக்கு 'மெட்ரிகுலேஷன்' பள்ளிக்கு நாம் இப்போது அனுமதி தந்து இருக்கிறோம். மறுபடியும் அதிலே போய் தமிழில் நாம் துவங்கவேண்டும் என்று சொல்வதற்கு எந்தவிதமான அடிப்படையும் இல்லை.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, அமைச்சர் பெருமகனார் சொல்லுவதற்கு முன்னால் நான் சொல்ல தொடங்கியது என்ன என்று சொன்னால் அண்ணா நகர் இருக்கிறது. அண்ணா நகர் விரிந்து, பரந்து பல மக்களைக் கொண்டதாக இப்போது ஆகிவிட்டது. இங்கே கார்ப்பரேஷன் பள்ளியோ ஹைஸ்கூல் என்று சொல்லுகிற நமது அரசினர் பள்ளியோ எதுவும் இல்லை. அங்கேஇருப்பது இரண்டு. ஒன்று மெட்ரிகுலேஷன் பள்ளி இன்னும் ஒன்று, Central Board of Education மத்திய அரசின் நிர்வாகத்தில் இருப்பது மட்டும் தான் இருக்கிறது. அங்கே தமிழ் படிக்கவேண்டும் என்று ஒருவன் விரும்பினால் அண்ணா நகரில் பள்ளி இல்லை. அந்தப் பகுதியில் இல்லை. இவைகளை நான் கேட்டு விசாரித்து இங்கே தருகிறேன். அதிலே தவறு இருந்தால் அதை சுட்டிக் காட்டுவதற்கு தனியாக எங்களை கூப்பிட்டுப் பேசுங்கள். நாங்கள் திருத்திக் கொள்கிறோம். என்று

[1986 ஏப்ரல் 17

(பிற்பகல் 1–00).

மாண்புமிகு திரு. சே. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசிக்கொண்டு வருகிறபோது, அவர்கள் சொல்கிற கருத்துக்கள் சரியாக இருந்தாலும் கேட்கின்றவர்கள் ஏதோ, அரசு செய்யாததைப் போலவும், அதனாலே விளையாட்டு ஆர்வம் இல்லாததைப் போலவும், விளையாட்டுத் துறையிலே நாம் முன்னேறாததைப் போலவும் ஒரு உணர்வு ஏற்படும் என்கின்ற காரணத்தினாலே நான் குறிப்பிடுகிறேன். நிலைமை என்னவென்றால், கிராமப்புறங்களில், கிராம விளையாட்டு மையங்களை ஆரம்பிக்கலாம், என்று அதற்கு வருடத்திற்கு 1,200 ரூபாய் அரசு தரும்; 600 ரூபாய் ஒரு உயர்நிலைப் பள்ளியிலே விளையாட்டுத் துறை அசிரியராக இருக்கிறவர் பயிற்சி தரவும், 600 ரூபாய் வாலிபாலோ பாஸ்கட்பாலோ ஏதோ ஒன்று வாங்கிக் கொள்வதற்காக என்று சொல்லி ஒரு திட்டத்தை அறிமுகப் படுத்தினோம்.

ஏது நடப்பதை விட நடக்காமல் இருப்பது தான் அதிகமாக இருக்கிறது. அதற்குக் காரணம் விளையாட்டிலே மக்களிடத்திலே ஆர்வம் இல்லை. இப்போது விளையாட்டுத் துறையினைப் பொறுத்தவரையில், நம் முன்னாலே இருக்கின்ற முக்கியமான பிரச்சினை என்னவென்றால், மக்கள் மத்தியிலே விளையாட்டில் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும், அதாவது மோட்டிவேட் பண்ணவேண்டும் என்பதுதான். அந்த ஆர்வத்தை ஏற்படுத்தியதற்குப் பிறகு தான் நாம் எடுக்கிற முயற்சிகள் வெற்றி பெறமுடியும். அதனாலே நடைபெறுகிற விளையாட்டு விழாக்களை எல்லாம் மாநிலத்திலே பல்வேறு பகுதிகளிலே சிறப்பாக நடத்தி, மக்கள் மத்தியிலே ஆர்வத்தைத் தூண்ட முயற்சி எடுத்து வருகிறோம். மக்களிடத்திலே இருந்து வருகிற அந்த ஆர்வம், அதன் அடிப்படையில் தான், அரசு போடுகிற திட்டங்கள் வெற்றி பெறமுடியும். ஆகவே, அரசு திட்டங்களைப் போடாமல் இல்லை. நாம் திட்டங்களைப் போட்டுக்கொண்டு தான் இருக்கிறோம். இப்போது நமக்கு இருக்கிற ஆசை எல்லாம், கிராமங்களிலே அந்த விளையாட்டு மையங்கள் நிறைய வரவேண்டும் என்பதுதான். மாணவர் அல்லாதார் அதிலே பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும். அந்த முயற்சியிலே வெற்றி பெற்றால் நிறைய தங்கப் பதக்கங்களைப் பெறலாம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் பெருமானாரையோ, ஏதோ அரசாங்கத்தையோ, நான் முதலிலேயே சொன்னதைப்போல, குற்றம் சாட்டிச் சொல்லவில்லை. இவைகள் எல்லாம் செய்யப்பட வேண்டும் என்பதை நினைவூட்டச் சொல்கிறேன். தொட்டுக்



1986 ஏப்ரல் 17] [திரு. குமரி அனந்தன்]

காட்டுவது என்பது வேறு, அதைச் சுட்டிக் காட்டி குறை என்று சொல்லிக் கொண்டிருப்பது வேறு. நான் அதைச் சொல்லவில்லை. இவைகளை நான் தொட்டுத் தொட்டுப் போவதற்குரிய காரணம், நாம் அவைகளை விட்டு விட்டுப் போகிறோம் என்பதுதான்.

நமது அமைச்சர் பெருமகனார் சொன்னார், அவர்களிடமிருந்து ஆர்வம் வரவேண்டும் என்று சொன்னார். பெற்றோர்களிடமிருந்து கூட ஆர்வம் வரவில்லை, நமது குழந்தைகளுக்கு சத்துணவு கொடுக்கவேண்டும் என்று. நாம் கொடுக்கவில்லையா? பெற்றோர்களிடமிருந்து குழந்தைகளுக்கு படிப்புச் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்ற ஆர்வம் வரவில்லை. நமது அரும்பெரும் தலைவர் காமராஜர் காலத்திலே பள்ளிக்கூடத்தைத் திறக்கவில்லையா? எனவே, அரசு என்பது எல்லோரையும் ஆளுகின்ற ஒன்றாக இருக்கிற காரணத்தினாலே வாழுகின்ற மக்கள் அனைவரையும் ஆளுகின்றதாக இருக்கின்ற காரணத்தினாலே, வாழ்கிறவர்கள் எப்படி வாழவேண்டும் என்பதை சொல்லிக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை.

சின்ன உதாரணத்தைச் சொல்கிறேன். இங்கே நீங்கள் சொன்னீர்கள். நீங்கள் தவறு செய்யவில்லையென்று. நீங்கள் தவறு செய்ததாக நான் சொல்லவில்லை. செய்ய வேண்டியதை ஒன்று, இரண்டு விட்டுவிட்டீர்கள் என்று வேண்டுமென்றால் சுட்டிக்காட்டலாம். ஒய். எம். சி. ஏ., விளையாட்டுக் கல்லூரியைத் தொடங்கியது 1920-ல் ஒரு கல்லூரி. கோவையிலே மாருதி கல்லூரியைத் தொடங்கியது 1956-ல். அழகப்பாவிலே தொடங்கியது 1956-ல், அண்ணாமலையிலே தொடங்கியது 1956-இல். சாரதா காலேஜ் சேலத்திலே தொடங்கியது 1981லே. இந்த 5 கல்லூரிகளைத் தவிர வேறு கல்லூரிகளே இல்லேயே, ஏன்? இந்த 5 ஆண்டுகளாக வேறு எதுவும் தொடங்கப் படவில்லையே, ஏன்?

கடந்த 4 ஆண்டுகளில் 71 தனியார் பாலிடெக்னிக்குகள், 23 பொறியியல் கல்லூரிகள் தனியார் துறையில் 'செல்ஃப் பைனான்சிங்' சுய நிதியிலே தொடங்கப்பட்டு, 2 மருத்துவக் கல்லூரிகளும் வந்திருக்கிற நேரத்தில, இந்த உடற்பயிற்சி கல்லூரிக்கு மட்டும் எந்தத் தனியாரும் வரவில்லை, ஏன்......

மாண்புமிகு திரு. சே. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உடல் பயிற்சி ஆசிரியர்கள் நமக்குத் தேவை, போதுமானவர்கள் இல்லை என்கிற நிலை வருமானால், உடனடியாக நாம் வேண்டுமானால் 2, 3 கல்லூரி

களைத் திறந்து கொள்ள முடியும். இப்போது உடற்பயிற்சி ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருக்கின்றார்கள். வேலை இல்லாமல் இருக்கிற உடல் பயிற்சி ஆசிரியர்களை, நிறையக் கல்லூரிகளைத் திறந்து, அவர்களுடைய எண்ணிக்கையை அதிகப் படுத்த முடியாது. பாலிடெக்னிக்குகள், என்ஜினியரிங் கல்லூரி கள் என்பது அப்படி அல்ல. அது ஒரு மாநிலத்தினுடைய தொழில் முன்னேற்றத்தின் அடிப்படையாகும்.

திரு. குமரி அனந்தன்; துணைச் சபாநாயகர் அவர்களே, அதுதான், காரணமா? இப்படி உடல் பயிற்சிக் கல்லூரிகள் தொடங்கினால், அதிகமான வருமானம் வராது என்று சுய நிதிக் கல்லூரி எல்லாம் வேறு திசையிலே போகிறதா என்பதை நீங்கள் ஆராயுங்கள். உங்களைச் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, அது மிகத் தவறான கருத்தாகும். உடல் பயிற்சிக் கல்லூரி கேட்டு வரவில்லை என்பது மட்டுமல்ல. உடல் பயிற்சி ஆசிரியர்கள் தேவை என்கிற நிலை நாட்டிலே இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே, வருமானத்திற்காக நாம் எதையும் அனுமதிப்பது இல்லை. வருமானத்திற்காக அனுமதிப்பது என்றால், எத் தனையோ கல்லூரிகளை, எத்தனையோ முறைப்படி எங்கும் ஆரம்பித்து இருக்கலாம். வருமானத்திற்சாக என்று சொல்லப் படுவதே மிகவும் தவறான கருத்தாகும். அதை நான் வன்மை யாகக் கண்டிக்கின்றேன்.

திரு. குமரி அனந்தன் : நான் அமைச்சரவர்களைச் சொல்ல வில்லை, அரசைச் சொல்லவில்லை. 71 தனியார் ........

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வருமானம் என்றால் நாட்டிலே செய் வதற்கு தொழில் இருக்கிறது. வியாபாரம் இருக்கிறது. அதுவும் இலட்சம் ரூபாய் போட்டால் 10 இலட்சம் ரூபாய் சர்க்காரி லேயே கடன் தருகிறார்கள். ஆகவே, சம்பாதிப்பதற்கு வழி இல்லாமல் இல்லை. சம்பாதிப்பதற்கு தொழிற்சாலைகள் தொடங்கலாம். வியாபாரம் செய்யலாம். கல்விக்கென்று ஒருவர் வந்தால் அவரை நாம் மதிக்கப் பழகிக் கொள்ளவேண்டும்.

திரு. குமரி அனந்தன் : துணைச் சபாநாயகர் அவர்களே, கல்வியை மதிக்கிறோம் என்பது மட்டுமல்ல; பேரறிஞர் அண்ணா அவர்கள் அண்ணாமலைச் செட்டியாரைப் பற்றிச் சொல்கிற நேரத்திலே இவ்வளவு நாளும் பக்திக்காகச் செல விட்டுக் கொண்டிருந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் இப் போது புத்திக்காகவும் செலவழிக்கிறார்கள் என்று சொல்கிற



அளவுக்கு உயர்ந்த கருத்துக்களையெல்லாம் பின்பற்றுகிறவன் ான் நானும். இத்தனை இலட்சம் ரூபாய் கொடுத்தால் ஒருவனுக்கு இடம் கிடைக்கும் என்று சொல்கிற அனுமதியை யாவது நாம் கொடுக்கிறோம். அது வருவாய் என்றோ மற்றவை என்றோ நான் சொல்லவில்லை. மற்றவர்களுக்கு உடல் பயிற்சியிலே டிமாண்ட் இல்லாத காரணத்தினாலே அவர்கள் தொடங்கவில்லையா? நாமே என்ன காரணத்தைச் சொல்கி றோம். இதே ரூபாயைக் கொண்டு, கர்நாடகத்திலே கொடுக்கிற காரணத்தினாலே அந்த ரூபாயைக் கொடுத்து அங்கே அவன் படிக்கட்டுமே என்று சொல்லலாம். நான் அந்த வாதத்திற்கே வரவில்லை, நான் குறையும் சொல்லவில்லை. ஆனால், 71 பாலிடெக்னிக்குகளைத் தொடங்குவதற்கு முன்வந்த பொது மக்களும் 33 அல்லது 36 பொறியியல் கல்லூரிகளைத் தொடங்கு வதற்கு முன்வந்த பொதுமக்களும் ஒரு உடற் பயிற்சிக் கல்லூரி யைத் தொடங்குவதற்கு முன்வரவில்லையே, அதுவும் 1981 ஆம் ஆண்டிலிருந்து ஒன்றும் இல்லையே என்ற செய்தி ஒன்று. இரண் டாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுத்தருளவேண்டும். நான் உங்களுடைய நன்மைக்காக மட்டுமல்ல, பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்களுடைய தொண்டன் என்ற முறையிலே யாரையும் புண்படுத்தாமல் கருத்துக்களைப் பூப்போலப் போட வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

ஐயா, உங்களுடைய அரசு என்ன சொல்கிறது தெரியுமா? 250 மாணவர்கள் இருந்தால் ஒரு உடற்பயிற்சி ஆசிரியர் போட வேண்டும் என்று இருக்கிறது. அதன்படி எவ்வளவு ஆசிரியர்கள் இருக்கிறார்கள் தெரியுமா? 6 ஆயிரம் பேர்கள் வேலை செய் கிறார்கள். எவ்வளவு ஆசிரியர்கள் வேண்டும் தெரியுமா? 20 ஆயிரம் ஆசிரியர்கள் தேவை. தேவை இல்லையென்று சொன் னீர்கள், யாரோ தவறான தகவலை.......

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, தேவையில்லை என்பது நிதியாதாரத்தைப் பொறுத்துச் சொல்கிறோம்.

திரு. குமரி அனந்தன் : துணைச் சபாநாயகர் அவர்களே, நிதியாதாரம் போதுமானதாக இல்லை. யாராவது வள்ளல்கள் எத்தனையோ பள்ளிகளைத் தொடங்குகிறார்களே அப்படிப் பட்ட வள்ளல்கள் கொஞ்சம் இந்தப் பக்கமும் பார்க்கவேண்டும். ரன் என்றால் உடலை வளர்த்தேன், உயிரை வளர்த்தேனே....

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, நிதியாதாரம் என்று சொல்வது பயிற்சி பெறுவதற் கல்ல, மாதாமாதம் சம்பளம் தரவேண்டும்.

திரு. குமரி அனந்தன் : **துணைச் சபாநாயகர் அவர்களே,** மற்றவைகளுக்கு எப்படி முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ அதைப்போல் இதற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஏன் என்றால் The gap is very wide தேவைப்படுவது 20 ஆயிரம், இருப்பது 6 ஆயிரம்தான். ஆகவே இன்னும் அதிகமான கல்லூரிகள் வரவேண்டுமென்று சொல்லவருகிறேன். இளமையிலே, Catch the young என்று சொல்வதைப்போல் L.K.G. U,KG, -யிலிருந்து ஆரம்பியுங்கள். உடற்பயிற்சிக்குக் கல்லூரி வேண்டுமென்று சொல்கிற நேரத்திலே அங்கேயிருந்து அது வரட்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள், எங்கே போனாலும் உடலைப் பேணிக் கொள்ளுங்கள் என்று—சொல்வார்கள். ஏன் என்றால் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் அல்லவா. நல்ல முறையில் இருக்கும் என்ற காரணத்தினால் சொல்கிறேனே தவிர வேறல்ல (மணியடிக்கப்பட்டது), ஒரு வேண்டுகோள், ஆசிரியப் பெருமக்களுக்காக ஒன் மேன் கமிஷன் போட்டோமே, பிப்ரவரி 15-ம் தேதியிலே அறிக்கை கொடுத்திருக்க வேண்டும் மீண்டும். 6 மாத காலம், 6 வார காலம் தவணை கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய குறைகளைப் போக்குங்கள் என்று கூறி மணியடித்ததற்குப் பிறகு ஒரு மணித்துளி கூட எடுத்துக் கொள்வது நியாயம் இல்லை என்று சொல்லி, ஐயா நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, முன்பே வேண்டுகோள் விடுத்ததைப் போல நீங்களும் அதிகாரிகளும் இங்கே பேசியவர்களை அழைத்து வைத்துப் பேசி, இது இது சொன்னது சரி, இது இது சொன்னது சரியல்ல, இது இது செய்யலாம், இது இது செய்யக்கூடாது என்று ஒரு அறிவு புகட்டுகின்ற காரியத்தை நீங்கள் செய்ய வேண்டும். அதனை எல்லோரும் பின்பற்றுவது நல்லது என்ற வகையிலே முதலமைச்சர் அவர்களும் கவனத்திலே கொள்ளவேண்டுமென்று சொல்லி கல்வி வளர்க, தமிழ் நாடு புகழ் பெறுக, அமைச்சரும் முதலமைச்சரும் நாமும் புகழ்பெறுகிற வகையிலே எல்லாம் நலமே சூழ்க என்று கூறி அமைகிறேன். வணக்கம்.

**5. அறிவியல்—தொழில் நுட்பவியல் துறையின் செயல்பாடுகள் குறித்து தொழில்துறை அமைச்சரின் விளக்கம்.**

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் தமிழ்நாடு அரசின் அறிவியல்-தொழில் நுட்பவியல் என்கின்ற கொள்கைத் தீர்மானம் பற்றிய ஒரு நூல் வைத்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் பார்த்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். நுங்கள் மூலமாக இந்த மாமன்றத்திற்கும், மாமன்றத்தின் மூலமாக நாட்டிற்கும் இந்த அரசு அறிவியல்-தொழில் நுட்பவியல் துறையில் என்ன காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது என்பதை ஒரு சிறிது விளக்கலாம் என்று கருதுகிறேன். இளைஞர்களுக்கு அறிவியல்





மனப்பான்மையும் சிந்தனையும் வளர்கிற நோக்கோடு இந்த இலாகா உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அதன் மூலமாக சிறந்த, பெரிய, பெரியார் அருங்காட்சியகம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

அந்த அருங்காட்சியகம் சென்னையில் கிண்டியில் இருக்கிற அண்ணா பொறியியல் கல்லூரி வளாகத்தில் 21 ஏக்கர் நிலம் எடுத்து அதிலே உருவாக்கப்பட்டு வருகிறது. அதிலே தொழில் நுட்ப மையம் ஒன்றிற்காக முதன்மைக் கட்டிடம் கட்டப்பட்டு கொண்டு வருகிறது. அதிலே 16 காட்சியகங்கள் வைப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. பொறியியல் காட்சியகம், போக்குவரத்து, இயல்பு அறிவியல், மின் அணுவியல் மற்றும் தொடர்பியல், இயங்குதிறன், வேதியியல் மற்றும் தொழில் மய உற்பத்தி மற்றும் வேதியியல், நிசுஅணு விருத்தியியல், பரிணாமம், உலோகவியல், தொழில்கள், சக்தி, உடல் நலமும் சுகாதாரமும், சுற்றுப்புற மாசு தடுப்பு, இயங்கு இயந்திர சாஸ்திரமும் கால கணிப்பும், இந்திய கலாச்சாரம், தொழில் நுட்ப மாற்றம் என்று அப்படி பெரியார் காட்சியகமாக இந்த 16 காட்சியகங்கள் அடங்கிய ஒரு மாபெரும் கட்டிடம் ஒன்றை கட்டுவதற்காக ஏறக்குறைய இப்பொழுது 131 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். 1,600 காட்சிப் பொருள்கள் வைப்பதற்காகத் திட்டம் இடப்பட்டு, இந்தியாவிலே மட்டுமல்லாமல், வெளிநாடுகளிலேயிருந்தும் நம்முடைய மாணவச் செல்வங்களுடைய அறிவியல் துறையில் மலர்ச்சி பெறுவதற்கான பல பொருள்களை வாங்கி வைப்பதற்கு ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், பெரியார் அவர்கள் பல்வேறு கருத்துக்களை அந்தக் காலத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், பெரியார் அவர்களை அறிந்தவர்கள், அவர்களைப் பற்றி இந்த அரசு என்ன செய்கிறது, பெரியாரை வேண்டுமானால் அடிக்கடி உபயோகப்படுத்துகிறார்கள் என்று சொல்கிறார்களே தவிர, அவர்கள் சொன்னதைக் கடைபிடிக்கிறார்களா என்று சில நேரங்களில் கேள்வி வருவதை நீங்களெல்லாம் அறிவீர்கள்.

[திரு .க. இராசாராம்] [1986 ஏப்ரல் 17

பெரியார் அவர்கள் பலவற்றை விஞ்ஞான ரீதியாகச் சிந்தித்து நமக்கு அளித்து விட்டுப் போய் இருக்கிறார்கள். "இனி வரும் உலகம்" என்று அவர்கள் ஒரு நூலை பல்லாண்டுகளுக்கு முன் னாலே எழுதினார்கள். அந்த நூலைப்பற்றிக் கூட அன்றைக்கு 'இந்து' பத்திரிகை ஒரு மிகப்பெரிய விமர்சனத்தை எழுதியதை நான் இன்றைக்கு நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன. பெரி யார் அவர்கள் சொல்கிறார்கள் :

"இன்றைய உலகானது, பழங்கால உலகம் எப்பதிலிருந்து நாளுக்கு நாள் எப்படி மாறுதலடைந்து வந்திருக்கிறது? இனி, சில நூற்றாண்டுகளில் எப்படிப்பட்ட மாறுதலை அடையும் என் பனவாகிய விஷயங்கள், பகுத்தறிவுவாதிகளுக்குத்தான் ஏதாவது தெரியக்கூடும்" என்று அவர்கள் சொல்கிறார்கள். அந்த வகை யில் அவர்கள் பல்வேறு கருத்துக்களைத் தன்னுடைய சிந்தனை யிலே தோன்றியதையெல்லாம் அந்தச் சிறிய நூலில் வடித்துத் தந்திருக்கிறார்கள். அதில் அவர்கள் எழுதுகிறார்கள் :

"அதிசயப் பொருளும், அற்புதக் காட்சிகளும், அவற்றின் அநுபவங்களும் மக்கள் எல்லோரும் ஒன்றுபோல் அனுபவிப்பார் கள். இலேவாதேவிக்காரர்கள், தனிப்பட்ட வியாபாரிகள், தொழிற்சாலை, இயந்திரசாலை முதலாளிகள், கப்பல், இரயில், பஸ் சொந்தக்காரர்கள், கமிஷன் ஏஜண்டுகள், இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டுகள், தரகர்கள், விளம்பரங்கள் மற்றும் வேறு எவ்வித மான தனிப்பட்ட இலாபமடையும் மக்களும், தொழில்களும் எவையுமே இருக்காது." என்றும்,

"வாழ்வுக்காக எப்படி எப்படி உழைப்பது என்கின்ற கவலை யும், முயற்சியும் மிகச் சிறிய அளவுக்கு வந்து விடும். சுகம் பெறு வதிலும், போக போக்கியமடைவதிலும் நீண்ட நாள் வாழ் வதிலும், ஆராய்ச்சியும், முயற்சியும் வளர்ந்துகொண்டே போகும். மக்களின் தேவைகள் எவ்வளவு வளர்ந்தாலும், அவற் றை உற்பத்தி செய்வதற்காக மனிதன் செலவழிக்க வேண்டிய நேரம், மிக மிகக் குறைவாகவே இருக்கும்." என்றும்,

"அக்கால நிலை நாம் வரையறுக்க முடியாத அற்புதங் களையும், அதிசயங்களையும் கொண்டிருக்குமென்று சொல்வது மிகைபடச் சொன்னதாக ஆகாது. ஆதலால், மக்கள் குறிப்பாக, அறிவாளிகள், சிந்தனையாளர்கள், முற்போக்கில் கவலை உள்ள வர்கள் ஆகியவர்களுக்கு இவற்றின் மூலம் சதா வேலை இருந்து கொண்டே இருக்கும். அப்படிப்பட்ட வேலைகள் இன்று உள்ளது போல் கூலிக்கு வேலை செய்வது போலவோ, இலாபத்துக்கு வேலை செய்வது போலவோ இல்லாமல் உற்சாகத்துக்காகவும், போட்டிப் பந்தய உணர்ச்சி போன்ற தூண்டுதலுக்காகவும், ஊக்கத்துடன் வேலை செய்வதாக இருக்கும்" என்றும்,



1986 ஏப்ரல் 17] [ரு. க. இராசராம்]

"இப்படியானால் சோம்பேறிகள் வளர்ந்துவிட மாட்டார் களா என்று கேட்கலாம். இப்படிப்பட்ட காலத்தில் சோம்பேறி கள் இருக்க முடியாது ; இருப்பார்கள் என்றே வைத்துக் கொண் டாலும், இவர்களால் சமூகத்துக்குத் தேவையான எந்த வேலை யும் குறைந்து போகாது. அதனால் ஒரு கெடுதியும் ஏற்பட்டு விடாது. ஆதலால், அப்படிப்பட்ட இவர்கள் வேலையில் ஈடுபடு வதைவிட சும்மா இருந்து சாப்பிடுவது அவர்களுக்கே கஷ்ட மாயிருக்கும்" என்றும்,

"இழிவான வேலைகளுக்கு ஆள் கிடைக்குமா என்ற கேள்வி பிறக்கலாம். இழிவான வேலை என்பது வருங்காலத்தில் இருக்க முடியாது. சரீரத்தால் செய்யப்பட வேண்டிய எல்லாக் காரியங்களும் அனேகமாக இயந்திரங்களாலேயே செய்யும் படியாக ஏற்பட்டுவிடும். கக்கூஸ் எடுக்க வேண்டியதும் துலக்க வேண்டியதும், வீதி கூட்ட வேண்டியதும் கூட இயந்திரத்தி னாலேயே செய்து முடித்து விடும். மனிதனுக்குப் பாரம் எடுக்க வேண்டியதோ, இழுக்க வேண்டியதோ ஆன காரியங்கள் இருக்கவே இருக்காது" என்றும் எழுதிவிட்டு இன்னும் எழுது கிறார்.

போக்குவரவு எங்கும் ஆகாய விமானமும், அதிவேக சாதனமுமாகவே இருக்கும்.

கம்பியில்லாத் தந்தி சாதனம் ஒவ்வொருவர் சட்டைப் பையிலும் இருக்கும்.

ரேடியோ ஒவ்வொருவர் தொப்பியிலும் அமைக்கப்பட் டிருக்கும்.

உருவத்தை தந்தியில் அனுப்பும்படியான சாதனம் எங்கும் மலிந்து, ஆளுக்காள் உருவம் காட்டி பேசிக்கொள்ளத்தக்க சவுகரியம் ஏற்படும்.

பேசுந்கண்ட சாதனங்களால் ஒரு இடத்தில் இருந்து கொண்டே பல இடங்களில் உள்ள மக்களுக்குக் கல்வி கற்றுக்கொடுகக்ச் சாத்தியப்படும். உணவுகளுக்குப் பயன்படும் படியான உணவு, சத்துப்பொருள்களாகச் சுருக்கப்பட்டு ஒரு வாரத்திற்கு ஒரு சிறு குப்பியில் அடங்கக்கூடிய உணவு ஏற்பட்டு விடும்.

மனிதனுடைய "ஆயுள் நூறு" வருஷமென்பது இரட்டிப்பு ஆனாலும் ஆகலாம். இன்னும் மேலே போனாலும் போகலாம்.

பிள்ளைப்பேறுக்கு ஆண் பெண் சேர்க்கை என்பது கூட நீக்கப்படலாம். நல்ல திரேகத்துடனும், புதிய நுட்பமும், அழகும், திடகாத்திரமும் உள்ள பிரஜைகள் ஏற்படும்படியாக பொலிகாளைகள்போல் தெரிந்தெடுத்து மணிபோன்ற பொலி மக்கள் வளர்க்கப்பட்டு, அவர்களது வீரியத்தை இன்ஜெக்ஷன்

மூலம் பெண்கள் கருப்பைகளுக்குள் செலுத்தி, நல்ல குழந்தைகளைப் பிறக்கச் செய்யப்படும். ஆண்பெண் சேர்க்கைக்கும், குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டுவிடும்.

மக்கள் பிறப்பு கட்டுப்படுத்தப்பட்டு ஒரு அளவுக்குள் கொண்டு வந்துவிடக் கூடும்.

ஒரு டன்னுள்ள மோட்டார் கார், ஒரு அந்தர் வெயிட்டுக்கு வரலாம்; பெட்ரோல் செலவு குறையலாம்; பெட்ரோலுக்கு பதில் மின்சார சக்தியே உபயோகப்படுத்தப்படலாம் அல்லது விசை சேகரிப்பாலேயே ஓட்டப்படலாம்.

மின்சாரத்தின் உபயோகம் எல்லா மக்களுக்கும் பயன்படக்கூடிய விதமாகவும், மக்கள் வாழ்க்கை வசதிகளுக்குத் துணை செய்யும் விதமாகவும் விரியும்—பெருகும். விஞ்ஞானம் வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்கப் பயன்படும்படியான அதிசயப் பொருள்களும், கண்டுபிடிப்புகளும் தனிப்பட்டவர்களின் இலாபத்துக்காக என்று முடங்கிக் கிடக்காமல் சகல மக்களும் சவுகரியம் தருகிற பொது சாதனங்களாக அமையும்.

பாமரனின் ஞானசூன்யம், சுயநலக்காரரின் எதிர்ப்பு என்னும் இரண்டு பெரிய விரோதிகளைக் கண்டு கலங்காமல், வேலை செய்வோரே, இனி வரும் உலகச் சிற்பிகளாக முடியும். அந்தச் சிற்பிகளின் கூட்டத்திலே நாமும் சேர்ந்து நம்மாலான காரியத்தைச் செய்ய வேண்டுமென்று வாலிபர்கள், பகுத்தறிவாளர்கள் ஆசைப்பட்டு உழைக்க முன்வர வேண்டி இதை முடிக்கிறேன் என்று பெரியார் அவர்கள் இனிவரும் உலகத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை நிறைவேற்றுகின்ற ஒரு தன்மையிலேதான் இந்த விஞ்ஞானக் கூடம் உருவாக்கப்படுகிறது. இதை 1988-ஆம் ஆண்டுக்குள்ளாகக் கட்டி முடிப்பதற்கான எல்லா வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பக்கத்திலேயே, விண்வெளிக் காட்சியகம் ஒன்றும் திரு. சி. கே. பிர்லாவினுடைய நன்கொடையைக் கொண்டு கட்டப்பட்டு வருகிறது. அதற்கு இதுவரையில் ரூ. 21 இலட்சம் செலவாகியிருக்கிறது. திரு. சி. கே. பிர்லா அவர்கள் இந்நிலையத்தை நிறுவ ரூ. 40 இலட்சம் தந்திருக்கிறார்கள். ரூ. 60 இலட்சம் செலவில் ஜப்பானிலிருந்து ஒரு புரொஜக்டர் வாங்குவதற்காக தற்போது ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த விண்வெளிக் காட்சி—பெரியார் பெயரில் உள்ள காட்சியகம், கிண்டியிலே தற்போது அமைந்து கொண்டிருக்கிறது என்பதையும் அது தமிழகம் பூராவும் இருக்கிற இளைஞர்களுக்குப் பயன்பட இருக்கிறது என்பதையும் உலகத்திலே இருந்து, ஏராளமான, அதிசயமான பொருள்களை விஞ்ஞான கருவிகளை தன்னுடைய மக்க



ளுக்குத் தேவையான அறிவு ஏற்படும் தன்மையில் வாங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போல சிறிய அளவில், திருச்சிராப்பள்ளியிலேயும், கோயம்புத்தூரிலும் சேலத்திலும் அமைப்பதற்குத் திட்டங்கள் இருக்கின்றன. திருநெல்வேலியில் தற்போது "National Council for Science Museum தேசிய அறிவியல் மையங்கள் குழுவினால் ஒரு சிறு மையம் நிறுவப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு ஸ்மால் கிளாரிபிகேஷன். தந்தை பெரியாருடைய புரட்சிகரமான விஞ்ஞானக் கருத்துக்கள் பற்றி நான் இப்பொழுது குறை சொல்லவில்லை, விவாதிப்பதற்கு வரவில்லை. அதைப் பற்றி பெருமைப் படுகிறேன். அதே நேரத்தில், அதற்கு முன்பாகவே, தமிழகத்திலே மகாகவி சுப்பிரமணிய பாரதி அவர்கள்

ஆயுதம்செய் வோம்நல்ல காகிதம்செய் வோம்;
.....................................
.....................................
வானையளப் போம் கடல் மீனையளப் போம்

என்று பாடி பாமர மக்களிடத்திலே, சமுதாயத்திலே ஒரு புரட்சிகரமான விஞ்ஞான ரீதியான உணர்வை உருவாக்கினார்களே, அவர்கள் பெயரால் மற்ற மையங்கள் உருவாக்கப் படவும் அவர் பெயர் வைப்பதற்கும் அரசாங்கம் முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரொம்ப காலமாக சட்டமன்றத்திலே இருக்கிறார்கள். 374 ஊராட்சி ஒன்றியங்களிலேயும் பாரதியார் நூற்றாண்டு விழாவின்போது "ஆயுதம்செய் வோம்நல்ல காகிதம்செய் வோம்" என்று பாடிய பாரதியார் பெயர் எத்தனைப் பள்ளிக்கூடங்களுக்கு தமிழ்நாட்டிலே வைக்கப்பட்டிருக்கின்றன? தமிழ்நாட்டிலே பாரதியார் அளவிற்குப் பெயர் வைக்கப்பெற்ற ஒரு கவிஞன் உலகத்திலேயே கிடையாது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த அருங்காட்சியகத்தில், விண்வெளிக் காட்சி என்பது கல்கத்தா

வில் இருக்கிற நட்சத்திர மண்டலம் போன்ற அடிப்படையில் வானத்திலிருக்கிற கோளங்களைப் பற்றிய விஞ்ஞான அறிவைப் புகட்டுகிற ஒரு அமைப்பாக அமையுமா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 1–20)

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே கல்கத்தாவில் இருப்பது பழையது. அதற்கு அடுத்து, சமீபத்தில் பம்பாயில் அமைத்திருக்கிறார்கள். இப்போது உலகத்திலேயே அதிகமாக, புதிய நட்சத்திரங்கள் என்னென்ன உண்டோ அவைகளை எல்லாம் காணக்கூடிய வகையில் புதிய இயந்திரம் ஒன்றை ஜப்பான் நாடு உருவாக்கியிருக்கிறது. அந்த இயந்திரம் இங்கே வாங்கி வரப்படுகிறது.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** துணைத் தலைவரவர்களே, புதிதாகத் தொடங்கப்படுகிற தந்தை பெரியார் அவர்களுடைய பெயரில் அமைக்கப்படுகிற அருங்காட்சியகம் உலகத்திலேயே பிரசித்திபெற்ற மியூசியமாக இருக்கிற லெனின் மியூசியம்போல் இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவரவர்களே, லெனின் வாழ்க்கை வரலாறு எப்படி லெனின் கிராடிலே, ஸ்டாலின் கிராடிலே கிவ் நகரிலே வைக்கப்பட்டிருக்கிறதோ அதைப்போன்று பெரியார் அவர்களுடைய வாழ்க்கை வரலாறும் ஒரு பெரிய அறையில் (ஹால்) வைக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 4. வரவு–செலவுத் திட்டம் 1986–87 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 17—கல்வி (தொடர்ச்சி)

***திரு. கு. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறுதியாக கடிவாயிலே என்னுடைய பெயர் அழைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடக்கத்திலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். வெறும் தமிழ்நாட்டு கல்வித்துறை சம்பந்தமான விஷயம் மட்டும் விவாதத்திற்குரியது அல்ல ; புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற புதிய கல்விக் கொள்கை பற்றியும் விவாதிக்கப்பட வேண்டும் என்று. எனவே, அதற்கு நியாயமான நேரத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இந்த 1986–87 ஆம் ஆண்டிற்கான மாநில அரசின் கல்விக் கொள்கை, அதனுடைய வளர்ச்சி சம்பந்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை முன்வைக்கிறேன்.

தொடக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிற விஷயங்களில் கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற 551 கோடி ரூபாய் போக, பல்வேறு மானியங்களில் ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியையும் சேர்த்து மொத்தமாகக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது 678 கோடி ரூபாய் தமிழ்நாட்டில் கல்வித் துறைக்காக செலவிடப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது தமிழ்நாட்டில் வளர்த்துவருகிற தேவையை ஈடு செய்வதற்கு போதுமானதாக இல்லை என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் மாநில அரசும் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

கல்விக்கான நிதி ஒதுக்கத்தை இன்று நாம் வியாபார நோக்கில் பார்க்கமுடியாது. ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து. என்ன லாபம் கிடைக்கிறது என்று இதிலே பார்க்க முடியாது கல்வி என்பது எதிர்காலத்தில் சமூக வளர்ச்சிக்குரிய தேவையான முதலீடு என்ற அடிப்படையில் நாம் இதனைப் பார்க்க வேண்டும். எனவே இன்றைய மானியக் கோரிக்கை மீதான விவாதம் ஒரு புதிய சூழ்நிலையில் அமைந்திருப்பதாக இருக்கிறது. மைய அரசு அறிவித்திருக்கிற புதிய கல்விக் கொள்கை ஒருபுறம். அது தேசிய அளவிலே விவாதிக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டு விட்டு, அப்படி விவாதிப்பதற்கு முன்னாலேயே பல இடங்களில் அமுலாக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். இத்தகைய நிலையிலே தமிழ்நாட்டினுடைய கல்விக் கொள்கை என்று அறிவிக்கப்பட்டிருக்கிற கொள்கைக் குறிப்பில் புதிய கல்விக் கொள்கையின்பால் இந்த மாநில அரசு என்ன கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறது என்று பார்க்கும்போது உண்மையிலேயே வேதனை அளிக்கிறது.

சற்று நேரத்திற்கு முன்னாலே இங்கே பெரியார் நினைவாக, அவரை கௌரவப்படுத்துகின்ற வகையில் அருங்காட்சியகம் அமைப்பது பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இங்கே கல்வித்துறையிலே நடப்பிலே என்ன நிலைமை என்பதைப் பார்க்க வேண்டும். நான் ஏதோ கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவன் என்பதாலே அண்ணா தி.மு.க. அரசை குறை சொல்ல வேண்டும் என்பதற்காக கூறவில்லை. மைய அரசு ஒரு தவறைச் செய்தால் அதை மாநில அரசும் தொடர்ந்து 'முன்னோடும் பிள்ளை' போல் போகவேண்டிய அவசியம் என்ன ? இந்த மாநில அரசு புதிய கல்விக் கொள்கையை உரிமையோடும் வலிமையோடும்

கண்டித்திருக்க வேண்டியதற்குப் பதிலாக கை கொட்டி வரவேற்றிருக்கிறது. ஏன்? அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற புதிய கல்விக் கொள்கையை அமலாக்க ஒப்புக்கொண்டிருக்கிறது இது தமிழ்நாட்டில் ஒரு நல்ல கல்விச் சூழலை உருவாக்காது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏனென்றால் தமிழ் நாட்டில், மலைப்பாம்பின் வாயில் சிக்குண்டு சிறுக சிறுக அடங்கிக்கொண்டிருக்கிற மான்குட்டி போல தமிழ் நாட்டின் கல்வித்துறை தனியாரிடம் முழுக்க முழுக்க இரையாகிக்கொண்டிருக்கிறது. இந்த நிலை தமிழ் நாட்டுக்கு நிச்சயமாக உதவுவதாக இருக்க முடியாது என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள், சுய நிதி தொழில் கல்வி பற்றி. இதற்கு இந்த மாநில அரசு என்ன முகாந்திரம் சொல்கிறது? நாங்கள் தொடக்கத்திலிருந்து இன்றைக்கு வரையில் அடிப்படையிலேயே 'செல்ஃப் ஃபைனான்ஸ்' கல்வித் திட்டத்தை முழுக்க முழுக்க எதிர்க்கின்ற இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்.

இதற்கு என்ன நியாயம் சொல்கிறது இந்த அரசு. ஒன்று பொறியியல் மற்றும் புதிய தொழில் நுட்பக் கல்வி பெற்றுக் கொள்வதில் மாணவர்களின் வேட்கை அதிகமாகி இருக்கிறது; அடுத்து தொழில் கல்விகளை நிறுவுவதற்குரிய நிதி பற்றாக் குறையாக மாநில அரசுக்கு இருக்கிறது; அதற்கடுத்து கர்நாடகா ஆந்திரா, மராட்டியம் போன்ற மாநிலங்களில் இது போன்ற சுய நிதிக்கல்வி என்ற வகையில் தொழில் நுட்பக் கல்வி துவக்கப்பட்டிருக்கிறது. இப்படி காரணங்கள் சொல்லப் படுகிறது, வளர்ந்து வரும் பொருளாதார, தொழில் நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒத்த புதிய கல்விக் கொள் கையை அனுசரிக்க வேண்டுமென்று மத்திய அரசும் பச்சைக் கொடி காட்டியிருப்பதால் நாங்கள் தமிழ் நாட்டில் இத்தகைய சுயநிதிக் கல்விக் கொள்கையை அனுமதித்து இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஏன் இத்தகைய நிலைமை? ஏன் இவ்வாறு அனுமதிக்கப்படுகிறது என்று நான் கடுமையாக ஆட்சேபிக்க விரும்புகிறேன். ஒவ்வொரு துறையிலும் பார்க்கலாம் நீங்கள், இந்த சுயநிதிக் கல்விக் கூடத்தில் நடக்கிற நிலைமை என்ன? இங்கே எனக்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள்.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பேசும்போது கல்விக் கொள்கையை அனுமதித்திருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். அந்த வார்த்தை எங்கும் இல்லை. அவராக வேண்டுமானால் அதைச் சொல்லி கொள்ளலாம். ஆனால் அரசு அதை ஆதரிக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ அவர்களே, நான் திரு. சுப்பராயன் அவர்களுக்காகச் சொல்கிறேன். வாய் தவறி அவர் அப்படி சொல்லியிருக்கக்கூடும்.

**திரு. கு. சுப்பராயன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வித்துறையில் நடைபெறுகிற கொள்கையைப்பற்றி நான் புரிந்தேதான் அதைக் குறிப்பிட்டேன். வாய்தவறிக் குறிப்பிடவில்லை.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வியைக் கொள்ளை அடிப்பதில் எந்தவிதத் தவறும் இல்லை. வேறு தவறுகள் நடப்பதுதான் கண்டிக்கத்தக்கது. ஆகவே கல்வியை நாம் கொள்ளை அடிக்கத்தான் வேண்டும். அது மிகச் சாலச் சிறந்தது என்றுதான் பெருமக்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. கு. சுப்பராயன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வியைக் கொள்ளை அடிக்க ஏழைகளுக்கு வாய்ப்பளிக்கவில்லை என்பதோடு கல்வியின் பெயரால் பலர் நிதியைக் கொள்ளை அடிக்கிறார்கள் என்ற வருத்தத்தின் காரணமாகத்தான் இதை நான் குறிப்பிடுகிறேனே தவிர வேறல்ல. சுயநிதி கல்வி முறையின் கீழ் நடைபெறுகிற தவறான நிலைமைகளைப் பொறுத்தவரையில் குறிப்பிட்டுச் சொல்லாமலே புரியும். ஆளுகிற தரப்பு நண்பர்களுக்கும் சரி, எதிர்த் தரப்பு நண்பர்களுக்கும் சரி....

**டாக்டர் க. நல்லமுத்து** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கல்வியைக் கொள்ளை அடிப்பது வரவேற்கத்தக்கது என்று கூறினார்கள். அப்படி என்றால் என்ன பொருள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஏனென்றால் தவறான முறையில்.....

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளம் கவர் கள்வன் என்பார்கள். உள்ளத்தைக் கொள்ளை கொண்டார்கள் என்பார்கள். அதுபோல் அந்தப் பொருளில்தான் நான் கூறுகிறேன். இன்னும் விளக்கம் வேண்டுமானால் நான் நேரடியாகக்கூட சொல்லத் தயாராக இருக்கிறேன் நிறைய இலக்கிய ஆதாரங்களை எல்லாம் தரத் தயாராகஇருக்கிறேன்..

**திரு. கு. சுப்பராயன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தினுடைய தேவையை நிறைவேற்றுவது குறித்து எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் சமுதாயத்தினுடைய தேவைகளை நிறைவேற்ற வேண்டும், கல்வித் தேவை

யைப் பூர்த்திசெய்ய வேண்டும் என்பதற்காக சுயநிதிகல்வி என்ற பெயரால் வழிப்பறிக்கு லைசன்ஸ் வழங்கலாமா என்பதுதான் என்னுடைய கேள்வியாகும். ஏன் இத்தகைய அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. கல்வியைக் கொடுப்பது தவறு என்று நான் சொல்லவில்லை. வேத காலத்திலிருந்து இன்றைக்கு வரையில் கல்வியைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் அப்படி சொல்லிக் கொடுப்பதைப் பொறுத்த வரையில் பணம் பெறுவதையே குறியாகக் கொண்டு கல்வி போதிப்பதை வியாபாரத்தைப் போல் மாற்றிக்கொள்ள இந்த மாநில அரசு ஏன் அனுமதித்து இருக்கிறது. இப்படி அனுமதிப்பதன் மூலம் ஒருபுறம் கல்வி வியாபாரமாகி அதன் தரம் மலிந்துவிட்டது. இப்படி வியாபாரமாகிவிட்டதன் காரணத்தால் மறுபுறத்தில் ஏழை எளிய மக்களுக்கு கல்வியைப் பெறுகிற உரிமை மறுக்கப்பட்டுவிட்டது. எனவே, இது சட்டரீதியாகவும் சரி, நியாய ரீதியாகவும் சரி, மனிதாபிமான ரீதியாகவும் சரி பொருத்தமற்ற ஒன்று என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். பிற மாநிலங்களைச் சுட்டிக் காட்டினார்கள். இந்த மாநிலத்திலும் என்ன சொல்கிறார்கள்? நிதியில்லை என்று சொல்கிறார்கள். நிதி இல்லை என்பது உண்மைதான். அதற்காக அமைச்சரைக் குறை சொல்ல முடியாது; மாநில அரசைக் குறை சொல்ல முடியாது. ஆனால் நிதியில்லை என்பதற்காக இப்படி அனுமதிக்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். நிதியில்லை என்பதற்காகத்தான் பலபேர் பிக்பாக்கெட் அடிக்கிறார்கள். நிதியில்லை பலபேர் கிரிமினல் தவறுகளைச் செய்கிறார்கள்,. ஆகவே நிதியில்லை என்று சொல்லிச் செய்கிற அந்தக் குற்றங்களை அனுமதிக்க முடியுமா? எனவே நிதியில்லை என்பதற்காக இத்தகைய தவறுகள் கல்வித் துறையிலே அனுமதிக்கப்பட்டிருப்பது என்பது தமிழகத்தின் எதிர்காலத் தலைமுறையினருக்கு இழைக்கப்பட்டிருக்கிற மிகப் பெரிய துரோகமாகும் என்பதற்காகத்தான் இதை நான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதியில்லை என்பதற்காகப் பிக்பாக்கெட் அடிக்கிறார்கள்; நிதியில்லை என்பதற்காகத்தான் திருடுகிறார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். அவ்வாறு சொல்வது திருட்டைமறைமுகமாக ஊக்குவிக்கக்கூடியதாகும். ஆகவே அப்படிப்பட்ட வார்த்தை இடம் பெறாமல் இருப்பது நல்லது.

**திரு. கு. சுப்பராயன் :** மரண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருட்டை ஊக்குவிப்பதற்காக அல்ல. திருடுகிற குற்ற உணர்ச்சியைத் தூண்டுகிற சமுதாயத்தைக் கண்டிப்பதற்காகவே இயக்கம் நடத்திக் கொண்டிருப்பவர்கள் நாங்கள். மனிதனைத் திருடத் தூண்டுகிற, குற்றஉணர்வைத் தூண்டுகிற குற்றம் உள்ள சமுதாயத்தைக் தண்டிப்பதற்காகத்தான் நாங்கள் கட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம்.





(பிற்பகல் 1–30).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. கு. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து இங்கே மற்ற மாநிலங்களிலே இருக்கிற பிரச்னைகளைப் பற்றி குறிப்பிட்டார்கள். மராட்டியத்திே, கர்நாடகத்திலே, ஆந்திராவிலே சுயநிதிக் கல்விமுறை நடைபெறுகிறது என்று இங்கே சொல்லுகிறார்கள். நான் இங்கே குறிப்பிட விரும்புவது நல்ல உதாரணங்களை பிற மாநிலங்கயிலேயிருந்து எடுத்து கொள்ள வேண்டும். அதே கர்நாடக மாநிலத்தில 78-வது ஆண்டிலேயிருந்து அரசு ஊழியர்களுக்கு இந்திய நாடு முழுவதும் குடும்பத்தோடு சென்று வருவதற்கு உரிய இரு வழிப் பயணச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறதே அந்த நல்ல உதாரணத்தை தமிழ்நாடு பின்பற்றக் கூடாதா. ஏன் அந்த நல்ல உதாரணத்தைத் தமிழ்நாடு பின்பற்றாமல், சுயநிதிக் கல்வி என்ற தவறான உதாரணத்தை மட்டும் பின்பற்றுகிறது? நமக்கு எது சௌகரியமோ அதை மட்டும் பயன்படுத்திக் கொள்வது, நமக்கு உடன்பாடற்ற விஷயங்களை ஒதுக்கிவிடுவது என்பது நல்ல முன் உதாரணம் தானா, அது அண்ணா தந்த வழிமுறை தானா, அத்தகைய சிந்தனைகள் சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுமா. என்று மனதார சிந்திக்க வேண்டும் என்பதை உங்களுக்கே விட்டுவிடுகிறேன்.

அடுத்து இங்கே ஒரு மிக முக்கியமான விஷயம். கல்வித் துறையிலே பயிற்று மொழி பிரச்சனை பற்றி குறிப்பிட்டார்கள். நாங்கள் கூட எங்கள் இயக்கத்தின் சார்பாக மும்மொழிக் கொள்கையை வலியுறுத்தினோம். ஆனால் மும்மொழிக் கொள்கையை வலியுறுத்துகிறபோது காலப்போக்கில் அது வட மாநிலங்களில் இரு மொழிக் கொள்கையாகத்தான் நிலவுகிறது என்பதை உணர்ந்து, உண்மையிலேயே இன்றைக்கு மாநிலங்களிலே நிலவுகிற இருமொழிக் கொள்கையை தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்தின் காரணமாக ஒத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றுதான்; ஏனென்றால் வட மாநிலங்களிலே நடை முறையில் என்ன நடக்கிறது? அங்கே தென்னிந்திய மொழி ஒன்றும் போதிக்கப்படுவதில்லை. எனவே நடைமுறையில் இரு மொழிக் கொள்கை அங்கேயே நிலவுவதால், இந்த இரு மொழிக் கொள்கை தவிர்க்க முடியாத ஒன்று என்று அதை நாங்கள் வரவேற்கிறோம்.

ஆனால் ஒரு விஷயத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நீங்கள் சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தம் அற்றவர்களாக, மண்ணிலே வேர்விடாத மரங்களாக, இந்த அண்ணா

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நின்றுக் கொண்டிருக்கிறதே என்பதுதான் வேதனையாக இருக்கிறது. ஏனென்றால் தமிழ் பயிற்று மொழி, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்றெல்லாம் சொல்லுகிறீர்கள். ஆனால் நடைமுறையில் என்ன நடக்கிறது? இந்த மண்ணில் பிறந்த பச்சை தமிழ்க்குழந்தைகள் தங்கள் தாயோடு பேசி உறவு கொள்வதற்கு அன்னிய மொழி பயிற்றுவிக்கப்படுவதை நீங்கள் தடை செய்யவேண்டாமா. இந்த முறையைக் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது. இந்த முறை நீடிக்குமானால், 'மெல்லத் தமிழ் இனி சாகும்' என்ற வார்த்தைக்கு உயிர் வந்துவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாகத்தான் சொல்லுகிறேன். உண்மையிலேயே அப்படி ஒரு அன்னிய மொழியின் ஆங்கில மொழியின் மோகம் இங்கு வேரூன்றி வளருகிறது.

நீங்கள் வேறு மாநிலங்களிலே எல்லாம் தமிழ் மொழி பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று சொல்லுகிறீர்கள். பிற நாடுகளில் எல்லாம் கூட தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் தந்து, தமிழ் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று சொல்லுகிறீர்கள். பிறநாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழ்த் துறை வேண்டும் என்றெல்லாம் கூட பரவலாக பலப்பல சொல்லுகிறீர்கள். பாராட்டுகிறோம். ஆனால் தமிழ் தெருக்களிலே தமிழிலே பேசப்படுகின்ற உரிமை **சிறுகச் சிறுகப் பறிக்கப்படு**வதை எப்படி இந்த அரசு கண்டும் காணாமலும் இருக்கிறது என்பதுதான் எனக்குப் புரியவில்லை. அவற்றை மாற்ற வேண்டும். இந்தி மட்டும் அல்ல ஆங்கிலமும் தமிழை அழுத்துகிறது. ஆங்கிலம் தமிழை அழுத்துவதை நாம் அனுமதிக்க முடியுமா, அதுவும் முடியாது. அதையும் புரிந்துக் கொள்ள வேண்டும் என்பதை சொல்லிக் கொள்வதோடு, அதற்கு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள், தமிழில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பில் முதல் உரிமை கொடுக்கப்பட வேண்டும். தமிழில் பட்டம் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன் உரிமை, தாய் மொழிக்கல்வி கற்றுப் பட்டம் பெற்றவர்க்கு முன் உரிமை என்று அரசியல் சாசனத்தை திருத்த வேண்டும் என்று தமிழ்நாடு அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று உறுதியாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சி மீது உங்களுக்கு இருக்கிற பல்வேறு யோசனைகளைத் தெரிவித்திருக்கிறீர்கள். ஆனால் தமிழிலே பட்டம் பெறவேண்டும் என்று படிப்பவர்களுக்கு உதவித் தொகையாக வழங்குகிற தொகை ரூ. 180 தான். இது போதுமானது என்று நினைக்கிறீர்களா ? போதுமானது அல்ல. அதை நீங்கள் நிச்சயமாக உயர்த்த வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக மிக முக்கியமான விஷயம் கல்வி என்பது நம்பிக்கை ஊட்டுவதாக இருக்க வேண்டும். அவநம்பிக்கை ஊட்டுவதாக இருக்கக்கூடாது. ஆனால் தமிழ்நாட்டின் கல்வி முறை அவநம்பிக்கை ஊட்டுவதாகத்தான் இருக்கிறதே தவிர நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை.

நமது உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் கூட சில தினங்களுக்கு முன்னால் குறிப்பிட்டார்கள். ஜாதீய பெயர் எந்த வீதிகளின் பெயரோடும் இணைத்துக் கொள்ளக் கூடாது என்று உறுதியாக குறிப்பிட்டார்கள். அதிலே பெரியாருடைய உறுதி தென்பட்டது. உண்மைதான். ஆனால் நடைமுறையில் என்ன நடக்கிறது. எந்தக் கல்லூரியிலாவது ஜாதி பெயர் நீக்கப்பட்டிருக்கிறதா? மதப் பெயர் நீக்கப்பட்டிருக்கிறதா ? மக்களை ஒன்றுபடுத்தப்பட உத்வ வேண்டிய கல்வி ஆரம்ப அட்சரத்திலேயே பிரிவினைக்கு வித்தாவதை அனுமதிக்கலாமா? நீங்கள் தானே உத்தரவு போட்டீர்கள் ஜாதீய பெயர்களிலே எந்தப் பள்ளியும் கல்லூரியும் இயக்கப்படுவது கூடாது என்று. பெயர் மாற்றப்பட்டிருக்க வேண்டாமா, மாற்றுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள். மாற்றுவதற்கு உத்தரவு இட்டு விட்டால் மாற்றம் ஏற்பட்டு விடுமா, அதை அமலாக்குவதற்கு இதுவரையில் நடவடிக்கை இல்லை. இது சரிதானா இது பெரியார் வழி பகுத்தறிவு பாதைதானா என்பதை நான் தேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, அறிவியல் சம்பந்தப்பட்ட வரையில், அது பற்றி எல்லாம் நீங்கள் அவ்வளவு அதிகமாகப் பேசுவது பொருத்தமற்றதாகத் தெரிகிறது....

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, ஜாதியைப் பற்றி கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே தான் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். ஜாதி கூடாதா, ஜாதி இப்போது போய்விட்டதா, கல்லூரியிலும் பாடசாலையிலும் ஜாதி இல்லையா என்று கேட்கிறார்கள். கம்யூனல் ஜி.ஓ. கூட ஜாதியை வைத்துத்தானே வைத்திருக்கிறார்கள், அதுவும் வேண்டாம் என்று சொல்வதுதான் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையாக இருக்கிறதா? அதையும் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக கேட்கிறேன்.

**திரு. கு. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே' இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய கொள்கையை மிகத் தெளிவாக இந்தத் துறையில் அறிவித்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிந்திருக்கக் கூடுமென்று நினைக்கிறேன்,

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாக அறியவில்லை. கொஞ்சம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டும்.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே கம்யூனல் ஜி.ஓ. வைப் பொறுத்தவரையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மிகத் தெளிவாக அரசினுடைய நிலையை ஆதரிக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் நிலையை ஆதரிக்கிறது என்றால் கம்யூனல் ஜி.ஓ. இருப்பதை ஆதரிப்பது. அப்போது ஜாதிகள் இருக்கலாம் என்பது. ஜாதிகள் இருக்கிற வரையில் கம்யூனல் ஜி.ஓ. இருக்கும். அதுதான் இந்த அரசினுடைய கொள்கை. பெரியார் சொன்ன கொள்கை, அண்ணா சொன்ன கொள்கை, இந்த அரசு வைத்திருக்கிற கொள்கை. ஜாதிகள் என்பது இந்த நாட்டிலே இருக்கிற வரையிலும் கம்யூனல் ஜி.ஓ. இருக்கும். அதை கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொள்கிறது, நன்றி.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நயமாக திசை திருப்பு கிறார்கள் என்று நினைக்கிறேன். நான் சொல்ல வந்தது கம்யூனல் ஜி.ஓ.வைப் பற்றியல்ல. இப்போது அதுபற்றி பேசப் படவும் இல்லை. ஜாதி எதிர்ப்பை தன்னுடைய வாழ்நாள் முழுவதும் மேற் கொண்ட பெரியார் அவர்களின் பரம்பரை. . . .

மாண்புமிகு திரு.ப.உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே நான் சொல்ல விரும்புவது ஜாதியை கால மெல்லாம் எதிர்த்த தந்தை பெரியார் அவர்கள் தான் கம்யூனல் ஜி.ஓ.வை ஆதரித்தார்கள். ஆகவே, பெரியார், அண்ணா போன்ற வர்களை உங்களுடைய இஷ்டத்திற்கு இழுத்துக் கொள்ளக்கூடாது நான் தெரிந்துகொள்ள விரும்புவது ஜாதிகள் கல்லூரிகளில் இருக் கிறது. பள்ளிக்கூடங்களில் இருக்கிறது, போய் விட்டதா என்று கேட்டீர்கள். கல்லூரியில் விண்ணப்பம் கொடுக்கிற போது என்ன ஜாதி என்று கேட்கிறார்கள். ஒரு வேளை அதைத் தான் குறிப் பிடுகிறார்களோ என்று நான் எண்ணி கவலைப்பட்டு கேட்டேன். அப்படியென்றால் கம்யூனல் ஜி.ஓ.வை எதிர்க்க ஆரம்பித்து விடுவீர்களோ என்று எண்ணி உங்களுடைய கொள்கை, லட்சியம் என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்காக கேட்டேன்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே நான் சொல்வதை உறுதிப்படுத்துகிற நிலையில்அமைச் சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் குறிப்பிட



விரும்புவது ஜாதீய பெயர்களை தாங்கி நிற்கிற பள்ளிகளின் பெயர்களில், கல்லூரிகளில் பெயர்களில் மாற்றம் வேண்டுமென்று இந்த மாநில அரசு சொல்லியது அல்லவா ? அது மாற்றப்பட் டிருக்கிறதா என்றுதான் எனது பேச்சைத் திசை திருப்புகிற முறையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு இருக் கிறார்கள் என்றுதான் கருதுகிறேன். கம்யூனல் ஜி.ஓ.வைப் பொறுத்த வரையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை மிகத் தெளிவாக வெளியே சொல்லப்பட்டிருக்கிறது. அரசியல் இயக் கத்திலே பொறுப்பிலே இருக்கிறவர்கள் நிச்சயமாக ஒரு அர சியல் இயக்கத்தின் அசைவுகளை கணித்திருக்கக்கூடும், கவனித் திருக்கக்கூடும் என்ற நிலையில் நான் அதற்கு பதில் அளிப்பது என்னுடைய நேரத்தை விரயமாக்கும் என்று தான் அதன் விவரத் திற்குள்ளே போக விரும்பவில்லை.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே ஜாதியைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். நண்பர் சுப்பராயன் அவர்களிடமிருந்து ஒரு விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். இந்த ஜாதிப் பிரச்னையில் இத்தனை சிக்கல் இருப்பதால் வருமானத்தின் அடிப்படையில் இப்படி இப்படி சலு கைகளைவழங்கலாமென்று திட்டம் கொண்டு வந்தோமே, அந்தத் திட்டத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறதா, எதிர்க் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒப்புக் கொள்ளவில்லை. ஏனென்று சொன்னால் காலம் காலமாக அறிவைப் பெறுகிற உரிமையை மறுக்கப்பட்டிருந்த ஒரு தலை முறை மிக விரைவில் அறிவைப் பெற்று விடுமென்று கருத முடியாது என்பதால், அவர்களுக்கு வருமான அடிப்படையை ஒப்புக் கொள்ள முடியாது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நண்பர் சுப்பராயன் போன்ற இளைஞர்களுடைய துடிப்பான எண்ணங்களுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பாராட்டுதல்களை வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே பாராட்டுரைக்காக அல்ல. விவாதம் நடந்து கொண் டிருக்கிற நிலைமையில் அமைச்சர் அவர்கள் மறுபடியும்மறுபடியும் பிரச்னைகளை திசைத் திருப்புகிற முறையிலே தலையிடுவது என்பது அவ்வளவு பொருத்தமாக இல்லை என்பதைத் தங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திசைத் திருப்புவதற்காக அல்ல. சரியான திசையைக் காட்டுவதற்காக தான் அவர்கள் தலையிடுகிறார்கள். கம்யூனல் ஜி.ஓ.வை நீங்கள் ஆதரிக்கிறீர்களா அல்லது எதிர்க்கிறீர்களா என்று கேட்டார்கள். ஆதரிக்கிறோம் என்று தெளிவாகச் சொல்லி விட்டீர்கள். நீங்கள் குறிப்பிட்டீர்கள், எங்களுடைய அசைவுகளை நீங்கள் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்ற வகையில். அசைவுகள் ஒரே சீராக இருந்தால் புரிந்து கொள்ளலாம், அடிக்கடி மாறுபடுகிறது. நீங்களே கூட சொன்னீர்கள், மும்மொழித் திட்டத்தை ஒரு காலத்தில் நாங்கள் ஆதரித்தோம். பிறகு நிலைமையைப்பார்த்து கொஞ்சம் திருத்திக் கொண்டோமென்று சொன்னீர்கள். எந்த நிலைமையைப் பார்த்து எப்போது திருந்துகீறீர்கள் என்று நாங்கள் தெரிந்து கொள்வதற்காக தான் அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைக் கேட்டார்கள்.

**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலிலே தோணி மிதப்பது சமதரையில் போல் இருக்காது. அலை ஏறும்போது தோணியும் ஏறும், இறங்குகிற போது தோணியும் இறங்கும். அலையின் ஓட்டத்தைப் பொறுத்து தோணியினுடைய ஏற்றமும் இறக்கமும் இருக்கும் என்பது போலே......

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலில் போகும் போது ஏற்ற இறக்கம் இருந்தால் பரவாயில்லை. சமதரையில் போகும்போதே ஏற்ற இறக்கம் இருக்கிறது. அதனால் தான் கேட்டார்கள்.

**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு உதாரணமும் ஊனமானவை என்று ஜெர்மானிய பழமொழி ஒன்று உண்டு. ஆகவே, உதாரணத்தை உதாரணமாக பார்க்க வேண்டும். உதாரணத்திற்கு உயிர் கொடுத்துப் பார்ப்பது அவ்வளவு நல்லதல்ல.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உவமை என்பது உவமேயத்தோடு இணைந்தால் தான் சரியாக இருக்கும். உவமை மட்டும் தனியாக நிற்கக்கூடியதல்ல. உவமை மட்டுமே உண்மையாக மாறாது.

**திரு. கு. சுப்பராயன் :** மாண்புமிகுபேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்குள்ளே போக நான் விரும்பவில்லை. ஏனென்று சொன்னால் என்னுடைய நேரத்தை இதுமேலும் வீணாக்கும் என்பதாலே அந்த விவரத்திற்குள் நான் இப்போது போகவில்லை. அறிவியல் கருத்துக்களைப் பொறுத்தவரையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல



அண்ணாவைப் பற்றியோ, பெரியாரைப் பற்றியோ அல்ல' பின்பற்றக் கூடிய ஒருவர் சொல்லி வந்த கொள்கையிலேயிருந்து நழுவுகிறபோது அவற்றை விமர்சிப்பது எதிர் வரிசையில் இருப்பவர்களுடைய கடமையாக நினைக்கிறேன். அறிவியல் கருத்துக்களிலே இந்த மாநில அரசு உரியபடி மக்களை உஷார்படுத்துவதிலே, கூர்மைப்படுத்துவதிலே தன்னுடைய நியாயமான பங்கைச் செலுத்தவில்லை என்பதைத்தான் நான் கூற விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-40)

மேலும் இங்கே குறிப்பாக நூலகங்களைப் பொறுத்த வரையிலும் சில கருத்துக்கள் சொல்லப்பட்டு இருக்கிறது. நூலகங்களிலே எதிர்க் கட்சிகளின் பத்திரிகைகள் வாங்கத் தடையிருக்கிறதா ? அல்லது வாங்க அனுமதிக்கக்கூடாத எழுதப்படாத சுற்றறிக்கை ஏதாவது அனுப்பப்பட்டு இருக்கிறதா ? என்பது தெரியவில்லை. அப்படி ஏதாவது இருப்பினும், எதிர்க்கட்சிப் பத்திரிகைகளை நூலகங்களிலே கட்டாயம் வாங்கி வைக்க வேண்டும் என்பதை இந்த அரசு உத்தரவாக இடவேண்டும் என்பதையும், அத்தகைய உத்தரவை பிறப்பிக்குமா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதில் உரையிலே தெரிவிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் சட்டோபாத்யாயா அவர்களுடைய கல்விக் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தனியார் கல்வி நிறுவனங்களில் முழுக்க ஆசிரியர்களுக்கு பாதுகாப்பற்ற நிலைமை நிலவுகிறது. எனவே, அத்தகைய சூழ்நிலைகளுக்கு எதிரான ஆசிரியர்களுக்கு ஆதரவான ஒரு நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பதற்கு குறிப்பாக ஒரு உதாரணத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இதே சென்னையிலே உள்ள கோடம்பாக்கத்திலே ஜானகி ராமச்சந்திரன் கலாலயம் என்று ஒரு மெட்ரிகுலேசன் ஹையர் செகண்டரி ஸ்கூல் இருக்கிறது. அந்தப் பள்ளி அரசு அங்கீகாரம் வழங்கப்பட்ட பள்ளியாகும். அந்தப் பள்ளியில் ஒரு ஆசிரியர் கடந்த மார்ச் மாதம் டிஸ்மிஸ் செய்யப்பட்டார். என்ன காரியத்திற்காக டிஸ்மிஸ் செய்யப்பட்டு இருக்கிறார்? டியூசன் சொல்லிக் கொடுத்த காரணத்திற்காக டிஸ்மிஸ் செய்யப்பட்டு இருக்கிறார். டியூசன் சொல்லிக் கொடுப்பது என்பது பெரிய கிரிமினலா ? டியூசன் சொல்லிக் கொடுத்த காரணத்திற்காக அரசு அங்கிகாரம் பெற்ற ஜானகி ராமச்சந்திரன் கலாலயத்திலே இருக்கக்கூடிய ஒரு ஆசிரியர் வேலை நீக்கம் செய்யப்பட்டு இருப்பது நியாயம்தானா ?

[திரு. கு. சுப்பராயன்] [1986 ஏப்ரல் 17

இதே சென்னை கோடம்பாக்கத்திலே நடைபெற்றிருக்கிறது. இந்த முறை சரியல்ல என்பதோடு அங்கே இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு அரசு அறிவித்த சம்பளம் வழங்கப்படுவதில்லை. அரசு அங்கீகாரம் வழங்குகிறபோதே அரசு அறிவிக்கிற சம்பளத்தை வழங்க வேண்டும் என்று கன்டிசன் போடுகிறது. அந்தக் கன்டிசனை ஒப்புக்கொண்டு கையெழுத்துப் போட்டு பெர்மிசன் பெற்றுக் கொண்டவர்கள், அவற்றை நடைமுறைப்படுத்துவதில்லையே அவற்றின் மீது என்ன நடவடிக்கையை இந்த அரசு எடுத்து இருக்கிறது என்பதை நான் குறிப்பாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று எம்.ஜி.ஆர். ஹையர் செகண்டரி ஸ்கூல் என்று கோடம்பாக்கத்திலே ஒரு பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியிலே இருந்து மேற்குறிப்பிட்ட ஆசிரியர் நீக்கப்பட்ட சம்பவம் நடந்திருக்கிறது. அந்தப் பள்ளியைப் பொறுத்தவரைக்கும் ஆசிரியர்களுக்கு சம்பளம் தருவதில்லை என்ற நிலைமை தான் இருக்கிறது. எம்.ஜி.ஆர். ஹையர் செகண்டரி ஸ்கூலிலே தான் அந்த ஆசிரியர் வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார். இது குறித்து அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் கேட்டு, இறுதியாக இந்தப் புதிய கல்விக் கொள்கையில் அறிவித்து இருக்கிற பல்வேறு விஷயங்களைப் பற்றி தனியாக இந்த மாநில அரசு விவாதிக்க வேண்டும் என்று கடந்த முறைகூட வலியுறுத்தி இருக்கிறோம்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசுகின்றபோது, முதலிலே சொன்னது ஜானகி ராமச்சந்திரன் என்ற பள்ளியிலிருந்து ஆசிரியர் நீக்கப்பட்டார் என்று சொன்னார். பிறகு, இப்போது சொல்லும்போது, எம். ஜி. இராமச்சந்திரன் ஹையர் செகண்டரி பள்ளியிலிருந்து ஆசிரியர் நீக்கப்பட்டு இருக்கிறார் என்று சொல்கிறார். எனவே நான் கேட்டுக் கொள்வது, இரண்டு ஆசிரியர்கள் நீக்கப்பட்டார்களா? அல்லது இரண்டு பள்ளியும் ஒரே பள்ளிதானா? என்ற விவரத்தை விளக்கமாகச் சொன்னால் குழப்பமில்லாமல் இருக்கும்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொல்லியது தவறு. கோடம்பாக்கத்தில் உள்ள எம்.ஜி.ஆர். ஹையர் செகண்டரி ஸ்கூலில்தான் ஒரு ஆசிரியர் டியூசன் சொல்லிக் கொடுத்ததற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார். அந்த வேலை நீக்கத்தை சி.இ.ஓ. அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சி.இ.ஒ. அனுமதித்து இருக்கிறார் என்றால் ஆசிரியர் தவறு செய்திருக்கிறார் என்று அர்த்தம்.



1986 ஏப்ரல் 17]

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே டியூசன் சொல்லிக்கொடுப்பது என்பது தமிழ்நாட்டில்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளின்படி ஆசிரியர்கள் தவறு செய்தால் நடவடிக்கை எடுக்கிறார்கள்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதிமுறைப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாலே விதிமுறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதாலே அந்த நடவடிக்கை நியாயமாகிவிடமுடியாது என்பதற்காகத்தான், அந்தப் பள்ளி நிர்வாகம் பரமசிவன் கழுத்திலே இருக்கிற பாம்பு என்பதாலே தான் இந்த அதிகார துஷ்பிரயோகம் நடந்திருக்கிறது என்று நான் குற்றம் சாட்டுகிறேன். நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, டியூசன் சொல்லிக் கொடுத்த ஒரே காரணத்தால், குற்றம் சாட்டப்பட்டு, அந்தப் பள்ளியிலிருந்து வேலை நீக்கம் செய்யப்படுகிறார் என்றால், இத்தகைய நடவடிக்கை அவசியம்தானா? நியாயம் என்று அமைச்சர் அவர்கள் ஒப்புக்சொள்கிறார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடத்திலே இல்லை. சி.இ.ஓ. அவர்கள் அந்த நடவடிக்கையை ஆதரித்து இருப்பார்களானால், விதிமுறைப்படி அவர்கள் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்று பொருள், ஆசிரியராக இருக்கிற காரணத்தாலே தவறு செய்தால். நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் கருதுகிறாரா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் கொஞ்சம் நளினமாக சொல்லியிருக்கிறார்கள். பரமசிவன் கழுத்துப் பாம்பாக இருப்பதால், நடவடிக்கை எடுக்கப்பட்டதா? என்று தெரிவித்தார்கள். பரமசிவன் கழுத்துப் பாம்பாக இருக்கிற காரணத்தாலே சாதாரண பாம்புக்கு இருக்கிற உரிமை மறுக்கப்பட்டு விடக் கூடாது.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, குற்றத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதை பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் நடவடிக்கை எடுப்பதற்காகவே குற்றம் கண்டுபிடிக்கிற குற்ற உணர்வோடு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைத்தான் நான் குற்றச்சாட்டாக சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்றவர்கள் செய்தாலும் அந்த நிர்வாகம் அதைச் செய்யாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெளியிலே இருக்கிற ஒரு நிறுவனத்தைப் பற்றியோ மற்றவர்களைப் பற்றியோ எங்களிடம் முதலிலே அனுமதி பெற்றுச் சொன்னால் அது பற்றி அமைச்சரிடத்திலே சொல்லி விவரங்கள் பெற்று சொல்ல முடியும். நீங்கள் இதை மட்டும் சொல்லிவிட்டுப் போய்விடுகிறீர்கள். (குறுக்கீடு).

**திருமதி தா. இராசாம்பாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் கொண்டு வந்துள்ள கல்வி மானிய கோரிக்கையின் மீது ஒரு சிலக் கருத்துக்களை கூற விழைகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் ''தெருவெங்கும் பள்ளிகள்' என்று பாடிய பாட்டிற்கு இணங்க நிரம்ப உயர்நிலைப்பள்ளிகளை அளித்து உள்ளார்கள். வருட ஆரம்பத்தில் 10ம், 15ம் என்று அறிவித்தாலு கூட இறுதியில் பணம் கட்டியவர்கள் ஏமாறாத வகையில் அதிகப்படியான உயர்நிலைப்பள்ளிகளை திறந்து உள்ளார்கள். என்னுடைய தொகுதியில் இவ்வாண்டு 1985-86க்குள் கோவிந்தன்பாளையம் என்ற நடுநிலைப் பள்ளியை உயர்த்தி உயர்நிலைப்பள்ளியாக ஆக்கிக் கொடுத்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி உயர்நிலைப்பள்ளிகளை உயர்த்தும்போது அங்கே தலைமையாசிரியர், ஆசிரியர் போன்ற எல்லா ஆசிரியர்களையும் நியமிக்க வேண்டுமென்று அரசு ஆணை இருந்தபோதும்கூட, பல நேரங்களில் இது தாமதப்பட்டு ஓராண்டு கூட ஆசிரியர் இல்லாத நிலை இருக்கிறது அதைத் தவிர்க்கவேண்டுமென்று நான்கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கிக் கொண்ட அரசு அதிலேயுள்ள இன்னும் சில ஊழியர்களை, குறிப்பாக நடைப்பாட்டிகள்-மேலும் நியமனம் செய்யக் கூடாது என்று அரசு ஆணை இருக்கும்போது, ஒரு சிலபேர் பணியாற்றுகின்ற நடைப்பாட்டிகளை ஏன் அரசு இன்னும் அரசு ஊழியர்களாக எடுத்துக் கொள்ளவில்லை என்பது தெரியவில்லை. உடன் அதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதோடு, கட்டிடங்களை உள்ளாட்சித் துறையில் ஒப்படைத்திருக்கிறது. கட்டிடங்களை உள்ளாட்சித் துறையில் ஒப்படைத்ததோடு அவைகளைப் பழுது பார்ப்பதற்கான தொகையை ஒதுக்காத காரணத்தால் பல பள்ளிக்கூடங்கள் புதுப்பிக்கப்படாமலும், பழுதுபார்க்கப்படாமலும் இருக்கின்றன. பழுது பார்க்காமல் உள்ள அந்தக் கட்டிடங்கள் சீரழிந்து கொண்டிருக்கும்போது, புதிய கட்டிடங்களைக் கட்டும்போது ஊர் மக்கள் எங்களை மிகவும் சாடுகிறார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நல்ல முறையில் பழைய கட்-



டிடங்களாக உள்ளவைகளை பழுது பார்க்காமல் புதிய கட்டிடம் அங்கே மிக மோசமான நிலையில், இரண்டு மாதத்திற்குள் தரை பழுதுபட்டு விடுகின்ற ஒரு சூழ்நிலையில் கட்டுகின்ற கட்டிடத்தைவிட பழைய கட்டிடங்களைப் பழுது பார்ப்பது மேல் என்றுதான் அவர்கள் எங்களிடம் குறைப்பட்டு கொள்கிறார்கள்.

அதோடு ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கிவிட்டு கட்டிடங்களை மட்டும் உள்ளாட்சித்துறையினர் வைத்துக் கொண்டிருக்கும்போது சில அதிகாரிகள், ஆணையாளர்கள், அங்கேயுள்ள மரங்களை, கட்டிடம் இல்லாத நிலையில், மர நிழலில் படிக்கின்ற அந்த மாணவ மாணவியர்கள் இருக்கின்ற அந்த மரத்தை ஏலம் விட்டதாகக் கூறி அந்தத் தழைகளை வெட்டி விடுகிறார்கள். அங்கேயுள்ள தலைமையாசிரியர்களுக்குக்கூட தகவல் கொடுக்காமல் செய்துவிடுகிற காரணத்தால் அந்தக் குழந்தைகள், அந்த நிழலில் படிப்பதைக்கூட தவிர்க்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே நிர்வாகத்தை எடுத்துக்கொள்ளும்போது அதிலுள்ள கட்டிடம் மற்றும் ஊழியர்கள் அனைவரையும் அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை நான சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நடுநிலைப் பள்ளிகளிலே பயிலும் மாணவர்களுக்கு, உயர்நிலைப்பள்ளிகளிலே, 6, 7, 8 வகுப்புகளில் படிக்கின்ற அந்த மாணவர்களுக்கு உரிய வசதி வாய்ப்புகள், நடுநிலை, ஆரம்பப் பள்ளிகளிலே பயிலும் மாணவர்களுக்கு கிடைப்பதில்லை. காரணம் அங்கே பி.டி., ஆசிரியர் பாடம் சொல்லிக்கொடுக்கிறார். ஆனால், 6, 7, 8 வகுப்பிலே, நடுநிலைப் பள்ளியிலே படிக்கின்றவர்களுக்கு செகண்ட்ரி கிரேட் ஆசிரியர் பாடம் சொல்லிக் கொடுக்கிறார். ஆக, அதைத் தவிர்ப்பதற்காக நடுநிலைப் பள்ளிகள் அனைத்திலும், ஆரம்பப்பள்ளியிலிருக்கின்ற பி.டி. படித்த ஆசிரியர்களை உயர்த்தி நடுநிலை பள்ளி தலைமையாசிரியர்களாக அமர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு உயந்நிலைப் பள்ளியிலே மற்ற ஆசிரியர், கிராப்ட் பி.இ.டி. போன்றவர்களும் இருக்கிறார்கள். இதைப்போன்று அனைத்து நடுநிலைப் பள்ளிகளிலும் அந்த ஆசிரியர் இடங்களை நிரப்ப வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு அறிவியல் ஆய்வுக் கூடம் முழுமையாக இல்லை என்று ஒரு சில இடங்களில் சொல்லப்படுகிறது. இருந்தாலும் அவர்களுக்கு முழுமையாக

[திருமதி தா. இராசாம்பாள்] [1986 ஏப்ரல் 17

எல்லா இடங்களுக்கும் இந்த அறிவியல் ஆய்வுக் கூடங்களைக் கொடுக்க வேண்டும். குறிப்பாக இதற்கு ஒரு வகுப்பில், அதுவும் கிராமங்களில் படிக்கின்ற 5 ஆவது வரை இருக்கின்ற அந்தப் பள்ளியில் 80–100 மாணவர்கள் இருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-50)

அவர்களுக்கு 2 ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்றால் அந்த 2 ஆசிரியர்களில் ஒருவர் பணி காரணமாக வெளியில் சென்று விட்டால் ஒரே ஒரு ஆசிரியர் தான் அந்தப் பள்ளியை கண்காணிக்கவேண்டிய ஒரு நிலை ஏற்படுகிறது. இன்னும் சில இடங்களில்—ஓர் ஆசிரியர் பள்ளி இருக்கக்கூடாது என்று அரசு ஆணை இருந்தும் கூட—ஓர் ஆசிரியர் பள்ளிகள் நடந்துகொண்டு வருகின்றன. ஆக இதைத் தவிர்ப்பதற்கு 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறையைக் கொண்டு வர வேண்டும். பல ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வேலை இல்லாமல் வெளியில் இருக்கிற சூழ்நிலை இருப்பதால் 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் முறையை கொண்டு வருவதில் அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் இருக்காது என்று கருதுகிறேன். இங்கே நகரத்தில் பயிலும் மாணவர்களுக்கு மற்றவர்கள் ஒத்துழைப்போடு அது உடனடியாக நிறைவேற்றப்பட்டுவிடுகிறது. ஆனால் கிராமத்தில் ஒரு ஆண்டுக்கு மாவட்டத்திற்கு 5 ஆசிரியர்கள், 10 ஆசிரியர்கள் என்று கொடுக்கும்போது ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆசிரியர் கூட வருவது இல்லை. ஆனால் நாம் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களின் தொகையை அதிகரித்துக் கொண்டு போகிறோம். ஆனால் ஆசிரியர்களுடைய அந்த விகிதாச்சாரம் அந்த அளவுக்கு நாம் இன்னும் உயர்த்தி நியமிக்கவில்லை. ஆகவே ஆரம்ப பள்ளிகளில் கிராமத்தில் படிக்கும் மாணவர்கள், நகரத்தில் படிக்கும் மாணவர்களோடு போட்டிப்போட்டுக்கொண்டு வரமுடியவில்லை. அப்படி போட்டிப்போட்டுக்கொண்டு வரவேண்டும் என்று சொன்னால் அவர்களுக்கு ஆசிரியர்களை போதுமான அளவுக்கு நியமித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு எல்லாம் ஆரம்பப்பள்ளி டிஸ்ட்ரிக் போர்டு இருந்த போது ஜூன் மாதம் முதல் வாரத்திற்குள்ளோ அல்லது 15 தினங்களுக்குள்ளோ ஆசிரியர்களை மாறுதல் போட்டு அவர்கள் எல்லாம் அவர்களுடைய இடத்திற்குச் சென்று சேர்ந்து விடுகிறார்கள். ஆனால் இன்றைக்கு வருடம் முழுவதும் ஆசிரியர்களுக்கு மாறுதல் போடப்பட்டு வருகிறது. ஆனால் அதிகாரிகள் சொல்லலாம், உங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் இதற்கு உறுதுணையாக இருந்து எங்களை வற்புறுத்துகிறீர்கள் என்று. ஆனால் இதில் ஒரு நல்ல நியாயமான முடிவை எடுத்து சமமாக எல்லோருடைய விருப்பம் ஆனாலும் அல்லது அட்மினிஸ்ட்ரேட்டிவ்



1986 ஏப்ரல் 17] [திருமதி தா. இராசாம்பாள்]

மாறுதல் ஆனாலும் ஒட்டு மொத்தமாக மே மாதத்தில் மாறுதல் போட்டால் ஜூன் மாதத்தில் அவர்கள் சென்று அடுத்த பள்ளியில் சேருவதற்கு ஒரு சூழ்நிலை ஏற்படும். இது பள்ளி நிர்வாகத்திற்கு உறுதுணையாக ஏற்படுவதோடு அந்த ஆசிரியர்களின் பிள்ளைகளை ஒரு பள்ளியில் சேர்த்து விட்டால் இன்னொரு பள்ளிக்கு எடுத்துக் செல்வது என்பது மிகக் கடுமையான காரியமாக இருக்கிறது.

அதோடு இன்றைக்கு கணவனும் மனைவியும் ஒரு சேர்ந்து அவர்கள் பணி புரிய வேண்டும் என்று அரசு ஆணை இருந்த போதும் கூட பல நேரங்களில் இது தவிர்க்கப்பட்டு வேண்டும் என்றே, நிர்வாக காரணமாக இருந்தால் பரவாயில்லை, அவர்களைப் பிரிக்க வேண்டும் என்ற காரணத்தால் பிரித்துப் போடுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதைத் தவிர்த்து கணவன் மனைவியையும் ஒரு சேர ஒரு பள்ளியில் அல்லது மிக அருகில் உள்ள பள்ளியில் அவர்களைப் போட ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நிரல் முறை என்று ஒன்று முன்பு இருந்தது. செப்டம்பர் மாதத்தில் பிள்ளைகள் அதிகமாக இருந்தால் அதற்காக குறைவாக பிள்ளைகள் இருக்கும் பள்ளியில் உள்ள ஆசிரியரை மாறுதல் செய்து நியமிக்க வேண்டும்.

ஆனால் இன்றைக்கு அந்த முறையே மாற்றப்பட்டு செப்டம்பர் மாதத்தில் அதை கவனிக்காமல் இருக்கிற சூழ்நிலை நிர்வாகத்தில் இருக்கிறது. அந்த முறையே இப்போது நிர்வாகத்தில் இல்லை என்று நான் சொல்லுவேன். ஆகவே அந்த நிலையை மாற்றி அமைக்க வேண்டும். தற்போது சாதாரணமாக பஸ் போக்குவரத்து அல்லது கடைகள் வசதிகள் இருக்கின்ற அந்த கிராமங்களில் உள்ள பள்ளிகளுக்கு மட்டும் போஸ்ட்டு சேங்ஷன் செய்து 5 ஆசிரியர்கள் இருப்பார்களானால் நிர்வாகத்தில் உள்ள அதிகாரிகள் அங்கே எல்லோரும் கேட்பதால் அந்த இடத்திற்கு 10 ஆசிரியர்களை நியமித்து விடுகிறார்கள். ஆனால் கேட்பார் அற்ற உள் கிராமங்களில் பஸ் போக்குவரத்து வசதி, சாலை வசதி இல்லாத இடங்களில் 5 ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று சொன்னால் அங்கே 2 ஆசிரியர்கள், 3 ஆசிரியர்கள் தான் பணி புரிகிறார்கள். நான் இவைகளை எல்லாம் ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், பல முறை எடுத்துக் கூறியும், பல முறை எழுத்து மூலம் கொடுத்தும் அது சரியாக முறையாக அதை நடைமுறைப்படுத்தவில்லை என்ற காரணத்தால் தான் நான் இதை தமிழ்நாடு முழுவதும் ஆரம்பப் பள்ளிகளில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பணி காரணமாக ஏ. ஈ. ஓ. அலுவலகத்திற்கு இன்றைக்கு ஊராட்சி ஒன்றிய பள்ளிகளிலிருந்து ஆசிரியர்கள் 5 பேரை 6 பேரை ரெகுலராக வருடம் முழுவதும் எடுத்துக் கொண்டு

விடுகிறார்கள். அப்படி அவர்கள் அங்கே போய் பணி செய்வதால் தொடர்ந்து இங்கே பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இடையூறாக இருக்கிறது. ஆக அந்த ஆசிரியர்கள் வந்து பணி புரியும் அந்த நிலையை விடுத்து மேலும் ஏ.ஈ.ஓ. அலுவலகத்திற்கு உதவியாளரையோ, இளம்நிலை உதவியாளரையோ நியமனம் செய்து அந்தப் பணியை கவனிக்கச் செய்யலாம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு ஆசிரியர்கள், 300 ஆசிரியர்கள் இருந்த இடத்தில் 450 பேர் பணிபுரிகிறார்கள், என்று சொன்னால் அதற்கான இளநிலை உதவியாளர்களையும் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும்.

எல். டி. சி. ஏற்கனவே அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை செல்வதற்கு மட்டும் கொடுக்கப்பட்டது. இன்றைக்கு சென்று வருவதற்கு 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொடுக்கப்படுகிறது. அது கூட, மே மாதத்தில் சென்று வந்தால், ஜூன், ஜூலையில் கொடுக்கப்படுவது இல்லை. வருட இறுதியில் ஏறத்தாழ மார்ச் கடைசியில், அவர்கள் செல்வதற்கு மேல் 3 பங்கு தொகையைக் கொடுத்து, அவர்கள் அனுபவிக்க முடியாத நிலை இருக்கிறது.

இன்றைக்குக் கூட, தலை வாசல் ஊராட்சி ஒன்றியத்தில் இலட்சக்கணக்கில் தொகையைக் கொடுத்து, ஆனால் 10 பேர் தான் சென்றிருக்கிறார்கள். அதை முன் பணமாக அளிக்க முடியாது. சரண்டர் செய்யத் தான் வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, அவர்கள் விண்ணப்பித்த அனைவருக்கும் கொடுக்கிற வாய்ப்போ, அல்லது அதிகப்படியானவர்களுக்குக் கொடுக்கிற ஒரு வாய்ப்பையோ ஏற்படுத்த வேண்டும். அதை அரசாங்கம் அனுமதித்து இருந்தாலும் கூட, ஆசிரியர்கள் அதை அனுபவிக்க இயலவில்லை என்ற காரணத்தினால் அதைக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து, முதியோர் கல்வி, ''அடல்ட் எஜுகேஷன்''. எங்களுடைய தொகுதியில் இரண்டு ஊராட்சி ஒன்றியங்களில் அதை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி. அதோடு அதில் பணிபுரிபவர்களுக்கு 50 ரூபாய் சம்பளமாகக் கொடுக்கிறார்கள். குறிப்பாக, அதிகமான பெண்கள், 10 ஆம் வகுப்பு படித்து விட்டு அந்தப் பணிக்கு வருகிறாகள். $1\frac{1}{2}$ மணி நேரம் இரவில் முதியவர்களுக்கும், மற்றும் இருக்கும் சிறு பிள்ளைகளுக்கும், 15 வயதுக்கு மேற்பட்டவர்களைப் பயிற்றுவிக்கின்ற பணியில் அவர்கள் ஈடுபடுகிறார்கள். அவர்களுக்கு அரசு இன்னும் சற்று உயர்த்திக் கொடுத்தால் நன்றாக இருக்கும். காரணம், அவர்களைப் பள்ளிக்கு வரவழைக்கும் போது, மிட்டாய், வெற்றிலைப் பாக்கு போன்ற ஏதாவது ஒன்று வாங்கிக் கொடுத்தால் தான் அவர்கள் படிக்க வருகிறார்கள். கல்வியின் பயனை அறிவிக்கவே அவர்களுக்கு 2, 3 மாதம் ஆகிறது.



கிராமங்களில் பாட்டு, கதை, கலை, நடனம் போன்றவைகள் மூலம் அவர்களை ஈர்க்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, சம்பளத்தைச் சற்று உயர்த்திக் கொடுத்தால் நன்மையாக இருக்கும். அதே பள்ளிகளுக்கு சூப்பர்வைசர்களாக இருப்பவர்கள், பி. டி. ஆசிரியர்கள் தான். அவர்களுக்கு 600 ரூபாய் என்று கொடுத்து வருகிறார்கள். அதோடு, பி.டி. முடித்தவர்கள் எல்லாம் இன்றைக்கு பி.டி. ஆசிரியர்களாக 5, 6 ஆண்டுகள் சர்வீசில் இருந்து, இன்கிரிமென்ட் பெற்று ரெகுலரைஸ் பண்ணி, தன்னுடைய பணிகளை வரன்முறைப்படுத்திக் கொண்டு பணி செய்து வருகிறார்கள். ஆனால் அவர்கள் வேலை கிடைக்காத காரணத்தினால், சூப்பர்வைசர்களாகச் சென்று இன்று வரை அந்த ரூ. 600-ஐத் தான் பெற்று வருகிறார்கள். அதிகாரிகளிடம் அணுகிக் கேட்ட போது அதை மாற்றி அமைக்க முடியாது என்று கூறினார்கள். இருந்த போதும், ஏற்படுகின்ற பி.டி. காலி ஸ்தானத்தில் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்கள் என்.ஓ.சி. வாங்கிக் கொடுத்து பதிவு செய்து வருகிறார்கள். தொடர்ந்து பதிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வயது வரைமுறையைத் தளர்த்தி -- அவர்கள் 6, 7 ஆண்டுக் காலம் இருந்தால் 32, 33 வயது ஆகி விடுகிறது—எனவே, அதைத் தளர்த்தி, பி.டி. ஆசிரியர்கள் பணி இடம் கிடைக்க ஆவன செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுக்கு ஒரே ஒரு அரசுக் கலைக் கல்லூரி ஆத்தூரிலே இருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் அந்தப்பக்கம் வரும் போது ஒரு முறை அந்தக் கல்லூரியைப் பார்வையிட்டால் பரவாயில்லை. ஏனென்றால், 6 ஆண்டுகளாக அதைப் பற்றி பிரச்சினைகளைச் சொல்லியும்கூட, ஒன்றுகூட இன்னும் செய்யப் பெறவில்லை. நிலம் நிறைய இருக்கிறது. பக்கத்திலே வட சென்னிமலை கோயில் இருக்கிறது. நிலம் இருந்தும் கட்டிட வசதி இல்லாமல் ஆசிரியர்கள் போக்குவரத்து வசதியில்லாமல்— 2 கிலோ மீட்டர் உள்ளே செல்ல வேண்டும் என்ற காரணத்தால், அங்கே வருகின்ற புரொபசர்கள், லெக்சரர்கள் கூட அங்கே தங்குவது இல்லை. அருகிலுள்ள ஆத்தூரில் தங்கிக் கொள்கிறார்கள். அப்படி இருக்கின்ற சூழ்நிலையில் மாணவர்களுக்கு ஒரு லைப்ரரி கூட வைத்துக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது. எனவே, அங்கு வைக்கின்ற புத்தகங்களை கரையான் அரித்துவிடுகிறது. கல்லூரிக்குக் காம்பவுண்ட் கிடையாது.

ஆண், பெண், இருபாலரும் படிக்கின்ற அந்தக் கல்லூரிக்கு எந்தவித வசதி வாய்ப்பும் இல்லாமல் இருக்கிறது. ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினரும், நானும் பலமுறை கேட்டும் கூட, என்ன காரணமோ எதுவும் கிடைக்கவில்லை. அதற்கு ஒரு விடுதி வேண்டும் என்று கேட்டு இருந்தோம். விடுதி கேட்கும் போது, அரசாங்கம் என்ன சொல்கிறது என்றால், அங்கே வாடகைக் கட்டிடம் பிடித்துக் கொடுத்தால் விடுதியைக் கொடுக்கிறோம் என்கிறார்கள். மாணவர் விடுதியை அனுமதிப்போம் என்கிறார்கள். வனாந்திரம் போல் உள்ள இடம். கோயில் மட்டும் தான் இருக்கிறது. எங்களுக்கு கிடைத்த இடம், வசதி அது தான். அந்த இடத்தில் விடுதிக்குக் கட்டிடம், வாடகைக்கு கொடுக்க வேண்டும் என்றால் உண்மையிலேயே என்றைக்கும் அது முடியப் போவதில்லை.

முட்டை முந்தியா, குஞ்சு முந்தியா என்பதைப் போல அதற்கு ஒரு விடுதியை அனுமதித்து, அனுமதித்த பின், ஆத்தூரிலேயாவது ஒரு கட்டிடத்தைப் பார்த்து அமர்த்த முடியும். அதற்கு முன் எங்களால் எதுவும் செய்ய முடியாது. அந்த மாணவர்கள் படிக்க வசதி அற்ற சூழ்நிலை. அந்த கிராமத்திற்கு என்று இருக்கிற ஒரே ஒரு அரசு கல்லூரியை மேன்மைப் படுத்திக் கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-00)

அங்கே பி. காம். வகுப்பு வைப்பதற்கு வசதியில்லை. பி.ஏ., பி.எஸ்.ஸி., ஆகிய வகுப்புகள் ஷிப்ட் சிஸ்டத்தில்தான் நடக்கின்றன. எம். ஏ. தமிழ் கிடையாது, இங்கிலீஷ் லிட்ரேச்சர் கிடையாது. இருக்கிற ஒருசில மாணவர்களும் ஷிப்டு சிஸ்டத்திலேதான் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே இருந்த கல்லூரி முதல்வர் சரியாக அக்கறை எடுத்துக் கொள்ளாத நிலையில் இன்றைக்கு இருக்கிற முதல்வர் பொறுப்பேற்றுக் கொண்டு நகரத்திலே இருக்கிற கல்லூரியோடு போட்டி போடுகிற நிலையை நான் ஏற்படுத்திக் கொடுக்கிறேன் என்று சொல்லியும் வசதிகள் செய்து கொடுக்கவில்லை, ஆகவே ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன.

அந்தக் கல்லூரி நீண்ட நெடுநாட்களாக நடைபெற்று வந்தாலும் கூட யூனிவர்சிடியின் ரிகக்னிஷன் கிடைக்கவில்லை. அதற்கும் ஆவன செய்ய வேண்டும். ஆத்தூர் பள்ளியிலே 3000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நிர்வாகம் நடத்தமுடியவில்லை என்ற நிலைமை இருக்கிறது. அதை இரண்டாகப் பிரித்துக் கொடுத்தால் நல்லது. ஆகவே அதை இரண்டாகப் பிரிக்க வேண்டும்





அல்லது ஒன்றை உயர்நிலைப்பள்ளியாகவும் இன்னொன்றை மேல்நிலைப் பள்ளியாகவும் தனித்தனியாக ஆக்கிக் கொடுத்தால் கூட பரவாயில்லை; அதைச் செய்து கொடுக்க வேண்டும்.

ஆசிரியர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அவைகளைப் பழுது பார்க்கவில்லை. மேலும் கட்டிக் கொடுக்கிற நிலையும் இல்லாத நிலையில் உள் கிராமங்களிலே இருக்கிற ஆசிரியர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக்கொடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்து இங்கே பி.இ.டி. ஆசிரியர்களைப் பற்றிச் சொன்னார்கள். ஆண்கள் அதைப் பயில்வதற்குப் பள்ளிகள் இல்லையென்றாலும் கூட ஆனால் உடற்பயிற்சியைப் பயில்வதற்கு பெண்களுக்குப் பள்ளிகள் வேண்டும். மருத்துவ ரீதியில் அது சாலச் சிறந்தது. பிற்காலத்தில் அவர்களுடைய உடலைப் பாதுகாக்க அதிகமாக மருத்துவம் தேவைப்படாமல் இருக்கலாம். ஆகவே பெண்களுக்காக உடற்பயிற்சிப் பள்ளிகளை ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளி ஒன்றிரண்டு இடங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை ஆத்தூருக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு எத்தனையோ எஞ்சினிரியங் கல்லூரிகள் திறக்கப்படுகின்றன என்றாலும் கூட, எஞ்ஜினியரிங் படித்து முடித்தவர் ஒருவர் இருக்கிறார் என்றால், டிப்ளமோ படித்தவர்கள் 3 பேரும் ஐ.டி.ஐ. படித்தவர்கள் 6 பேர்களும் தேவை என்று சொல்கிறார்கள், ஆகவே எஞ்சினியரிங் கல்லூரிகளை மட்டும் உருவாக்கிவிட்டு டிப்ளமோ படிக்க, ஐ.டி.ஐ. படிக்க வசதியில்லாமல் போகக்கூடாது, ஆகவே அந்தப் பள்ளிகளையும் உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். இல்லையென்றால் அவர்களுக்கு வேலை கொடுக்க முடியாத நிலைமை உருவாகும். பி.ஜி. படிக்கிற பெண் பிள்ளைகள் என்னிடம் மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு விடுதியிலே உணவுப் பண்டங்களின் விலை அதிகமாகப் போட்டு, மெஸ்ஸில் அதிகமாயிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி நிர்வாகத்தைக் கேட்டால் பொருள்களை கூட்டுறவுக் கடைகளிலே வாங்கினால் அங்கே சப்ஸ்டன்ஸ் நன்றாக இல்லை என்று எழுதியே கொடுத்திருக்கிறார்கள் என் பிள்ளைகள் சென்னையில் படிக்கிறார்கள். 1982 இல் 65 ரூபாய்க்கு மெஸ் பில் வந்தது. இன்றைக்கு 160 ரூபாய்க்கு வந்திருக்கிறது. காரணம் என்ன என்று புரியவில்லை. நாம் ஸ்காலர்ஷிப் மாதம் 150 ரூபாய் கொடுத்தால் பரவாயில்லை. ஆனால் சொற்ப தொகை

[திருமதி. தா. இராசாம்பாள்] [1986 ஏப்ரல் 17

கொடுக்கிறோம் வருடத்திற்கு மாதம் 100 ரூபாய் என்று ஏறிக் கொண்டு போகிற நிலை இருக்கிறது. இதனால் பெற்றோர்கள் சிரமப்படுகிறார்கள். ஆகவே அரசு இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இன்னும் பல விஷயங்கள் கூற வேண்டுமென்றாலும் நேரம் இல்லாத காரணத்தினால் இத்தோடு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (18—4—1986) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-03 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

67. பெரியார் அங்காடி குழுவினை அமைப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 14—8—1985 ஆம் நாளிட்ட 1451 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

103. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு சாராவி கலந்த தயாரிப்புப் பொருட்கள் (பன்மாநில தொழில்-வர்த்தக) கட்டுப்பாட்டு விதிகளை வகுப்பது குறித்து மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 22—8—1985 ஆம் நாளிட்ட 842 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

104. கோரிக்கை எண். 17—தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக்குறிப்பு 1986—87 (தமிழ், ஆங்கிலம்).

105. பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி பற்றிய செயல்முறைத் திட்டம் 1986—87 (ஆங்கிலம்).

106. தமிழ்நாடு அரசின் அறிவியல்—தொழில் நுட்பவியல் மீதான கொள்கை தீர்மானம் (தமிழ் ஆங்கிலம்.)



1986 ஏப்ரல் 17]

107. 'கல்வி — ஒரு சவால் — ஒரு கொள்கை தொலை நோக்கு' என்கிற புத்தகம் (தமிழ்).

108. கல்வி — ஒரு சவால் — ஒரு கொள்கை தொலை நோக்கின் பின் இணைப்புகள் (தமிழ்).

109. தமிழ்நாடு 1986ம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1986) இணைப்புடன்.

110. ஊரக வளர்ச்சி திட்டங்கள் பற்றிய சாதனை அறிக்கை, 1985—86 (தமிழ்).

111. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (ஒன்பதாவது பட்டியல்).

[1986 ஏப்ரல் 17

இணைப்பு

(498 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

1. தோற்றுவாய்.

கல்விச் செலவும் மாநில வரவு-செலவுத் திட்டமும்.

கல்விக்காக 1986-87 ஆம் ஆண்டில் ''மானியக் கோரிக்கை 17—கல்வி'' இன் கீழ் ஒதுக்கியுள்ள ரூபாய் 551 கோடி அவ்வாண்டு வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூபாய் 2,451 கோடியில் 22 விழுக்காட்டுக்கும் அதிகமாகும்.

2. கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1986-87 வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு:—

| | 1986-87 வரவு-செலவு மதிப்பீடு | | |
|---|---|---|---|
| | திட்ட மல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 259. அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றின் கட்டட பராமரிப்புச் செலவு. | 160 | .. | 160 |
| 265. பிற நிருவாகப் பணிகள்—மாவட்ட விவரச் சுவடிகள். .. | .. | 3 | 3 |
| 268. பலவகை—அகவிலைப் படிக்காக மொத்த நிதி ஒதுக்கீடு — | 4,66 | .. | 4,66 |
| 277. கல்வி— | | | |
| 1. தொடக்கக் கல்வி .. | 2,37,37 | 37,13 | 2,74,50 |
| 2. உயர்நிலைப்பள்ளிக் கல்வி .. | 1,37,39 | 1,68 | 1,39,07 |
| 3. மேல்நிலைப்பள்ளிக் கல்வி .. | 35.18 | 1,88 | 37,06 |
| 4. கல்லூரிக் கல்வி .. | 44,59 | 6,73 | 51,32 |



1986 ஏப்ரல் 17].

| | 1986-87 வரவு-செலவு மதிப்பீடு | | |
|---|---|---|---|
| | திட்ட மல்லாச் செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) |
| 277. கல்வி—தொடர்ச்சி. | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 5. சிறப்புக் கல்வி—வயது வந்தோர் கல்வி, தமிழ் வளர்ச்சி முதலியன. | 2,18 | 4,37 | 6,55 |
| 6. விளையாட்டும், இளைஞர் நலனும் மற்றும் தேசீய மாணவர் படை. | 3,38 | 1,89 | 5,27 |
| 7. தொழில் நுட்பக் கல்வி | 15,23 | 4,65 | 19,88 |
| மொத்தம் | 4,75,32 | 58,33 | 5,33,65 |
| 278. கலை, பண்பாடு— | | | |
| நூலகங்கள் ... | 5,39 | 26 | 5,65 |
| ஆவணக் காப்பகங்கள் | 37 | 10 | 47 |
| நுண்கலைக் கல்வி: கலை கைத்தொழில் கல்லூரிகள் | 36 | 12 | 48 |
| இசைக் கல்லூரிகள் .. | 16 | 6 | 22 |
| கலை, பண்பாடு ஆகியவற்றின் மேம்பாடு. | 10 | 72 | 82 |
| தொல்பொருள் ஆராய்ச்சி | 22 | 18 | 40 |
| அருங்காட்சியகங்கள் .. | 28 | 15 | 43 |
| மொத்தம் .. | 6,88 | 1,59 | 8,47 |
| 279. ஏனைய அறிவியல் பணிகள். | .. | 2,07 | 2,07 |
| 288. சமூகப் பாதுகாப்பும் நலனும். | 18 | .. | 18 |
| மொத்தம்—மானியக் கோரிக்கை ''17—கல்வி''. | 4,88,64 | 62,02 | 5,50,66 |

[1986 ஏப்ரல் 17

துறைவாரியாக நிதி ஒதுக்கீடு விவரம் வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| கல்வித் துறை .. | 4,87,38 | 58,26 | 5,45,64 |
| மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை. | .. | 2,59 | 2,59 |
| தமிழ் வளர்ச்சி— பண்பாட்டுத் துறை. | 1,26 | 1,17 | 2,43 |
| மொத்தம் .. | 4,88,64 | 62,02 | 5,50,66 |

3. மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர, பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள், கடன்கள் முதலியவற்றிற்காகப் பிற மானியக் கோரிக்கைகளின் கீழ் 1986–87 இல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு :—

| | 1986–87 வரவு-செலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்டமல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| (அ) வருவாய்க் கணக்கில் செலவு— | | | |
| மானியக் கோரிக்கை 28. | | | |
| சமுதாய வளர்ச்சிப் பணிகள்—ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியைகளுக்கு வீடுகள். | .. | 9 | 9 |
| சமூகக் கல்வி | .. | 10 | 10 |
| நகராட்சிப் பள்ளிக் கட்டிடங்களுக்கான மானியம். | | 30 | 30 |
| கோரிக்கை—37. பொதுப் பணி—அரசுப் பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள், சிறு பணிகள். | 56 | 8 | 64 |
| 66. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம். | 20,23 | .. | 20,23 |
| 309. உணவு .. .. | 41,80 | 51,95 | 93,75* |

* "309. உணவு" என்னும் தலைப்பில் உள்ள நிதி ஒதுக்கத்தில் ஒரு பகுதி இளஞ்சிறார் சத்துணவுத் திட்டத்தைச் சார்ந்ததாகும்.



1986 ஏப்ரல் 17]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| (ஆ) வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவு:— | | | |
| 477. கல்வி, கலைகள், பண்பாடு ஆகியவற்றிற்கான மூலதனச் செலவு—அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றிற்கான கட்டடங்கள். | 4 | 6,78 | 6,8 |
| 677. கடன்கள் :— | | | |
| தேசீய கடன், படிப்பு உதவித் தொகைகள். | .. | 25 | 25 |
| தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன். | 4 | .. | 4 |
| 767. தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்குக் கடன்கள். | 4,89 | .. | 4,89 |
| மாநகராட்சிகளுக்கு பள்ளிக் கட்டட கடன். | .. | 15 | 15 |
| மொத்தம் .. | 67,56 | 59,70 | 1,27,26 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1986–87 ஆம் ஆண்டில் கல்விக்காகச் செலவிட இருக்கும் தொகை ரூ. 678 கோடியாகும்.

4. இவ்விடத்தில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது பின்வருவதாகும்—அதாவது ஆதி திராவிடர் மற்றும் பின் தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், ஆதி திராவிடர், பழங்குடி வகுப்பினர், பின் தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவு; சீர்திருத்தப் பள்ளிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள், ஊனமுற்றோருக்கான பள்ளிகள் போன்றவற்றிற்காக ஆகும் செலவு; மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகிய வகைக் கல்விகளுக்கும் ஆகும் செலவு ஆகிய செலவினங்கள் கல்விச் செலவு பற்றிய மேற்கண்ட புள்ளி விவரங்கள் எவற்றிலும் சேரவில்லை.

5. எல்லாத் தலைப்புகளின் கீழும் (277. கல்வி; 477 கல்விப் பணி குறித்த கட்டடச் செலவு; 677. கடன் முதலியன) கல்விக்காக 1986–87 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளில் செலவு விவரம் வருமாறு— "+" குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்.

[1986 ஏப்ரல் 17

| (1) | பொறுப் பேற்ற செலவினம். (2) | 1986–87–ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| I பொதுக் கல்வி— | | | |
| 1. பள்ளிக் கல்வி (மேல் நிலைப் பள்ளிக் கல்வி உட்பட). | 42,03<br>+9 | 1,98<br>.. | 44,01<br>+9 |
| 2. வயது வந்தோர் கல்வி | 1,62<br>+2,56 | 11<br>.. | 1,73<br>+2,56 |
| 3. கல்லூரிக் கல்வி .. | 6,75<br>+25 | 91<br>.. | 7,66<br>+25 |
| 4. விளையாட்டு இளைஞர் நலன். | 1,24<br>+1,02 | 7<br>.. | 1,31<br>+1,02 |
| 5. தமிழ் வளர்ச்சி .. | 1 | 2 | 3 |
| 6. கட்டட வகையில் பொதுப் பணித்துறைச் செலவு. | 84 | .. | 84 |
| | 52,49<br>+3,92 | 3,09 | 55,58<br>+3,92 |
| II. தொழில் நுட்பக் கல்வி | 5,88<br>+10 | 47<br>.. | 6,35<br>+10 |
| III. கலைப் பணிகள்— | | | |
| கல்வித் துறை .. | 41 | 6 | 47 |
| தமிழ் வளர்ச்சித் துறை | 1,08 | 12 | 1,20 |
| மொத்தம் .. | 1,49 | 18 | 1,67 |
| பெரு மொத்தம் .. | 59,86<br>+4,02 | 3,74 | 63,60<br>+4,02 |



1986 ஏப்ரல் 17]

(ii) புதிய கல்விக் கொள்கை.

1. மைய அரசு 1985 ஆகஸ்ட் திங்களில், ''கல்வி–ஒரு சவால்-ஒரு கொள்கைத் தொலை நோக்கு'' என்னும் கொள்கை விளக்க அறிக்கையை வெளியிட்டதிலிருந்து புதிய கல்விக் கொள்கை குறித்து நாடு தழுவிய விவாதம் நடந்து வருகிறது. புதிய கல்விக் கொள்கையை மைய அரசு விரைவில் முடிவு செய்யப் போவதாக அறிவித்திருக்கிறது.

2. கல்வித் துறையில் பின்வரும் பிரச்சினைகளை சமாளிப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய வழிமுறைகள் குறித்து மேற்சொன்ன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகள் பெரும்பாலும் ஏற்கத்தக்கவையே: —

(1) பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளித்தல்.

(2) வயது வந்தோர் கல்வி மற்றும் பள்ளி சாராக் கல்வியின் மூலம் எழுத்தறிவின்மையைப் போக்குதல்.

(3) உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் கல்வியைத் தொழில் சார்ந்ததாக ஆக்குதல்.

(4) மாணவர்களிடம் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கான சிறந்த கல்வியை அளிக்கும் பல்வேறு நுணுக்கமான பாடங்களைக் கல்லூரி நிலையில் அளித்தல்.

(5) நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு இடையேயும், கிராமப்புற, நகர்ப்புறங்கள் இடையேயும், மற்றும் சமுதாயத்தின் பல பகுதியினரிடையேயும் கல்வி வாய்ப்புக்களில் உள்ள வேறுபாடுகளை நீக்குதல்.

மேற்கண்ட அறிக்கையில் விவாதிக்கப்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி தமிழக அரசு கொண்டுள்ள கருத்து அனைத்திந்திய மட்டத்தில் புதிய கல்வியை விவாதிப்பதற்கான உரிய பொது மன்றங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சில விஷயங்கள் பற்றிய இவ்வரசின் நிலை மைய அரசின் கொள்கைக்கு சற்று மாறுபட்டதாகத் தோன்றியபோதிலும் அது விழுமிய கல்வித் தத்துவங்களின் அடிப்படையில் அமைந்த நிலையே ஆகும். அவற்றில் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

3. '' கல்வி—ஒரு சவால்'' என்னும் அறிக்கையானது பள்ளிகளில் மும்மொழிக் கொள்கையை பரிந்துரைத்துள்ளது. தமிழகச் சட்டமன்றத் தீர்மானத்தின்படி அறிஞர் அண்ணா தலைமையில் அமைந்த தமிழக அரசு தமிழ்நாட்டுப் பள்ளிகளில் (கல்வித் துறை நிலை ஆணை 105/24–1–1968–ன்படி) பின்வரும் இருமொழிக் கொள்கையைச் செயல்படுத்தியது :—

[1986 ஏப்ரல் 17

| | | |
|---|---|---|
| பகுதி A மொழி | 1–11 வகுப்புகளில் கற்றுத் தரப்படுவது (10+2+3 வகுப்பு முறை அமுலுக்கு வந்த பின் 10 ஆண்டுப் பள்ளிப் படிப்பு இறுதியில் எஸ்.எஸ்.எல்.சி. நடைபெறுவதால் 1–10 வகுப்புகளில் கற்றுத் தரப்படுவது). | வட்டார மொழி (தாய் மொழியானது வட்டார மொழியல்லாத வேறு மொழியாக இருக்கும் பட்சத்தில் அந்த தாய் மொழி). |
| பகுதி B மொழி | 3–11 வகுப்புகளில் கற்றுத் தரப்படுவது (தற்பொழுது 3–10 வகுப்புகளில்). | ஆங்கிலம் அல்லது இந்திய மொழியல்லாத வேறு ஏதாவதுமொழி. |

4. மும்மொழிக் கொள்கை எந்த நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதோ அதற்கேற்ப உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார் போன்ற இந்தி பேசும் மாநிலங்களில் செயல்படுத்தப்படுவதில்லை. அம்மாநிலங்களில் குடியேறி வசிக்கும் தென்னிந்தியர் சங்கங்கள் நடத்தும் ஓரிரு பள்ளிகளைத் தவிர பிற பள்ளிகளில் பள்ளிப் பாடத் திட்டத்தில் மூன்றாவது மொழியாக தென்னிந்திய மொழிகள் எவையும் கற்றுத் தரப்படுவதில்லை. சொல்லப்போனால் இந்தி மாநிலங்களில் பெரும்பாலான பள்ளிகளில் ''ஒரு மொழிக் கொள்கையே '' பின்பற்றப்படுவதாகக் கூறலாம்—அதாவது 6–8 வகுப்புகளில் மட்டுமே ஆங்கிலம் கட்டாய பாடமாகக் கற்றுத் தரப்பட்டு அதற்கு மேல் வகுப்புகளில் அம்மொழி விருப்பப் பாடமாக உள்ளது. இந்தி பேசும் மாநிலங்களின் பள்ளிகளில் பலவற்றில் மூன்றாவது மொழியாக இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததும் இந்தியோடு நெருங்கிய தொடர்புடையதுமான சமஸ்கிருதமே கற்றுத்தரப்படுகிறது.

5. தமிழ்நாட்டில் பின்பற்றப்படும் இரு மொழிக் கொள்கையின்கீழ் மொழிச் சிறுபான்மையினருக்குத் தக்க பாதுகாப்பு இருக்கிறது. அவர்கள் பகுதி 'ஏ' இன் கீழ் தங்கள் தாய்மொழியைப் பயிலலாம். தங்கள் தாய் மொழியோடு கூடத் தமிழையும் பயில விரும்பும் மொழிச் சிறுபான்மையினர் பள்ளி நேரமல்லாத நேரங்களில் அவர்களுக்குத் தமிழ் கற்றுத் தர பள்ளிகளில் உள்ள வசதிகளைப் பயன்படுத்தித் தமிழ் கற்றுக்கொள்ளலாம்.

6. மாணவ மாணவியர்கள் பயில வேண்டிய மொழிகளின் எண்ணிக்கைச் சுமையைக் கருதிப் பார்க்கும் பொழுதும் இரு மொழிக் கொள்கையே பின்பற்றத்தக்கதாகிறது. அறிவியலிலும் தொழில் நுட்பவியலிலும் கடும் விரைவான வளர்ச்சிகள் நடைபெறும் இக்காலத்தில், வளர்ச்சி பெற்ற நாடுகளின் மாணவர்



1986 ஏப்ரல் 17]

களைப் போல முன்னேற வேண்டுமாயின் நமது மாணவ மாணவியர் மொழிகளைக் கற்கச் செலவிடும் காலத்தைக் குறைத்து பாடங்களைக் கற்கச் செலவிடும் காலத்தை அதிகரிப்பதே பொருத்தமானதாகும்.

7. மாவட்டம் தோறும் ஒரு மாதிரிப் பள்ளியை மைய அரசு நிறுவுவது பற்றி புதிய கல்விக் கொள்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அம் மாதிரிப் பள்ளிகள் எந்த அளவுக்கு அதே போன்ற தரமுள்ள மேலும் பல பள்ளிகளை உருவாக்க உதவும் என்பது ஐயப்பாடானதே. மைய அரசு பரீட்சார்த்தமாக சில ''மாதிரிப் பள்ளிகளை '' நிறுவ முனைந்தாலும் கூட அப்பள்ளிகளில் அந்தந்த மாநில மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும். மொழிச் சிறுபான்மையினருக்கும் பிற மாநிலக் குழந்தைகளுக்கும் பயன்படுவதற்காக தேவையானால் ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவும் இருக்கலாம். ''கல்வி ஒரு சவால்'' என்னும் அறிக்கையில் மாதிரிப் பள்ளிகள் பற்றியும் கல்வி நிருவாக விஷயங்கள் வேறு சில பற்றியும் கூறப்பட்டுள்ள யோசனைகள் ஒரே அச்சில் வார்த்தது போன்ற ஒப்புமையை குறிக்கோளாகக் கொண்டவை போலத் தோன்றுகின்றன. அத்தகைய ஒப்புமை படைப்புத் திறனும் புதுவது புனையும் ஆற்றலும் வளரவிடாது தடுக்கும் தடையாகவே அமையும். அவ்வறிக்கையின் முன்னுரையில் ''கல்வி முறையில் வளர்ச்சிக்கெதிரான வறட்டுக் கட்டுப்பாடு'' தவிர்க்கப்பட வேண்டிய குறை எனக் கூறப்பட்டுள்ளது. மேற்குறித்த சில யோசனைகள் அக்குறைபாட்டை மேலும் அதிகப்படுத்துவதாகவே அமையும்.

8. புதிய கல்விக் கொள்கையின் இறுதி வடிவத்தை உருவாக்குமுன் மேற்கண்டவற்றையும் பிறவற்றையும் கவனமாகப் பரிசீலித்த பின்னரே மைய அரசு முடிவுகளை எடுக்கும் என இவ்வரசு நம்புகிறது. முக்கிய அம்சங்கள் குறித்து நாடு தழுவிய முழுமையான கருத்தொற்றுமையுடையதாக புதிய கல்விக் கொள்கை அமைந்து நம் நாடு 21 ஆம் நூற்றாண்டை நோக்கி முன்னேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

9. மற்ற முக்கியமான விஷயங்களைப் பற்றி—அதாவது 6–14 வயதுக் குழந்தைகள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளித்தல், வயது வந்தோர் கல்வியை ஊக்குவித்து எழுத்தறிவு பெற்றோர் விழுக்காடை உயர்த்துதல், கல்வியைத் தொழில் சார்ந்ததாக ஆக்கும் திட்டத்தில் விரைவு ஆகியவை பற்றி புதிய கல்விக் கொள்கை தெரிவித்துள்ளவை இவ்வரசின் கொள்கைகளுக்கு முற்றிலும் இசைவானவையேயாகும். அவை ஏற்கனவே இம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மைய அரசு இக்காரியங்களுக்காக கூடுதலாக நிதி உதவி தருமாயின், குறுகிய காலத்தில் இன்னும் பெரிய வெற்றிகளை நாம் அடைய இயலும்.

## II. பள்ளிக் கல்வி

### (i) பொது

1986–87 ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூ. 551 கோடியில் பெரும் பகுதியான ரூ. 451 கோடி பள்ளிக் கல்விக்கே (மேல்நிலைப் பள்ளிக் கல்வி உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. 30–9–1985 அன்றைய நிலவரப்படி தமிழ்நாட்டில் இருந்த பள்ளிகள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

| | பள்ளிகளின் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை | மாணவர் மாணவியர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (இலட்சத்தில்.) | |
| தொடக்க நிலைப் பள்ளிகள் (1–5 வகுப்புகள்). | 29,118 | 1.17 | 50.43 |
| நடுநிலைப் பள்ளிகள் (1–8 அல்லது 6–8 வகுப்புகள்). | 5,691 | 0.67 | 28.95 |
| | 34,809 | 1.84 | 79.38 |
| உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகள் (பொதுவாக 6–10 / 6–12 வகுப்புகள்.) | 4,123 | 1.04 | 29.87 |
| மொத்தம் .. | 38,932 | 2.88 | 109.25 |

வகுப்புத் தொகுதி வாரியாக மாணவ மாணவியர் எண்ணிக்கை வருமாறு :—

| வகுப்புகள். | மாணவ மாணவியர் (இலட்சத்தில்.) |
|---|---|
| (1) | (2) |
| 1—5 .. .. .. | 71.93 |
| 6—8 .. .. .. | 24.67 |
| 9—10 .. .. | 9.16 |
| 11—12 | 3.49 |
| | 109.25 |



நிருவாக வாரியாக பள்ளிகளின் விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

2. 1986–87-ஆம் ஆண்டில் பள்ளிகளுக்கு பின்வரும் ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்படவிருக்கின்றன.—

| | |
|---|---|
| இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பணியிடங்கள் .. .. .. | 500 |
| நடுநிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுக்கும் உடற் பயிற்சி ஆசிரியர் பணியிடங்கள் .. .. .. | 50 |
| நடுநிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுக்கும் தமிழாசிரியர் பணியிடங்கள் .. .. .. .. .. | 75 |
| உயர்நிலைப் பள்ளிகளுக்கு பி.எட்., தர ஆசிரியர் பணியிடங்கள் .. .. | 100 |
| நடுநிலைப் பள்ளிகளில்(ஏற்கெனவே உள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்களை உயர்த்தி) முழுநேரப் பணியிடங்கள் .. .. .. | 50 |
| | 77 |

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் :

3. பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்த உள்ளூர் மக்களின் நன்கொடையையும் ஒத்துழைப்பையும் பெறும் நோக்குடன் தொடங்கி நடத்தப்பெறும் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் தொடக்க காலம் முதல் 1985 முடிய மொத்தம் 744-ஐ பள்ளிக் கல்வித் துறை நடத்தியுள்ளது. அவற்றில் கடந்த ஆறு ஆண்டுகளில் நடந்த 169 மாநாடுகளில் பெற்ற நன்கொடையின் மதிப்பு ரூ. 140 இலட்சமாகும்.

### (ii) தொடக்கக் கல்வி.

1985–86-ல் புதிதாக 349 தொடக்கப் பள்ளிகள் (தொடக்க நிலைப் பள்ளிகள் 274-ம் நடுநிலைப் பள்ளிகள் 75-ம்) தொடங்கப்பட்டுள்ளன. பள்ளி வயதுச் சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை விரிவாக்குதல் புதிய 20 அம்ச திட்டத்தில் 16-ஆவது அம்சம் ஆகும்.

[1986 ஏப்ரல் 17

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதி ஆண்டாகிய 1989–90-ம் ஆண்டின் இறுதிக்குள் அடைய வேண்டும் என மைய அரசு கருதியுள்ள இலக்குகள் 6–11வயது குழந்தைகளுள் 100 சதவிகிதமும், 11–14 வயது குழந்தைகளுள் 75 சதவிகிதமும் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும் என்பதாகும். தமிழ்நாட்டில் இப்பொழுதே (1985–86) 6–11-ம் வயதுத் தொகுதியினருள் பள்ளியில் சேர்ந்துள்ளோர் விழுக்காடு 100 சதவிகிதத்தையும் 11–14 வயதுத் தொகுதியினருள் பள்ளியில் சேர்ந்துள்ளோர் விழுக்காடு 76.21 சதவிகிதத்தையும் எய்தியுள்ளது மகிழ்வு தரத்தக்கதாகும்.

2. தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் 1985–86-ல் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை வருமாறு :—

| வயதுத் தொகுதி. | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (இலட்சத்தில்.) | |
| 6—11 .. .. | 0.79 | 0.70 | 1.49 |
| 11—14 .. .. | 0.74 | 0.74 | 1.48 |
| | 1.53 | 1.44 | 2.97 |

3. பள்ளிகளில் 6–14 வயதுத் தொகுதிச் சிறுமியரை சேர்ப்பதில் சிறந்த சாதனைக்கு ஊராட்சிகள், வளர்ச்சி வட்டாரங்கள் முதலியவற்றிற்கு விருதுகள் தரும் திட்டம் ஒன்றை 1983–84 மற்றும் 1984–85 ஆண்டுகளில் மைய அரசுக் கல்வித் துறை செயல்படுத்தியது. 1982–83/1983–84-ல் நிகழ்ந்த சாதனைக்கான விருதுகள் 1983–84/1984–85-ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தின் கீழ் தரப்பட்டன. தமிழ் நாட்டில் உள்ள ஊராட்சிகள், வளர்ச்சி வட்டாரங்கள், மாவட்டங்கள் ஆகியவற்றுக்கு இத்திட்டத்தின்கீழ் 1983–84-ல் மொத்தம் ரூ. 11.25 இலட்சமும் 1984–85-ல் மொத்தம். ரூ. 12.25 இலட்சமும் விருதுத் தொகைகளாகக் கிடைத்தன. இந்த விருதுத் தொகைகள் தொடக்கப்பள்ளிகளில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, கைத்தொழில் கருவிகள், தொழிற் கூடங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றுக்காகச் செலவிடப்படுகின்றன.

4. குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் இப்பொழுது ஒரு இளஞ்சிறார் பள்ளி வகுப்பும் நடத்தப்படுகிறது. இள வயதிலேயே பள்ளி செல்லும் மனப்பாங்கை வளர்க்கவும் சிறுமியர் தங்கள் தம்பி தங்கையரைக் கவனித்துக்கொள்ள வீட்டில் நிறுத்தப்படுவதைத் தவிர்க்கவும் இவை உதவும்.



1986 ஏப்ரல் 17]

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் 1–10 வகுப்பு பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு.

5. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் தமிழகத்தில் 1–7–1982/15–9–1982 முதல் 1–5 வகுப்புகளிலும், 15—9—1984 முதல் 6–10 வகுப்புகளிலும் அமுலாக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பள்ளிகளில் 1–10 வகுப்புகளில் படிப்பவர்களில் அனைத்துத் துறைப் பள்ளிகளையும் சார்ந்த 64 இலட்சம் குழந்தைகள் 38,399 பள்ளிகளிலுள்ள சத்துணவு மையங்கள் மூலம் சத்துணவு பெற்று வருகின்றனர். இம் மையங்களில் பெரும்பாலானவை பள்ளிக் கல்வி இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழும்; மற்றவை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறை; பிற்பட்டோர் நலத்துறை; நகராட்சி நிருவாகத்துறை ஆகியவற்றின் இயக்குநர்கள்; மற்றும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளின் ஆணையாளர்கள் ஆகியோரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழும் செயல்படுகின்றன.

6. 1–5 வகுப்புக் குழந்தைகளுக்கு ஆண்டின் 365 நாட்களும் சத்துணவு வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட சில விடுமுறை நாட்கள் (ஆண்டுக்கு சுமார் 20 நாட்கள்) சத்துணவு மையங்களுக்கும் விடுமுறையானாலும் அந்நாட்களுக்குரிய உணவுப் பொட்டலமும் முதல் நாளன்றே தரப்படுகிறது. 6–10 வகுப்புக் குழந்தைகளுக்கு பள்ளி வேலை நாட்களில் சத்துணவு வழங்கப் படுகிறது. ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்குத் தரப்படும் உணவின் அளவு வருமாறு :

| | 1—8 வகுப்புகள். | 9—10 வகுப்புகள். |
|---|---|---|
| | (அளவு கிராம்களில்) | |
| அரிசி .. .. .. .. | 100 | 120 |
| பருப்பு .. .. .. | 15 | 15 |
| எண்ணெய் .. .. .. | 3 | 3 |
| காய்கறிகளும் மசாலாப்பொருட்களும். | 50 | 50 |

1–8 வகுப்பு மாணவ மாணவியருக்கு இலவச சீருடை :

7. தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 1–8 வகுப்புகளில் பயில்வோருள் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவு பெறுவோர் அனைவருக்கும் ஆண்டுக்கு ஒரு இலவச சீருடை வழங்கும் மாபெரும் திட்டத்தை 1985–86 முதல் அரசு அமுல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1985–86-ல் மொத்தம் ரூ. 15.81 கோடி செலவில் 58.68 இலட்சம் மாணவ மாணவியருக்குச் சீருடைகள் அளிக்கப்பட்டன.

1–8 வகுப்பு மாணவ மாணவியருக்கு இலவச பாடப்புத்தகங்கள்;

8. அனைத்துப் பள்ளிகளிலும் 1—8 வகுப்புகளில் பயின்று சத்துணவு பெற்று வருவோர்க்கு இலவசப் பாட நூல்களை வழங்குவதற்கான மாபெரும் திட்டம் ஒன்றையும் அரசு 1985–86-ல் அமுலாக்கி வருகிறது. 1985–86-ல் மொத்தம் ரூ. 11.54 கோடி செலவில் (தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் ஏற்றுக் கொண்ட ரூ. 1.24 கோடி உட்பட) 58.97 இலட்சம் மாணவ மாணவியருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. அவ்வாண்டில் முதல் வகுப்பில் பயிலும் 5 இலட்சம் குழந்தைகளுக்கு ரூ. 11.52 இலட்சம் செலவில் கரும்பலகைகளும் வழங்கப்பட்டன.

புத்தக வங்கிகள்.

9. அநேகமாக அனைத்துப் பள்ளிகளிலும் புத்தக வங்கிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உயர் வகுப்புக்குச் செல்லும் மாணவர்கள் நன்கொடையாக வழங்கும் புத்தகங்களைக் கொண்டும், பெற்றோர் ஒத்துழைப்புடனும் சமூகத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடனும், இப்புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பள்ளியில் இருந்து இடையில் நின்றுவிடுவோர் விழுக்காடு:

10. பள்ளிகளில் மாணவர்கள் கூடுதலாகச் சேருவதற்கும் தொடர்ந்து படிப்பதற்குமான மேற்சொன்ன பல்வேறு ஊக்குவிப்புத் திட்டங்களின் காரணமாக பள்ளிகளில் சேரும் (6—11 வயதுத் தொகுதி) குழந்தைகளில் தொடர்ந்து 5-வது படிக்காமல் இடையில் நின்றுவிடுவோர் விழுக்காடு 1977–78-ல் 40 விழுக்காடாக இருந்தது 1984–85-ல் 23 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

தொடக்கப்பள்ளிக் கட்டிடங்கள் :

11. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1980–81 முதல் 1982–83 முடிய மூன்று ஆண்டுகளில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிகள் 4,500க்கு ரூ. 30 கோடி செலவில் கட்டிடங்கள் கட்டித் தரப்பட்டன. அரசுத் தொடக்கப்பள்ளிக் கட்டிடங்களுக்காகவும் தனியார் மற்றும் நகராட்சித் தொடக்கப்பள்ளிகளுக்கு மானியம் தரவும் ரூ. 21 இலட்சம் 1986–87-ல் ஒதுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களுக்காக "சமுதாய வளர்ச்சி" மானியக் கோரிக்கையின் கீழ் தனியே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் :

12. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றி வந்த ஆசிரியர்களும், அடிப்படை ஊழியர்களும் 1–6–1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர். அப்பள்ளிகளின் கட்டிடப்பராமரிப்பு தவிர, பள்ளி நிருவாகப் பொறுப்பு முழுவதையும் பள்ளிக் கல்வித்துறை கவனித்து வருகிறது. இப்பள்ளிகளில் பணியாற்றிவரும் ஆசிரியர்கள் எண்ணிக்கை 97,826 ஆகும்.





நகராட்சி/மாநகராட்சித் தொடக்கப்பள்ளிகள் :

13. 1985–86-ல் நகராட்சிகளும், சென்னை, மதுரை கோயம்புத்தூர் மாநகராட்சிகளும் நடத்தி வந்த தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 1,547 ஆகும். (1,115 தொடக்க நிலை மற்றும் 412 நடுநிலைப் பள்ளிகள்). 16,398 ஆசிரியர்கள் இப்பள்ளிகளில் பணி செய்கின்றனர். நகராட்சிகள் கல்வி வரி வசூலிக்கப்படுவதுடன், அவ்வாறு வசூலாகும் தொகையில் 50 விழுக்காட்டுக்கு ஈடான தொகையினை அரசு மானியமாகவும் பெறுகின்றன. அத்துடன் நகராட்சிகள், மாநகராட்சிகள் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) ஆகியவற்றின் தொடக்கக் கல்விக் கணக்கு நிதியில் துண்டுவிழும் முழுத் தொகையினை அரசே ஈடுசெய்து வருகிறது.

### (iii) உயர்நிலைப் பள்ளிக் கல்வி.

1985-86-ல் தமிழ்நாட்டில் 14–16 வயதுத் தொகுதியினர் 18.09 இலட்சம் பேர்களுள் 50.64 விழுக்காடாகிய 9.16 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் 9–10 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1985–86-ல உயர்நிலைப் பள்ளி வகுப்புகள் நடைபெற்று வந்த பள்ளிகளின் எண்ணிக்கை வருமாறு :—

| (1) | சாதாரண பள்ளிகள் (ஆங்கிலோ இந்தியன் மற்றும் மெட்ரிக் குலேஷன் பள்ளிகள் உட்பட.) (2) | மைய அரசின் உயர்நிலைக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்தவை. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 2,488 | 86 | 2,569 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | 1,487 | 67 | 1,554 |
| | 3,970 | 153 | 4,123 |

1985–86-ல் மேற்கண்ட 4,123 பள்ளிகளில், வெவ்வேறு நிலைகளில் பயிலறு வந்த மாணவர்களின் எண்ணிக்கை பின் வருமாறு:—

| (1) | மாணவர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்.) (2) |
|---|---|
| 8ஆம் வகுப்பும் கீழும் .. | 17.22 |
| 9–10 வகுப்புகள் .. .. | 9.16 |
| 11–12 வகுப்புகள் .. .. | 3.49 |
| மொத்தம் .. | 29.87 |

1965–86-ல 85 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாக திறக்கப் பட்டுள்ளன

2. அறிவியல் ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கான திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் சில உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெறுகின்றன. 1965–86 முடிய 1,123 உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெற்றுள்ளன. இத்திட்டத்தின கீழ் தெரிந்தெடுக்கப்படும் அரசுப் பள்ளிகளுக்கு அண்மை ஆண்டுகளில் ஆய்வுக் கூட கட்டட வகையிலும், அறிவியல் தளவாடங்கள் வகையிலும் சேர்த்து ஒரு பள்ளிக்கு ஏறத்தாழ ரூ 1.40 இலட்சம் செலவிடப்படுகிறது. 1986–87-ல் மேலும் 12 பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடங்கள் அமைக்கப்படும். இதுவரையில் அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத, கிராமப்புற உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் சோதனைகளை நடத்திக் காட்டுவதற்காக கல்வி மாவட்டங்கள் 51-ல் ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக் கூட வண்டி செயல்பட்டு வருகிறது.

3. மாநில அளவில ஆண்டுதோறும் நடத்தும் அறிவியல் கண்காட்சிகள் வெவ்வேறு மாவட்ட தலைமையிடங்களில நடத்தப்படுகின்றன. 1985–86-ல் தஞ்சாவூரில் நடத்தப்பெற்ற அறிவியல் கண்காட்சியானது 12-ஆவது கண்காட்சியாகும். தென் மாநிலங்களுக்காக பெங்களூரில் உள்ள விசுவேசுவரய்யா தொழில மற்றும் தொழில் நுட்ப அருங்காட்சியகம் ஆண்டு தோறும் நடத்திவரும் 'தென் இந்திய அறிவியல் கண்காட்சி'' யில் 1980-ல் இருந்து தமிழகப் பள்ளிகளும் கலந்து கொள்கின்றன. 1986-இல் இக்கண்காட்சி பாண்டிச்சேரியில் நடந்தது. தொழிலியல் சார்ந்த சிறந்த காட்சிப் பொருளை உருவாக்கியதற்காக ஊத்துக்குளி பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி கமால் அப்துல் நகீத் சர்விசுவேசுவரய்யா கேடயத்தைப் பெற்றார் தமிழக மாணவர்களில் மூவர் படிப்புதவித் தொகைகளும், 10 பேர்கள் சிறப்புப் பரிசுகளும் பெற்றனர். இம்மாநில ஆசிரியர்கள் மூவருக்கு ஆசிரியர்கள் விருது கிடைத்தது.



4. மைய அரசுக் கல்வி அமைச்சகம் சென்னையில் கல்வித் தொலைக் காட்சிக்கான படநிலையம் ஒன்று கட்ட ரூ. 47 இலட்சம் மானியம் தர கொள்கை அளவில் இசைந்து அண்மையில் முதல் தவணையாக ரூ. 5 இலட்சம் தொகையும் இவ்வரசுக்குத் தந்துள்ளது. வீடியோ நிழற்படக் காமிராக்களும், அதனோடு இணைந்த கருவிகளும் வாங்க அவ்வரசினர் ஏற்கெனவே ரூ. 12 இலட்சத்திற்கு மேல் மானியம் வழங்கியுள்ளனர்.

உயர்நிலைப்பள்ளிக் கட்டிடங்கள் :

5. 1986–87 வரவு-செலவு மதிப்பீட்டில் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடங்களுக்கான நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| தனியார் மற்றும் நகராட்சி உயர்நிலைப்பள்ளிகளுக்கான கட்டிட மானியம் | 13 |
| அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் | |
| சிறு பணிகள் .. .. .. .. | 53 |
| முன் ஆண்டுகளில் ஏற்பளித்து முடிவுறாமல் உள்ள கட்டிட வேலைகளுக்கு 1986–87 இல் நிதி ஒதுக்கம் .. .. .. | 159 |
| புதுப்பணிகள் .. ... ... .. | 100 |
| வெள்ளம் முதலியவற்றால் சேதமாகும் கட்டிடங்களின் மராமத்துப் பணிகளுக்காக .. | 5 |
| மொத்தம் .. | 330 |

முன்னாள் மாவட்டக்கழக உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களைப் பழுதுபார்த்துப் பராமரிக்க ரூ. 1 கோடி செலவுக்கு அரசு அண்மையில் ஏற்பளித்துள்ளது.

6. பெண்களுக்கான அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் கழிவறை வசதிகள் செய்வதற்கான ஒரு திட்டம் மொத்தம் ரூ. 5 கோடி செலவில் 1982–83 முதல் செயல்படுத்தப்படுகிறது. அதில் இன்னும் செலவிடவேண்டியுள்ளது சுமார் 0.75 கோடி மட்டுமேயாகும். சிறு பணிகளுக்காக என்று மேலே குறித்துள்ள ரூ. 53 இலட்சமும் பெரும்பாலும் கழிவறைகளுக்காகச் செய்யப்பட்டதே ஆகும்.

கல்விச் சலுகைகள், படிப்பு உதவித் தொகைகள் மற்றும் பிற ஊக்குவிப்புப் பணிகள் :

7. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி பொதுவாக 1–12 வகுப்புகளில் ஏறத்தாழ அனைத்து நிலைகளிலும் அனைவருக்கும் இலவசமாகும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்கள் சிறப்பு படிப்பு உதவித் தொகைகளையும் இதர வசதிகளையும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். அதே போன்ற வசதியை பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். கிராமப்புற மாணவர்களுக்கான படிப்புதவித் தொகை திட்டத்தைப் பள்ளிக் கல்வித்துறை நிருவகித்து வருகிறது. இம்மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் ஆண்டுக்கு நான்கு மாணவர்களுக்கு புதிதாகப் படிப்புதவித் தொகைகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. ஒரு முறை உதவித் தொகையினை பெற்ற மாணவர் மேல்நிலைக் கல்வி உட்பட, பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் வரை இவ்வுதவித் தொகையினைப் பெறுவர். இப் படிப்புதவித் தொகைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

8. பெண்கள் கல்வியை ஊக்குவிப்பதற்காக மைய அரசு அண்மையில் அறிவித்துள்ள ஒரு திட்டத்தின் கீழ் (பிற மாநிலங்களைப் போல) இவ்வரசும் 9–12 வகுப்புகளில் மாணவியர்கள் இலவசக் கல்வி காரணமாக எந்த அளவுக்கு படிப்புக் கட்டணத் தொகை செலுத்துவதிலிருந்து தவிர்க்கப்படுகிறார்களோ அந்த அளவுக்கு மைய அரசிடமிருந்து நிதி உதவி கோர இருக்கிறது.

9. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு அவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு, அறிவியல் பாடங்கள் ஆகியவற்றில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள்தோறும் ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் 500 உயர்நிலைப் பள்ளிகளில் 8–10 வகுப்புகளில் 46,000 மாணவர்களுக்கும், 300 மேல்நிலைப்பள்ளிகளில் 11–12 வகுப்புகளில் 12,000 மாணவர்களுக்கும் பயனளித்து வந்தது.

10. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தவறிய மாணவர்களுக்கு பள்ளியிலேயே மூன்று மாத காலம் சிறப்பு போதனை தரும் புதிய திட்டம் ஒன்று 1984–85 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வாறு தவறிய மாணவர்களில் 18 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு சூலை—அக்டோபர் மாதங்களில், தெரிந்தெடுக்கப்பட்ட 1,000 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஒவ்வொரு பள்ளியிலும் 20-லிருந்து 30 மாணவர்கள் வரை



சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்காக அப்பள்ளிகள் ஒவ்வொன்றிலும் குறிப்பாக நியமிக்கப்பட்ட இரண்டு முழுநேர பி.டி. ஆசிரியர்கள் அவர்களுக்கு போதனை அளிக்கின்றனர். அந்தந்த இடத்திலுள்ள தேவை மற்றும் வசதிக்கேற்ப பள்ளி நேரத்திலோ பிற நேரத்திலோ இந்த போதனை தரப்படுகிறது. இத்திட்டம் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது.

(iv) பள்ளிப்பாடங்கள், பாடத்திட்டம், பாட நூல்கள், வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சர் திட்டம் :

வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சர் திட்டத்தின் நோக்கம் கல்வி முறைக்கும் வாழ்க்கைக்கும் இடையேயுள்ள இடைவெளியைக் குறைத்து பள்ளிக் கல்வியை அனைத்து மட்டங்களிலும் தொழில் மற்றும் வேலைவாய்ப்போடு இணைந்ததாக ஆக்க வேண்டுமென்பதாகும். மைய அரசின் '' கல்வி ஒரு சவால் '' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்கல்வி குறித்த கருத்துக்களுக்கும் இத்திட்டத்தின் அடிப்படைக் கோட்பாட்டிற்கும் பெருமளவில் ஒற்றுமை உள்ளது. அனைத்திந்திய மட்டத்தில் புதிய கல்விக் கொள்கை குறித்து விரைவில் முடிவு எடுக்கப்படவிருக்கிறது. புதிய கல்விக் கொள்கையின் கோட்பாடுகள் மற்றும் வாழ்க்கைக் கல்விக்கான திட்டத்தின் நோக்கம் ஆகியவற்றை ஒருசேரக் கருதி ஆலோசித்த பின் தமிழகப் பள்ளிகளில் பயிலப்பட வேண்டிய பாடங்கள் அவற்றுக்கான பாடத்திட்டம் ஆகியவற்றைத் திருத்தியமைப்பது குறித்து முடிவு செய்யப்படும்.

2. வாழ்க்கைக் கல்வியை அமுல்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆய்வு செய்வதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட உயர்நிலை, மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களைக்கொண்ட மாவட்டக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. பல பள்ளிகள் தாமாகவே முன்வந்து, ஏற்கெனவே உள்ள அடிப்படை வசதிகளை பயன்படுத்தி, அரசு நிதியல்லாத (சிறப்புக்கட்டண நிதிபோன்ற) நிதி ஆதாரங்கள், பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் பொது மக்கள் தரும் உதவி ஆகிய நிதி வசதிகளைக் கொண்டு 1984–85-லிருந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. சுமார் 660 உயர்நிலை மற்றும் மேலநிலைப் பள்ளிகளில் 1984–85-ல் 130-க்கும் மேற்பட்ட வாழ்க்கைத் தொழிற்கல்விப் பாடங்கள் சுமார் 75,000 மாணவர்களுக்கு பெரும்பாலும் 8-ம் வகுப்பில் பயிற்றுவிக்கப்பட்டன. அப்பள்ளிகளில் ஏற்கெனவே பணியாற்றி வந்த 2,200 ஆசிரியர்களின் பணி இதற்குப் பயன்படுத்தப்பட்டதுடன் அந்தந்த வட்டார கைவினைஞர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் போன்றவர்களிடமிருந்து நியமிக்கப்பட்ட பகுதி நேரப் பணியாளர்கள் 990 பேர்களுடைய பணியும்பயன்படுத்தப்பட்டது. இவர்கள் மாணவர்களுடைய அடிப்படைக் கைத்திறனை வளர்க்கும் தொழிற்கல்வியைக் கற்பித்து வந்தனர்.

[1986 ஏப்ரல் 17

இம் முன்னோடித் திட்டத்தை உரிய திருத்தங்களுடன் அடுத்த உயர்நிலை வகுப்புகளிலும் 1985–86-ல் தொடர்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. பயிற்றுவிக்கப்படும் மாணவர்கள் மேல்நிலை வகுப்பில் தொழிற்பாடக் கல்வியை முறையாக தொடர்வதற்கோ அல்லது இடையிலேயே பள்ளியிலிருந்து நின்றுவிட்டாலும் அவர்கள் தாம் பெற்ற கைத்திறனைப் பயன்படுத்தி ஒரு தொழிலைச் சுயமாக மேற்கொள்ள வகை செய்யவோ இயலும் வகையில் அவர்களது திறனை படிப்படியாக வளர்ப்பது இதன் நோக்கமாகும். எனவே இத் திட்டத்தினால் பயனடைவோரின் எண்ணிக்கை 1985–86–ல் இரு மடங்காகியுள்ளது. இப்பள்ளிகளுக்கு ஓரளவு உதவும் நோக்குடன் 1985–86-ல் பகுதி நேர வாழ்க்கைக் கல்வி பயிற்றுநர் பணியிடங்கள் 750 மாதம் ரூ. 150 ஊதியத்தில் (வருடத்தில் 10 மாதங்களுக்கு) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

3. பள்ளிகளில் பொதுபாடப் பிரிவில் எல்லா நிலைகளிலும் மாணவர்களின் கைத்திறனை வளர்க்க வேண்டுமென்ற இத் திட்டத்தின் குறிக்கோளுக்கேற்ப, ''மின் கணிப்புப் பொறி அறிவியல்'' 1984–85-லிருந்து பொதுப் பாடப் பிரிவு மாணவர்கள் மேல்நிலை வகுப்பில் பயில வேண்டிய 4 பாடங்களில் ஒன்றுக்குப் பதிலாகப் பயிலக் கூடிய தொழிற் பாடமாக தொடங்கப்பட்டுள்ளது. தற்பொழுது சுமார் 120 மேல்நிலைப் பள்ளிகளில் இப்பாடம் இவ்வாறு கற்றுத் தரப்படுகிறது. இப்பாடத்தை பயிலும் மாணவர்களின் முதல் தொகுதியினர் மார்ச்சு/ஏப்ரல் 1986–ல் நடைபெறவிருக்கும் ''பொது தேர்வு'' எழுதவிருக்கிறார்கள்.

4. வாழ்க்கைக் கல்வி திட்டத்திற்காக பாடங்கள், பாடத் திட்டம் தயாரிக்கவும் திட்ட செயற்பாட்டை ஆய்வு செய்யவும் மதுரை மாவட்டத்திலுள்ள காந்தி கிராம ஊரகப் பல்கலைக் கழகத்தில் செப்டம்பர் 1985 முதல் ஒரு ஆய்வு மையம் தொடங்கப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு ரூ. 1 லட்சம் வீதம் மூன்றாண்டுகளுக்கு தொடரும் மானியம் இப்பல்கலைக் கழகத்திற்கு இதற்காக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் :

5. தற்பொழுதுள்ள பாடத் திட்டத்தின்படி எழுதப்பட்ட பள்ளிப் பாட புத்தகங்களின் புதிய வடிவங்களை தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் 1980–81–லிருந்து 1984–85 வரையுள்ள கால கட்டத்தில் படிப்படியாக வெளியிட்டுள்ளது.



1986 ஏப்ரல் 17]

6. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாடநூல்கள் மாவட்ட மற்றும் வட்ட கூட்டுறவு சங்கங்கள் 54 இன் மூலமாக மாநிலம் முழுவதும் 120 விநியோக மையங்களின் வாயிலாக விநியோகிக்கப்படுகின்றன. இக் கூட்டுறவு சங்கங்களால் நியமிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக பாடநூல் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை நகரில் இந்நிறுவனம் தனது வெளியீடுகளை தானே நேரடியாக 101 சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக விற்பனை செய்கிறது.

நோட்டுப் புத்தகங்கள் :

7. தமிழ்நாட்டுக்கு மைய அரசு ஒதுக்கும் மலிவு விலைத் தாளைக் கொண்டு நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து விநியோகிக்கும் பணியையும் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனமே செய்து வருகிறது. 1979–80 முதல் 1984–85 முடிய இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட மலிவு விலை நோட்டுப் புத்தகங்களின் மதிப்பு ரூ. 15 கோடிக்கும் அதிகமாகும். 1986–87ஆம் ஆண்டில் தயாரிக்க இருக்கும் நோட்டுப் புத்தகங்களின் மதிப்பு ஏறத்தாழ ரூ. 6 கோடியாகும்.

8. தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் மாநிலத்தின் கல்வி வளர்ச்சிக்காக ஆற்றிவரும் வேறுபணிகளில் சில : 1–8 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவச பாடநூல்களை வழங்கும் செலவில் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளுதல் ; அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட நிதி வழங்குதல், பள்ளி சாராக் கல்விக்கான புத்தகங்கள், தமிழில் கல்லூரிப் பாடநூல்கள், தமிழ் வளர்ச்சிக்கான பல்வேறு நூல்கள் ஆகியவற்றை வெளியிடுதல் முதலியவனயாகும்.

(v) ஆசிரியர் பயிற்சி.

தற்பொழுது பின்வரும் விவரப்படி அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் 75 உள்ளன :—

| | ஆடவர். | மகளிர். | மொத்தம் |
|---|---|---|---|
| அரசு .. .. | 14 | 15 | 29 |
| அரசு (சமூகநலத்துறை). | .. | 1 | 1 |
| (உதவிபெறும்) தனியார். | 14 | 31* | 45 |
| | 28 | 47 | 75 |

(*இவற்றில் சென்னை-7ல் உள்ள கிறிஸ்தோபர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியோடு இணைந்த இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பிரிவு 1–ம் இளஞ்சிறாருக்கான ஆசிரியை பயிற்சி நிலையங்கள் 3-ம் அடங்கும்.)

2. 1984–85-லிருந்து ஆசிரியர் பயிற்சி நிலையம் ஒவ்வொன்றிலும் ஆண்டு தோறும் 40 மாணவர்கள் இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

3. 1985–86-ல் 281 மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி ஒரு தொழிற் பாடமாக புகுத்தப்பட்டுள்ளது. இப்பள்ளிகள் ஒவ்வொன்றிலும் ஆண்டுக்கு 25 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

4. இளநிலை ஆசிரியர்கள் (ஹையர் கிரேடு), இடைநிலை (செகண்டரி கிரேடு) தகுதி பெற்று இடைநிலைத் தகுதிக்கான ஊதியத்தைப் பெற வகை செய்யும் பொருட்டு தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி-பயிற்சி நிறுவனம் நடத்தி வரும் 5 மாத அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்பு பயிற்சியில் இது வரை 36,400 ஆசிரியர்கள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் இப்பொழுது ஆண்டுதோறும் ஒவ்வொரு தொகுதிக்கும் 5,000 பேர் வீதம் இரு தொகுதிகளாக 10,000 பேர் பயன் பெறுகின்றனர்.

5. ஆங்கில மொழிப் பயிற்றுவிப்பு மேம்பாட்டிற்கான 10 மையங்கள் 1985–86-ல் 6—8 வகுப்புகளில் ஆங்கிலம் கற்றுத் தரும் ஆசிரியர்கள் 3,105 பேருக்கு ஆங்கிலம் கற்பித்தலில் 3 வாரப் பயிற்சியும் 9—10 வகுப்புகளில் ஆங்கிலம் கற்றுத் தரும் ஆசிரியர்கள் 1,170 பேருக்கு 4 வாரப் பயிற்சியும் நடத்தின.

6. பெங்களூரிலுள்ள வட்டார ஆங்கிலப் பயிற்சி நிறுவனத்தை நடத்த இவ்வரசு ஆண்டுதோறும் ரூ. 5 இலட்சம் அளவுக்கு நிதியுதவி செய்கிறது. 1985–86-ல் உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளி ஆங்கில ஆசிரியர்கள் 43 பேர் அந்நிறுவனத்திற்கு நான்கு மாதப் பயிற்சி பெற்றனர். ஆங்கில மொழிப் பயிற்றுவிப்புத் திட்டத்திற்காக ஆண்டு தோறும் ரூ. 25 இலட்சம்அளவில் செலவிடப்படுகிறது.

(vi) தமிழ்நாடு கல்வியாராய்ச்சி-பயிற்சி நிறுவனம்.

தமிழ்நாடு கல்வியாராய்ச்சி-பயிற்சி நிறுவனம் பள்ளிக் கல்வித் துறையின் கல்வித்தர வளர்ச்சிப் பிரிவாகச் செயல்பட்டு வருகிறது. பல்வேறு நிலைப் பள்ளி ஆசிரியர்களும் பயன் பெறும் வகையில் பல்வேறு கருத்தரங்குகள், பணிக்களரிகள், புத்தறிவுப்





பயிற்சிகள் ஆகியவற்றை இந்நிறுவனம் நடத்தி வருகிறது. இந்நிறுவனம் ஆசிரியர்களுக்காக மேலும் பல பயிற்சித் திட்டங்களை நடத்த 1986–87-ல் ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது.

2. தொடக்கக் கல்வியைச் சார்ந்த பின்வரும் சிறப்பு முன்னோடித் திட்டங்களை யூனிசெப் உதவியுடன் இந்நிறுவனம் செயற்படுத்தி வருகிறது:—

| திட்டம். (1) | செயற்படுத்தப்படும் இடங்கள். (2) |
|---|---|
| (i) தொடக்கக் கல்விப் பாடத் திட்டத்தைப் புதுப்பித்தல். | 130 தொடக்கப் பள்ளிகள் (50,000 மாணவர்கள்). |
| (ii) சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி—35 வயது முடிய அனைவருக்கும் அவரவருக்கு இசைந்த தொழிற் சார்ந்த கல்வி அளித்தல். | பல்வேறு மாவட்டங்களில் மொத்தம் 5 சமுதாய மையங்கள். |
| (iii) தொடக்கக் கல்வி வாய்ப்புக்களைப் பரவலாக்குதல் (பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தி விட்ட 9—14 வயதுத் தொகுதியினருக்கு பள்ளி சாராக் கல்வி முறையை உருவாக்குதல்). | 75 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள். |
| (iv) இளஞ்சிறார், கல்வி (3—5 வயதுக் குழந்தைகளுக்கு). | காரியாப் பட்டி வட்டாரத்தில் தொடங்கப்பட்டுள்ள 61 இளஞ்சிறார் பள்ளிகள். |

3. ''சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி'' மையங்களில் மகளிருக்கு கல்வியறிவு புகட்டுவதோடு, ஊறுகாய், அப்பளம் போன்ற உணவுப் பண்டங்கள் தயாரிப்பது பற்றியும், பல்பொடி, மை, சோப்புத்தூள் தயாரித்தல் போன்ற குடிசைத் தொழில்கள் பற்றியும் கற்றுத்தரப்படுகின்றன. வட்டார அளவிலான வளர்ச்சித் திட்டங்களில் இம்மையங்கள் தீவிர பங்கு எடுத்துக் கொள்கின்றன. தொடக்கக் கல்வி வாய்ப்புகளைப் பரவலாக்கும் திட்டத்தின் கீழ் பள்ளிப் படிப்பை நிறுத்தி விட்ட குழந்தைகளுக்கு பயிற்சி வெளியீடுகள் 50 தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளன.

மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வி :

4. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகள் நிதி (UNFPA) தரும் சுமார் ரூ. 25 இலட்சம் உதவித் தொகையைக் கொண்டு இத்திட்டத்தின் கீழ் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் சுமார் 1.5 இலட்சம் பேர்களுக்கும், உயர் நிலை, மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் 7,000 பேர் களுக்கும் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியில் பயிற்சி தரப்பட்டுள்ளன. மக்கள் தொகை கட்டுப்பாட்டுக் கல்வியின் அடிப்படைத் தன்மை, பயிற்று முறைகள் ஆகியவை பற்றிய வெளியீடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

5. சென்னையிலும் வேறு சில இடங்களிலும், ஆசிரியர்கள் பயன் பெறுவதற்கான தொடர்கல்வி மையங்களை கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் நடத்தி வருகிறது. தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கு புத்தறிவுப் பயிற்சி, 6—10 வகுப்புகளில் தமிழ் கற்றுத் தரும் ஆசிரியர்கள் திறனை வளர்க்க அஞ்சல் மற்றும் வானொலி வழிப் பயிற்சி ஆகியவற்றையும் நடத்தி வருகிறது.

அனைவருக்குமான (அஞ்சல் முறைப்) பள்ளி :

6. உயர்நிலைப் பள்ளி நிலையில், பள்ளி சாராக் கல்வியினை விரிவாக்கும் பொருட்டு, அனைவருக்குமான (அஞ்சல் முறைப்) பள்ளியை (Open School) மாநில கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் 1985–86-ல் தொடங்கியுள்ளது. ஏற்கனவே 8-வது வகுப்பு தேறி 15 வயது நிறைந்தவர்கள் இதன் மூலம் பயன் பெறலாம். ஆண்டு தோறும், 2,500 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவர். அஞ்சல் வழிப் பயிற்சியும் நேரடித் தொடர்பும் இணைந்த இப் பள்ளி 12 மாத காலம் நடத்தப்பட்டு எஸ்.எஸ்.எல்.சி.க்கு இணையான கல்வி தரப்படும். இப் படிப்பு மிகவும் நல்ல வரவேற்பை பெற்று உள்ளது.

(vii) **பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத பணியாளர்களின் நலன் :**

அண்மை ஆண்டுகளில் ஆசிரியர்கள் பெற்ற நன்மைகளில் முக்கியமானவை வருமாறு :—

(1) ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப் பட்டது ;



(2) இளநிலை ஆசிரியர்களை, இடைநிலை ஆசிரியர்களா[க] உயர்த்த, அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்புப் பயிற்[சி] தொடங்கப்பட்டது ;

(3) இடைநிலைத் தகுதி பெறும் இளநிலை ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் சம்பள விகிதம் தரப்படுவது ; மற்றும் பி. எட். தகுதி பெறும் நடுநிலைப் பள்ளி (இடைநிலைத்தர) தலைமையாசிரியர்களுக்கு பி.எட். சம்பள விகிதம் தரப்படுவது ;

(4) நடுநிலைப் பள்ளிகளிலுள்ள பகுதி நேரக் கைத் தொழில் ஆசிரியர் பதவிகளை படிப்படியாக முழு நேரப் பதவி களாக உயர்த்துதல் ;

(5) தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு பணிப் படியாகத் தரப்பட்டு வந்த தொகை 1—1—1986 முதல் சிறப்பு ஊதியமாகக் கருதப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(6) அனைத்து ஆசிரியர்களுக்கும், 1982–83 ஆம் ஆண்டி லிருந்து ஈட்டிய விடுப்பு 2 நாட்களிலிருந்து 10 நாட்களாக அதி கரிக்கப்பட்டது; 1985–86 முதல் 15 நாட்களாக அதிகரிக்கப் பட்டது ;

(7) ஆசிரியர்களது குறைகளை உடனுக்குடன் உரிய வட்டத் தில் தீர்த்து வைக்கும் பொருட்டு, கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில நிலைகளில் ''ஆசிரியர்களுக்கான ஆலோசனைக் குழுக்கள் ''.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கான நலன்கள் :

2. தனியார் பள்ளி ஆசிரியர்களின் பணி நிலைமைகளை மேம் படுத்த அரசு பின்வரும் முக்கியமான நடவடிக்கைகள் எடுத்து உள்ளது :

(1) மேல்முறையீட்டின் பேரில் மீண்டும் பணியில் சேர்க் கப்பட ஆணையிடப்படுகின்ற தனியார் பள்ளி ஆசிரியர்களை நிருவாகங்கள் மீண்டும் பணியில் எடுத்துக் கொள்ள வகை செய் தலும், தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பெற்ற ஆசிரியர்கள் இன்னலுக்குட்படுத்தாமல் தடுத்தலும் ;

(2) சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளைத் தவிர பிற தனியார் பள்ளிகளில் நியமனங்கள் அனைத்தும் வேலை வாய்ப்பு நிறுவனங்கள் மூலமே செய்யப்பட வேண்டும் என்ற விதியையும் நியமனங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 விழுக்காடும் பிற்பட்டவர்களுக்கு 50 விழுக்காடும் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற விதியையும் அமுலாக்குதல் ;

[1986 ஏப்ரல் 17

(3) தனியார் பள்ளியாசிரியர்களும் பிற பணியாளர்களும் பணியில் இருக்கும் பொழுதே இறந்து அவர்கள் குடும்பங்கள் வறுமை நிலையிலிருந்தால் அவர்கள் மகன்/மகள்/மனைவி/கணவன் ஆகியோருக்கு கருணை அடிப்படையில் அப்பள்ளிகளில் நியமனம் செய்து கொள்ளும் சலுகை ;

(4) தமிழ்நாடு சிறப்பு வைப்பு நிதி-பணிக் கொடைத் திட்டம் 1-4-1984 முதல் விரிவாக்கப்பட்டது.

(5) தனியார் பள்ளிகளில் சராசரி மாணவர் வருகை ஆகஸ்டு மாதத்தில் உள்ளதன் அடிப்படையில் அப்பள்ளிக்கு ஆசிரியர்கள் மாணவர் விகிதத்தின் படி நிர்ணயிக்கும் மொத்த ஆசிரியர் எண்ணிக்கையை அப்பள்ளி ஆண்டு முடியும் வரை தொடர்ந்து கடைபிடித்தல்.

அரசு அல்லாத கல்வி நிறுவனப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் :

3. அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற) பள்ளி ஆசிரியர்களுக்கு 1-6-1970-லிருந்தும், தனியார் பள்ளிகளின் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு 1-4-1972-லிருந்தும், தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு 2-10-1970-லிருந்தும், பிற வகையான தனியார் கல்வி நிலையப் பணியாளர்களுக்கு வேறு வேறு நாட்களிலிருந்தும் தாராள ஓய்வூதிய விதிகளின் பயன்கள் தரப்பட்டுள்ளன.

ஆசிரியர் நலனுக்காக தேசிய நிதி :

4. ஆசிரியர்களும், அவர்களது குடும்பத்தினரும் வறுமை முதலியவற்றால் வாடும்பொழுது, நிதியுதவி செய்யவும், அவர்களது குழந்தைகளுக்கு மேற்படிப்புக்கான உதவித் தொகைகளை அதற்கான விதிமுறைக்குட்பட்டு அளிப்பதற்கும் இந்நிதியிலிருந்து உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 1,000; தொழிலியல் பட்டயப் படிப்பு மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 500 என்பது உதவித் தொகைகளின் விகிதமாகும். காசநோய் போன்ற சில குறிப்பிட்ட கடுமையான நோய்களால் அவதிப்படும் ஆசிரியர்களுக்கு ரூ. 750 நிதியுதவி தரப்படுகிறது.



1986 ஏப்ரல் 17]

ஆசிரியர்களுக்கான விருதுகள் :

5. பள்ளியாசிரியர்களுக்கான மாநில விருதுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 1985-86 ஆம் ஆண்டுக்கு பின்வரும் விவரப்படி 216 ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் .. .. | 103 |
| உயர் நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்கள் .. .. .. .. | 103 |
| ஆங்கிலோ-இந்தியன் பள்ளி ஆசிரியர்கள் .. | 2 |
| மெட்ரிகுலேஷன் பள்ளி ஆசிரியர்கள் .. | 2 |
| | 216 |

இவ்விருது ஒவ்வொன்றும் ரொக்கம் ரூ. 500, வெள்ளிப் பதக்கம் தகுதிச் சான்றிதழ் ஆகியவற்றைக் கொண்டது. தமிழகத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் எண்மரும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஐவரும் மைய அரசிடமிருந்து 1985 ஆம் ஆண்டுக்கான தேசிய விருதுகளையும் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு ஆசிரியர்களுக்கான வீட்டுவசதி வாரியம் :

அனைத்துவகை மேலாண்மைகளின் கீழும் உள்ள ஆசிரியர்களுக்கு வீட்டுவசதி செய்து தருவதற்காக தனி வீட்டுவசதி வாரியம் ஒன்றை தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. நிதி நிறுவனங்களிடமிருந்தும் உதவி பெற்று இப்பணியில் இவ்வாரியம் ஈடுபடும். இதற்கான திட்டங்களை உருவாக்குவதில் இவ்வாரியம் ஈடுபட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 17

III. மேல்நிலைப் பள்ளிக் கல்வி.

தமிழ் நாட்டில் 1985–86-ல் செயல்பட்டு வந்த 1,554 மேல் நிலைப் பள்ளிகளின் நிருவாக வாரி விவரங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| அரசு .. .. .. .. | 679 |
| அரசு (தொழில் நுட்பம்) .. .. .. | 14 |
| நகராட்சி மற்றும் மாநகராட்சி .. .. | 68 |
| தனியார் .. .. .. .. | 625 |
| | 1,386 |
| ஆங்கிலோ-இந்திய மேல் நிலைப் பள்ளி .. | 28 |
| மெட்ரிகுலேசன் மேல் நிலைப் பள்ளி .. | 79 |
| | 1,487 |
| இடைநிலைக் கல்விக்காக மைய அரசு வாரியத்தோடு C.B.S.F. இணைந்த மேல் நிலைப் பள்ளிகள் .. .. .. .. | 67 |
| | 1,554 |

இப்பள்ளிகளில் 1985–86-ல் புதிதாகத் தொடங்கிய பள்ளிகள் 49 (அரசு 24 தனியார்-25) மேற்கண்ட 1,487 மேல் நிலைப் பள்ளிகளில் (C.B.S.E.) உடன் இணைந்த 67 பள்ளிகள் தவிர மற்றவை) மேல் நிலை வகுப்புகளில் பயின்று வந்த மாணவ மாணவியர் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
|---|---|---|---|
| பொதுப் பாடங்கள் .. | 1,62,016 | 1,19,009 | 2,81,025 |
| தொழிற் பாடங்கள் .. | 44,893 | 22,872 | 67,765 |
| | 2,06,909 | 1,41,881 | 3,48,790 |



1986 ஏப்ரல் 17]

2. 1978–79-இல் மேல் நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்ட பொழுது மேல் நிலை வகுப்புகளில் கலை, அறிவியல் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் தேவையில் பெரும்பகுதி மேல் நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பதவிக்கு முழுத் தகுதி பெற்ற உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்களை மேல் நிலைப் பள்ளிகளுக்கு மாற்றம் செய்தும், முது கலைப் பட்டத் தகுதி பெற்றிராத உயர் நிலைப்பள்ளி ஆசிரியர்களை மேல்நிலை வகுப்புகள் நடத்த''உட்படுத்தியும்''பூர்த்தி செய்யப்பட்டது. அவ்வாண்டுக்கும் அதற்குப்பின்னர் உள்ள ஆண்டுகளுக்கும் கூடுதலாகத் தேவைப்பட்ட மேல் நிலைப் பள்ளியாசிரியர்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இதுவரை மொத்தம் 7,190 மேல் நிலைப்பள்ளி வகுப்பு ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டன. இவற்றோடு உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் 250-ம் ஆய்வுக்கூட உதவியாளர் பணியிடங்கள் 900-ம் ஏற்படுத்தப்பட்டன. 1986–87-ல் மேல் நிலை வகுப்பு ஆசிரியர்கள் பணியிடங்கள் மேலும் 75 கூடுதலாக ஏற்படுத்தப்படும்.

3. மேல் நிலைப் பள்ளித் தலைமையாசிரியர், மேல் நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பணியிடங்களுக்கான பணி விதிகள் ஏப்ரல் 1981-ல் வெளியிடப்பட்டன. உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து '' உட்படுத்தப்பட்ட '' ஆசிரியர்கள் மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களாக முறையான நியமனம் பெறுவதற்கு மேற்படிப்புத் தகுதி அடைய போதிய காலம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதுவரை இவ்வாசிரியர்கள் மாதந்தோறும் ரூ. 40 சிறப்பூதியம் பெற்று வருகின்றனர். 29–11–1980-க்குப் பின் ''உட்படுத்தப்பட்ட'' ஆசிரியர்களுக்கும் இச் சிறப்பூதியத்தை 21–12–1985 முதல் வழங்கி வர அரசு அண்மையில் ஆணையிட்டுள்ளது. '' உட்படுத்தப்பட்ட '' ஆசிரியர்களுக்கு மாநிலக் கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் மூலமாக பத்து மாத, ''பட்ட மேற்படிப்புச் சான்றிதழ்'' வகுப்பை நடத்த அரசு ஏற்பாடு செய்து இருக்கிறது. இவ்வகுப்பில் தேறிவருபவர் அந்நிறுவனத்திடம் சான்றிதழ் பெற்று அவரவர்க்குரிய பாடத்தை மேல்நிலை வகுப்புகளில் நடத்த முழுத் தகுதி உடையவர்களாகக் கருதப்பட்டு மேல்நிலை வகுப்பு ஆசிரியர்களுடைய சம்பள விகிதத்தை அடைய தகுதி பெறுவார்கள். பொருளியல், மனையியல், புவியியல் ஆகிய பாடங்களைப் பயிற்றும் ''உட்படுத்தப்பட்ட'' ஆசிரியர்களுக்கும் இந்தச் சான்றிதழ் வகுப்பை நடத்த அரசு அண்மையில் ஆணையிட்டுள்ளது.

4. மேல்நிலைப் பள்ளிகளில், மேல்நிலை வகுப்புகளில் அறிவியல் பாடங்களின் செயல்முறை வகுப்புகளை நடத்த அறிவியல் ஆசிரியர்களுக்கு உதவியாக மாணவர்களை, ''அறிவியல் மானிட்டர்''களாக நியமிக்கும் திட்டம் 1983–84 லிருந்து செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மானிட்டருக்கும் மாதம் ரூ. 20 வீதம் ஆண்டுக்கு 10 மாத மதிப்பூதியம் தரப்படுகிறது. ஒவ்

வொரு மேல்நிலைப் பள்ளியிலும் 11ஆம் வகுப்பில் அறிவியல் பாடம் ஒவ்வொன்றிலும் ஒரு மானிட்டரும், 12 ஆம் வகுப்பில் அறிவியல் பாடம் ஒவ்வொன்றிலும் ஒரு மானிட்டரும், என்ற வாறு மொத்தம் அனைத்துப் பள்ளிகளிலும் ஒவ்வோராண்டும் ஏறத்தாழ 7,742 அறிவியல் மானிட்டர்கள் இருப்பர்.

மேல் நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்கள் :

5. மேல் நிலைப் பள்ளி நிலையில் தொழிற் பாடங்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருந்துவருகிறது. 1985–86-ல் மொத்தம் 1,126 மேல் நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. சில பள்ளிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. 1985–86ல் மேல் நிலைப் பள்ளிகளில் பயின்று வந்த 3.49 லட்சம் மாணவர்களில் 67,765 பேர் (அதாவது சுமார் 17 விழுக்காட்டினர்) பின்வரும் விவரப்படி தொழிற் பாடங்களைப் பயின்று வந்தனர் :—

| தொழிற்பாட வகை. | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. வேளாண்மை .. | 5,246 | 284 | 5,536 |
| 2. மனையியல் .. | 50 | 2,735 | 2,785 |
| 3. வாணிக்த் துறை .. | 21,714 | 15,732 | 37,446 |
| 4. பொறியியலும், தொழில் நுட்பவியலும். | 17,497 | 508 | 18,005 |
| 5. உடல் நலம் .. | 365 | 3,572 | 3,937 |
| 6. பலவகை .. .. | 21 | 41 | 62 |
| | 44,893 | 28,872 | 67,765 |

6. மைய அரசு நாடெங்கும் அமுல் படுத்திவரும் ஒரு திட்டத்தின்கீழ் மின் கணிப்புப் பொறியைப் பற்றிய கல்வியானது 1984–85–லிருந்து இம்மாநிலத்தில் சில மேல்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்பட்டுள்ளது. 1985–86-ல் இப்பாடத்தை நடத்தி வரும் 30 பள்ளிகளில் 16 பள்ளிகள் சென்னையிலும் 14 பள்ளிகள் கோயம்புத்தூரிலும் அதையொட்டியும் அமைந்துள்ளன. இப்பள்ளிகளுக்கு மின் கணிப்புப் பொறி வசதிகளை அளிப்பதுடன் வழிகாட்டும் மையங்களாகச் செயல்படுபவை இந்தியத் தொழில் நுட்பவியல் நிலையம், சென்னை; பூ.சா.கோ தொழில் நுட்பவியல் கல்லூரி, கோயம்புத்தூர் ஆகியவை யாகும்.



7. மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் பொதுப்பாடங்களைப் பயிலும் மாணவர்கள் விருப்பப் பாடங்களாகக் கற்க வேண்டிய 4 பாடங்களில் ஒன்றுக்குப் பதிலாக தொழிற் பாடம் ஒன்றைப் பயில அனுமதிக்கும் திட்டத்தை விருப்பமுள்ள மேல் நிலைப் பள்ளிகள் 1984–85 முதல் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டன. சுமார் 120 பள்ளிகள் இப்பொழுது இத்திட்டத்தை செயல்படுத்துகின்றன.

8. முன்னர் உயர்நிலைப் பள்ளிகளில் இருமுனைப் பாடங்களைக் கற்பித்து வந்தவர்களான 491 முழு நேர தொழிற்பாட ஆசிரியர்களோடு புதிதாக நியமிக்கப்பட்ட 5,000 பகுதி நேர தொழிற்பாட ஆசிரியர்களும் தொழிற் பாடங்களைக் கற்றுத் தருகின்றனர். பகுதி நேர ஆசிரியர்களுக்கு மாத ஊதியம் ரூ. 300 ஆகும். இந்த 5,000 பகுதி நேர தொழிற்பாட ஆசிரியர்களில் 750 பேர் 1985–86-ல் ஏற்பளிக்கப்பட்டவர்களாவர். அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுவோரில் பொருத்தமானவர்கள் இருப்பின் அவர்களும் பிற இடங்களில் வெளிநபர்களும் பகுதி நேர ஆசிரியர்களாக நியமிக்கப்படுகின்றனர். மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் தொழிற்பாடங்களுக்கான தளவாடங்கள் வகையில் அரசுப் பணத்திலிருந்து மட்டும் செய்துள்ள செலவு ரூ. 40 இலட்சத்திற்கு மேல் ஆகும். இதுபோக அந்தந்தப் பள்ளி வசதிக் கட்டண நிதியிலிருந்தும் தனியார் நிருவாகங்களின் பணத்திலிருந்தும் தொழிற்பாட தளவாடங்களுக்காகச் செலவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. தொழிற்பாட மானிட்டர்களை நியமிக்கும் முன்னோடித் திட்டமும் செயல்பட்டு வருகிறது.

9. மேல் நிலைப் பள்ளித் தொழிற்பாட மாணவர்களின் வேலை வாய்ப்புகளை அதிகரித்தல், அவர்கள் உயர் கல்வியும் தொடர் கல்வியும் பெற வழி செய்தல் போன்ற நோக்கங்களுடன் மேல்நிலைக் கல்வித் தொழிற்பாட வகுப்புகளின் பாடங்கள், பாடத் திட்டம் ஆகியவற்றை மாற்றி அமைப்பதற்கான அரசு அமைத்த குழந்தைசாமி குழுவின் பரிந்துரைகளைப் படிப்படியாக அரசு அமுலாக்க எடுத்துக்கொண்டுள்ளது.

10. மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்பாடங்களைப் பயின்று தேறி வெளிவரும் மாணவர்களுக்கு 6 மாத சிறப்புப் பயிற்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட 19 தொழில்

களில் ஏதாவது ஒன்றில் அவ்வாறு மொத்தம் 1,300 பேருக்கு ''தொழில் பழகு பயிற்சிக் குழு''வின் மூலமாக பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி காலத்தில் மாதம் ரூ. 200 ஊதியம் தரப்படும்.

கட்டடங்களும் தளவாடங்களும் :

11. அரசு மேல்நிலைப் பள்ளிகள் 668-க்கு ஒவ்வொன்றிற்கும் ஒரு வகுப்பறையும், ஒரு ஆய்வுக் கூடமும் கட்ட பெருந்தொகையான ரூ. 13 கோடி அளவில் அரசு ஏற்பளித்துள்ளது. இவற்றில் 619 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.

12. இதுவரை தொடங்கியுள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகள் அனைத்திற்கும் தேவையான ஆய்வுக் கூடத் தளவாடங்கள் வகையில் மொத்தம் ரூ. 6.36 கோடிக்கு மேல் செலவிடப்படுகிறது. சிறு தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (சிட்கோ) மூலமாக இத்தளவாடங்கள் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. ஏற்பளிக்கப்பட்ட தொகையில் ரூ. 5 கோடி அளவில் ஏற்கனவே செலவிடப்பட்டு விட்டது.

13. அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற) மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் கட்டவும், தளவாடங்கள் வாங்கவும் ஆகும் செலவில் 40 விழுக்காட்டை பள்ளிக்கு ரூ. 1 இலட்சம் என்ற வரம்புக்குட்பட்டு மானியமாகத் தரும் திட்டம் ஒன்றுக்கும் அரசு ஏற்பளித்துள்ளது. இதுவரை இவ்வாறு இணை மானியமாக ஏற்பளிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை சுமார் ரூ. 2.5 கோடியாகும். இதுவரை 525 பள்ளிகள் இத்திட்டத்தின் கீழ் மானியம் பெற அனுமதிக்கப்பட்டுள்ளன.

14. கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் உள்ள ஆய்வுக்கூட வசதிகளை மேல்நிலைப்பள்ளி மாணவர்களும் பயன்படுத்திக்கொள்ள வகை செய்யும் நோக்குடன் '' கல்லூரி இணையங்களும் '' '' பாலிடெக்னிக் இணையங்களும் '' இயன்ற இடங்களில் எல்லாம் அமைக்கப்பட்டுள்ளன.

## IV அரசுத் தேர்வுகள்

அரசுத் தேர்வுத் துறை 1975 பிப்ரவரியிலிருந்து தனித்துறையாக இயங்கி வருகிறது. சென்னையிலுள்ள தலைமை அலுவலகம் மற்றும் பின்வரும் வட்டார அலுவலகங்களுடன் இத்துறை



செவ்வனே செயல்பட்டு வருகிறது. (வட்டார அலுவலகங்கள் ஒவ்வொன்றுக்கும் உட்பட்ட மாவட்டங்களின் விவரங்களும் தரப்பட்டுள்ளன) :—

| வட்டார அலுவலகம். (1) | உட்பட்ட மாவட்டங்கள். (2) |
|---|---|
| சென்னை .. .. | சென்னை, செங்கல்பட்டு, வட ஆற்காடு. |
| திருச்சிராப்பள்ளி .. | தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை. |
| கோயம்புத்தூர் .. | சேலம், கோயம்புத்தூர், பெரியார், தருமபுரி, நீலகிரி. |
| மதுரை .. .. | மதுரை, அண்ணா, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர், திருநெல்வேலி. |

2. இத்துறை நடத்தும் முக்கியமான தேர்வுகளை எழுதும் மாணவர் எண்ணிக்கை வருமாறு :—

| | 1985 மார்ச்/ஏப்ரல். | | 1985 செப்டம்பர்/அக்டோபர் |
|---|---|---|---|
| | தேர்வு எழுதியோர். | தேறியோர் விழுக்காடு. | தேர்வு எழுதியோர். |
| (1) | (2) | (3) | (4) |
| எஸ்.எஸ்.எல்.சி. | | | |
| மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட) .. | 3,75,229 | * | 1,39,396 |
| பள்ளியில் பயின்று முடித்துவிட்டு எழுதுபவர்கள் .. | 2,98,716 | 58.2 | — |
| ஆங்கிலோ இந்தியன் .. | 3,363 | 90.2 | 374 |
| மெட்ரிக்குலேஷன் .. | 5,731 | 89.5 | 600 |
| மேல்நிலைப்பள்ளித் தேர்வு— | | | |
| மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட) .. .. | 1,81,486 | * | 52,724 |
| பள்ளியில் பயின்று முடித்துவிட்டு எழுதுபவர்கள் .. | 1,38,816 | 70,3 | .. |

*பகுதி முறைத் தேர்வு 1978 மார்ச் மாதத்திலிருந்து அமு ாக்கப்பட்டதன் காரணமாக மொத்தம் (தனிப்பட்ட முறையில் ழுதுவோர் உட்பட) தேர்வு எழுதுபவர்களில் தேறியோர் விழுக் ாடு கணக்கிட்டுத்தர இயலவில்லை.

[1986 ஏப்ரல் 17

1986-மார்ச் ஏப்ரல் திங்களில் எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல் நிலைப் பள்ளித் தேர்வு எழுத இருப்போர் எண்ணிக்கை முறையே 3,87,000-ம், 1,87,000-ம் ஆகும்.

தேர்வு மையங்கள்.

| (1) | செப்டம்பர்/ அக்டோபர் 1985 (2) | மார்ச்/ ஏப்ரல் 1986 (3) |
|---|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி. .. .. | 375 | 1,760 |
| மேல்நிலைப்பள்ளித் தேர்வு .. | 180 | 796 |

3. எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைப்பள்ளித் தேர்வுகளை தனிப்பட்ட முறையில் எழுதுவதற்கு கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்படுகிறது :—

| தேர்வு. (1) | தனிப்பட்ட முறையில் எழுதுவதற்கான தகுதிகள். கல்வித் தகுதி. (2) | குறைந்த பட்ச வயது. (3) |
|---|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி. .. .. | 8-ஆவது வகுப்பில் தேறியிருத்தல். | 16 |
| மேலநிலைப் பள்ளித் தேர்வு—(தொழில் சாராத பாடங்கள்) (அதுவும் செயல்முறை இல்லாத பாடங்கள் மட்டும்) .. | 10-ஆவது வகுப்பு தேறியிருத்தல். | 18 |

4. பதினான்கு வயது முடித்தவர்கள் தனிப்பட்ட முறையில் கலந்து கொள்ளும் வகையில் நடத்தப்பெறும் தொடக்கப்பள்ளி இறுதிப் பொதுத் தேர்வு (ஈ.எஸ்.எல்.சி.) ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப் பெறுகிறது. 1985 டிசம்பரில் இத்தேர்வில் 4,193 பேர் கலந்து கொண்டனர்.



1986 ஏப்ரல் 17]

V. வயது வந்தோர் கல்வியும் பள்ளி சாராக் கல்வியும்.

வயது வந்தோர் கல்விக்கும் பள்ளி சாராக் கல்விக்கும் 1986–87 நிதிநிலை அறிக்கையில் ரூ. 5.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. (1985–86-ல் ரூ. 4 கோடியே ஒதுக்கப்பட்டிருந்தது )

வயது வந்தோர் கல்வி

2. எழுத்தறிவு பெற்றவர்கள் சதவீதம் தமிழ்நாட்டிலும் அனைத்திந்தியாவிலும் பின்வருமாறு இருந்து வருகிறது ;—

| சென்ஸஸ் ஆண்டு. | தமிழ்நாடு. ஆண். | பெண். | மொத்தம். |
|---|---|---|---|
| 1971 .. .. | 51.78 | 26.36 | 39.46 |
| 1981 .. .. | 57.19 | 34.12 | 45.78 |
| | **இந்தியா.** ஆண். | பெண். | மொத்தம். |
| 1971 .. .. | 39.51 | 18.44 | 29.34 |
| 1981 .. .. | 46.74 | 24.88 | 36.17 |

3. தமிழ்நாட்டில் வயது வந்தோர் கல்வி கீழே விவரிக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களின் கீழ் அளிக்கப்படுகிறது.

ஊரக (தொழில் சார்ந்த) எழுத்தறிவிப்புப்பணி

4. மைய அரசின் முழுப்பண உதவியுடன் நடைபெறும் இத்திட்டத்தின்கீழ், இம்மாநிலத்தில் உள்ள 19 மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு 300/600 மையங்கள் வீதம் 8,100 மையங்கள் செயல்படுகின்றன. ஒவ்வொன்றிலும் 300 மையங்கள் வீதம், மொத்தம் 27 செயற் பிரிவுகள் இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் செயல்படுகின்றன.

[1986 ஏப்ரல் 17

5. ஊரகத் தொழில் சார்ந்த எழுத்தறிவுத் திட்டச் செயற்பாட்டை (முன்னர் 3 ஆண்டுகள் இருந்ததற்கு மாறாக) இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் முடியும் வகையில் பின்வருமாறு மைய அரசு 1985 ஏப்ரல் முதல் மாற்றியமைத்துள்ளது :—

முதல் ஆண்டு—

| | | |
|---|---|---|
| (அ) முதல் கட்டம். | 8 மாதங்கள் (350 மணி நேரம்). | அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவு புகட்டல் (விழிப்புணர்வு வளரும் வகையிலும், வாழ்க்கைக்குப் பயன்படும் வகையிலும்). |
| (ஆ) இரண்டாவது கட்டம். | 4 மாதங்கள் (150 மணி நேரம்). | எழுத்தறிவு, எண்ணறிவு ஆகியவற்றை வலுப்படுத்துதல். |

இரண்டாம் ஆண்டு—

| | | |
|---|---|---|
| (இ) மூன்றாவது கட்டம். | 12 மாதங்கள் (100 மணி நேரம்). | ஏட்டறிவு நிலைத்திட்டமும் அதன் தொடர்ச்சியும். |

பல்வேறு செயற் பிரிவுப் பகுதிகளிலும்(Project areas) பழைய முறைத் திட்டத்தின் கட்டம் எப்பொழுது முடிவடைகிறதோ அப்பொழுது மேற்சொன்ன திருத்தியமைக்கப்பட்ட செயற்பாட்டு முறை அமுலுக்கு வரும். திருத்தியமைக்கப்பட்ட செயற்பாட்டு முறையின் கீழ் (300 மையங்களைக் கொண்ட) செயற்பிரிவுப் பகுதி ஒவ்வொன்றுக்கும் முதலாண்டு ரூ. 10.48 இலட்சமும், இரண்டாம் ஆண்டு 9.78 இலட்சமும் அனுமதிக்கப்பட்ட செலவினம் ஆகும். பழைய முறையில் இச்செலவினங்கள் முதலாண்டு ரூ. 9.25 இலட்சம் பின் ஆண்டுகளில் ஆண்டுக்கு ரூ. 8.55 இலட்சம் ஆக இருந்தன.

6. முப்பது மையங்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் உள்ளார். அந்தந்த வட்டாரத்திலுள்ள வேலை வாய்ப்பற்ற பட்டதாரி ஆசிரியர்கள், பட்டதாரிகள், இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர்கள் ஆகியவர்களிடையேயிருந்து மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு மாதம் ரூ. 500 சம்பளமும் ரூ. 150 போக்குவரத்துச் செலவுக்கும் வழங்கப்படுகிறது. எஸ்.எஸ்.எல்.சி. தேறி வேலை வாய்ப்பின்றியுள்ளவர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் வயது வந்தோர் கல்வி மையங்களில் "எழுத்தறிவு ஊக்குநர்கள்" ஆக நியமிக்கப்படுகிறார்கள். இதற்காக அவர்களுக்கு வயது வந்தோர் கல்வி பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. மாதம் ரூ. 100 சிறப்பூதியமும் மண்ணெண்ணெய் மற்றும் சில்லரைச் செலவுகளுக்காக ரூ. 35-ம் அவர்களுக்கு அளிக்கப்படு



1986 ஏப்ரல் 17]

கிறது. ஒவ்வொரு மையத்திலும் பின்வரும் முன்னுரிமைப்படி எழுத்தறிவு இல்லாதவர்கள் 30 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்:—

1. ஆதி திராவிடர் மகளிர்.
2. பெண்கள் (பொதுவாக).
3. ஆதி திராவிடர் (ஆடவர்).
4. பிற வகுப்பினர்.

அந்தந்த இடத்துக்கு வசதியான நேரங்களில் இவ்வயது வந்தோர் கல்வி வகுப்புகள் நடக்கின்றன.

மாநில அரசின் வயது வந்தோர் கல்வித் திட்டம் :

7. மாநில அரசின் வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் செயல்படும் மையங்களின் விவரம் வருமாறு :—

| திட்டம் தொடங்கிய காலம். | செயல் திட்டப் பிரிவுகளின் எண்ணிக்கை. | மையங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மார்ச் 1980 .. | 61 | 6,100 |
| அக்டோபர் 1983 .. | 54 | 5,400 |
| அக்டோபர் 1985 .. | 6 | 60 |
| | 121 | 12,100 |
| 1986–87ல் தொடங்க இருப்பவை | 6 | 600 |

ஊரக (தொழிற்சார்ந்த) எழுத்தறிவுத் திட்ட மையங்களைப் போன்றே இம்மையங்களும் செயல்படுகின்றன. முப்பது மையங்களுக்கு ஒருவர் வீதம் மேற்பார்வையாளர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு ரூ.600 சம்பளமும் போக்குவரத்துச் செலவுக்கு ரூ. 75-ம் தரப்படுகிறது.

8. வயது வந்தோர் கல்வித் திட்டத்தைப் பயனுள்ளதாக்கவும், கல்வியறிவற்றவர்களை எழுத்தறிவு மையங்களுக்கு ஈர்ப்பதற்கும் (எல்லா திட்டங்களின் கீழும் நடத்தப்படும்) எழுத்தறிவு மையங்களில் அந்தந்த வட்டார தேவைக்கேற்ப சிறு சிறு கைத்தொழில்களும் அவர்களுக்குக் கற்றுத் தரப்படுகின்றன. அத்தொழில்கள் மூலம் அவர்கள் தம் வருமானத்தையும் பெருக்கிக் கொள்ள முடியும். அவர்கள் கடன் வசதி பெறுதல், உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்தல் ஆகிய காரியங்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கும் அவர்களுக்கு உதவப்படுகிறது.

### பிற அமைப்புக்களின் எழுத்தறிவுப் பணிகள்.

9. தனியார் அமைப்புகள், நேரு இளைஞர் மையங்கள் கல்லூரிகள் ஆகியவையும் வயது வந்தோர் கல்வி மையங்களை நடத்தி வருகின்றன.

10. 1986–87-ல் வயது வந்தோர் கல்வியைப் பரப்ப புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படவிருக்கின்றன. வயது வந்தோர் கல்வி மையங்கள் 500-ஐ நடத்த தாமாகவே முன்வரும் கல்வி நிலையங்களின் ஆசிரியர்களுக்கு நிதி உதவி அளித்தல் ; அங்கீகாரம் பெற்ற ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறுவோர் 6,000 பேர்கள் மூலம் ஆளுக்கு 5 வயது வந்தோர் வீதம், வயது வந்தோர் 30,000 பேருக்கு கல்வி அளித்தல் முதலியன வாகும். இப்பணிக்கான பயிற்றும் உப கரணங்கள் இலவசமாக வழங்கப்படும் ; ஆனால் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் பயிற்சியாளர்களுக்கும் ஊதியம் வழங்கப்படமாட்டாது. இத்திட்டங்களின் விவரம் வருமாறு:—

| திட்டம். | மையங்களின் எண்ணிக்கை. | பயன்பெறும் வயது வந்தோரின் எண்ணிக்கை. | 1986–87-ல் செலவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்). |
| ஆசிரியர் .. | 500 | 15,000 | 1.25 |
| பயிற்சி பெற்ற ஆசிரியர்கள். | .. | 30,000 | 2.25 |





11. வயது வந்தோர் கல்விக்கான பல்வேறு திட்டங்களிலும் சேர்த்து மொத்தம் இதுவரை எழுத்தறிவு பெற்றுள்ளவர்கள் விவரம் வருமாறு :—

| திட்டத்தின் பெயர். | ஆடவர். | மகளிர். | மொத்தம். | மொத்த எண்ணிக்கையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (இலட்சங்களில்.) | | |
| 1. ஊரக தொழில் சார்ந்த எழுத்தறிவுத் திட்டம் (1979 ஜூலை-.. 1985 டிசம்பர்). | 3.12 | 7.56 | 10.68 | 5.33 |
| 2 மாநில அரசின் வயது வந்தோர் கல்வித் திட்டம் 1980–81—1985 டிசம்பர்) .. | 4.86 | 10.66 | 15.52 | 8.04 |
| 3 தொண்டு நிறுவனங்கள் (1979–80—1985 டிசம்பர்) .. | 9.69 | 1.52 | 2.21 | 1·20 |
| 4 நேரு இளைஞர் மையங்கள் (1979–80—1985 டிசம்பர்) | 0.17 | 0.12 | 0.29 | 0.13 |
| 5 கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் (1979–80—1985 டிசம்பர்) .. | 0.52 | 0.48 | 1.00 | 0.47 |
| மொத்தம் .. | 9.36 | 20.34 | 29.70 | 15.17 |

12. 1985 ஆம் ஆண்டின் இறுதியில் செயல்பட்டு வந்த வயது வந்தோர் கல்வி மையங்களின் மொத்த எண்ணிக்கை 21,856 ஆகும். அம்மையங்களில் பயின்று வந்தோரின் எண்ணிக்கை 6.82

[1986 ஏப்ரல் 17

லட்சம்பேர் ஆகும். இவர்களுள் பெரும்பாலோர் அதாவது 5.80 இலட்சம் பேர் மகளிர் ஆவர். மொத்த எண்ணிக்கையாகிய அந்த 6.82 இலட்சம் பேரில் 3.14 இலட்சம் பேர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்தவராவர்.

13. வயது வந்தோர் கல்வி மையங்களில் பெண்களைச் சேர்ப்பதில் சிறந்த பணியாற்றுவதற்கான விருதுகள் வழங்கும் திட்டம் ஒன்றை மைய அரசின் கல்வித் துறை 1983–84, 1984–85 ஆண்டுகளில் செயல்படுத்தியது. அனைத்து மாநிலங்களிலும் உள்ள அனைத்து வருவாய் மாவட்டங்களிலும் மாவட்டத்துக்கு 5 சிறந்த வயது வந்தோர் கல்வி மையங்களுக்கு, மையத்துக்கு ரூ. 5,000 வீதமும்; ஒவ்வொரு மாநிலத்திலும் மிகச்சிறந்த சாதனைசெய்த வருவாய் மாவட்டம் ஒன்றுக்கு ரூ. 3 இலட்சமும் ; சிறந்த சாதனைகள் செய்த மாநிலங்கள் நான்கிற்கு மாநிலத்திற்கு ரூ.25 இலட்சம் வீதமும் இவ்விருதுத் தொகைகள் வழங்கப்பட்டன. 1982–83/1983–84-ல் சிறந்த சாதனைக்கான விருதுகள் 1983–84, 1984–85-ல் வழங்கப்பட்டன. அவற்றில் தமிழ்நாட்டிற்கு 1983–84-ல் ரூ. 31.75 இலட்சமும் 1984–85-ல், 32 இலட்சமும் மதிப்புள்ள விருதுத் தொகைகள் கிடைத்தன. மாநில விருது பெற்ற நான்கு மாநிலங்களுக்குள்ளும் தமிழ் நாட்டின் சாதனையே இரண்டு ஆண்டுகளிலும் முதலிடம் வகித்தது.

ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்கள்.

14. புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள், மீண்டும் பழையபடி எழுத்தறிவற்ற நிலைக்குப் போய்விடாமல் தடுப்பதற்காக அவர்களுக்குத் தக்க புத்தகங்களும், சஞ்சிகைகளும் அளிப்பது ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்களின் நோக்கமாகும். இவை இரண்டு ஆண்டுகள் செயல்படும். இத்திட்டத்தின் விவரம் வருமாறு :—

| | ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| ஊரக தொழில் சார்ந்த எழுத்தறிவுத் திட்டம். | 1300 (1984–85-ல் தொடங்கப்பட்டவை). |
| | 5,400 (1986–87-ல் திறக்கப்பட இருப்பவை). |
| மாநில அரசின் வயதுவந்தோர் கல்வித் திட்டம். | 1,000 (1984–85-ல் தொடங்கப்பட்டவை). |

தொழிலாளர் கல்வி நிலையங்கள்.

15. சென்னையில் தொழிலாளர் கல்வி நிலையம் ஒன்று 1982 ஜூலை மாதத்தில் அமைக்கப்பட்டது. அது நகர்ப்புறங்களிலும் பிற தொழில் பகுதிகளிலும் உள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களின் கல்வித் தேவைகளை



1986 ஏப்ரல் 17]

நிறைவு செய்கிறது. இதுவரை 483 பயிற்சிகள் நடத்தப்பட்டன. 15,461 பேர் பயனடைந்துள்ளனர். இவற்றில் பயின்றவர்கள், வியாசர்பாடி, புஷ்பாநகர், நங்கநல்லூர், கபாலிவன போஜனத் தோட்டம் ஆகிய இடங்களில் கூட்டுறவு அமைப்புகளை தொடங்கியுள்ளனர். இத்தகைய நிலையம் ஒன்று மதுரையில் 8–9–1985 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இவ்விரு நிலையங்களும் தனித் தனி ஆளுகைக் குழுக்களின் கீழ் உள்ளன.

பள்ளிசாராக் கல்வி:

16. பள்ளிக்கே செல்லாதவர்களும் சென்று பின் இடையில் நின்றுவிட்டவர்களுமான 6–14 வயது சிறுவர்களுக்குக் கல்வி புகட்ட பள்ளி சாராக் கல்வி மையங்கள் நடத்தப்படுகின்றன. இப்பொழுது 100 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம் மையங்கள் ஒவ்வொன்றும் மூன்று ஆண்டுகள் வேலை செய்யும். வெவ்வேறு தொகுதியைச் சார்ந்த (பள்ளியிலிருந்து இடையில் நின்று விட்ட) மாணவர்களுக்கான பத்து மாத வகுப்புகளை இம்மையங்கள் நடத்துகின்றன. பள்ளிக் கட்டிடங்களில் இம் மையங்கள் நடைபெறுகின்றன. பள்ளி ஆசிரியர்களே பள்ளி சாராக் கல்வி வகுப்புகளை மாலையில் இரண்டு மணி நேரம் நடத்துகின்றனர். இதற்கு மாத மதிப்பூதியமாக ரூ. 50 பெறுகின்றனர். ஒவ்வொரு மையத்திலும் ஏறத்தாழ 30 மாணவர்கள் பயிலுகின்றனர்.

17. மேலும் காமராசர் மாவட்டம், சிவகாசிப் பகுதியிலுள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை செய்துவரும் சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக 30 பள்ளி சாராக் கல்வி மையங்கள் (ஒரு மையத்திற்கு 30 சிறுவர்கள்வீதம்) 1980–81-ல் தொடங்கப்பட்டன. இம்மையங்கள் ஒரு தொகுதியினருக்கு கல்வி புகட்டும் பணியை 1983-ல் நிறைவேற்றி முடித்துள்ளன. தற்பொழுது வேறு இடங்களில் இந்த 30 மையங்களும் செயல்பட்டு அப்புதிய இடங்களில் உள்ள அத்தகைய சிறுவர்களுக்குக் கல்வி புகட்டி வருகின்றன. வட ஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் பகுதியிலுள்ள தீப்பெட்டி தொழிற்சாலைகளில் வேலை செய்துவரும் சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக பள்ளி சாராக் கல்வி மையங்கள் 10 சமீபத்தில் திறக்கப்பட்டன. ''யூனிசெப்'' உதவியுடன் சாத்தூர், வெம்பக் கோட்டை பகுதிகளில் பள்ளி சாராக் கல்வி மையங்கள் மேலும் 70 திறக்கப்பட்டுள்ளன.

18. இம்மையங்களில் சேருகின்ற மாணவர்களுக்கு 8 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதுவதற்கான பயிற்சி மூன்றாண்டுகளுக்குள் அளிக்கப்படுகிறது. முழுநேர இடைநிலை ஆசிரியர்கள் அல்லது பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் (இடைநிலை ஆசிரியர் சம்பள விகிதத்தில்) இம்மையங்களை நடத்துகின்றனர். இம்மையங்களுக்கென தனியாக நியமிக்கப்பட்டுள்ள களப்பணி அலுவலர்கள் இம்மையங்களை நிருவகிக்கின்றனர்.

## VI. கல்லூரிக் கல்வி.

1986–87 வரவு-செலவுத் திட்டத்தில் கல்லூரிக் கல்விக்கென ரூ. 54 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுக் கல்விக்கான பல்கலைக் கழகங்களுக்கு வழங்கும் மானியம், அரசுக் கல்லூரிகளுக்கான கட்டிடச் செலவு, மற்றும் மாணவர்களுக்கான கடனுதவித் தொகை ஆகியவையும் இத்தொகையில் அடங்கும்.

2. தற்பொழுது பின்வரும் விவரப்படி, கலை, அறிவியல் வணிகவியல் கல்லூரிகள் 195 செயல்பட்டு வருகின்றன.

| கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகள். | கல்லூரிகளின் எண்ணிக்கை. | | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | முறையான வகுப்புகள். | |
| அரசினர் கல்லூரிகள் 54, மானியம் பெறும் தனியார் கல்லூரிகள் 133, மானியம் பெறாத தனியார் கல்லூரிகள் 8. | 195* | பட்டப்படிப்பு | 1,75,716 |
| | | பட்டமேற் படிப்பு | 16,858 |
| | | | 1,92,574 |
| | | மாலை நேர வகுப்புகள் | 34,000 |
| | | | 2,26,574 |
| பிற கல்லூரிகள்— | | | |
| கல்வியியல் சல்லூரிகள். | 22 | | 2,868 |
| இதர கல்லூரிகள் கள். | 21 | | 2,548 |
| | | | 5,416 |

*சுய ஆட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள் 13 இவற்றுள் அடங்கும்.



அழகப்பா பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டவுடன் அக்கல்லூரியின் பட்டப்படிப்பு வகுப்புகளை அரசு எடுத்துக்கொண்டு 1985—86 முதல் அழகப்பா அரசு கலைக் கல்லூரியைத் தொடங்கியது. டாக்டர் அழகப்பச் செட்டியார் கல்வி அறக்கட்டளையின்கீழ் இயங்கி வந்த டாக்டர் அழகப்பா ஆசிரியர் பயிற்சி கல்லூரி மற்றும் அழகப்பா உடற்பயிற்சிக் கல்விக் கல்லூரி ஆகியவை அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

3. பல்கலைக்கழக வாரியாக மேற்கண்ட 195 கலை அறிவியல், வணிகவியல் கல்லூரிகள் விவரம் வருமாறு :—

| பல்கலைக் கழகம். | நிருவாக வரம்பிற்குட்பட்ட மாவட்டங்கள். | கல்லூரிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சென்னைப் பல்கலைக் கழகம். | சென்னை, செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தர்மபுரி. | 64 |
| பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி. | 23 |
| பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை. | 30 |
| மதுரை காமராசர் பல்கலைக் கழகம். | மதுரை, அண்ணா, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர், திருநெல்வேலி, கன்னியாகுமரி. | 78 |
| | மொத்தம் .. | 195 |

4. பொதுக் கல்விக்கான பல்கலைக்கழகங்களுக்கு (தமிழ்ப் பல்கலைக்கழகம் உட்பட) மானியம் தர 1986—87 நிதிநிலை அறிக்கையில் மொத்தம் ரூ. 8.16 கோடி (திட்டமல்லாத மானியம் ரூ. 2.22 கோடியும், திட்ட மானியம் ரூ. 5.94 கோடியும்) ஒதுக்கப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 17

5. அனைத்திந்தியாவிலும் பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில்தான் அதிக அளவில் சுய ஆட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள் உள்ளன. ஒவ்வொரு கல்லூரிக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 2 இலட்சம் வீதம் பல்கலைக்கழக மானியக்குழு அளித்து வந்த நிதியுதவி ஐந்தாண்டுகளுக்குப் பிறகும் நீட்டிக்கப்பட்டுள்ளது. சென்னைப் பல்கலைக் கழகம் சென்னை, ஒய்.எம்.சி.ஏ., உடற்பயிற்சிக் கல்லூரிக்கு சுய ஆட்சி உரிமை அளிக்கவிருக்கிறது.

6. புதிதாக தொடங்கப்பட்ட பாரதியார், பாரதிதாசன் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகங்கள், பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்தும் மைய அரசின் பிற நிறுவனங்களிடமிருந்தும் மானியம் பெறத் தகுதியுடையவை என அறிவிக்கப்பட்டு நிதியுதவியும் அவை பெற்று வருகின்றன. 1985—86-ல் பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்து இப்பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றும் ரூ. 50 இலட்சம் மானியமாகப் பெற்றுள்ளன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் இப்பல்கலைக் கழகங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 100 இலட்சம் நிதியுதவி செய்ய பல்கலைக் கழக மானியக் குழு திட்டமிட்டுள்ளது. பல்கலைக் கழக மானியக் குழு திட்டச் செலவினத்தின் கீழ் நிதியுதவி அளிப்பதுடன் திட்டமல்லாத செலவினத்தின் கீழும் பல்கலைக் கழகங்களுக்கு சில குறிப்பிட்ட திட்டங்களுக்குப் போதுமான நிதியுதவி செய்கிறது. மின்கணிப்பு மையங்கள் தொடங்குவதற்காக பாரதியார், பாரதிதாசன் மற்றும் தமிழ்ப் பல்கலைக் கழகங்களுக்கு பல்கலைக் கழக மானியக் குழு நிதியுதவி அளித்துள்ளது.

7. மூத்த பல்கலைக் கழகங்களான சென்னை, காமராசர் மற்றும் அண்ணாமலை பல்கலைக் கழகங்கள் தங்களது பணியைத் தொடர்ந்து செவ்வனே செய்து வருகின்றன. இப்பல்கலைக் கழகங்களுக்கும் தேவையான அளவு திட்டமானியங்களும், இணை மானியங்களும் அளிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் உயிரியலில் நடைபெறும் ஆராய்ச்சிப் பணிகள் உலகப் புகழ் வாய்ந்தவை.

தமிழ்ப்பல்கலைக் கழகம் :

8. 1981 செப்டம்பரில் நிறுவப்பட்ட தமிழ்ப் பல்கலைக் கழகம் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி அடைந்துள்ளது. இது வரை 40-க்கும் மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்டுள்ளது. இப்பல்கலைக் கழகம் அறிவியல், பொறியியல் மற்றும் மருத்துவம் ஆகியவற்றிற்கான பாட நூல்களை தமிழில் வெளியிட நடவடிக்கை எடுத்து வருகிறது. சில புத்தகங்கள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன. இது பிற பல்கலைக் கழகங்களும் அறி



1986 ஏப்ரல் 17]

வியல், பொறியியல் மற்றும் மருத்துவம் போன்றவற்றை தமிழில் கற்பிக்க உதவுவதாகும். நூலகத்திற்கும் பல்கலைக்கழகத் துறைகளுக்கும் கட்டடங்கள் விரைந்து கட்டப்பட்டு வருகின்றன. துறைகளுக்கான கட்டடங்கள் இவ்வாண்டு ஜூன் மாதத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டுவிடும். கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ. 2.50 கோடி இப்பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

பாரதிதாசன் பல்கலைக் கழகம் :

9. ஆயிரம் ஏக்கர் பரப்பளவுள்ள இப்பல்கலைக்கழக வளாகத்திற்குள் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு நிருவாகம் மற்றும் தேர்வுப் பிரிவுகள் அதில் செயல்பட்டு வருகின்றன. மேலும், மூன்று துறைகளுக்கான கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. விரைவில் அத்துறைகள் அங்கு செயல்படும். இப்பல்கலைக் கழகத்துக்கு நிலம் கையகப்படுத்தும் பணி முடியும் தருவாயில் உள்ளது.

பாரதியார் பல்கலைக் கழகம் :

10. நிருவாகம் மற்றும் விடுதிக் கட்டடங்கள், துணைவேந்தர் மற்றும் பேராசிரியர்களுக்கான குடியிருப்புக் கட்டடங்கள் ஆகியவை முடிவுறும் தருவாயில் உள்ளன. இப்பல்கலைக் கழக வளாகத்தில் அறிவியல், தொழில் நுட்பவியல் மற்றும் தொழில் முனைவர் மையம் ஒன்று ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டு உள்ளது. இப்பல்கலைக் கழகத்துக்கு 1,000 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தும் பணி முடியும் நிலையில் உள்ளது.

அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் :

11. இப்பல்கலைக்கழகம் தனித்தன்மை வாய்ந்தது. ஆய்வு அறிவுரை நல்குதல் மற்றும் மகளிர் வளர்ச்சிப் பணிகளைக் கண்காணித்தல் ஆகியவற்றில் இது ஈடுபட்டு வருகிறது. கல்லூரி ஆசிரியர்களுக்கும், பிறருக்கும் (பணியில் உள்ளவர்களுக்கும் ஏனையோருக்கும்) எம்.பில்., பி.எச்.டி., படிப்பு வசதிகளைத் தரும் விரைவுத் திட்டத்தை இப்பல்கலைக் கழகம் தொடங்கியுள்ளது. எம்.பில். மற்றும் பி.எச்.டி. படிப்புகளுக்கு 120-க்கும் மேற்பட்டவர்கள் பதிவு செய்து கொண்டுள்ளனர். மகளிர் மற்றும் மகளிர் வளர்ச்சி பற்றிய பொருள்களே ஆய்வுக்கு தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இவர்கள் ஆய்வுப் பணி நிறைவுறும்பொழுது மகளிர் வளர்ச்சி குறித்த 120 ஆய்வறிக்கைகள் பல்கலைக் கழகத்திற்கு கிட்டும். இப்பல்கலைக் கழகம் கோடைக்கானலில் அமைந்திருப்பதால் ஆசிரியப் பணியிடங்களை நிரப்புவது ஓரளவு சிரமமாக இருந்த போதிலும், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும் ஆய்வு மையங்களை தொடங்கி அங்கு பகுதி

நேர பேராசிரியர்கள் ஆய்வு மாணவர்களுக்கு நேரடித் தொடர்பு வகுப்புக்களை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சுமார் ரூ.17 லட்சங்கள் மதிப்புள்ள புத்தகங்களை கொண்ட நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மகளிருக்கும் மில். கணிப்பு பொறி பற்றி கற்பிப்பதற்காக கோடைக்கானலிலும், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சென்னை போன்ற இடங்களிலும் மின்கணிப்புப்பொறி மையங்களை இப்பல்கலைக் கழகம் ஏற்படுத்தவிருக்கிறது.

அழகப்பா பல்கலைக் கழகம் :

12. அழகப்பா பல்கலைக் கழகம் காரைக்குடியில் 19-5-1935 அன்று நிறுவப்பட்டு நடைபெற்று வருகிறது. அழகப்பா கல்வி அறக்கட்டளையின் சொத்துக்களையும், நிலுவைகளையும் அப்பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது. தொழில் சார்ந்த வேதியியல், மின்கணிப்புப்பொறி பயன்பாடு போன்ற வேலை வாய்ப்புக்கு வகை செய்யும் படிப்புகளை இப்பல்கலைக் கழகம் ஏற்கெனவே தொடங்கியுள்ளது. கம்பெனிச் செயலாளர் படிப்பு தொடங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

பட்டமேற்படிப்பு மையங்கள் :

13. சேலம், வேலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் பட்டமேற்படிப்பு மையங்களைத் தொடங்க சென்னை மற்றும் மதுரை காமராஜ் பல்கலைக் கழகங்களுக்கு இவ்வரசு நிதியுதவி தந்து வருகிறது. இம்மையங்கள் ஒவ்வொன்றிலும் போதிய பேராசிரியர் பணியிடங்களுடன் ஆய்வுத்துறைகள் மூன்று அமைந்து வளர்ச்சி அடையும்பொழுது சேலம், வேலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஏழாவது திட்டக் காலத்தில் அமைக்கக் கருதியுள்ள பல்கலைக் கழகங்களின் முன்னோடி மையங்களாக அவை திகழும்.

அஞ்சல் வகுப்புகளும் தொடர் கல்வியும் :

14. அஞ்சல் வழி வகுப்புக்கள் மற்றும் மாலை நேர கல்லூரி வகுப்புகளில் பயின்று வந்தவர்களின் விவரம் கீழே வருமாறு :—

| | |
|---|---|
| அஞ்சல் வழி வகுப்புக்கள் : | |
| மதுரை காமராஜ், அண்ணாமலை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள். | 1,47,000 |
| அனைவரும் படிக்கத்தக்க பல்கலைக் கழகம் :— | |
| மதுரை காமராஜ் மற்றும் சென்னை பல்கலைக் கழகங்கள். | 30,500 |
| மாலை நேரக் கல்லூரி வகுப்புக்கள் .. | 34,000 |
| | 2,11,500 |





கல்வித்தர மேம்பாடு :

15. தற்போதுள்ள அரசுக் கல்லூரிகளின் கல்வித்தர மேம்பாடு ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் தொடர்ந்து முதன்மை வகிக்கின்றது. ஆறாவது ஐந்து ஆண்டு திட்டக் காலத்தில் அரசுக் கல்லூரிகளில் புதிதாக 65 பட்ட வகுப்புக்களும், 30 பட்டமேற்படிப்பு வகுப்புக்களும் தொடங்கப்பட்டன. 1985-86-ல் 8 அரசுக் கல்லூரிகளில் புதிதாக 6 பட்ட வகுப்புகளும் (பி.காம் 3, பி.எஸ்.சி. 2, பி.ஏ. 1) 2 பட்ட மேற்படிப்பு வகுப்புக்களும் (எம்.எஸ்.ஸி.) தொடங்கப்பட்டுள்ளன. 1986-87-ல் புதிதாகப் பட்ட வகுப்புக்கள் தொடங்க ரூ. 4.25 இலட்சமும், பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்க ரூ. 2.75 இலட்சமும் ஒதுக்கப்பட்டு உள்ளன.

16. அரசுக் கல்லூரிகளைப் பொறுத்த வரையில் அவ்வப்போது கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து அவற்றிற்குத் தேவையான ஆய்வுக் கூடங்களும், நூலகங்களும் ஏற்படுத்தித் தரப்படுகின்றன. அரசுக் கல்லூரி வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்களுக்கான மரச்சாமான்களுக்காக 1985-86-ல் ரூ. 7.50 இலட்சம் செலவிடப்பட்டது.

17. அரசுக் கல்லூரிகளுக்குத் தேவையான கட்டிட வசதிகள் படிப்படியாகச் செய்து தரப்படுகின்றன. அரசுக் கல்லூரிக் கட்டிடப் பெரும் பணிகளுக்காக 1986-87-ல் ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சிதம்பரம் அரசினர் கலைக் கல்லூரிக்கு நிரந்தர கட்டிடம் கட்டும் வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

18. அரசுக் கல்லூரிகளில் புதிய வகுப்புகள் தொடங்குதல், பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள் நடத்துதல் மற்றும் புள்ளி விவரங்கள் சேகரித்தல் போன்ற தேவையான வளர்ச்சிப் பணிகளைத் திட்டமிடுவதற்காக ''கல்லூரி வளர்ச்சிப் பிரிவு'' ஒன்று கல்லூரி கல்வி இயக்குநரகத்தில் 1984-85-லிருந்து செயல்பட்டு வருகிறது. 1986-87-ல் இத்துறையின் நிர்வாகத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக வட்டார அலுவலகங்கள் ஐந்துக்கும் கூடுதல் பணியிடங்களை அளிக்கவும், இயக்குநரகத்தில் ஆய்வுப் பிரிவு ஒன்றைத் தொடங்கவும், அரசுக் கல்லூரிகள் இரண்டுக்கு நிதிப் பொறுப்பாளர் பணியிடம் ஒன்றும், கண்காணிப்பாளர்கள் பணியிடங்கள் இரண்டும் புதிதாக அளிக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வட்டார துணை இயக்குநர்கள் இருவருக்கு 1986-87-ல் ஊர்திகள் வாங்கியளிக்கப்படும்.

19. கல்லூரி ஆசிரியர்களுடைய பயிற்றுவிக்குந்தர உயர்வுக்காக அவர்களை எம்.பில்., மற்றும் பி.எச்.டி., படிப்புக்கு அனுப்புவதற்காக பல்கலைக் கழக மானியக் குழுத் திட்டத்தின் கீழ் 1985-86-ல் 21 ஆசிரியர்கள் இப்படிப்பிற்கு அனுப்பப்பட்டனர். அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் உள்ள பட்டதாரி பயிற்றுநர்களும், விளக்குநர்களும் ஆண்டுதோறும் சிலர் வீதம் எம்.ஏ.,

எம்.எஸ்.ஸி., படிப்பிற்கு மாநில அரசு செலவில் முகாமையில் அனுப்பும் திட்டத்தின் கீழ் 1985-86 முடிய 177 பேர் அனுப்பப் பட்டுள்ளனர். மேலும் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்து டாக்டர் (பி.எச்.டி.) பட்டம் பெறுவதற்காக அரசுக் கல்லூரிப் பேராசிரியர்கள் முகாமையில் அனுப்பப்பட்டுள்ளனர்.

படிப்புதவித் தொகையும் பயிற்சி உதவிப் பணமும்.

20. கல்லூரிக் கல்வித்துறை நிருவகித்து வரும் படிப்புதவித் தொகைத் திட்டங்களுள் முக்கியமான சிலவற்றின்கீழ் பயன் பெறுவோர் விவரம் பின்வருமாறு :—

| திட்டம். | 1985-86ல் புதிதாகத் தந்த படிப்புதவித் தொகைகள் எண்ணிக்கை (மேல்நிலைப்பள்ளிகளில் தரப்பட்டவை உட்பட) | 1985-86-ல் (புதியவை மற்றும் புதுப்பிக்கப்பட்டவை மொத்த எண்ணிக்கை). | 1986-87-ல் வரவு செலவு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம் (ஒரள்வு மைய அரசு நிதி உதவி பெறுவது). | 1,784 | 5,658 | 60 |
| தேசிய கடன் படிப்புதவித் திட்டம் (முழுவதும் மைய அரசு நிதியுதவி பெறுவது). | 1,386 | 5,294 | 25 |
| பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய மாநில அரசு படிப்புதவித் தொகை. | 70 | 98 | 2 |



மேலும் எஸ். எஸ். எல். சி., மெட்ரிகுலேசன் தேர்வுகளில் முதன்மையாக வரும் மாணவர்களின் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்கு மேல் இருப்பினும் அவர்களுக்கும் உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

21. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களைச் சார்ந்த மாணவ, மாணவியர்களில் மேல்நிலைப்பள்ளித் தேர்வில் 60 விழுக்காடு அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர் களுக்கு அவர்கள் மேற்படிப்பில் சேர உதவுவதற்காக ஆளுக்கு ரூ. 300 உதவிப்பணம் (ஒரு தடவை மட்டும்) தரப்பட்டு வரு கிறது.

22. தமிழ் பயிற்று மொழியை ஊக்குவிக்கும் முறையில் பட்ட வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவிப் பணமாக ஆண்டுக்கு ரூ. 180 தரப்பட்டு வருகிறது. இவ் வுதவிப் பணம் பெற்ற மாணவர் எண்ணிக்கை 1985-86-ல் 23,800 ஆகும். இத்திட்டத்திற்காக 1986-87-ல் ரூ. 44 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் தமிழை பாட மொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இதுவரை 900-க்கு அதிகமான பாடப் புத்தகங்களை வெளி யிட்டுள்ளது.

கல்லூரி ஆசிரியர், பிற பணியாளர்கள் நலன்.

23. கல்லூரி ஆசிரியர்கள் நலனுக்காக முன் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கும் மேலாக 1985-86-ல் செய்யப் பட்ட நன்மைகளின் விவரம் பின்வருமாறு :—

(1) தமிழ்நாடு நான்காவது சம்பளக்குழு சம்பள விகிதங் களை மானியம் பெறும் தனியார் கல்லூரிகளின் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு அமுலாக்கியது ;

(2) பல்கலைக் கழக மானியக்குழு சம்பள விகிதங்களில் சம்பளம் பெற்றுவரும் கல்லூரி ஆசிரியர்களுக்கும், பிறருக்கும் 1—10—1984 முதல் இடைக்கால நிவாரணம் - அடிப்படைச் சம்பளத்தில் 10 விழுக்காடு மாதம் ரூ. 160 என்னும் உச்சவரம்புக் குட்பட்டு ;

(3) 1985-86 கல்வியாண்டிலிருந்து கல்லூரிப் பணியாளர் களுக்கு ஈட்டிய விடுப்பு ஆண்டுக்கு 3 நாளிலிருந்து 13 நாட்களாக உயர்வு ;

(4) டாக்டர் (பிஎச்.டி.) பட்டம் பெற்ற உதவிப் பேரா சிரியர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் சில நிபந்தனைகளுக் குட்பட்டு மாதம் ரூ. 100 சிறப்புச் சம்பளம் ;

[1986 ஏப்ரல் 17

(5) மானியம் பெறும் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் அரசுப் பணியாளர்களைப் போல அரசுப் பணத்திலிருந்து பண்டிகை முன்பணம் வழங்கல் ;

(6) சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம் தனியார் கல்லூரிப் பணியாளர்களுக்கும் 1—4—1984 முதல் விரிவாக்கப்பட்டது ;

(7) மானியம் பெறும் தனியார் கல்லூரிகளில் ஆசிரியரல்லாத பணியாளர்களை நியமிப்பதற்கான கோட்பாடுகளை திருத்தியமைத்தல்.

சட்டக் கல்வி.

24. சட்டக் கல்லூரிகளில் 1985-86 ஆம் ஆண்டில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| சட்டக் கல்லூரி. | முழுநேர சட்டப் படிப்பு. மூன்றாண்டு சட்டப் படிப்பு. | முழுநேர சட்டப் படிப்பு. ஐந்தாண்டு சட்டப் படிப்பு. | மாலை நேர வகுப்புகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| சென்னை .. .. | 810 | 540 | 720 |
| மதுரை .. .. | 480 | 450 | 360 |
| திருச்சிராப்பள்ளி .. | 240 | 240 | 180 |
| கோயம்புத்தூர் .. | 240 | 240 | 180 |
| மொத்தம் .. | 1,770 | 1,470 | 1,440 |

தமிழ்நாட்டில் அனைத்து சட்டக் கல்லூரிகளிலும் ஐந்தாண்டு சட்டப் படிப்பு 1983-84-ல் தொடங்கப்பட்டது. 1986-87-ல் நான்காமாண்டு வகுப்புகள் தொடங்கப் பெறும். இந்தியாவில் பிற மாநிலங்கள் மூன்றாண்டு சட்டப் படிப்பை முழுமையாக நிறுத்தும்வரை இங்கும் தொடர்ந்து நடத்திவர தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

25. வேலையில் இருப்பவர்களுக்கென்று 1983-84 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டு மாலை நேர சட்ட வகுப்புகளும் நடத்தப்பெற்று வருகின்றன. தமிழில் சட்டம் பயிலுகின்ற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூ. 180 உதவித்தொகை வழங்கப்படுகிறது.



1986 ஏப்ரல் 17]

## VII. விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்.

### (i) விளையாட்டும், உடற்பயிற்சியும்.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை நடவடிக்கைகளுக்காக 1986-87-ல் மொத்தம் ரூ. 2 கோடி அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது இத்துறையின்கீழ் மொத்தம் 21 மாவட்ட விளையாட்டு மன்றங்கள் (பெரிய மாவட்டங்கள் சிலவற்றில் உள்ள இரண்டாவது மாவட்ட விளையாட்டு மன்றங்கள் உட்பட) உள்ளன.

மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம் :

2. தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம் திரு. சிவந்தி ஆதித்தன் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட முதலீடு ரூ. 1 கோடியாகும். இக்கழகம் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் 15—11—1984 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்திற்கு 1986-87-ல் ரூ. 60 இலட்சம் மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3. மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை ஆகியவற்றின் சார்பாக பெண்களுக்கான 10-வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் டிசம்பர் 1985-ல் கோயம்புத்தூரில் நடத்தப்பட்டன.

மாநில இளைஞர் வாரியம் :

4. இளைஞர்களிடையே நல்லொழுக்கம், நன்னடத்தை மற்றும் சமுதாய உணர்வுகளை வளர்க்கும் நோக்கில் இளைஞர் நல நடவடிக்கைகளை முழுமையாகத் திட்டமிட்டு வளர்ப்பதற்காக தமிழ்நாடு மாநில இளைஞர் வாரியம் ஒன்றை 1986-87-ல் நிறுவக் கருதி அதற்காக மைய அரசு நிதி உதவி கோரப்படவிருக்கிறது.

[1986 ஏப்ரல் 17

விளையாட்டுப் பள்ளிகளும், விளையாட்டில் சிறந்த மாணவர்களுக்குத் தனி விடுதிகளும் :

5. தற்போது பின்வரும் கல்வி நிறுவனங்களோடு இணைந்து விளையாட்டுப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன :—

| | ஆண்டுதோறும் சேரும் மாணவர்கள். |
|---|---|
| 1 ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சிக் கல்லூரி, சென்னை (8–12 வகுப்புகள்). | 115 |
| 2 எஸ். ஆர். கே. மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி, பெரியநாயக்கன்பாளையம் (8–12 வகுப்புகள்). | 90 |
| 3 இராணி சீதை ஆச்சி மேல்நிலைப்பள்ளி, அண்ணாமலைநகர் (8–10 வகுப்புகள்). | 50 |
| 4 பி. எஸ். ஜி. ஆர். கிருஷ்ணம்மாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பீளமேடு, கோயம்புத்தூர் (8–10 வகுப்புகள்). | 50 |
| | 305 |

மதுரை, திருநெல்வேலி மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் உள்ள விளையாட்டு விடுதிகள் ஒவ்வொன்றிலும் 30 பேருக்குத் தங்கும் இட வசதிகள் உள்ளன. மேற்கூறிய பள்ளிகளிலும், விடுதிகளிலும் பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | |
|---|---|
| தடகளம் (Field Sports) .. | 103 |
| கூடைப்பந்து .. .. | 57 |
| கால்பந்து .. .. .. | 83 |
| மட்டைப்பந்து .. .. | 18 |
| கையுந்துப் பந்து .. | 69 |
| நீச்சல் .. .. .. | 18 |
| வளைகோல் பந்து (ஹாக்கி) .. | 47 |
| | 395 |



1986 ஏப்ரல் 17]

விளையாட்டு விடுதி மாணவர்களுக்கு மேசைகள், கட்டில்கள் போன்ற வசதிகள் செய்து தருவதற்கு 1986-87-ம் ஆண்டில் ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

6. விளையாட்டுகளில் ஆற்றல் மிகுந்த சிறுவர், சிறுமியரை விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள் மூலம் தெரிந்தெடுத்து அவர்களுக்குத் தீவிரமாக பயிற்சியளித்து அவர்களுடைய திறனை மேம்படுத்தும் நோக்குடன் இத்துறை இளஞ்சிறாருக்கான ''மிக இளமையில் தெரிந்தெடு'' என்ற திட்டத்தையும் தொடக்கநிலை, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி அளவில் ''இளமையில் தெரிந்தெடு'' என்னும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகின்றது. ஆண்டுதோறும் உயர்நிலைப் பள்ளிகளில் குடியரசு நாள் மற்றும் பொங்கல் நாள் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்று முதலாவது, இரண்டாவது இடத்தைப் பெறுவோருக்கும், மேல்நிலைப் பள்ளிகளில் ''பாரதியார் விளையாட்டுப் போட்டி''களில் வெற்றி பெற்று முதலாவது, இரண்டாவது இடத்தைப் பெறுவோருக்கும் உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

7. அந்தந்த விளையாட்டு மன்றப் பகுதியிலுள்ள உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஏறத்தாழ 30 உடற்பயிற்சி ஆசிரியர் / உடற்பயிற்சி இயக்குநர்களுக்கு இரண்டு அல்லது மூன்று விளையாட்டுகளில் மாவட்ட விளையாட்டு மன்றப் பயிற்சியாளர்களைக் கொண்டு ஆறு நாள் புத்தறிவுப் பயிற்சி வகுப்புகள் நடத்தும் திட்டம் 1984-85 முதல் தொடங்கப்பட்டு தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மாணவர் அல்லாத இளைஞர்கள் :

8. மாணவர் அல்லாத இளைஞர்களிடம் விளையாட்டையும், உடற்பயிற்சியையும் ஊக்குவிக்கும் வண்ணம், ஊரக விளையாட்டு மையங்கள் நடத்துதல், தனியார் விளையாட்டு மன்றங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு விளையாட்டுக் கருவிகள் வாங்க மானியம் வழங்குதல் முதலான பல்வேறு திட்டங்களையும் இத்துறை செயல்படுத்தி வருகின்றது. விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக் கல்வி ஆராய்ச்சி மாணவப் பணியிடங்கள் 5 ஏற்படுத்தப்பட்டுள்ளன. உடற்பயிற்சிக் கல்வி பற்றிய புத்தகங்களைப் பிரசுரிப்பதற்கு நிதியுதவியும் அளிக்கப்படுகிறது.

9. கிராமியக் கலைகளான கரக ஆட்டம், கோலாட்டம், தெம்மாங்கு, வில்லுப்பாட்டு போன்றவைகளை ஊக்குவிப்பதற்காக 1986-87-லிருந்து மாநில அளவிலான இளைஞர் விழாக்கள் நடத்தப்படவுள்ளன. மாநில அளவிலான விளை

யாட்டுப் போட்டிகளுடன் இவ்விழாக்கள் நடத்தப்படும். இதில் மாவட்டத்திற்கு 30 பேர் வீதம் 630 பேர் பங்கேற்பார்கள்.

விளையாட்டு அரங்கங்கள் மற்றும் நீச்சல் குளங்கள் :

10. தற்போது நீலகிரி தவிர பிற மாவட்டங்கள் அனைத்திலும் அந்தந்த மாவட்டத் தலைமையிடத்தில் திறந்தவெளி விளையாட்டு அரங்கங்கள் ஏற்கனவே உள்ளன ; அல்லது அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சென்னை நேரு விளையாட்டு அரங்கில் ரூ. 25 இலட்சம் செலவில் ஒளி வெள்ளம் பாய்ச்சும் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

11. வட ஆற்காடு, சேலம், திருச்சி, தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் தருமபுரி மாவட்டங்களின் தலைமையிடங்களில் நீச்சல் குளங்கள் கட்ட நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

12. வறுமையில் வாடும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. 38 விளையாட்டு வீரர்கள் ஒவ்வொருவரும் மாதம் ரூ. 75 விதம் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

(ii) சாரண, சாரணியர்.

13. தொண்டுள்ளம் கொண்ட சாரண, சாரணியர், இயக்கம் தமிழ்நாட்டில் எல்லாவகைப் பள்ளிகளிலும் நடைபெற்று வருகின்றது. தமிழ்நாட்டில் தற்போது 1.55 இலட்சம் சாரண, சாரணியர் உள்ளனர். இவ்வெண்ணிக்கை இந்தியா அனைத்திலும் உள்ள சாரண, சாரணியர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்காகும். தமிழ்நாடு சாரண, சாரணியர் இயக்கம் 1985-86-லிருந்து மாநில அரசு மானியமாக ஆண்டுக்கு ரூ. [illegible] இலட்சம் பெற்று வருகிறது. சாரண, சாரணியருக்கு கல்விக் கொள்கை குறித்து ஒரு நாள் கருத்தரங்கு ஒன்று சென்னையில் டிசம்பர் 1985-ல் நடத்தப்பட்டது.

(iii) தேசிய மாணவர் படை.

14. தமிழ்நாடு தேசீய மாணவர்படை இயக்ககத் தலைமையகம் சென்னையில் உள்ளது. அதன் கட்டுப்பாட்டின் கீழ் சென்னையில் இரண்டும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக வட்டாரத்



தலைமையிடங்கள் 5 அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையில் சேர்க்க அனுமதித்துள்ள மாணவர் எண்ணிக்கை வருமாறு :—

| | பிரிவுகள்/ படைகள். | அலுவலர் கள். | மாணவர் கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| முதுநிலைப்பிரிவு (மாணவர்). | 45 | 215 | 17,370 |
| முதுநிலைப் பிரிவு (மாணவியர்). | 5 | 38 | 3,680 |
| இளநிலைப் பிரிவு (மாணவர்). | 623 | 621 | 61,650 |
| இளநிலைப் பிரிவு (மாணவியர்). | 51 | 48 | 5,200 |
| மொத்தம் .. | 724 | 922 | 87,900 |

1986-87-ல் தேசீய மாணவர் படைக்காக மாநில அரசு நிதியிலிருந்து ரூ. 2.53 கோடி செலவிடப்படும். இத்துறையில் பணியாற்றும் மாநில அரசுப் பணியாளர்கள், ஓட்டுநர்கள், அடிப்படை உழியர்கள் முதலியோரின் எண்ணிக்கை 1,100 ஆகும்.

15. தேசீய மாணவர் படைக்கான செலவினை மத்திய அரசும் மாநில அரசும் ஏற்றுக்கொள்கின்றன. அப்படை மாணவ மாணவியருக்கான பலவிதமான பயிற்சி முகாம்களுக்கான செலவில் பாதியை மைய அரசும் பாதியை மாநில அரசும் ஏற்றுக்கொள்கின்றன. பகுதி நேர தேசீய மாணவர்படை அலுவலர்களின் சிறப்பூதியத்தை மாதம் ரூ. 100-லிருந்து ரூ. 200 ஆக உயர்த்தும் பொருட்டு 1986-87-ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16. இராணுவத்தில் அதிகாரிகளாகச் சேர்ப்பவர்களைத் தெரிந்தெடுப்பதற்காக மைய அரசுத் தேர்வாணைக்குழு நடத்தும் தேர்வில் கலந்து கொள்ளும் தமிழக தேசீய மாணவர் படையினருக்கு சிறந்த பயிற்சி அளிப்பதற்காக 1985-86-ல் பயிற்சி அதிகாரி ஒருவர் தலைமையில் '' இராணுவ அதிகாரித் தேர்வுக்கான முன்பயிற்சிப் பிரிவு'' ஒன்று அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 17

iv தேசீயப் பணித்திட்டம் :

17. தமிழ் நாட்டிலுள்ள தேசீயப் பணித் திட்டத்தின் விவரங்கள் 1985-86 நிலவரப்படி பின்வருமாறு :

| | பங்கு பெற்ற மொத்த மாணவர் எண்ணிக்கை. | அம்மொத்த மாணவர்களில் சிறப்பு பயிற்சி முகாம்களில் பங்கு பெற்றவர்கள் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1[ | (2) | (3) |
| கல்லூரிகள் .. .. .. | 65,000 | 32,500 |
| மேல்நிலைப் பள்ளிகளில் மேல் நிலை வகுப்புகள் (400 பள்ளிகள்) .. .. | 20,000 | 10,000 |
| மொத்தம் .. | 85,000 | 42,500 |

இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் தேசீய பணித்திட்டம் மேல்நிலைப் பள்ளி நிலையிலும் செயல்பட்டு வருகிறது. தேசீயப் பணித் திட்டத்தின் கீழ் ஒரு மாணவனுக்கு ஆண்டுதோறும் பொதுத் திட்டத்தின் கீழ் ரூ. 80-ம் சிறப்பு முகாம் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு முகாமிற்கும் ஒரு நபருக்கு ரூ. 100-ம் செலவிடப்படுகிறது. இவ்விரண்டு இனங்களிலும் ஏற்படும் செலவினை மாநில அரசும், மைய அரசும், 5 : 7 என்ற விகிதத்தில் பகிர்ந்து ஏற்றுக்கொள்கின்றன. இதற்காக 1986-87 மாநில அரசு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 102 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் 7/12 பங்கு மைய அரசிடமிருந்து மானியமாகப் பெறப்படும். 1985-86-ல் மேலும் 15,000 மாணவர்கள், தேசீயப் பணித் திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளனர்.



1986 ஏப்ரல் 17]

## VIII. நூலகங்களும், ஆவணக் காப்பகங்களும்.

### (i) பொது நூலகங்கள்.

1986-87ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் பொது நூலக துறைக்கென ரூ. 5.65 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொது நூலகத் துறையில் நூலகப் பணிகள் பற்றிய முக்கிய விவரங்கள் வருமாறு :

| | நூலகங்களின் எண்ணிக்கை. | இருப்பிலுள்ள நூல்களின் எண்ணிக்கை. | உறுப்பினர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (இலட்சத்தில்.) | |
| மாநில மைய நூலகம் (கன்னிமாரா நூலகம், சென்னை) .. .. | 1 | 3.90 | 0.26 |
| மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் கீழ் உள்ள நூலகங்கள் : | | | |
| மாவட்ட மைய நூலகங்கள் .. .. | 17 | 104.67 | 10.79 |
| கிளை நூலகங்கள் .. | 1,511 | | |

கன்னிமாரா நூலகம்—

2. சென்னையிலுள்ள கன்னிமாரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாகும். இந்தியாவில் வெளியிடப்படும் அனைத்து நூல்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பிரதியினை இந் நூலகம் இலவசமாகப் பெறுகிறது. வருடத்தில் மூன்று தேசிய விடுமுறை நாட்களைத் தவிர ஏனைய நாட்கள் அனைத்திலும் (காலை 8-00 மணி முதல் இரவு 8-00 மணி வரை) இந் நூலகம் செயல்படுகிறது. வெளிநாட்டு நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் வாங்குவதற்கென இந்நூலகத்திற்கு கடந்த மூன்றாண்டுகளில் மொத்தம் ரூ. 24 இலட்சம் தரப்பட்டது. பொது மக்களின் வசதிக்காக இந்நூலகத்திற்கென புகைப்படப் பிரதி எடுக்கும் கருவி ஒன்றும் வாங்கப்பட்டுள்ளது.

மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் :

3. தற்பொழுது மாவட்டத்திற்கு ஒன்றாக மொத்தம் 17 மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் கீழ் மொத்தம் 17 மாவட்ட மைய நூலகங்களும், 1,511 கிளை நூலகங்களும் செயல்படுகின்றன. 1986-87-ல் ரூ. 1 இலட்சம் செலவில் மேலும் சில கிளை நூலகங்கள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் பணியாளர்கள் மொத்தம் 3,279. அவர்கள் 1-4-1982 முதல் அரசுப் பணியாளர்களாக ஏற்கப்பட்டுள்ளனர். 1984-85-ல் மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் நூலக மேல் வரியாக ரூ. 1.44 கோடி பெற்றன. (சென்னை மாவட்ட குழு பெற்ற ரூ. 55 இலட்சம் உட்பட). சில மாவட்ட நூலக ஆணைக்குழுக்களின் வருமானம் புத்தகங்கள் வாங்குவது போன்ற செலவினங்களுக்குப் போதுமானதாக இல்லை. எனவே, நிதி நிலைமை சரியில்லாத நூலக ஆணைக் குழுக்களுக்கு புத்தகங்கள் வாங்க வசதி செய்யும் பொருட்டு, 1984-85-லிருந்து ஆண்டுதோறும் ரூ. 11 இலட்சம் சிறப்பு மானியமாக அரசு வழங்கி வருகிறது. மேலும், சென்னை; மதுரை, திருச்சி மற்றும் கோவை மாவட்ட மைய நூலகங்களில் படிக்கும் பொது மக்கள் வசதிக்காக புகைப்படப் பிரதி (Photo Copier) எடுக்கும் கருவிகள் வழங்கப்பட்டுளன.

4. பயிற்சி பெறாத மூன்றாம் நிலை நூலகர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக சென்னையில் ஒன்றும் மதுரையில் ஒன்றுமாக நூலகவியல் நிலையங்கள் இரண்டு இயங்கி வருகின்றன.

நூலக கட்டிடங்கள் :

5. சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவின் கீழ் வட்டார நூலகங்கள் 6-க்கும், கிளை நூலகங்கள் 17-க்கும் கட்டடங்கள் முடிக்கப்பட்டு உள்ளன. கிளை நூலகங்கள் மேலும் 14-க்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. பிற மாவட்ட நூலக ஆணைக் குழுக்களும், அவற்றின் கீழ் இயங்கும் கிளை நூலகங்களுக்கு கட்டடம் கட்டும் பணியை படிப்படியாக நிறைவேற்றி வருகின்றன. திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட மைய நூலகங்களுக்காக பல மாடிக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

(ii) ஆவணக் காப்பகம்.

தென் ஆசியாவில் தலை சிறந்த ஆவணத் தொகுப்புகளைக் கொண்ட நிலையமாகத் திகழ்கிறது சென்னை எழும்பூரில் உள்ள தமிழ் நாடு அரசு ஆவணக் காப்பகம். இது ஒரு வரலாற்று ஆராய்ச்சி மையமாகத் திகழ்வதுடன் அரசு நிருவாகத்திற்கும் பயன்படுகிறது. கடந்த நான்கு நூற்றாண்டு





களுக்கான அரசு மற்றும் துறைத் தலைமையகங்களின் ஆவணங்களும் வேறு சில ஆவணங்களும் இங்கு உள்ளன. அவை வரலாற்றுச் சிறப்பு மிக்கவையும் நிருவாகத்திற்குப் பயன்படுபவையும் ஆகும். நவீன முறையில் ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 1982-ல் நிறுவப்பட்ட நுண் நிழற்படக் கருவி நன்கு செயல்பட்டு வருகிறது. ஆராய்ச்சியாளர்கள் பழைய மூல ஆவணங்களை மீண்டும் மீண்டும் கையாளுவதைத் தவிர்க்கும் வகையில் அப்பழைய ஆவணங்களின் நுண் நிழற்படங்கள் எடுக்கப்படுகின்றன. ஆராய்ச்சி செய்வோருக்கு மூல ஆவணங்களைக் கொடுக்காமல் நுண் நிழற்படப் பிரிதிகளை வழங்கினால் மூல ஆவணங்கள் மேலும் நீண்ட காலம் சிதிலமாகாமல் இருக்கும். இக்கருவியைக் கொண்டு இதுவரை 35 மில்லி மீட்டர் படங்கள் 1,47,844-ம், 16 மில்லி மீட்டர் படங்கள் 40,455-ம் எடுக்கப்பட்டுள்ளன. வாசிக்கத்தக்க அச்சுப் பிரிதிகள் 8,571 எடுக்கப்பட்டு உள்ளன.

மாவட்ட ஆவண மையங்கள்.

2. வரலாற்றுச் சிறப்பு மிக்கவையும், நிருவாகத்திற்குப் பயன்படுபவையுமான ஆவணங்கள் மாவட்டங்களிலுள்ள பல அரசு அலுவலகங்களிலும் உள்ளன. 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆவணங்கள் யாவற்றையும் சேகரித்து மாவட்டந்தோறும் பாதுகாத்து வரும் நோக்குடன், சிதம்பரம், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மாவட்ட ஆவண மையங்கள் அமைக்கப்பட்டன. திருச்சிராப்பள்ளியிலும் ஒரு மாவட்ட ஆவண மையம் விரைவில் தொடங்கப்பட இருக்கிறது. இது போன்ற மற்றொரு மையம் 1986-87-ல் சேலத்தில் தொடங்கப்பட உள்ளது.

தமிழ் நாடு வரலாற்று ஆராய்ச்சிக்குழு.

3. கடந்த மூன்று நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டின் பல்வேறு வரலாற்று மற்றும் பிற வாழ்க்கைத்துறைகள் பற்றி ஆராய்ச்சியினை மேற்கொள்ளும் ஆர்வமும் திறமையும் மிகுந்தவர்களை ஊக்குவிப்பதற்காக, 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு ஆண்டுதோறும் மாணவப் பணியிடங்கள் நான்கை வழங்கி வருகிறது. 1974-ம் ஆண்டிலிருந்து இதுவரை ஆராய்ச்சி மாணவர்கள் 10 பேர் இக்குழுவில் சேர்ந்து ஆராய்ச்சி செய்து ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர்.

மாவட்ட விவரச் சுவடிகள்.

4. புதுக்கோட்டை மாவட்ட விவரச் சுவடியின் ஆங்கிலப் பதிப்பு அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. அதன் தமிழ் வடிவம் விரைவில் வெளியிடப்படவுள்ளது. இராமநாதபுரம்

[1986 ஏப்ரல் 17

மாவட்ட விவரச் சுவடியின் தமிழ் வடிவத்தை அச்சிடுதல், தருமபுரி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்கு விவரச் சுவடிகள் தயாரித்தல் ஆகிய பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

வெளியீட்டுப் பிரிவு.

5. கீழ்க்கண்ட தலைப்புகளில் தெரிந்தெடுத்த ஆவணத் தொகுப்புகளை அச்சிட்டு வெளியிட இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது :—

1. சென்னை எஸ்டேட் நிலச் சட்டம், 1908-1948.

2. கூட்டுறவின் தோற்றமும் வளர்ச்சியும்.

3. நகராட்சிகள்—தோற்றமும் வளர்ச்சியும்.

4. 1920 ஆம் ஆண்டு முதல் ஆதிதிராவிட சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் ஆற்றிய பணி.

பயிற்சி.

6. அரசு அலுவலகம் மற்றும் உள்ளாட்சி மனறங்களின் ஆவண அறைப் பொறுப்பில் உள்ள பணியாளர்களுக்கான ஆவணப் பராமரிப்பு குறித்த பயிற்சி ஒன்றினை தமிழ்நாடு ஆவணக் காப்பகம் அளித்து வருகிறது. இதுவரை இத்தகைய 15 நாள் பயிற்சிகள் 50 நடந்து 841 பேர் பயன் பெற்றுள்ளனர். துறைத் தலைவர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகளால் கூர்ந்தாய்வுப் படிப்புத் திட்டம் ஒன்று (இரண்டு நாட்கள்) 1982 ஆம் ஆண்டு முதல் நடந்து வருகின்றது. பல்வேறு துறைகளிலிருந்து அனுப்பப்படும் சுமார் 32 அலுவலர்களுக்கு அப்பயிற்சி 1986-87ல் அளிக்கப்படும்.

ஆவணக் காப்பக நூலகம்.

7. மிகப் பெரிய நூலகங்களுள் ஒன்றான தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகத்தில் 2½ இலட்சம் புத்தகங்கள் உள்ளன. பெரும்பாலானவை ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ளன. பிற மொழிகளிலும் சில புத்தகங்கள் உள்ளன. இந் நூலகத்தில் பொதுவான புத்தகங்களைத் தவிர தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் அச்சிடப்பட்ட வெளியீடுகளும் உள்ளன. பழைய அரசிதழ்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கைகள், நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற விவாதப் பதிவுகள், ஆவணப் பட்டியல்கள், பஞ்சாங்கங்கள், தகவல் தொகுதிகள், நீதிமன்றத் தீர்ப்பு அறிக்கைகள், விவரச் சுவடிகள், பழைய தாளிகைகள் முதலிய விலை மதிப்பற்ற நூற் தொகுப்புகள் இந்நூலகத்தில் உள்ளன.



1986 ஏப்ரல் 17]

## IX. தொழில் நுட்பக் கல்வி.

தொழில் நுட்பக் கல்விக்காக 1986—87-ல் ரூ. 23 கோடி (கட்டிடங்கள், கடன்கள், அண்ணா பல்கலைக் கழகத்துக்கு மானியம் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கங்கள் உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்பக் கல்வித் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் தொழிற் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை, மற்றும் அவற்றில் ஆண்டு தோறும் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை (1985—86-ல் இருந்தபடி) ஆகியவை வருமாறு :

| கல்வி நிறுவனங்கள். | எண்ணிக்கை. | ஆண்டுதோறும் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை. | |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பொறியியல் கல்லூரிகள் | 30 மற்றும் திருச்சிராப் பள்ளியில் உள்ள வட்டார பொறியியல் கல்லூரியில் தமிழ்நாட்டு மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு. | பட்ட வகுப்புகள் : | |
| | | முழு நேரம் | 5,757 |
| | | பகுதி நேரம் | 640 |
| | | பட்ட மேற்படிப்பு : | |
| | | முழு நேரம் | 276 |
| | | பகுதி நேரம் | 56 |
| | | பட்ட மேற்படிப்புப் பட்டயம் | |
| | | முழு நேரம் | 21 |
| | | பகுதி நேரம் | 5 |
| பல்தொழில் பயிலகங்கள் (பாலிடெக்னிக்) மற்றும் சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்கள், (கலை, கைத்தொழில் மற்றும் சிற்பக்கலை கல்லூரிகள் 3 உட்பட). | 129 | பட்டய வகுப்புகள் : | |
| | | முழு நேரம் | 21,110 |
| | | பகுதி நேரம் | 1,315 |
| | | பட்டய மேற்படிப்பு : | |
| | | முழு நேரம் | 299 |
| | | பகுதி நேரம் | 90 |
| | | சான்றிதழ் வகுப்பு : | |
| | | முழு நேரம் | 110 |
| | | பகுதி நேரம் | 230 |
| தொழில் நுட்ப மேல்நிலைப் பள்ளி | 14 | | 840 |

[1986 ஏப்ரல் 17

2. கடந்த ஆறு ஆண்டுகளில் 86 புதிய பல் தொழில் பயில கங்கள் (மகளிருக்கென 12 உட்பட) திறக்கப்பட்டதால் பல் தொழில் பயிலகங்களில் ஆண்டு தோறும் சேர்க்கப்படும் மாண வர் எண்ணிக்கை அண்மை ஆண்டுகளில் வெகுவாக அதிகரிக்கப் பட்டுள்ளது. மேலும் ஷிப்டு முறையும் புகுத்தப்பட்டு 1983–84 க்குள் ஏழு பல்தொழில் பயிலகங்களுக்கு விரிவாக்கப்பட்டது.

சுயநிதி (Self Financing) தொழிற்கல்வி நிறுவனங்கள் :

3. பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங் களில் பெருமளவில் சேர விரும்பும் மாணவ, மாணவியர் எண் ணிக்கையை கருத்தில் கொண்டும், அத்தேவையை ஈடு செய்யும் அளவுக்கு அரசு அல்லது அரசு மானியம் பெறும் தொழிற் கல்வி நிறுவனங்களைத் தொடங்கி நடத்த அரசு நிதி நிலை இடம் தராததாலும், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ் டிரம் போன்ற மாநிலங்கள் ஏற்கனவே சுயநிதி தொழிற் கல்வி நிறுவனங்களைத் தொடங்க அனுமதித்துள்ளன. உதா ரணமாக கர்நாடகத்தில் 1983–84-லேயே 43 பொறியியல் கல் லூரிகள் இருந்தன. அவற்றில் பயின்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 28,000. (தமிழகத்தில் 4.84 கோடி மக்கள் தொகை. கர்நாடகத்தில் 3.71 கோடி மக்கள் தொகை.) வேலை வாய்ப்புக்குகந்த கைத்திறன்களையும் தொழில் திறமை களையும் மாணவர்களிடையே உருவாக்கும் நோக்குடன் இவ் வரசு வாழ்க்கையோடு இணைந்த கல்வியைப் பள்ளிகளில் புகட்டுவது குறித்துக் கருதி வருகிறது. பொறியியல் கல்வி யானது அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப் புக்களை தருவதோடு மட்டுமன்றி சுயமாக தொழில் தொடங்கி நடத்தவும் வகை செய்வதாகும். வளரும் பொருளாதாரத் தின் தொழில் நுட்பத் தேவைகளை நிறைவேற்றத் தக்கதாக தொழில் நுட்பக் கல்வி முறை இருக்க வேண்டும் என்று மைய அரசும் வலியுறுத்தி வந்துள்ளது. இந்தச் சூழ்நிலையில் அரசுக்கு தொடராச் செலவோ தொடரும் செலவோ ஒரு காலத் திலும் ஏற்படாத வகையில், தனியார் தொழிற் கல்வி நிறு வனங்களை தனியார் நிருவாகங்கள் தொடங்குவதை அனு மதிப்பதற்கான திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த தனியார் தொழிற் கல்வி நிறுவனங்கள் நல்ல முறையில் நடப்பதற்கு ஏற்ற கண்டிப்பான நிபந்தனைகளின் பேரில்தான் அத்தகைய அனுமதி வழங்கப்படுகிறது. அந்நிபந்தனைகளில் முக்கியமான சில வருமாறு : போதுமான நிலத்தை தனியார் நிருவாகம் தர வேண்டும் ; ரொக்க வைப்புத் தொகையாக பல் தொழில் பயிலகமானால் ரூ. 10 இலட்சமும் பொறியியல் கல்லூரியானால் ரூ. 30 இலட்சமும் ஏற்படுத்த வேண்டும். அரசாங்கம் வகுக்கும் விதி முறைகளுக்குட்பட்டு மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும். சேரும் மாணவர்களிடம் எத்தகைய தலைக் கட்டணமும் (Capitation Fee) வசூலிக்கக் கூடாது;



1986 ஏப்ரல் 17]

நிபந்தனைகள் மீறப்பட்டால் தொழிற் கல்வி நிறுவனங்களை அரசே எடுத்துக் கொள்ளலாம் என்று முதலிலேயே தனியார் நிருவாகத்தினர் இசைவு தர வேண்டும். இந்த திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் 71 தனியார் பாலிடெக்னிக் களும், கடந்த இரண்டு ஆண்டுகளில் 23 பொறியியற் கல்லூரி களும் தொடங்கப்பட்டுள்ளன.

4. இவ்வாறு கடந்த மூன்று ஆண்டுகளில் அதிக அளவில் பாலிடெக்னிக்குகளும் பொறியியல் கல்லூரிகளும் தொடங்கப் பெற்றதால் கணிசமான அளவில் கிராமப்புற ஏழை மாண வர், மாணவியரில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள் தொழில் நுட்பக் கல்வியை பட்ட நிலையிலோ, பட்டய நிலையிலோ பயில வழி கிட்டியுள்ளது. 1985–86-ல் 800-க்கு மேற்பட்ட மாணவிகள் பொறியியற் கல்லூரிகளும், 1,500மேற் பட்ட மாணவிகள் பாலிடெக்னிக்குகளிலும் சேர வாய்ப்பு கிட்டியுள்ளது. தொழில் நுட்ப பயிலகங்களில் '' மின்கணிப் பியல் '' 1985–86-லிருந்து ஒரு கட்டாய பாடமாக வைக்கப் பட்டுள்ளது. மேலும், எல்லா அரசு மற்றும் உதவி பெறும் பாலிடெக்னிக்குகளுக்கும் மின்கணிப்பு பொறி வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதோடு மின்கணிப்பு அறிவியல் மற்றும் செயற்பாடு குறித்த மூன்றாண்டு பட்டய படிப்பு 1985–86-லிருந்து 3 பாலிடெக்னிக்குகளில் தொடங்கப்பட்டுள்ளது. ஓரி ரண்டு பொறியியல் கல்லூரிகளில் மின்கணிப்பு பாடம், பட்ட படிப்பு நிலையில் கற்றுத்தரப்பட்டு வருகிறது. இதனை பட்ட மேற்படிப்பிலும் புகுத்துவதற்கு திட்டம் வகுக்கப்படு கிறது. வாலாயமான பொறியியற் பாடப் பிரிவுகளைத் தவிர பல்வகையான புதிய பாடப் பிரிவுகளும் இப்பயிலகங்களில் தொடங்கப்பட்டுள்ளன.

5. பொறியியல் கல்லூரிகள்/பல்தொழில் பயிலகங்கள் ஆகியவற்றின் தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு கீழ்க் கண்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன :—

(i) தொழிற் கல்வி இயக்குநர் ஆய்வு ;

சுயநிதி பயிலகங்களில் செய்யப்படும் வசதிகளை மதிப் பிடுவதற்காக தொழிற் கல்வி இயக்குநர் அவ்வப்பொழுது ஆய்வு கள் நடத்துகிறார். பாட போதனை வசதிகள் செய்யப் படுகின்றனவா என்று கண்காணிப்பதற்காக பயிலக நிருவாகங் களை அவ்வப்போது அழைத்து விவாதித்து வருகிறார்.

(ii) (அ) பல்கலைக் கழகங்களின் ஆய்வுக் குழுக்கள் :

பயிலகங்களை அந்தந்த பல்கலைக் கழகத்துடன் இணைப் பதற்கு அனுமதி வழங்கும் சட்டத்தில் அவற்றிலுள்ள வசதி களை மதிப்பிடும் பொருட்டு பல்கலைக் கழகங்கள் ஆய்வுக்

[1986 ஏப்ரல் 17

குழுக்களை அமைக்கின்றன. நிருவாகங்கள் செய்துள்ள வசதிகளின் அடிப்படையில் ஒவ்வொராண்டும் ஆய்வுக் குழுக்கள் தற்காலிகமாக இணைப்புக்கு அனுமதி வழங்குகின்றன.

(ஆ) தொழிற் கல்வி இயக்குநரின் ஆய்வுக் குழுக்கள் :

அரசு மற்றும் மானியம் பெறும் தனியார் பல்தொழில் பயிலக முதல்வர்களைக் கொண்ட ஆய்வுக் குழுக்கள் தொழிற் நுட்பக் கல்வி இயக்குநரால் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் சுயநிதி பயிலகங்களை ஆய்வு செய்து அங்குள்ள வசதிகள் குறித்து அறிக்கைகள் தருவதோடு, ஆய்வுக் கூடங்கள் மற்றும் தொழிற்கூடங்கள் அமைப்பதற்கு அவற்றுக்கு ஆலோசனை வழங்குகின்றன.

(iii) ஆய்வுக் கழகங்கள்/குழுக்கள் :

மாநிலத்திலுள்ள சுயநிதி பொறியியல் கல்லூரிகள் பல்தொழில் பயிலகங்கள் ஒவ்வொன்றையும் பார்வையிட்டு அவை செயல்படும் விதத்தை ஆய்வு செய்து அறிக்கை தருவதற்காக தொழிற் கல்வி இயக்குநர் தலைமையில் ஒரு ஆய்வுக் கழகம்? ஆய்வுக் குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

6. இவ்வகையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதின் விளைவாக அரசு மானியம் பெறும் தனியார் பயிலகங்களுக்கும் சமமாக சில சுயநிதி பயிலகங்களும் நல்ல வசதிகளைச் செய்துள்ளன. மேலும் தொழிற் கல்வித் தேர்வில் சுயநிதி பயிலகங்கள் சிலவற்றின் மாணவர்களின் தேர்ச்சி விகிதம் நன்றாகவே உள்ளது.

7. நாகப்பட்டினம் வலிவலம் தேசிகர் பாலிடெக்னிக்கில் இயங்கி வரும் ஏ. டி. ஜே. தருமாம்பாள் பெண்கள் பிரிவினை ஒரு முழு நேர பெண்கள் பாலிடெக்னுக்காக 1986–87–லிருந்து மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. சேலம் அரசினர் பொறியியல் கல்லூரியில் 1986–87-லிருந்து "மின்னனுவியல் மற்றும் தொடர்பியலில்" பி.இ. பட்டப்படிப்பு பிரிவும், மின்னனுவியலில் பட்ட மேற்படிப்பு பிரிவும் தொடங்கப்படவிருக்கின்றன.

வணிகவியல் பாடங்களில் தேர்வுகள் :

8. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரே வணிகவியல் பாடங்களான தட்டச்சு, சுருக்கெழுத்து, வணிகக் கணக்கு, வணிகப் புவியியல், வங்கியியல் முதலிய பாடங்களில் தேர்வுகளையும் நடத்தி வருகிறார். ஆண்டுதோறும் இரு தடவை அதாவது மே, நவம்பர் மாதங்களில் இத்தேர்வுகள் நடக்கின்றன. ஆண்டுக்கு சுமார் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர் 1985 மே மாதம் தேர்வு எழுதிய 1,11,849 பேர்களுள் தேறியவர்கள் எண்ணிக்கை 63,949 அதாவது 57 விழுக்காடு ஆக இருந்தது.



1986 ஏப்ரல் 17]

9. தமிழ்நாடு சிறப்பு வைப்பு நிதி பணிக் கொடைத் திட்டம் 1—4—1984 முதல் மானியம் பெறும் தனியார் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. இப்பணியாளர்களுக்கு பண்டிகை முன் பணம் அரசு நிதியிலிருந்து வழங்கவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அண்ணா பல்கலைக் கழகம் :

10. இப்பல்கலைக் கழக கல்லூரிகளில் 1984–85-ல் படித்து வந்த மொத்த மாணவர் எண்ணிக்கை வருமாறு :—

| பயிலகம். | பட்டப் படிப்பு. | | பட்டமேற்படிப்பு | | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| | முழு நேரம். | பகுதி நேரம். | முழு நேரம். | பகுதி நேரம். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| கிண்டி பொறியியற் கல்லூரி. | 1,808 | 607 | 585 | 172 | 3,172 |
| சென்னைத் தொழில் நுட்பவியல் நிறுவனம். | 483 | 28 | 88 | 56 | 655 |
| அழகப்பா தொழில் நுட்பவியல் கல்லூரி. | 538 | .. | 65 | 18 | 621 |
| கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புப் பள்ளி. | 111 | .. | 43 | 6 | 160 |
| | 2,940 | 635 | 781 | 252 | 4,608 |

பெரும்பாலான புலங்களில் எம். பில். மற்றும் டாக்டர் பட்ட ஆராய்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன. இப்பல்கலைக் கழகத்துக்கு மானியமாக ரூ. 247 இலட்சம் வழங்க 1986–87-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. (இதில் திட்ட மானியம் ரூ. 17 இலட்சமாகும்).

[1986 ஏப்ரல் 17

11. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் இப்பல்கலைக் கழகத்தின் கீழ்க்கண்ட சாதனைகள் குறிப்பிடத்தக்கன.

(i) நிதிவழங்கு துறைகள் பலவற்றிலிருந்தும் மானியங்கள் பெறுவதற்கு பல்கலைக் கழகம் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டது. சுமார் 729 இலட்சம் நிதியுதவி பெறக்கூடிய திட்டங்களுக்கு ஒப்புதல் பெற்றது. இம்மானியங்களைக் கொண்டு இப்பல்கலைக் கழகம் தொழிற் கல்வி வளர்ச்சியை முனைப்பாக மேற்கொண்டதுடன் வசதிகளையும் மேம்படுத்தியுள்ளது. கீழ்க்கண்ட பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்புப் பிரிவுகள் புதிதாக தொடங்கப்பட்டுள்ளன.—

பட்டப்படிப்பு—

பி.இ. தொழில் பொறியியல்.

பி.இ. மின்கணிப்பொறி அறிவியல்.

பி.இ. அச்சக தொழில் நுட்பவியல்.

பி.எஸ்.ஸி. முடித்தவர்களுக்கு மின்கணிப்பு அறிவியல் பட்டயப் படிப்பு.

பட்ட மேற்படிப்பு—

எம். டெக். தொலைவிலுணர்தல்.

எம். பி. ஏ. வணிக நிர்வாகம்.

எம். சி. ஏ. செயல் முறை மின்கணிப்பியல்.

எம். இ. நீர்ப்பாசனமும் நீர்வள மேலாண்மையும் எம்.டெக்-லேசர் (Laser) மற்றும் எலெக்ட்ரோ ஆப்டிகல் பொறியியல்.

எம். எஸ். ஸி. மருத்துவ இயல்பியல்.

பட்ட மேற்படிப்புப் பட்டயம்—

நீரியல் மற்றும் நீர்வள மேலாண்மை.

(ii) நீர்வள ஆதாரம்; சுற்றுப்புறச் சுழல் மற்றும் மைக்ரோ பிராசஸர் ஆகியவை பற்றிய ஆய்வு மையங்கள்; தொலைவிலுணர்தல் நிறுவனம், கருவித் தொழில் நுட்பவியல் துறை ஆகியவற்றிற்கு மைய அரசு ஆறாவது திட்டகாலத்தில் மொத்தம் ரூ. 85 இலட்சம் வழங்கியது.



1986 ஏப்ரல் 17]

(iii) பிறநாடுகளுக்கு உதவுவதற்கான அமெரிக்க ஐக்கிய நாட்டு நிதி உதவி அமைப்பும், இந்திய அரசும் இந்தியாவனைத்திலும் நீர்வள மேலாண்மைக் கல்வியை மேம்படுத்துவதற்கென்று தெரிந்தெடுத்துள்ள இரண்டு பல்கலைக் கழகங்களில் அண்ணா பல்கலைக் கழக நீர்வள ஆய்வுப் பிரிவும் ஒன்றாகும்.

(iv) 2.75 கோடி ரூபாய் செலவில் பெருமளவிலான கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது.

12. திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரிக்கு மானியமாக ரூ. 54 இலட்சமும், சென்னையிலுள்ள கணித அறிவியல் நிறுவனத்திற்கு மானியமாக ரூ. 5 இலட்சமும் வழங்க 1986-87 இல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## X அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

1. அறிவியலும் தொழில் நுட்பவியலும் பலதரப்பட்ட மக்களின் அன்றாட வாழ்க்கையில் முக்கியமான அங்கம் வகிக்க வேண்டும் என்பதை உணர்ந்து அதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் மின்னணுவியல், அறிவியல் (மற்றும்) தொழில் நுட்பவியல் துறை என்ற பெயரில் புதிய துறை உருவாக்கப்பட்டுள்ளது. இது மின்னணுவியல் தொழில் வளர்ச்சிக்கு நன்கு ஊக்கம் கொடுக்கும். மேலும் இத்துறை அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலை நடைமுறைக்குப் பயன்படுத்தும் பணியில் ஈடுபடும்போது படிப்படியாக, பின் தங்கிய நிலையைப் போக்கவும், கிராமப்புற வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கவும், வறுமையை அகற்றவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும் தொழிலில் ஈடுபடுபவர்களை ஊக்குவிக்க உதவுவதுடன் மக்களிடையே அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தை அறிந்து கொள்ளும் ஆர்வத்தைத் தூண்டவும் வழி வகுக்கும்.

### தமிழ்நாடு மாநில அறிவியல் (மற்றும்) தொழில்நுட்பக் குழு:

2. அரசு ''தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் குழு'' என்ற உயர் மட்ட ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தி உள்ளது. இக்குழுவிடம் மாநிலத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கான பற்பல கூறுகளில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் பயன்படும் இனங்களைக் கண்டுபிடித்து அவைகளுக்கான திட்டங்களைத் தீட்டும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. புகழ்பெற்ற சமூக விஞ்ஞானி ஒருவர் இக்குழுவிற்கு தலைமை ஏற்றுள்ளார். திறமையான பேராசிரியர்கள், தொழில் அதிபர்கள், அறிவியல் வல்லுனர்கள் மற்றும்

வளர்ச்சிப் பணிகளில் பொறுப்பு வகிக்கும் நிர்வாகஸ்தர்களை இக்குழு உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. இக்குழு அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் திட்டங்கள், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான அறிவுரைகளை அரசுக்கு கொடுக்கும். மேலும் இக்குழு நல்ல முறையில் இயங்க மைய அரசின் நிபுணர் பதவிகளைப் பெறுகிறது. இக்குழு பல்வேறு திட்டங்களை அரசுக்கு அளித்துள்ளது. அவை அரசின் பரிசீலனையில் உள்ளது. 1985-86—ம் ஆண்டில் மாநில அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் குழு, மத்திய மாநில அரசு அளித்த நிதி உதவியினால் கீழ்க்கண்ட நான்கு கருத்தரங்குகளை நடத்தியது:—

(1) பெண்களுக்கான அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

(2) தமிழ்நாட்டில் தொழில் விற்பன்னர்கள் அபிவிருத்தி.

(3) மேற்குத் தொடர்ச்சி மலையின் சுற்றுப்புறமேம்பாடு.

(4) தமிழ்நாட்டில் மீன்களின் அபிவிருத்தி.

ஆராய்ச்சி விஞ்ஞானிகளையும், களப்பணியாளர்களையும் ஒருங்கிணைப்பதால் அவரவர்கள் பெற்ற அறிவை பரிமாறிக் கொள்வதும், ஆராய்ச்சியை நடைமுறைக்கு கொண்டு வருவதும் இக்கருத்தரங்குகளின் முக்கிய நோக்கங்கள்.

தமிழ்நாடு அறிவியல் (மற்றும்) தொழில் நுட்ப மையம் :

3. அறிவியலைப் பற்றி மக்கள் அறிய, அரசு ''தமிழ் நாடு அறிவியல் (மற்றும்) தொழில் நுட்ப மையம்'' என்ற நிறுவனம் ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த நிறுவனம் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அருங்காட்சியகம் மற்றும் கோள்நிலை இயக்க விளக்கக்கூடம் (பிளானெட்டோரியம்) ஆகிய வற்றை சென்னையில் ஏற்படுத்த தற்போது முனைந்துள்ளது. அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையம் இளைய தலைமுறை யினரிடத்தில் அறிவியல் மனப்பான்மையையும் சிந்தனையையும் வளர்க்கும் நோக்கமுடையது. புதியன பற்றி அறியும் ஆர்வத்தை யும், கேள்வி கேட்கும் முறைகளையும் சமூச, கலாச்சார, தொழில் நுட்ப, அறிவியல் இயற்கைச் சூழ்நிலைகளை திறனாய்வு செய்து பகுத்தாய்தலையும் ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டதாகும். சிக்கல்களை இனங்கண்டுகொள்ளும் திறனையும், தக்க தீர்வினை நோக்கிப் பணியாற்றுவதையும், விஞ்ஞானம் தொழில் நுட்பம் பற்றிய செய்திகளையும் தொகுத்துப் பரப்புவதையும், அன்னாரி டையே ஊக்குவிப்பதாகும். சென்னை, கோவை, திருச்சி, ஆகிய இடங்களில் மூன்று அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையங் களையும், சென்னையில் கோள்நிலை ஆய்வகத்தையும் நிறுவுவ தென தமிழக அரசு முடிவு செய்துள்ளது. சென்னையில் பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்திற்கு ரூபாய் 3.85 கோடியும், கோள்நிலை ஆய்வகத்திற்கு ரூபாய் 1.59 கோடியும் தமிழக அரசு ஒப்பளித்து ஆணைகள் பிறப்பித்து உள்ளது.



இந்தியாவில் முக்கிய தொழிலதிபர் திரு சி. கே. பிர்லா அளிக் கும் நன்கொடையிலிருந்து கோள்நிலை ஆய்வகம் நிறுவப்பெறும். பெரியார் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையத்திற்கான முதன்மைக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இம்மையத் தில் 16 காட்சியகங்கள் இடம் பெறும். அவற்றில் ஒன்றான பெரியார் காட்சியகம், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தைப் பற்றிய பெரியார் கருத்துக்களைக் காட்சிப் பொருள்களின் மூலம் எடுத்துக் காட்டும் வண்ணம் மையத்தின் நுழைவாயிலில் அமைக்க பெறும். இத்திட்டத்தின் தற்போதைய மதிப்பீடு ரூபாய் 682.75 இலட்சங்கள் ஆகும். இதுவரை மையத்தின் தொடர் மற்றும் தொடரா செலவினங்களுக்காகவும் ரூபாய் 80.09 இலட் சங்கள் அரசு மானியம் வழங்கியுள்ளது. அரசாங்கத்திடமிருந்து பெற்ற மானியம், மையத்தில் அஸ்திவாரப் பணிக்காகவும், முதன் மைக் கட்டிடத்தின் மேற்கட்டுமானத்திற்காகவும் 450 சதுர மீட்டர் மனையக அளவுடைய பணிமனைக் கட்டிடத்திற்காகவும் செலவிடப்பட்டுள்ளது. மையத்தின் வளாகத்தில் சாலைகள் போடப்பட்டுள்ளன. 1985-86-க்கான மறுமதிப்பீடு-செலவுத் திட்டத்தில் 49.76 இலட்சங்கள் அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தொழில் முனைவர்கள் வளர்ச்சித் திட்டம்.

4. ஓர் புதிய தலைமுறை தொழில் விற்பன்னர்களை, குறிப் பாக அறிவியல் மற்றும் தொழில் நுட்ப பட்டதாரிகளிலிருந்து தோற்றுவிப்பதற்காக அரசு பயிற்சித் திட்டங்களை ஆரம்பித்து உள்ளது. இம்முயற்சியானது சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்துவது டன், புதிய துறைகளில் வேலைவாய்ப்புக்கள் கிடைக்கவும் பெரிதும் வகை செய்யும். இத்திட்டத்தின்கீழ் அகமதாபாத்தி லுள்ள இந்திய தொழில் முனைவர்கள் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் மற்றும் தொழில் நுட்ப கலந்தாய்வு நிறுவனம், மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட சிறுதொழில் சங்கத் துடன் இணைந்து கோயம்புத்தூரில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலில் பட்டம் பெற்றுள்ள இம்மாநிலத்தைச் சார்ந்த பெண்களுக்கு 1—8—1985 முதல் 31—10—1985 முடிய மூன்று மாத பகுதிநேர பயிற்சி நடத்தப்பட்டது. சென்னை யில் உள்ள இந்திய தொழில் நுட்ப நிறுவனம், மத்திய அரசின் அறி வியல் மற்றும் தொழில்நுட்ப துறை, மற்றும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி, ஆகியவற்றின் நிதி உதவியுடன் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப பட்டதாரிகளுக்கு மூன்றுமாத தொழில் முனை வர்கள் வளர்ச்சித் திட்டம் ஒன்றை நடத்தியது. கோயம்புத்தூ ரிலுள்ள தென்னிந்திய துகிலியல் ஆராய்ச்சி சங்கம், தேசிய அறி வியல் மற்றும் தொழில் நுட்ப தொழில் முனைவர்கள் வளர்ச்சி வாரியத்தின் உதவியுடன் கோயம்புத்தூரில் துகிலியல் பட்டம் பெற்றவர்களுக்கு தொழில் முனைவர்கள் வளர்ச்சித் திட்டம் ஒன்று நடத்தி இருக்கிறது. இப்பயிற்சித் திட்டத்தை நடத்த அரசு இசைவு தெரிவித்துள்ளது.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர்கள் பண்ணை :

5. மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் அறிவியல் மற்றும் தொழில் முனைவர்கள் பண்ணைகள் மத்திய அரசின் உதவியுடன் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்ட திறனுள்ளோர்க்கு வாய்ப்புத் திட்டம்.

6. மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் 'தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தொழில் முனைவர்கள் வளர்ச்சி வாரியம்' பல்வேறு திட்டங்களில் ஒன்றாக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கு சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்தி பின்தங்கிய மாவட்டங்களை அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மூலம் வளர்ச்சியடைய செய்ய வேண்டும் என்று கருத்து தெரிவித்தது. இதன் விளைவாக தமிழ்நாட்டில் பின்தங்கிய மாவட்டமான தர்மபுரியில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டது.

மாவட்ட அளவில் செயற்குழு முழுமையாக செயல்பட சிறப்புப் பணி பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் நோக்கங்கள் கீழ் வருவன :—

(1) பத்தாண்டுகளுக்குள் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தொழில் முன்னவர்கள் மூலமாக ஓர் மாவட்டத்தை தொழில் முன்னேற்றம் அடையச் செய்யவும், உயர் தொழில் நுட்ப அறிவைப் பெறுவதற்கும், அதனை அரசு அமல்படுத்த திட்ட முதனிலை உரு வரைப்படம் (Blue print of action) தயார் செய்தல்.

(2) கி. பி. 2001 ஆம் ஆண்டில் இம்மாவட்டம் எய்த வேண்டிய தொழில் வளர்ச்சியைக் கணித்து அதற்கேற்ற செயல் திட்டம் உருவாக்குதல். இத்திட்டத்தை செயல்படுத்த அனைத்து வகையிலும் செயற்பாட்டு முகமையாக ''தர்மபுரி மாவட்ட வளர்ச்சி நிறுவனம்'' விளங்கும். இந்நிறுவனம் ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தி சிறப்புப் பணிப் பிரிவாக தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தொழில் முனைவர்கள் வளர்ச்சி வாரியத்தின் கீழ் இயங்கி வரும்.

தமிழ் வளர்ச்சி—பண்பாடு.

விழுமிய உணர்வுகளோடு அறிவுத்திறனும் நலமும் வளமும் எய்தத் தம் தாய்மொழியையே மக்கள் முதன்மையாகக் கொள்வது மரபு. மொழியால் உணர்வும், கலையால் கனிவும், பண்



பாட்டால் பெருமிதமும் முறையாக அமையும். மொழிவளர்ச்சியோடு, கலையுணர்ச்சி, நாகரிக முதிர்ச்சி, இலக்கிய எழுச்சி முதலியன எப்போதும் இணைந்தே ஊட்டமும் பெறும். இவ்வகையில் இலக்கிய மரபுச் செல்வங்களைப்படைத்தல், காத்தல் கற்பித்தல், வளர்த்தல், வழங்குதல், பரப்புதல் முதலிய நிலைகளில் மொழி, கலை, பண்பாடு அளாவிய துறைகளும் பிரிவுகளும் ஒருங்கிணைந்ததன் பயனாகத் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை தோன்றிச் செயலாற்றுகிறது.

2. கலைஞர்கட்கு ஊக்கத் தொகை வழங்குதல், கலைகட்குப் புத்தூட்டமளித்தல் ஆகிய பணிகளோடு 1985-86 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா, திருவள்ளுவர் பெயர்களில் தோற்றுவிக்கப் பெற்ற நல் விருதுகள் உரிய சான்றோர்கட்கு வழங்கப்பெற்றன.

3. அந்தமான், நிக்கோபார், இலட்சத் தீவுகள், கேரளம், கருநாடகம், ஆந்திரம், புதுவை, தமிழகம் ஆகிய ஏழு மாநிலங்கள் அடங்கிய தென்னகப் பண்பாட்டு மையத்தினைப் பாரதப் பிரதமர் தஞ்சை திருவையாற்றில் 31—1—1986 அன்று தொடங்கிவைத்த பெருவிழாவை இத்துறை பொலிவுற நடத்தி முடித்துள்ளது.

(i) தமிழ் வளர்ச்சித் துறை

அனைத்து நிலைகளிலும் பரவலாகப் பயன்படுத்துவதன் வாயிலாகவே ஒரு மொழி வளம் பெற முடியும். துறைகளின் பயன்பாட்டினாலேயே புது வடிவத்தையும், பொருட்பொலிவையும், சொற் பெருக்கத்தையும் ஒரு மொழி அடையமுடியும் என்னும் மொழியியல் அடிப்படையிலேயே இவ்வரசு தனதுஆட்சி மொழிக் கொள்கையை வகுத்துள்ளது. அந்த வகையில் ''எங்கும் தமிழ், எதிலும் தமிழ்'' என்ற இலக்கோடு அரசு நிருவாகத்திலும் கல்வி, அறிவியல் போன்ற பிற துறைகளிலும் தமிழ் மொழியின் பயன்பாட்டினை முழுமையாக்க முற்படுவது இத்துறையின் நோக்கமாகும். தமிழ் வளர்ச்சி தொடர்பான பிற பணிகளையும் இத்துறை ஆர்வத்துடன் நடைமுறையாக்கி வருகிறது.

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் :

2. தமிழ் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்க முன்னேற்றம் குறித்துத் துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் ஆகியவற்றைத் தமிழ் வளர்ச்சி இயக்குநரும், மாவட்டங்களில் அமைந்துள்ள சார்நிலை அலுவலகங்களை மாவட்டத் தமிழ் வளர்ச்சி ஆய்வு உதவி இயக்குநர்களும், ஆய்ந்து

வருகின்றனர். ஆட்சிமொழித் திட்டத்தை முழு அளவில் அரசு அலுவலகங்களில் செயற்படுத்த 1980ஆம் ஆண்டில் முனைப்புத் திட்டம் தொடங்கப் பெற்றுச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அரசு நிறுவனங்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3. தமிழ் ஆட்சிமொழித் திட்டத்தை விரைவுபடுத்தும் வகையில் ஆங்கிலத் தட்டச்சுகளுக்கு மாற்றாகத் தமிழ்த் தட்டச்சுகளை அனைத்து அலுவலகங்களுக்கும் வழங்க ஆவன செய்யப்படுகின்றன. ஆங்கிலத்திலுள்ள விதிகள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள், படிவங்கள் ஆகியவை தமிழில் மொழியாக்கம் செய்யப்படுகின்றன. ஆட்சிச்சொல் அகராதி 4 பதிப்புகளும், 65 துறைகளுக்கான சிறப்புச் சொல் துணையகராதிகளும் உருவாக்கம் பெற்றுள்ளன. ''குற்றவியல் புலனாய்வு'' என்ற மொழியாக்க நூல் இவ்வாண்டு திருவள்ளுவர் திருநாளில் (15–1–1986) இத்துறையால் வெளியிடப்பட்டது.

சிறப்பிலக்கிய மொழி பெயர்ப்புத் திட்டம் :

4. தமிழிலுள்ள சிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளிலும் பிற மொழிகளிலமைந்த சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும் மொழி பெயர்த்து வெளியிடும் இத்திட்டம் தமிழ் வளர்ச்சித் துறையிலேயே தொடர்ந்து செயற்படுத்தப்படவுள்ளது.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்க்கு நிதியுதவி வழங்கு திட்டம் :

5. ஆண்டுதோறும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் முப்பதின்மர் இத்திட்டத்தின்படி நிதியுதவி பெறுகின்றனர். நிதியுதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொருவரும் திங்கள்தோறும் ரூ. 250 பெறுவதற்குரியவராவர். இதுவரை தமிழறிஞர்கள் 242 பேருக்கு இந் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

நூல்கள் வெளியிட நிதியுதவி வழங்கு திட்டம் :

6. இத்திட்டத்தின்படி 1985–86-ல் 27 நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து செயற்படும்.

நூல்களுக்குப் பரிசு வழங்கு திட்டம் :

7. தமிழிற் சிறந்த நூல்கள் எழுதும் நூலாசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் 21 தலைப்புகளில் சிறந்த நூல்களுக்கு ஆண்டு தோறும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 1984 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சிறந்த நூல்களுக்கு 15–1–1986 ஆம் நாள் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் 17 முதற் பரிசுகளும் 10 இரண்டாம் பரிசுகளும் வழங்கப்பட்டன.





தமிழாராய்ச்சிப் பணிகளுக்காகவும், பிற மாநிலங்களில் தமிழ் வகுப்புகள் நடத்தவும் நிதியுதவி :

8. வெளி மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ்ப் பிரிவுகளை நிறுவவும், பட்டய வகுப்பு நடத்தவும் நிதியுதவி வழங்கப்படுகிறது. தமிழ்ப்பணி புரிந்து வரும் நிறுவனங்களுக்கும் நிதியுதவி வழங்கப்பெறுகிறது. தென் மொழிகள் புத்தக நிறுவனம், பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளி, ஆசியவியல் ஆய்வு நிறுவனம், குருகுல காங்கிரி வித்தியாலயா (அரித்துவார்), திருப்பதி வேங்கடேசுவரா பல்கலைக் கழகம் (அனந்தப்பூர்) ஆகியவற்றிற்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டு வரலாற்று வரைவுத் திட்டம் :

9. சீரான தமிழ்நாட்டு வரலாற்றை அரசின் பொறுப்பில், உரிய பேராசிரியர்களைக் கொண்டு ஒழுங்குறச் சமைத்து வழங்குவதற்கான இத்திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவரையில் தொல் பழங்காலம், சங்க காலம் (2 பகுதிகள்) என்னும் இரு தொகுதிகள் வெளியிடப்பட்டன. மூன்றாம் தொகுதியான பல்லவர்-பாண்டியர் காலம் என்னும் நூல் அச்சேற்ற நிலையில் உள்ளது. தமிழ்நாட்டு வரலாற்று நூல் தொகுதிகளைத் தமிழ் வளர்ச்சி இயக்ககமே அச்சிட்டு வெளியிடவும் கருதியுள்ளது.

தமிழ் நூல் விவர அட்டவணை வெளியீடு :

10. தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் அங்கமாகத் தமிழ் நூல் விவர அட்டவணை உருவாக்கும் பணி 1960 முதல் தொடர்ந்து நடைபெறுகிறது. இத்திட்டத்தின்படி இதுவரையில் 22 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. தற்போது 1936–40 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட நூல்கள் பற்றிய விளக்கக் குறிப்புகள் உருவாக்கப்படுகின்றன. 15–1–1986 ஆம் நாள் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாவில் தமிழ் நூல் விவர அட்டவணையின் ஐந்தாம் தொகுதியின் முதல் மடலம் வெளியிடப்பட்டது.

விருதுகளும் பாராட்டும்.

திருவள்ளுவர் விருது :

11. திருவள்ளுவர் திருநாள் தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் அரசு விழாவாக நடத்தப்படுகிறது. திருக்குறள் பற்றிய ஆராய்ச்சி நூல்களை எழுதும் அறிஞர்களுக்குத் ''திருவள்ளுவர் விருது'' வழங்குவதென முடிவு செய்ததையொட்டி 1985–86-க்குரிய திருவள்ளுவர் விருது குன்றக்குடி அடிகளாருக்கு 15–1–1986 இல் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் வழங்கப் பெற்றது. இந்த விருதுடன் திருக்குறளைப் பற்றிய ஆராய்ச்சி நூல்களைப் பிற மொழியில் எழுதும் அறிஞர் பெருந்தகை ஒருவருக்கு அடுத்த ஆண்டு முதல் திருவள்ளுவர் திருநாளில் ரூ. 10,000 வழங்கப்பெறும்.

[1986 ஏப்ரல் 17

அறிஞர் அண்ணா விருது :

12. பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்ப் பண்பாட்டோடு கூடிய பொலிவும் வலிவும் வாய்ந்த புதிய தமிழகத்தை உருவாக்கிய பெருந்தகையாவார். அவர் நினைவின் அடையாளமாக ''அறிஞர் அண்ணா விருது'' என்னும் புகழ் விருது தமிழக அரசால் வழங்கப் பெறுகிறது. அறிஞர் அண்ணாவின் கொள்கை-குறிக்கோள்-கோட்பாடுகளில் நெறி நிற்றல், நிலை நிறுத்துதல், பரப்புதல், ஆராய்தல் ஆகிய வகையால் தகுதி பெறுவோர்க்கு இவ்விருது வழங்கப்படுகிறது. தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு இந்த ஒப்பற்ற விருது கடந்த ஆண்டு வழங்கப்பெற்றது.

திரு. வி. க. விருது :

13. ஆண்டுதோறும் திரு. வி. க. பிறந்த நாளில் ''திரு.வி.க. விருது'' சிறந்த தமிழ் எழுத்தாளருக்கு வழங்கப்படுகிறது. 1985–86 ஆம் ஆண்டுக்குரிய விருது பேராசிரியர் டாக்டர் க. த. திருநாவுக்கரசு அவர்களுக்கு வழங்கப்பெற்றது.

பாவேந்தர் பாரதிதாசன் விருது :

14. தமிழ் வளர்ச்சித் துறையால் 1985–86 ஆம் ஆண்டுக்குரிய ''பாவேந்தர் பாரதிதாசன் விருது'' கவிஞர் உலகநாதன் அவர்களுக்கு வழங்கப்பெற்றது.

இளங்கோ விழா :

15. இளங்கோவடிகள் விழா சித்திரைத் திங்கள் முழுநிலா நாளில் கோவை மாவட்டப் பகுதியில் அரசு விழாவாகக் கொண்டாடப்படவுள்ளது.

பெரும்புலவராகிய கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார் நூற்றாண்டு விழாவும் 1986 மார்ச்சு திங்களில் கொண்டாடப்பட்டது.

சங்கச் சான்றோர் நினைகல் நிறுவு திட்டம் :

16. சங்கச் சான்றோர் நினைவைப் போற்றும் வகையில் நினைகல் நிறுவு திட்டம் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. சங்க காலப் புலவர்கள் பிறந்த இடங்களாக அறியப்படும் ஊர்களில் அரசின் சார்பில் நினைவுத் தூண் நிறுவப்பெறும். சங்கச் சான்றோர்களின் சிறந்த பாடல்களும் கல்வெட்டுக்களில் செதுக்கி வைக்கப்பெறும். இத்திட்டம் படிப்படியாக ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்றப்பெறும்.



1986 ஏப்ரல் 17]

உலகத் தமிழ்ச் சங்கம் :

17. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் முடிவாகத் தமிழ்ப் பல்கலைக் கழகமும், உலகத் தமிழ்ச் சங்கமும் நிறுவும் எண்ணங்கள் முகிழ்ந்தன. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமையும் திராவிட நாகரீகத்தின் ஊற்றுக் கண்ணாய்த் திகழும் அருமையும் பூண்ட மதுரை மாநகரில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவுவதற்கு 14.15 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நிலவியற் பெயர்கள் :

18. நிலவியற் பெயர்களுக்கான தமிழ் எழுத்துக் கூட்டல் தமிழ் வளர்ச்சித் துறையால் அவ்வப்போது வழங்கப்பெறுகிறது. மைய நிலவியல் துறை, இருப்பூர்தித் துறை, அஞ்சல் துறை ஆகியவை வினவும் நிலவியற் பெயர்களுக்கு எழுத்துக் கூட்டல் வழங்கப்படுகின்றது. ''மாநில பெயர் ஆணைக் குழு'' என்னும் அமைப்பை அரசு இத்தொடர்பில் அண்மையில் அமைத்துள்ளது. இலக்கணப் பிழையோடும், பொருட் பிழையோடும் அமைந்துள்ள ஊர்ப் பெயர்களை உரியவாறு மாற்றிச் சரியான பெயர்களைக் குறிப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வருவாய் நிருவாகத் துறையுடன் இணைந்து சிற்றூர்களின் பெயர் அகர வரிசைப் பெயர்ப் பட்டியலின் திருத்தப் பதிப்பினை வெளியிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

தெருப் பெயர்களைத் திருத்தியமைத்தல் :

19. மாநகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகளிலமைந்த தெருப் பெயர்களில் சாதிப் பெயர்களை நீக்க அரசு ஆணையிட்டதையடுத்து, பரவலாகத் தெருப் பெயர்கள் சிதைவுற்ற தன்மையில் பிழைபாடுகளுடன் சிலவிடங்களில் காணப்படுகின்றன. இக்குறைபாடுகளை நீக்க தெருப் பெயர்களை உரியவாறு திருத்தியமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தமிழ் அறிஞர்களுக்கு நிதி உதவி :

20. தமிழ் மொழி காப்பு, தமிழ் பண்பாட்டின் மேம்பாடுகளில் கொண்ட தணியாத ஆர்வத்தால் தங்களை, தமிழ் தியாகிகளாக ஆக்கிக் தொண்டவர்களுக்கு, மாதம் ரூ. 150 நிதியுதவி அளித்தல்; தமிழ்மொழி, பண்பாடு, வரலாற்று கருவூலங்களைக் காத்து வளர்க்கும் முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கு உதவித் தொகை தருதல் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

வறுமையில் வாடும் எழுத்தாளர்களுக்கு நிதி உதவி :

21. இத் திட்டத்தின் கீழ் வறுமையில் வாடும் எழுத்தாளர்களுக்கு மாதம் ரூ. 150 நிதியுதவி அளிக்கப்படும். இதுவரை அத்தகைய எழுத்தாளர்களிடமிருந்து வந்த விண்ணப்பங்கள் அரசின் ஆய்வில் உள்ளன. இவ்வாண்டில் இத்திட்டமும் அமுல் படுத்தப்படும்.

(ii) மொழி பெயர்ப்புத்துறை :

தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளிலும் அலுவல் நடவடிக்கைகள் தமிழில் நடைபெறவேண்டுமென்பது நமது விழைவாகும். இதற்கு உறுதுணையாக மொழி பெயர்ப்புத் துறை பணியாற்றுகின்றது. இத்துறை ஆங்கிலத்தில் எழுதப்பெறும் இன்றியமையாத கோப்புகளை தமிழில் மொழி பெயர்த்துத் தருகின்றது. " தமிழாக்கம், தமிழுக்கு ஆக்கம் " என்ற வகையில் இன்றியமையாத தமிழ் வளர்ச்சிப் பணியை ஒரு வகையில் இத்துறை ஆற்றுகின்றது. இத்துறை தற்போது துணைச் செயலாளர் (மொழி பெயர்ப்பு) பொறுப்பில், துறைத் தலைவராகக் கொண்டு இயங்கி வருகின்றது. இங்கு மூன்று உதவி இயக்குநர்களும், இரண்டு மொழி பெயர்ப்பு அலுவலர்களும் உரிய துணைப் பணியாளர்களும் பணிபுரிகின்றனர்.

2. தலைமைச் செயலகத்தின் பல துறைகள் பின்வருகின்ற வகையிலான கோப்புகளின் ஆங்கிலப் குறிப்புகளை இத் துறைக்கு அனுப்பித் தமிழாக்கம் பெறுகின்றன:—

(1) சுற்றோட்டக் குறிப்புகள்.

(2) அரசு நிருவாக அறிக்கைகள்.

(3) சட்டமன்றப் பேரவை/மேலவை வினாக்களுக்குரிய குறிப்பு.

(4) பொது நிறுவனக்குழு, பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளும், அவற்றிற்கான குறிப்புகளும்.

(5) அறிக்கைகள், விதிகள்.

(6) அமைச்சர்கள் பயனுக்காக உரைக் குறிப்புகள்.

(7) பொது (சட்டம்—ஒழுங்கு) துறையின் அறிக்கைகள்.

(8) பொது (கடுமந்தணம்) துறையின் நடவடிக்கைகள் தொடர்பான குறிப்பாணைகள்.

3. சட்டமன்றத்தின் வரவு-செலவுக் கூட்டத் தொடர் நடைபெறுகையில் அவையில் வைக்க வேண்டிய அனைத்து ஆவணங்களும், குறிப்பாக மானியக் கோரிக்கை, கொள்கை விளக்கக் குறிப்பு, கடந்த ஆண்டின் சாதனை அறிக்கைகள்



தமிழாக்கம் செய்யப்பட்டுச் சட்டமன்றத்தில் வைக்கப்படுகின்றன. நிதித்துறை வெளியீடும் அனைத்து வரவு-செலவு அறிக்கை ஆவணங்களும், இத்துறையின் ஒரு பிரிவினரால் (முகமையில் அனுப்பப்படுவோர்) மொழி பெயர்க்கப் பெற்று வெளியிடப்படுகின்றன. ஒரே வழி, தமிழகத்தில் வாழும் பிற மொழி பேசும் சிறு பான்மையினர் நலம் கருதி மலையாளம், தெலுங்கு முதலிய மொழிகளில் அரசு அறிவிக்கைகள் மொழி பெயர்த்து வெளியிடப்படுகின்றன. பொது மக்கள் நலன்கருதி அவ்வப்போது அரசு வெளியிடக்கூடிய தகவல் விவர அறிக்கைகளும், வழிகாட்டிக் குறிப்பு நூல்களும் இத்துறையால் மொழி பெயர்க்கப்படுகின்றன.

(iii) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

சிறப்பு நிலையில் தமிழாய்வுப் பணியை வளப்படுத்த பிரெஞ்சு—அகாதமி போன்ற தனி நிறுவனம் தேவை எனக் கருதப்பட்டு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1970 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனத்திற்கு ஆண்டுக்கு 6 இலட்சம் ரூபாய் நிதி உதவியாக அரசு வழங்கி வருகிறது. முனைவர் (டாக்டர்) பட்ட நிலையிலும், முதுமுனைவர் (டாக்டர் பட்டத்திற்கு மேலான) நிலையிலும் ஆராய்ச்சிப் பணிகள் இங்கு நடைபெறுகின்றன. ஏறத்தாழ எண்பதின்மர் முழுநேர மற்றும் பகுதி நேர ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளனர். தமிழரல்லாதவர்களுக்கு ஒலிப்பதிவு முறையில் தமிழைப் கற்பிக்கும் ஏந்துகள் இந்நிறுவனத்தில் அமைந்துள்ளன. 160-க்கும் மேற்பட்ட பிற நாட்டினர் இந்நிறுவன மொழிப் பயிற்சிக் கூடத்தில் நடத்தப்பெறும் தமிழ் வகுப்புகளால் பயனடைந்துள்ளனர். புதிதாகத் தமிழ் பயிலும் பிற மொழியினருக்கு ஏற்ற பாட நூலுடன் பதிவொலிச், சுருள்களைக் கொண்ட " தானே தமிழ் கற்கும் " முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. மொழி பெயர்ப்பியலிலும் கையெழுத்துப் படிப்பியலிலும் பட்ட மேற்படிப்புப் பட்டயப் படிப்புகளும் இந்நிறுவனத்தில் நடத்தப்படுகின்றன. இந்நிறுவனம் 120 சிறந்த நூல்களை வெளியிட்டுள்ளது. தமிழிலக்கியம், மொழியியல், வரலாறு, கலை மற்றும் பண்பாடு ஆகியவற்றைச் சார்ந்தவை பெரும்பாலானவையாகும். சிறந்த ஏட்டுச் சுவடிகளும், ஆராயப் பெற்று அச்சிடப் பெற்றுள்ளன.

(iv) செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலித்திட்ட இயக்ககம்.

அகரத்தில் தொடங்கும் சொற்களைக் கொண்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் முதன் மடல முற்பகுதி 1985-ஆம் ஆண்டு திருவள்ளுவர் திருநாளில் வெளியீடப் பெற்றது. " பாவாணர் வேர்ச் சொல் வரிசை " என்னும் நூலுக்குரிய தொகுப்பு பணி நிறைவுற்று வெளியிடுவதற்

கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1986—87ஆம் ஆண்டில் கட்டடத் தொழில், தச்சுத் தொழிற் சொல் வரிசை, மீன்பிடி தொழிற் சொல் வரிசை, மும்மொழிக் கையகரமுதலி ஆகிய துணை நூல்கள் வெளிவரவுள்ளன.

(v) தொல் பொருள் ஆய்வுத்துறை.

தொல் பொருள் ஆய்வுத்துறை 1961 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இவ்வாண்டுடன் இருபத்தைந்து ஆண்டுகள் முடிவடைகின்றன. இவ்வாண்டு இத்துறையின் வெள்ளிவிழா ஆண்டாகும். இதுகாறும் பல்வேறு முகத்தாலும், தமிழக வரலாறு கலை, இலக்கியம் ஆகிய பல பிரிவுகளிலும் சிறந்த பணிகளையும் புதிய செய்திகளையும் இத்துறை திரட்டி அளித்துள்ளது. ஒரு தனி அலுவலருடன் தோன்றிய இத்துறை இதற்கென மாநிலத் தொல் பொருள் வரலாற்றுச் சின்னப் பாதுகாப்புச் சட்டத்தை, மாநில சட்டமன்றத்தின் மூலமாக 1966 ஆம் ஆண்டு இயற்றி, அச்சட்டத்தின் மூலமாகத் தனது பணியை ஆற்றி வருகிறது.

2. கல்வெட்டுப் பிரிவு : பண்டைய வரலாற்று கட்டிடங்களைப் பழுது பார்க்கும் பிரிவு : தொல்லியல் வரலாற்று இடங்களை அகழ்வாய்வு செய்யும் பிரிவு : நூல் அச்சிடும் பிரிவு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்களில் வரலாற்றுக் கூடங்கள் அமைத்தல் : முதலிய பணிகளோடு மாணவர்களுக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும் ஆராய்ச்சி வல்லுநர்களுக்கும் தொல்லியலின் ஆர்வத்தையும் தோற்றுவித்தும், ஊக்குவித்தும் வருகிறது.

3. மதுரை திருமலை மன்னர் அரண்மனை, தஞ்சை நாயக்க மராத்திய அரண்மனை போன்ற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கட்டிடங்களை அவற்றின் தொன்மை மாறாது பழுது பார்த்துள்ளது. கல்வெட்டுச் சிறப்பும், கலைச் சிறப்பும் மிகுந்த கேட்பாரற்றுப் பழுதடைந்து கிடக்கும் கோயில்களில் சிலவற்றை இத்துறை பழுது பார்த்துள்ளது. கூழம்பந்தல், பாச்சூர் போன்ற 11 கோயில்கள் பழுது பார்க்கப்பட்டன.

4. இந்திய நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் கல்வெட்டுகள் ஏராளமான அளவில் இருக்கின்றன. இந்தக் கல்வெட்டுகளை ஆய்ந்து அச்சிடுவதற்குக் கல்வெட்டுப் பிரிவு அமர்த்தப்பட்டுள்ளது. அப்பிரிவு இதுகாறும் சுமார் 3,600 சிற்றூர்களுக்குச் சென்று வந்து 5,900 கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ளது. இவற்றில் 2,000 கல்வெட்டுக்கள் அச்சிடப் பெற்றுள்ளன. மேலும் ஊர் வாரியாக கல்வெட்டுக்களை ஆய்ந்து அச்சிடும் பணியில் இப்பிரிவு ஈடுபட்டுள்ளது.

5. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பண்டைய தமிழக ஊர்களையும், நகரங்களையும் அகழ்ந்தாய்ந்தறிய அகழ்வாய்வுப் பிரிவு தனியாக இத்துறையில் இயங்குகிறது. இதுகாறும் கொற்கை, கரூர், கங்கைகொண்ட சோழபுரம் போன்ற 11





இடங்களில் இத்துறை அகழ்வாய்வு மேற்கொண்டுள்ளது. பாண்டியப் பெருவேந்தரின் தலை நகரமாகிய கொற்கையில் 2,000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே அவ்வூர் சிறப்புற்றுத் திகழ்ந்த செய்தி மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. சங்க காலச் சேர மன்னர்களுடைய தலைநகரமான கரூரில் அகழ்வாய்வில் உரோமானியப் பேரரசனுடன் இருந்த தொடர்பை வலியுறுத்தும் வகையில், 2,000 ஆண்டுகளுக்கு மேலாக இந்நகர் சிறப்புற்று இருந்தமையும் அகழ்வாய்வினில் வெளியிடப்பட்டுள்ளன. சோழப் பேரரசர்களில் வெற்றி பல குவித்த முதலாம் இராசேந்திர சோழன் நிறுவிய கங்கைகொண்ட சோழபுரம் ஏறக்குறைய் கி. பி. 1020-ல் இருந்து 1300 வரையில் தென்னகம் முழுவதற்கும் தலைநகராகத் திகழ்ந்தது. இப்பெருநகர் முற்றிலுமாக மறைந்து புதைந்து கிடப்பதை இத்துறை அகழ்வாய்வின் மூலம் வெளிப்படுத்தியுள்ளது. சோழர் கால அரண்மனைக் கட்டிடப் பகுதிகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மாமல்லபுரத்திற்கு ஏழு கல் தொலைவில் வாசவசமுத்திரம் என்ற இடத்தில் உரோமானியத் தொடர்பு நிலவியமை அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. கோயம்புத்தூருக்கு அருகில் போளுவாம்பட்டி என்ற இடத்தில் பண்டைய நகரத்தின் சுவடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கங்கை கொண்ட சோழபுரத்து அகழ்வாய்வை மேலும் விரிவாக மெற்கொள்ளவும், பிற வரலாற்று இடங்களை அகழ்வாய்வு செய்யவும் இப்பிரிவு இவ்வாண்டில் பணிகளைத் தொடரவுள்ளது.

6. ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்தப் பகுதியிலே அமைந்துள்ள வரலாற்றுச் சின்னங்களின் பட்டியல்களையும், உதிரிச் சிற்பங்களின் பட்டியல்களையும், சுவடிகள் சேமிக்கும் பணிகளையும் மாவட்டத் தொல்லியல் பணிகள் கவனிக்கும் பொருட்டும் மாவட்டந்தோறும் ஒரு தொல்லியல் அலுவலரை நியமிக்க முடிவெடுத்து, இதுகாறும் ஏழு தொல்லியல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களது முயற்சியால் 3000-க்கும் மேற்பட்ட ஓலைச் சுவடிகள் சேமிக்கப்பட்டுள்ளன. இப்பணி மேலும் விரிவடைய ஆவன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட கற்காலக் கருவிகளும், நுண்கருவிகளும் தமிழகத்தில் ஏராளமாகக் கிடைக்கின்றன. அவ்வாறு கிடைப்பதை ஆய்வதற்கு வரலாற்றுக்கு முற்பட்ட தொல்லியல் ஆய்வுப் பிரிவும் இத்துறையில் அமைக்கப்பட்டுள்ளது. பழைய கற்கால மனிதன் வாழ்ந்த பகுதியான பூண்டியல் '' வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகத்தைச் '' சித்தரிக்கும் காட்சியகமும் அமைக்கப்பட்டுள்ளது.

8. அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்களைத் தூய்மைப்படுத்திக் காப்பதற்காக வேதியியற் கூடமும் இத்துறையில் செயற்படுகின்றது.

9. இதுகாறும் இத்துறை 115-க்கும் மேற்பட்ட நூல்களை அச்சிட்டுள்ளது. அவற்றில் கல்வெட்டுத் தொகுதிகள் 17, இலக்கியச் சுவடிப் பதிப்புக்கள், 10, கோயில்கள், வரலாற்றுச் சின்னங்கள் பற்றிய ஆராய்ச்சி நூல்கள், சிறுவர் வரலாற்று நூல்கள், காலாண்டு இதழ் ''கல்வெட்டு'' ஆராய்ச்சி நூல்கள் என ஆங்கிலத்திலும், தமிழிலும் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்ட நூல்கள் 27, தமிழில் அச்சிடப்பட்ட நூல்கள் 71-ஆம் ஆகும். இத்துறையில் 8,000-க்கும் மேற்பட்ட நூல்களைக் கொண்ட சிறந்த நூலகமும் உள்ளது.

10. தற்போது இத்துறை இந்து சமய அறநிலையத் துறையோடு இணைந்து மேலும் சிறப்புறப் பணியாற்ற வழி வகைகளை மேற்கொண்டுள்ளது. இவ்வாண்டு நிருவாகப் பிரிவுகள் மேலும் சிறப்புறவும், வலிவுறவும் பணிகள் மேற் கொள்ளப்படுகின்றன. மேலும் படி எடுத்துள்ள கல்வெட்டுக்களைப் பழுதுறாமல் காக்கப் கல்வெட்டுப் பிரிவின் கிளை உதகையில் தோற்றுவிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இத்துறையின் வெள்ளி விழா இவ்வாண்டு சிறப்புற நடைபெற இருப்பதோடு அனைத்திந்தியக் கருத்தரங்கமும் நடத்த ஆவன செய்யப்படும்.

11. சென்னைப் பல்கலைக் கழக வளாகத்திலுள்ள ''கீழ்த் திசைச் சுவடிகள் நூலகத்தையும்'' தொல்பொருள் ஆய்வுத் துறையே நிருவகித்து வருகிறது. அந் நூலகத்திலுள்ள சிறந்த கையெழுத்துப் படிகளில் பயனுள்ளவற்றை அச்சிட்டு வெளியிடவும் இத்துறை ஆவன செய்யும்.

(VI) அருங்காட்சியகங்கள் துறை.

தொன்ம வடிவங்களையும் படிமங்களையும் அருங்கலைப் பொருள்களையும் அறிவியற் பொருண்மைகளையும் காட்சிப் பொருளாக அமைத்து ஒரு நாட்டின் கலை மரபைக் காத்து வரும் களஞ்சியமாகத் திகழும் தொன்மையான உலக அருங்காட்சியகங்களுள் சென்னையில் அமைந்த அரசு அருங்காட்சியகம் குறிக்கத் தக்கதாகும்.

2. நமது அருங்காட்சியகம் பல்வேறு அரங்கங்களைக் கொண்டது. விலங்கரங்கம், அஞ்சற்றலைப் பிரிவு, மரச் சிற்பக் கலைப் பிரிவு தாவரவியற் பிரிவு, ஆகியவை புது வடிவில் மாற்றியமைக்கப்படுகின்றன. பொருள் நிலைத் தாவரவியற் பிரிவு புது வடிவில் அமைக்கப்பட்டுப் பொது மக்களின் பார்வைக்கு விரைவில் வைக்கப்படவுள்ளது. குழந்தைகள காட்சியரங்கம், சிறுவர்களைக் கவரும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு இது திறக்கப்பட ஆவன செய்யப்படுகின்றது.



3. சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள பழஞ் சிறப்பு வாய்ந்த கலையரங்கம் பழுது பட்டிருப்பதைச் சீராக்க உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அரசு வழங்கிய 2.15 இலட்ச ரூபாய்க்கு மேல் செலவிட இக்குழு கருத்துரைத்துள்ளது. இந்த அடிப்படையில் விரைவில் சீராக்கப்பணிகள் இவ்வாண்டு தொடங்கப்படும்.

4. சென்னை அருங்காட்சியகத்தில் ''பண்பாட்டுப் பல கணி'' என்ற பெயரில் தமிழகத்தின் தலை சிறந்த கலைஞர்களாலும், அறிஞர் பெருமக்களாலும் கலை, மரபு, இலக்கியம் தொடர்பான காட்சியுரைகள் திங்கள் தோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிகழ்ச்சிகளைப் பதிவு செய்ய காணொலிக் கருவியும் வாங்கப்படவுள்ளது.

5. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அருங்காட்சியகம் அமைய வேண்டுமென்ற அரசின் கொள்கைக்கேற்ப சென்னை, புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய மாவட்டத் தலைமையகங்களில் அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெரியார், கோயம்புத்தூர், தென்னாற்காடு ஆகிய மூன்று மாவட்டத் தலைமையகங்களில் விரைவில் அருங்காட்சியகம் தோற்றுவிக்கப்படும். 1986–87 ஆம் நிதியாண்டில் நீலகிரி மாவட்டத்தின் தலைமையகமான உதகையில் மாவட்ட அருங்காட்சியகம் அமைக்க ஏற்பாடுகள் தொடங்கப்படவுள்ளன.

6. அருங்காட்சியகங்களின் வாயிலாகக் கல்வியறிவைப் பெருக்கிக் கொள்ளப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் பல்வேறு தலைப்புகளில் கண்காட்சிகளை நடத்தவும் அருங்காட்சியகம் உதவி வருகிறது. கல்வி நிலையங்களுக்கு உதவும் வகையில் அருங்காட்சியகங்களில் சிறப்புக் காட்சியுரைகள் அவ்வப்போது வல்லுநர்களால் நடத்தப்பெறுகின்றன. இப்பணி மேலும் வளம் பெற மாவட்ட அருங்காட்சியகங்களுக்கு ஒலி ஒளிக் கருவிகளும் வழங்கப்படவுள்ளன.

(vii) திருக்குறள் நெறிபரப்பு மையம்.

உலகப் பொதுமறையாம் திருக்குறளின் கருத்துக்களை மக்களிடமும் குறிப்பாக மாணவரிடமும் பரப்பும் அமைப்பாக திருக்குறள் நெறி பரப்பு மையம் அரசால் தோற்றுவிக்கப்பட்டது. இம்மையம் வாரந்தோறும் திருக்குறள் பயிற்சி வகுப்புகளை (சொற்பொழிவுகளை) வள்ளுவர் கோட்டத்தில் நடத்தி வருகிறது. குறட் பயிற்சி மூலம் பள்ளி மாணவர்களுக்கு உடற் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாவட்டக் கல்வி அலுவலர்களின் துணையோடு திருக்குறள் பரப்பும் பணியைத் தமிழகத்தின் அனைத்துக் கல்வி நிலையங்களிலும் பரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாடளாவிய திருக்குறள்

ஆர்வலர்களின் மாநில மாநாடு வள்ளுவர் கோட்டத்தில் 18-8-1985 அன்று நடத்தப் பெற்றது. திருக்குறள் நெறி பரப்பும் பிற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு சீரான முறையில் இப்பணியைச் செம்மைப் படுத்தவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. திருக்குறள் புலமையாளர்களும் திருக்குறள் நெறி பரப்பும் பணியில் தலைநின்று நிலையான நற்பணியாற்றி வருபவர்களும் ஆண்டு தோறும் நடைபெறும் திருக்குறள் மாநில மாநாட்டில் சிறப்பிக்கப்படவுள்ளனர். இம்மாநாடு தமிழகத்தின் மாவட்டங்களில் சுழற்சி முறையில் நடத்தப் பெறும். மாநாட்டில் சிறந்த திருக்குறள் நெறி பரப்பும் பணியாற்றிய அறிஞர்களுக்கு ''திருக்குறள் நெறித் தோன்றல்'' என்ற விருது வழங்கப்படும்.

(viii) தமிழ்நாடு இயலிசை நாடக மன்றம்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், மத்திய சங்கீத நாடக அகாதமியின் நோக்கங்களை மாநில அளவில் செயற்படுத்தும் கலை நிறுவனமாகும். இயல், இசை, நாடகம், நாட்டியம், நாட்டுப்புற கலைகள் ஆகியவற்றை நமது மாநிலப் பண்பாட்டு மரபுப் போக்கில் இம்மன்றம் கலை வடிவங்களைப் போற்றி வளர்த்து வருகிறது.

2. இந்திய மாநிலங்களிடையே பண்பாட்டுக் கொள்கொடைத் திட்டம்; வறுமையில் வாடும் நலிந்த கலைஞர்களிடமிருந்து ஓய்வூதியம் கோரி வரும் விண்ணப்பங்களை ஆய்ந்து பரிந்துரை செய்தல்; தமிழகத்தில் இயங்கும் கலை மன்றங்களின் மூலம் தகுதி வாய்ந்த இளைஞர்களுக்குக் கலை நிகழ்ச்சிகளை நடத்த வாய்ப்பளித்தல்; சிறந்த கலைஞர்களின் கலைகளையும், நாட்டிய நாடகங்களையும் ஊக்கவும், உருவாக்கவும் மானியம் வழங்கல்; சிறந்த கலை நூல்களை அச்சிட்டு வெளியிட மானியம் வழங்கல்; இயல், இசை, நாடகம், நாட்டியம், நாட்டுப்புறக் கலைகள் ஆகிய துறைகளில் சிறப்பாக கலைப் பணியாற்றிய பெருமக்களுக்குக் ''கலைமாமணி'' விருது வழங்கல்; இசை, நாடக மேதைகளின் நினைவைப் போற்றும் விழாக்களை நடத்துதல் ஆகிய கலைப் பணிகளை இம்மன்றம் ஆற்றி வருகிறது. இதுவரை 662 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. 124 கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்கப்பட்டுள்ளது. இளங் கலைஞர்களை ஊக்குவிக்கும் திட்டத்தில் 300 கலைஞர்கள் பயனடைந்துள்ளனர். தமிழகத்தில் தலைசிறந்த கலைஞர்கள் 33 பேர் அரசு கலைஞர்களாக அமர்த்தப்பட்டுச் சிறப்பிக்கப் பட்டுள்ளனர். 1985-86ஆம் ஆண்டில் கலைக் குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தின்படி திரிபுரா மாநிலமும், சண்டிகார் மாநிலமும் தமிழகத்திற்குக் கலைக் குழுக்களை அனுப்பியிருந்தன. தமிழகத்திலிருந்து கலைக் குழுக்கள் கருநாடக மாநிலத்திற்கும், இராஜஸ்தான் மாநிலத்திற்கும் அனுப்பப்பட்டன.



3. வறுமையில் துயருறும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்படி இதுகாறும் 1,816 கலைஞர்கள் நிதியுதவி பெற்றுள்ளனர். மேலும் 200 கலைஞர்களுக்கு இந்நிதியாண்டில் ஓய்வூதியம் வழங்கப்படும்.

(ix) இசைக் கல்லூரிகள்.

சென்னையிலும், மதுரையிலும் உள்ள அரசு இசைக் கல்லூரிகள் தொடர்ந்து மாணவர்களைக் குரலிசை, கருவியிசை, இசையியல், ஆடற் பயிற்சி முதலிய கலைத் துறைகளில் பயிற்றுவித்து வருகின்றன. மாலை நேர வகுப்புகளில் பயிலுவதற்கு மாணவரிடையே பேரார்வம் நிலவுகிறது. கோவையில் புதிய இசைக் கல்லூரி தொடங்க 1985-86-ல் ஏற்பளிக்கப்பட்டது. சென்னை இசைக் கல்லூரியில் புதியதாக ஒரு நூலகம் அமைக்கப்படவுள்ளது. கல்விப் பயிற்சிக்கு உரமூட்டப் புத்தாக்க முறையில் ஒலி ஒளிக் கருவிகள் வழங்கவும் கருதப்பட்டுள்ளது. இசைக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை ரூபாய் அறுபதிலிருந்து ரூபாய் நூறாக உயர்த்தப்பட்டுள்ளது. அரசு இசைக் கல்லூரிகளில் 600 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர். மதுரையில் அமைந்துள்ள அரசு இசைக் கல்லூரிக்கு ரூ. 35 இலட்ச மதிப்பீட்டில் கட்டிடம் கட்டித் தரப்படும். சென்னை இசைக் கல்லூரிக்கு இயக்குநர் முதல்வரைத் தலைவராகக் கொண்ட நிலையும் எஞ்சிய இசைக் கல்லூரிகளுக்கு மதிப்புறு இயக்குநர் அமைந்த நிலையும் உருவாக்கப்பட்டுள்ளன. மாணவ மாணவியர் தாமே இசை நிகழ்ச்சிகள் நடத்துவதோடு நிறுவன நிகழ்ச்சிகளில் பங்கேற்றுப் பரிசுகள் பல பெற்றுள்ளனர்.

(x) சவகர் சிறுவர் இல்லம்.

இந்நிறுவனம் 1979ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மறைந்த பிரதமர் சவகர்லால் நேரு நினைவு நிதியிலிருந்து மைய அரசு அளித்த தொகை ரூபாய் 15.73 இலட்சத்தைக் கொண்டு இந்நிறுவனம் இயங்கி வருகிறது. இது போன்ற சிறுவர் இல்லங்களைத் தமிழ்நாட்டிலுள்ள 12 மாவட்டங்களில் ஏற்படுத்துவதற்கான கருத்துருக்கள் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

2. சவகர் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த பள்ளி மாணவ மாணவியர் அசாம் மாநிலத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான நாடகப் போட்டியில் முதல் பரிசைப் பெற்றுள்ளனர். குடியரசு நாள் அணிவகுப்பு நிகழ்ச்சியில் சவகர் சிறுவர் இல்லம் தொடர்ந்து பரிசுகளைப் பெற்று வருகிறது. கல்கத்தா, தில்லி ஆகிய இடங்களில் நடைபெற்ற சிறப்புப் பயிற்சி உலாமனைகளுக்கு இந்நிறுவனத்தைச் சார்ந்த சிறுவர் சென்று வந்தனர். முதலாவது தேசியச் சிறுவர் மாநாடு சென்னையில் நடைபெற்றது. இந்தி

யாவில் பல்வேறு மாநிலங்களிலிருந்து சவகர் சிறுவர் இல்லச் சிறார் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். பள்ளிச் சிறுவர்களுக்கு ஏட்டுக் கல்வியோடு கலையாற்றல்களை வளர்க்கும் நோக்கோடு பல்வேறு வகையான செயல்முறைத் திட்டங்களையும் பயிற்சிகளையும் இந்நிறுவனம் வழங்குகிறது. படைப்புக் கலைகள், ஓவியம், சிற்பம் போன்ற நுண்கலைகள்; நடனம், நாடகம், இசை போன்ற கவின் கலைகளில் இயல்பாகப் படிந்துள்ள திறன்களை வெளிக் கொணரும் வகையில் இந்நிறுவனம் சிறுவர்களுக்கு ஊக்கமளித்து வருகிறது. அறிவியலில், இலக்கியம், பொது அறிவு ஆகிய துறைகளிலும் முறையான கலை, விளையாட்டுப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

(xi) தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு.

கைவினைக் கலைமன்றமாகிய ஓவிய நுண்கலைக் குழு, ஓவியம், சிற்பம் முதலிய கைவினைகளின் வளர்ச்சிக்காக, ஆண்டுதோறும் பின்வரும் திட்டங்களைச் செயற்படுத்துகிறது :—

(1) ஆண்டுதோறும் ஓவிய, சிற்பக் கலைஞர்களின் கலைப் படைப்புக்களைக் காட்சியாக அமைத்து சிறந்து விளங்கும் 5 கலைப் படைப்புக்களை உருவாக்கும் மூத்த கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் 5,000 ரூபாய் பரிசுத் தொகை வழங்குதல், கலைப்படைப்புக்களை உருவாக்கும் இளங் கலைஞர்கள் ஐவருக்கு ஒவ்வொருவருக்கும் 2,000 ரூபாய் பரிசுத் தொகை வழங்குதல்.

(2) தலைசிறந்த கலைஞர்கள் இருவர்க்கும், கலைத் திறனாய்வாளர் ஒருவருக்குமாக, ஓவிய, சிற்ப வளர்ச்சிக்காகச் செய்த தொண்டினைப் பாராட்டும் வகையில் '' கலைச் செம்மல்'' என்னும் விருது வழங்கி, பரிசுத் தொகை அளித்தல்.

(3) சென்னை, கும்பகோணம், மாமல்லபுரம் ஆகிய இடங்களிலுள்ள அரசு கலைக் கல்லூரிகளிற் பயிலும் இளங் கலைஞர்களுக்கு ஓவிய/சிற்பக் கலைகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் செய்வதற்காகவும், இராஜஸ்தானிலுள்ள '' பனஸ்தாலி '' போன்ற இடங்களுக்குச் சென்று, ஓவிய, சிற்பக் கலைகளில் சிறப்புப் பயிற்சி எய்துவதற்காகவும் மானிய உதவி வழங்குதல்.

(4) தமியர் கண்காட்சி நடத்த தக்க வகையில் உதவி வழங்குதல்.

(5) பல்வேறு மாவட்டங்களிலுள்ள கலை நிறுவனங்கள் கலை வளர்ச்சிக்காகச் செயற்படுத்தும் திட்டங்களுக்கு உதவித் தொகை வழங்குதல்.



(6) ஓவிய, சிற்பக் கலைஞர்களை ஊக்கும் வகையில் கலைப் படைப்புக்களை வாங்கி அவற்றை சென்னையில் அரசு அருங்காட்சியகத்தில் அமைந்துள்ள '' வளர் கலைக் கூடம்'' போன்ற கூடங்களில் மக்களின் பார்வைக்காக வனப்புற வைக்க ஏற்பாடு செய்தல்.

(7) சிறந்த ஓவிய, சிற்பக் கலைகளைப் பற்றிய கருத்தரங்கு நடத்த ஏற்பாடு செய்தல்.

(8) தமிழ்நாட்டின் சிறந்த ஓவியக் கலைஞர்களின் ஓவியங்களைக் கொண்ட அஞ்சலட்டைகளை அச்சிடுதல்.

(9) ஓவிய, சிற்பக் கலைகளின் இன்றைய வளர்ச்சி பற்றியும் தமிழ்நாட்டுக் கலைஞர்கள்—தமிழ்நாட்டின் பண்பாடு—மேம்பாடு ஆகியவற்றை விளக்கும் கட்டுரைகள் கொண்ட, '' நுண்கலை '' என்னும் இருமொழிக் கலையிதழை ஆண்டிற்கு இருமுறை வெளியிடுதல்.

2. 1986–87 ஆம் ஆண்டில் மேற்கூறிய திட்டங்களுடன், பின்வரும் கலைப்பணிகளையும், ஓவிய நுண்கலைக்குழு செயற்படுத்தக் கருதுகிறது.

உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சித் திட்டம் :

3. தமிழ்நாட்டின் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்களிடையே நுண்கலை உணர்வைப் பேணி வளர்க்கவும், புதிய அணுகுமுறை நுணுக்கங்களைக் கற்பிக்கவும் உதவும் வகையில் பள்ளிகளில், பணிபுரியும் கலையாசிரியர்களுக்கும் சிறப்புப் பயிற்சித் திட்டத்தினைக் கல்வியாராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து, தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு மாவட்டந்தோறும் நடத்தி வருகிறது. குறிப்பாகத் திருநெல்வேலி, வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் இவ்வாண்டு இத்திட்டத்தினை நடத்த உள்ளது.

4. மேலும், ஓவியம், சிற்பம் முதலிய கலைகள்—கலைப் பணியில் ஆர்வங்காட்டும் கலைஞர்கள்—கலைப் படைப்புக்கள்—இன்றைய கலைச்சூழல் ஆகியவற்றைப் பற்றிய நல்லறிவை மக்களிடையே பரப்புவதற்காக மாவட்டந்தோறும் சிறந்த ஓவியச் சிற்பக் கலைஞர்களைக் கொண்டு செயல் விளக்கம் அளிக்கவும், உரைப் பொழிவுகள் நடத்தவும் ஓவிய நுண்கலைக் குழு உரிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

மாநிலங்களுக்கிடையே கலைக் காட்சி நடத்துதல் :

5. மாநிலங்களுக்கிடையே கலைக் காட்சி நடத்தும் திட்டத்தின்படி, தமிழ்நாட்டுக் கலைஞர்களின் கலைப் படைப்புக்களை பிற மாநிலங்களிலும், பிற மாநிலக் கலைஞர்களின் கலைப் படைப்புக்களைத் தமிழ்நாட்டிலும் காட்சியாக வைப்பதற்கும்,

பல்வேறு மாநிலங்களிலுள்ள கலைஞர்களிடையே கருத்துப் பரிமாற்றம செய்து கொள்ளவும், ஓவிய நுண்கலைக் குழு செயற்பட்டு வருகிறது. இவ்வாண்டு, புதுதில்லியில் நடககவிருக்கும தேசியக் கலை விழாவில் தமிழ்நாட்டுக் கலைஞர்களின் கலைப் படைப்புக்களைக் காட்சியாக வைக்கவும் ஏற்பாடுகள் செய்யப் படவுள்ளன.

சிற்பக் கலைஞர் பயில்களம் :

6. ஊமய லலித கலா அகாதமியுடன் இணைந்து, மரபு வழிப்பட்ட சிற்பக் கலைஞர்களைக் கொண்டு, கலைஞர் பயில் களம் நடத்த ஓவிய நுண்கலைக்குழு ஏற்பாடு செய்யவுள்ளது. மரபு வழிப்பட்ட சிற்பங்கள் உருவாக்கும் கலைஞர்களுடன் புத்தாக்கப்பாங்கில் சிற்பங்கள் உருவாக்கும் கலைஞர்களும் இந்த உலாமனையில் (முகாமில்) பங்குபெறவிருக்கின்றனர்.

காணொலிப் பதிவு:

7. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு நடத்தி வரும் கலையாசிரியர்களுக்கான பயிற்சித் திட்டங்கள், செயல்விளக்கப் பொழிவுகள் ஆகியவற்றில் பங்குபெறும் பள்ளியாசிரியர்கள், பொது மக்கள் ஆகியோர்க்குப் பயன்தரும் வகையில், தமிழ்நாட்டின் தலைசிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களைப் பற்றிய காணொலிப் பதிவு செய்யவும், கலை வித்தகர்களைப் பற்றிய நூல்களைத் தமிழில் வெளிக் கொணரவும் திட்டமிட்டுள்ளது.

8. இவ்வாறு தமிழ் வளர்ச்சி, கலை, பண்பாடு, மேம்பாடுகளைக் கருத்திற்கொண்டு இத்துறைகள் தத்தம் பணிகளை முறையாக நடத்தி வருகின்றன.



பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்.

| (1) | 1973–74 (2) | 1976–77 (3) | 1979–80 (4) | 1984–85 (5) | 1985–86 (6) |
|---|---|---|---|---|---|
| | | | (மாணவர்கள் இலட்சத்தில்.) | | |
| **அ. வெவ்வேறு வயதுத் தொகுதி சிறார் மொத்த எண்ணிக்கை—** | | | | | |
| வயதுத் தொகுதி 6—11 | | | | | |
| சிறுவர் .. .. .. | 30.45 | 31.93 | 33.27 | 36.11 | 36.39 |
| சிறுமியர் .. .. | 29.79 | 31.23 | 32.54 | 35.28 | 35.54 |
| மொத்தம் .. | 60.24 | 63.16 | 65.81 | 71.39 | 71.93 |
| வயதுத் தொகுதி 11—14 | | | | | |
| சிறுவர் .. .. .. | 13.71 | 14.37 | 14.97 | 16.25 | 16.37 |
| சிறுமியர் .. .. | 13.40 | 14.05 | 14.64 | 15.88 | 16.00 |
| மொத்தம் | 27.11 | 28.42 | 29.61 | 32.13 | 32.37 |

வயதுத் தொகுதி 14—17/14—16 (1979-80-லிருந்து)—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிறுவர் .. .. .. | 11.31 | 11.86 | 8.36 | 9.08 | 9.15 |
| சிறுமியர் .. .. .. | 11.07 | 11.60 | 8.15 | 8.87 | 8.94 |
| மொத்தம் .. | 22.38 | 23.46 | 16.51 | 17.95* | 18.09 |

* 1984–85-ல் பல்வேறு வயதுத் தொகுதியினர் எண்ணிக்கை பின்வருமாறு கணக்கிடப்பட்டது—அதாவது 1981 சென்சஸ்படி தமிழக மொத்த மக்கள் தொகையை எடுத்துக்கொண்டு, அந்தந்த வயதுத் தொகுதியினர் 1971 சென்சஸ்-இல் எத்தனை சதவீதம் இருந்தனரோ அதே சதவீதம் 1981 லும் இருந்திருக்கலாம் என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதாகும்.

**ஆ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை—**

வயதுத் தொகுதி 6—11—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **சிறுவர்** .. .. .. | 30.64 | 32.02 | 34.34 | 38.11 | 38.90 |
| **சிறுமியர்** .. .. .. | 23.74 | 25.50 | 27.94 | 32.33 | 33.03 |
| **மொத்தம்** .. | 54.38 | 57.52 | 62.28 | 70.44 | 71.93 |



வயதுத் தொகுதி 11—14—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிறுவர் .. .. .. | 9,10 | 9.74 | 11.02 | 13.95 | 14.69 |
| சிறுமியர் .. .. .. | 5.09 | 5.76 | 6.65 | 9.24 | 9.98 |
| மொத்தம் .. | 14.19 | 15.50 | 17.67 | 23.19 | 24.67 |

வயதுத் தொகுதி 14—17/14—16 (1979–80–லிருந்து)—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிறுவர் ... ... ... | 4.97 | 5.34 | 4.20 | 5.42 | 5.72 |
| சிறுமியர் .. .. ... | 2.42 | 2.68 | 2.14 | 3.10 | 3.44 |
| மொத்தம் .. | 7.39 | 8.02 | 6.34 | 8.52 | 9.16 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| **இ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் சதவீதம்—** | | | | | |
| | | | (விழுக்காடுகள்) | | |
| வயதுத் தொகுதி 6—11— | | | | | |
| சிறுவர் .. .. .. | 100.6 | 100.3 | 103.21 | 105.52 | 106.91 |
| சிறுமியர் .. .. .. | 79.6 | 81.7 | 85.87 | 91.64 | 92.94 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 90.2 | 91.7 | 94.64 | 98.66 | 100.00 |
| வயதுத் தொகுதி 11—14— | | | | | |
| சிறுவர் .. .. .. | 66.3 | 67.3 | 73.60 | 85.82 | 89·74 |
| சிறுமியர் .. .. .. | 37.9 | 41.0 | 45.44 | 58.21 | 62.38 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 52.3 | 54.4 | 59.68 | 72.18 | 76.21 |
| வயதுத் தொகுதி 14—17/14–16 (1979–80 லிருந்து)— | | | | | |
| சிறுவர் .. .. .. | 43.0 | 44.9 | 50.2 | 59.69 | 62.50 |
| சிறுமியர் .. .. .. | 21.8 | 23.1 | 26.4 | 34.93 | 38.48 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 33.0 | 34.1 | 38.44 | 47.45 | 50.64 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ஈ. பள்ளிகளின் எண்ணிக்கை—** | | | | | |
| முதல் நிலைப் பள்ளிகள் .. | 26,726 | 27,306 | 27,662 | 28,847 | 29,118 |
| நடுநிலைப் பள்ளிகள் .. .. | 5,773 | 5,730 | 5,685 | 5,691 | 5,691 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 2,823 | 3,020 | 2,088 | 2,476 | 2,569 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | .. | 1,138 | 1,474 | 1,554 |
| மொத்தம் .. | 35,322 | 36,056 | 56,573 | 38,488 | 38,932 |

மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் எண்ணிக்கை, மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர்—மாணவர் விகிதம் போன்ற வகையில் பின்தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் உயர்நிலைப்பள்ளி வகுப்புகளில் (10 ஆம் வகுப்பும் கீழும்) அப்பள்ளிகளில் பயின்று வந்த மாணவர்கள் பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஆகியோரையும் உள்ளடக்கியவையாகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை :—** | | | | | |
| முதல்நிலைப் பள்ளிகள் .. | 1,06,332 | 1,11,033 | 1,12,535 | 1,16,305 | 1,16,625 |
| நடுநிலைப் பள்ளிகள் .. .. | 66,843 | 67,846 | 66,568 | 66,849 | 66,919 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 65,959 | 72,838 | 34,102 | 38,328 | 39,978 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | .. | 45,257 | 62,932 | 64,347 |
| மொத்தம் .. | 2,39,134 | 2,51,717 | 2,58,462 | 2,84,414 | 2,87,869 |

| (1) | 1973–74 (2) | 1976–77 (3) | 1979–80 (4) | 1984–85 (5) | 1985–86 (6) |
|---|---|---|---|---|---|
| **உஎ. சராசரி ஒரு ஆசிரியருக்கு மாணவர் எண்ணிக்கை :** | | | | | |
| (1) பள்ளி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும் ஆசிரியர் தொகையில் சேர்த்து)— | | | | | |
| முதல்நிலைப் பள்ளிகள் ... ... ... | 35 | 36 | 39 | 42 | 43 |
| நடுநிலைப் பள்ளிகள் ... ... ... | 33 | 33 | 37 | 42 | 43 |
| உயர்நிலைப் பள்ளிகள் ... ... | 24 | 24 | 23 | 28 | 28 |
| மேல்நிலைப் பள்ளிகள் ... ... ... | ... | .. | 28 | 28 | 29 |
| (2) வகுப்புத் தொகுதிவாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும், ஆசிரியர் தொகுதியில் சேர்த்து)— | | | | | |
| முதல்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி .. ... .. .. | 37 | 36 | 38 | 41 | 42 |
| நடுநிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி .. .. .. .. | 33 | 33 | 32 | 36 | 38 |
| உயர்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி ... .. .. .. | 29 | 30 | 26 | 26 | 27 |
| மேல்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி ... ... ... ... | ... | ... | 22 | 21 | 22 |



1985–86-இல் (1985 அக்டோபர் மாதம் 1 ஆம் நாள் நிலவரப்படி) தமிழ்நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் குறித்த புள்ளி விவரங்கள்.

| பள்ளிகளின் வகைகள். (1) | | பள்ளிகளின் எண்ணிக்கை. (2) | மாணவர்கள் (இலட்சத்தில்) (3) | ஆசிரியர்கள். (4) |
|---|---|---|---|---|
| முதல் நிலைப் பள்ளிகள்— | | | | |
| அரசு .. .. .. .. | 1,441 | | | |
| நகராட்சி .. .. .. | 1,135 | | | |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | 21,487 | 29,118 | 50.43 | 1,16,625 |
| தனியார் .. .. .. .. | 5,055 | | | |
| நடுநிலைப் பள்ளிகள்— | | | | |
| அரசு .. .. .. .. | 248 | | | |
| நகராட்சி .. .. .. | 412 | | | |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | 3,081 | 5,691 | 28.95 | 66,919 |
| தனியார் .. .. .. | 1,950 | | | |
| மொத்த தொடக்கப் பள்ளிகள் .. | | 34,809 | 79.38 | 1,83,544 |

| பள்ளிகளின் வகைகள். (1) | | பள்ளிகளின் எண்ணிக்கை. (2) | மாணவர்கள் (இலட்சத்தில்). (3) | ஆசிரியர்கள். (3) |
|---|---|---|---|---|
| உயர்நிலைப் பள்ளிகள்— சாதாரணம்— | | | | |
| அரசு .. .. .. .. | 1,723 | | | |
| நகராட்சி .. .. .. | 80 | 2,258 | 10.10 | 33,837 |
| தனியார்.. .. .. .. | 455 | | | |
| ஆங்கிலோ-இந்தியன் .. .. | .. | 13 | 0.10 | 295 |
| மெட்ரிகுலேசன் .. .. | .. | 212 | 0.73 | 3,497 |
| சி. பி. எஸ். ஈ. முதலியன .. | ... | 86 | 0.44 | 2,349 |
| மொத்த உயர்நிலைப் பள்ளிகள் | .. | 2,569 | 11.37 | 39,978 |
| மேல்நிலைப் பள்ளிகள்— சாதாரணம்— | | | | |
| அரசு .. .. .. .. | 67 | | | |
| அரசு (தொழில் நுட்பம்) .. | 14 | 1,380 | 16.54 | 57,203 |
| நகராட்சி .. .. .. | 62 | | | |
| தனியார்.. .. .. .. | 625 | | | |
| ஆங்கிலோ-இந்தியன் .. .. | ... | 28 | 0.35 | 1,009 |
| மெட்ரிகுலேசன் .. .. | .. | 79 | 0.84 | 2,805 |
| சி. பி. எஸ். ஈ. போன்ற பள்ளிகள் | .. | 67 | 0.77 | 3,330 |
| மொத்தம் மேல்நிலைப் பள்ளிகள் | .. | 1,554 | 18.50 | 64,347 |
| மொத்தம் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | 4,123 | 29.87 | 1,04,325 |
| மொத்தம் (அனைத்துப் பள்ளிகளும் சேர்த்து) .. | .. | 38,932 | 109.25 | 2,87,869 |

மாணவர் 61.38 இலட்சம்.

மாணவியர் 47.87 இலட்சம்.

நிருவாக வாரியாக 1985–86 ஆம் ஆண்டில் இருந்த பள்ளி ஆசிரியர்களின் விவரங்கள் :

| | அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்கள். | | | | | ஆசிரியர் விவரங்கள். | |
|---|---|---|---|---|---|---|---|
| | அரசுப் பள்ளிகள். | ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள். | நகராட்சி. | தனியார். | மொத்தம். | ஆண். | பெண். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| தொடக்கப் பள்ளிகள். | 7,405 | 69,975 | 9,407 | 29,838 | 1,16,625 | 71,761 | 44,864 |
| நடுநிலைப் பள்ளிகள். | 3,382 | 27,851 | 6,991 | 28,695 | 66,919 | 34,334 | 32,585 |
| உயர்நிலைப் பள்ளிகள். | 24,318 | .. | 1,574 | 14,086 | 39,978 | 24,227 | 15,751 |
| மேல்நிலைப் பள்ளிகள். | 27,319 | .. | 3,351 | 33,677 | 64,347 | 39,665 | 24,682 |
| மொத்தம் .. | 62,424 | 97,826 | 21,323 | 1,06,296 | 2,87,869 | 1,69,987 | 1,17,882 |



1985–86 ல் பள்ளிகளில் படித்து வந்த மாணவ மாணவியர் எண்ணிக்கை—வகுப்பு வாரியாக.

| | வகுப்புகள். | மேல்நிலைப் பள்ளிகள். | உயர்நிலைப் பள்ளிகள். | நடுநிலைப் பள்ளிகள். | தொடக்கப் பள்ளிகள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (இலட்சக் கணக்கில் மாணவர்கள்.) | | | | |
| 1—5 | மாணவர் .. | 56 | 61 | 10.43 | 27.30 | 38.90 |
| | மாணவியர் .. | 56 | 54 | 8.80 | 23.13 | 33.03 |
| | மொத்தம் .. | 1.12 | 1.15 | 19.23 | 50.43 | 71.93 |
| 6—8 | மாணவர் .. | 5.12 | 3.86 | 5.71 | .. | 14.69 |
| | மாணவியர் .. | 3.13 | 2.84 | 4.01 | .. | 9.98 |
| | மொத்தம் .. | 8.25 | 6.70 | 9.72 | .. | 24.67 |
| 9—10 | மாணவர் .. | 3.61 | 2.11 | .. | .. | 5.72 |
| | மாணவியர் .. | 2.03 | 1.41 | .. | .. | 3.44 |
| | மொத்தம் .. | 5.64 | 3.52 | .. | .. | 9.16 |

| வகுப்புகள். (1) | | மேல்நிலைப் பள்ளிகள். (2) | உயர்நிலைப் பள்ளிகள். (3) | நடுநிலைப் பள்ளிகள். (4) | தொடக்கப் பள்ளிகள். (5) | மொத்தம். (6) |
|---|---|---|---|---|---|---|
| | | (இலட்சக் கணக்கில் மாணவர்கள்.) | | | | |
| 11—12 | மாணவர் .. .. | 2.07 | .. | .. | .. | 2.07 |
| | மாணவியர் .. | 1.42 | .. | .. | .. | 1.42 |
| | மொத்தம் .. | 3.49 | .. | .. | .. | 3.49 |
| 1—12 | மாணவர் .. .. | 11.36 | 6.58 | 16.14 | 27.30 | 61.38 |
| | மாணவியர் .. | 7.14 | 4.79 | 12.81 | 23.13 | 47.87 |
| | மொத்தம் .. | 18.50 | 11.37 | 28.95 | 50.43 | 109.25 |

**வகுப்புத் தொகுதி வாரியாக பள்ளி ஆசிரியர் எண்ணிக்கை :**

| வகுப்புகள். (1) | ஆசிரியர் எண்ணிக்கை. ஆசிரியர். (2) | ஆசிரியை. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| 1—5 .. .. | 92,233 | 68,000 | 1,60,233 |
| 6—8 .. .. | 40,800 | 29,866 | 70,666 |
| 9—10 .. .. | 23,000 | 13,506 | 36506 |
| 11—12 .. .. | 13,000 | 7,464 | 20464 |
| | 1,69,033 | 1,18,836 | 2,37,869 |



**கல்லூரிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.**

| விவரங்கள். (1) | 1979–80. (2) | 1984–85. (3) | 1985–86. (4) |
|---|---|---|---|
| 1. மொத்த மாணவர் எண்ணிக்கை— | | | |
| (1) பி.ஏ. .. .. .. .. .. | 47,872 | 61,802 | 60,208 |
| (2) பி.எஸ்.சி. .. .. .. .. | 56,847 | 82,596 | 81,949 |
| (3) பி.காம். .. .. .. .. | 21,744 | 32,028 | 33,559 |
| (4) பட்ட மேற்படிப்பு .. .. .. | 9,263 | 15,635 | 16,858 |
| மொத்தம் .. | 1,35,726 | 1,92,061 | 1,92,574 |
| 2. ஆசிரியர்களின் எண்ணிக்கை— | | | |
| (1) அரசுக் கல்லூரிகள் .. .. .. | 3,752 | 4,347 | 4,497 |
| (2) தனியார் கல்லூரிகள் .. .. .. | 8,438 | 9,540 | 9,829 |
| மொத்தம் .. | 12,190 | 13,887 | 14,326 |
| கல்லூரிகள் எண்ணிக்கை— | | | |
| (1) அரசு .. .. .. .. .. | 51 | 53 | 54 |
| (2) தனியார் (மானியம் பெறுபவை) .. | 136 | 134 | 133 |
| (3) தனியார் (மானியம் பெறாதவை) .. | .. | 6 | 8 |
| மொத்தம் .. | 187 | 193 | 195 |

பிற கல்லூரிகளுக்கான 1985–86 ஆம் ஆண்டு விவரங்கள்.

| (1) | கல்லூரிகளின் எண்ணிக்கை. அரசு. (2) | கல்லூரிகளின் எண்ணிக்கை. தனியார். (3) | மாணவர் எண்ணிக்கை. (4) | ஆசிரியர்களின் எண்ணிக்கை. (5) |
|---|---|---|---|---|
| (1) கல்வியியற் கல்லூரிகள் .. .. .. | 7 | 15 | 2,868 | 235 |
| (2) உடற்பயிற்சிக் கல்லூரிகள் .. .. | .. | 3 | 292 | 26 |
| (3) புலவர் கல்லூரிகள் .. .. .. | .. | 15 | 1,390 | 171 |
| (4) சமுதாயப் பணிப் பள்ளி .. .. .. | .. | 2 | 225 | 19 |
| (5) கிராமப்புற உயர் கல்வி நிலையம் .. | .. | 1 | 641 | 83 |
| மொத்தம் .. | 7 | 36 | 5,416 | 534 |



தொழில் நுட்பக் கல்வி.

| (1) | 1973-74. (2) | 1976-77. (3) | 1979-80. (4) | 1984-85. (5) | 1985-86. (6) |
|---|---|---|---|---|---|
| (அ) கலவி நிலையங்களின் எண்ணிக்கை.— | | | | | |
| 1. பொறியியல் கல்லூரிகள் — | | | | | |
| (1) அரசு .. .. .. | 4 | 4 | 3 | 4 | 4 |
| (2) தனியார் .. .. | 3 | 3 | 3 | 3 | 3 |
| (3) சுயநிதி நிறுவனம் .. | .. | .. | .. | 17 | 23 |
| (4) தன்னுரிமையுள்ளவை .. | 5 | 5 | 7 | 7 | 7 |
| மொத்தம் .. | 12 | 12 | 13 | 31 | 37 |
| 2. பாலிடெக்னிக்குகளும், சிறப்புப் பட்டயப் படிப்பு நிலையங்களும்— | | | | | |
| (1) அரசு .. .. | 19 | 19 | 20 | 23 | 23 |
| (2) தனியார் .. .. | 18 | 19 | 19 | 35 | 35 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| (3) சுயநிதி நிறுவனம் .. | .. | .. | .. | 53 | 71 |
| (4) தன்னுரிமையுள்ளவை | 1 | 1 | 1 | 1 | 1 |
| மொத்தம் .. | 38 | 39 | 40 | 112 | 130 |
| 3. தொழிற்பாட மேல் நிலைப் பள்ளிகள்— | | | | | |
| (1) அரசு .. .. .. | 11 | 11 | 11 | 11 | 11 |
| (2) தனியார் .. .. | 3 | 3 | 3 | 3 | 3 |
| மொத்தம் .. | 14 | 14 | 14 | 14 | 14 |
| (ஆ) பயின்ற மொத்த மாணவர் எண்ணிக்கை —* | | | | | |
| (1) பொறியியற் கல்லூரிகள். | 6,796 | 7,885 | 13,084 | 16,295 | 20,435 |
| (2) பாலிடெக்னிக்குகள் .. | 10,591 | 14,131 | 16,560 | 39,215 | 51,995 |
| (3) தொழிற்பாட மேல்நிலைப் பள்ளிகள். | 1,704 | 2,166 | 1,977 | 1,560 | 1,320 |
| மொத்தம் .. | 19,091 | 24,182 | 31,621 | 57,070 | 73,750 |

* தன்னுரிமையுள்ள கல்வி நிறுவனங்களைத் தவிர்த்து.



## இணைப்பு II.

(80—ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

முகப்புரை :

1958 ஆம் ஆண்டில் அறிவியல் கொள்கையைப் பின்பற்றுவது தொடர்பாக தீர்மானத்தை இந்தியா நிறைவேற்றியது. அறிவியல் கல்வி பயிற்சியை மேம்படுத்துவதும் எல்லா வகையிலும் படிப்பிலும் செய்முறையிலும் அறிவியல் ஆராய்ச்சியை தொடருவதும், ''அறிவியல் அறிவைப் பெற்று பயன்படுத்துவதிலிருந்து கிடைக்கக்கூடிய பயன்கள் அனைத்தும் நாட்டு மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும்'' என்ற கொள்கையின் அடிப்படையில் செயல்படுவதன் மூலம் அறிவியல் வல்லுநர்களுக்குக் கௌரவமான நிலையை அளிப்பதும் இதன் நோக்கமாகும். இதன் பயனாக, நாட்டில் சிறந்த அறிவியல் வல்லுநர்கள் பலர் உருவாயினர். மேலும், நாட்டிலுள்ள அறிவியல் கல்வி நிறுவனங்களிலும் ஆராய்ச்சி–வளர்ச்சி ஆய்வுக் கூடங்களிலும் பெரும் முன்னேற்றம் காணப்பட்டது. 1983 ஆம் ஆண்டு தொழில் நுட்பவியல் கொள்கை அறிக்கையில் இப்பிரச்சினை இடம் பெற்றது. ''தொழில்நுட்பவியலில் தன்னைத் தானே சார்ந்து இருக்கும் நிலையை அடைதல், வறிய நிலையிலுள்ள மக்களின் நிலையில் கண்கூடான முன்னேற்றம், பின்தங்கிய பகுதியின் விரைவான முன்னேற்றம்'' ஆகியவை நாட்டின் இன்றைய அத்தியாவசியத் தேவையென அந்த அறிக்கை விளக்குகிறது.

முன்னுரிமை தொழில் நுட்ப அறிவைப் பெருக்குதல் ஆகியவை தொடர்பான இதன் நெறிமுறைகள் அனைத்திந்திய அளவில் பின்பற்றப்படுகின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள மக்களின் சுற்றுப்புறச் சூழல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, தொழில் நுட்பவியல் கொள்கை விளக்கக் குறிப்புகளை, அந்தந்த மாநில மொழிகளில் மொழி பெயர்க்க வேண்டியது இன்றியமையாததாகும். தமிழ்நாட்டிற்கான அறிவியல், தொழில்நுட்பவியல் கொள்கை விளக்கக் குறிப்பு மொழி பெயர்க்கப்படுவது இந்த வகையிலான ஓர் முயற்சியாகும்.

தமிழ்நாட்டில் அறிவியல், தொழில் நுட்பவியல் நிலை, நிறுவனங்கள் :

அறிவியல் தொழில் நுட்பவியல் கல்வி ஆராய்ச்சி நிறுவனங்கள் இம் மாநிலத்தில் ஆல்போல் தழைத்து வளர்ந்துள்ளன. அவற்றுள் பின்வருவன அடங்கும் :—

(அ) உயர் கல்வி நிறுவனங்கள் : அதாவது சென்னை, அண்ணாமலை, பாரதியார், பாரதிதாசன், அழகப்பா, மதுரை காமராசர், தமிழ்ப் பல்கலைக் கழகங்களும், அவற்றுடன்

இணைந்துள்ள பட்ட மேற்படிப்புக் கல்லூரிகளிலும் உள்ள இயற்கை, பௌளதீக, சமூக அறிவியல் துறைகள்;

(ஆ) சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரி உட்பட தமிழ்நாடு வேளாண்மைக் கல்லூரி, கோயம்புத் தூர், அண்ணா மலைப் பல்கலைக் கழக வேளாண்மைக் கல்லூரி, கோயம்புத் தூர் வனத்துறைக் கல்லூரி;

(இ) சென்னை, இந்தியத் தொழில் நுட்பவியல் நிறுவனம், சென்னை, அண்ணா பல்கலைக் கழகம், கோயம்புத் தூர், ஈரோடு, காரைக்குடி, மதுரை, சேலம், திருநெல்வேலி, திருச்சி ராப்பள்ளி, சிதம்பரம் ஆகிய இடங்களிலுள்ள பொறியியல் கல்லூரிகள்;

(ஈ) இம்மாநிலத்தில் மத்திய-மாநில அரசுகளால்நிறுவப் பட்டு நடத்தப்பட்டு வரும் ஆராய்ச்சி-வளர்ச்சி நிறுவனங்கள்;

(உ) தமிழ்நாட்டிலுள்ள, பொதுத்துறை, தனியார்த்துறை நிறுவனங்களைச் சேர்ந்த ஆராய்ச்சி-வளர்ச்சிப் பிரிவுகள்.

சாதனைகள் :

பல்கலைக் கழகங்களிலும், ஆராய்ச்சி முனைப்பாகவுள்ள தொழில்களிலும் அறிவியல்-தொழில்நுட்பவியல் ஆகியவற்றிற் கிடையே இணைப்புப் பாலமாக உள்ள அடிப்படை ஆராய்ச்சிப் பணி பல்கலைக் கழகங்களிலும் , அவற்றுடன் இணைக்கப்பட் டுள்ள பட்ட மேற்படிப்புக் கல்லூரிகளிலும் மேற்கொள்ளப் படுகிறது. இந்த வகையில் அண்மை ஆண்டுகளில் மேற்படிப்பு பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது நாம் முன்னேற்றப் பாதையில் பீடுநடை போட்டுச் செல்வதைக் காட்டு கிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் அதன் ஆராய்ச்சி நிலையங்களும் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அவற்றில் வெற்றியடைந்ததன் விளைவாக, நெல், சில சிறு தானிய வகைகள், பழங்கள், பருத்தி, நிலக்கடலை, காய் கறிகள், முட்டை, கோழி வளர்ப்பு, மீன் வளர்ச்சி, இறால் வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, ஆகியவற்றில் பல உயர் ரகங்கள் உருவாயின. பொறியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், விஞ்ஞானிகள் ஆகியோருக்குப் பயிற்சியளிப்பதில் பொறியியல் நிறுவனங்கள் பெரும்பணி ஆற்றியுள்ளன. மேலும் அவை, தொழில் ஆராய்ச்சி முயற்சிகளில் தொடர்ந்து முதன்மை நிலை யில் இருந்து வருகின்றன.

மாநில, மத்திய ஆராய்ச்சி அமைப்புக்கள், வீடு, சாலைகள், தோல் பொருள்கள், பாசனப் பயன்பாடு, நிலம், நீர் நிருவாகம் போன்ற பல் துறைகளின் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்துள்ளன.



பொதுத்துறை, தனியார்துறை நிறுவனங்கள் பல, அந்நிறு வனங்களில் உள்ள ஆராய்ச்சி-வளர்ச்சிப் பணி வசதிகளைக் கொண்டு, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள், உற்பத்தி முறைகள் ஆகியவற்றின் தரத்தை உயர்த்தியுள்ளன.

இம்மாநிலத்தில் அறிவியல், தொழில்நுட்பவியல் வளர்ச்சி, மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதுடன் தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துகிறது.

குறைபாடுகளும் தேவைகளும் :

இருப்பினும், பொருத்தமான அந்தந்த அறிவியல், தொழில் நுட்பவியல் நடவடிக்கைகளில், அறிவியலார் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் பொருட்டும், இதுவரையில் கவனிக்கப்படாத மிகமுக்கியமான பணிகளில் ஒரே சீரான அணுகுமுறையைப் பின்பற்றுவதும், இத்துறைகளை வலுப்படுத்தி அல்லது மாற்ற வேண்டிய பகுதிகள் பலவற்றைக் கண்டறிய வேண்டியது அவசியமாகிறது. இவ்விதம் அறிவியல்-தொழில் நுட்பத் திட்டங்கள் சமூகப் பொருளாதார முயற்சிகளுடன் (குறிப்பாக கிராமப் பகுதிகளைப் பொறுத்தவரையில்) ஒருங்கிணைந்து செயலாற்றுவதற்குப் பின்வரும் நடவடிக்கைகள் இன்றியமை யாதவையாகும் :—

*ஆராய்ச்சி-வளர்ச்சி நிறுவனங்கள், தொழில்களுக்கிடையே (குடிசைத் தொழில், சிறுதொழில், நடுத்தரத் தொழில், பெருந் தொழில்) தற்போதுள்ள தொடர்புகளை வலுப்படுத்துவதுடன், ஆராய்ச்சி-வளர்ச்சி நிறுவனங்களுக்கிடையே தொடர்புகளை உரு வாக்கி வளர்ப்பதும், ஊரக வளர்ச்சி, ஆராய்ச்சி-வளர்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ளும் துறை, தொண்டு, சமூக சேவையை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகள் ஆகியவற்றின் பிரச்சி னைகளும்.

*தொழில்நுட்ப உத்திகளின் நிலையை உயர்த்த குறிப்பாக தொழிற்சாலைக் கழிவுகளை பயன்படுத்துதல், சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாடு முதலியவற்றைப் பொறுத்தமட்டில், தற் போதுள்ள தொழில்களில், போதுமான, ஆராய்ச்சி வளர்ச்சி உத்திகளைப் பயன்படுத்துவதை உறுதி செய்தல்.

*தொழில் நுட்ப உத்திகளை பரவலாகப் பறிமாறிக் கொள் வதை ஊக்குவித்தல், அவ்வாறு செய்யப்படுமாயின் ஆராய்ச்சி யின் பலன்களை பெருவாரியான மக்கள் செயலுக்கு கொண்டு வருவார்கள்.

*ஆராய்ச்சிப் பலன்களை பயன்படுத்தும் அமைப்புகளுக்கு அவை, பரவலாகக் கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு, இந்நாட்டு ஆராய்ச்சி முடிவுகளையும் வெளிநாட்டில்

செய்யப்படும் ஆராய்ச்சி முடிவுகளையும் பொறுத்த மட்டில் (ஆராய்ச்சி முடிவுகள்) தகவல் சேகரிப்பு நிலையங்களை வலுப் படுத்தல் ;

*உற்பத்திப் பொருள்கள்/உற்பத்தி/ பணிகள் மேம்பாட்டிற் காக, ஆராய்ச்சி வளர்ச்சித் துறையில், முதலீட்டு அளவினை உறுதிப்படுத்தல். குறிப்பிட்டதொரு துறையில் நடைபெறும் பணி நடவடிக்கைகளுக்கு இணையாகப் புதிய தயாரிப்புப் பொருள் களிலும், செய்முறைகளிலும் வளர்ச்சி காணுதல்.

*அறிவியல் ஆராய்ச்சி உத்திகளுக்கான தேவை, உள்நாட்டு வல்லுநர் திறமையைப் பயன்படுத்திக் கொள்ளுதல் ஆகியவற் றில் காணும் பயனைக் கருத்திற் கொண்டு, அந்நோக்கத்தில் பல்வேறு துறைகளில் பின்பற்றும் அடிப்படையில் தற்போது உள்ள அமைப்புகள், சமூகப் பொருளாதாரக் கொள்கைகள் பற்றி ஆய்வு செய்தல்.

*ஒரே பணியை இரண்டு அமைப்புகள் செய்வதைத் தவிர்த்து, நிதிகளை உரிய உகந்த அளவிற்குப் பயன்படுத்தும் பொருட்டு, மாநில அமைப்புகளைச் சேர்ந்த அறிவியலாராய்ச்சித் துறைகளின் முயற்சிகளையும், அறிவியல் தொழிலாராய்ச்சி மன்றம் (C.S.I.R.) இந்திய வேளாண்மை ஆராய்ச்சி மன்றம் (I.C.A.R.), இந்தி மருத்துவ ஆராய்ச்சி மன்றம் (I.C.M.R.) போன்ற மத்திய அரசு அமைப்புகளின் முயற்சிகளையும் ஒருங்கிணைத்தல்.

*இம்மாநிலத்திற்கு சில தொழில்நுட்பவியல் துறைகளில் இயல்பாகவே சில அனுகூலங்கள் உண்டு. அவற்றைக் கண்ட றிந்து ஏற்றுமதித் துறையில் அதன் வளர்ச்சிகளைத் தீவிரமாக மேம்படுத்துதல்.

*அறிவினைப் பெற்றுக்கொள்வதிலும், அறிவியல், தொழில் நுட்பத் திறனை பெருக்கிக் கொள்வதற்கான வாய்ப்பினை உறுதி செய்வதில் உள்ள ஒத்துழைப்பு, வேளாண்மை, வெள்ளக் கட்டுப் பாடு, பாசனம், வானிலை ஆராய்ச்சி போன்ற களத்துறைகளுக்கு மிகவும் பயனுள்ளதாகும்.

*அறிவியல் உணர்வுகளையும், அறிவியல் கருத்துக்களையும் ஊரக, நகர்ப்புற பகுதி மக்களிடையே பரப்புதல்;

*பல்கலைக் கழகங்களிலும், மாநிலத்திலும் அறிவியல்-தொழில்நுட்பவியலில் மனித ஆற்றலை அவ்வப்போது மதிப்பீடு செய்தல் தேவையேற்படின், அதற்கேற்ப இத்தகைய மனித ஆற்றலை வளர்ப்பதற்கான திட்டங்களைத் தொடங்குதல்.



*பல்கலைக் கழகங்களிலும், மாநிலத்திலும் கல்வி, ஆராய்ச்சி வசதிகளை மதிப்பீடு செய்தல் ; இதன் மூலம் வளர்ச்சியில், தொய்வு காணும் பகுதிகளைக் கண்டறிவதுடன் இத்தகைய வசதி களைப் பெருக்குவதற்கு போதுமான அளவிற்கு மாநில அரசின் ஒத்துழைப்பு கிடைக்குமாறு உறுதி செய்தல்.

*மாநிலத்தின் வளர்ச்சி நடவடிக்கைகளில் காணப்படும் பிரச் சினைகளை கண்டறிந்து பலகலைக் கழகங்களிலும், ஏனைய, ஆராய்ச்சி வளர்ச்சி நிறுவனங்களிலும் ஆதரவு ஆராய்ச்சி அடிப் படையிலான ஆராய்ச்சித் திட்டங்களையும் ஏனைய நடவடிக்கை களையும் தொடங்குதல்.

நோக்கங்களின் முடிவும பயனும் : அறிவியல்-தொழில்நுட்ப வியல் கொள்கை, இரு முக்கிய நோக்கங்களைக் கொண்டுள்ளது ; அவையாவன :—

(அ) அனைத்து மக்களுக்கும், அதிலும் குறிப்பாக, கிரா மப்பகுதிகளில் உள்ள மக்கள், கிராமப்பகுதிகளில் பெரும்பான் மையாக உள்ள எளிய பாமர மக்கள் உட்பட, அனைத்து மக்களும் அறிவியல் அறிவு/ஆராய்ச்சி பெற்று, அதனால் பயன் படுத்துவதனால் கிடைக்கும் அனைத்துப் பயன்களையும் கிடைக் கச் செய்வதுடன், அதன் மூலம் அவர்களது வேலையில்லா நிலை மையினைப் போக்கி, அவர்களது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து, அவர்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி, அவர்களது முழு மனித ஆற்றலையும் புரிந்து பயன்படுத்துமாறு செய்ய வேண்டும்.

(ஆ) அறிவியல், தொழில்நுட்ப முயற்சிகளின் தரத்தை, மேம்படுத்தியும் அதன் அளவை விரிவுபடுத்தியும் சார்பு நிலையை வளர்ப்பதற்கான அறிவியல்-தொழில்நுட்ப ஆற்றலைப் பயன் படுத்திக் கொள்வது. இவ்வாறு அறிவியல்-தொழில்நுட்பத் திட் டங்களை சமூகப் பொருளாதாரத் திட்டங்களுடன் பிணைப்பது அவசியமாகும். இம்மாநிலத்தில் உள்ள உயர் கல்வி-ஆராய்ச்சி நிலையங்களை மேம்படுத்துவதற்கும், நமது உயர் கல்வி நிலை யங்களின் அறிவியல், தொழில்நுட்ப ஆற்றல், ஆராய்ச்சி ஆய்வு கூடங்கள், வடிவமைப்பு நிறுவன அமைப்புகள், உற்பத்தி முக வடிவமைப்புகள் ஆகியவற்றிற்கும் நடைமுறையில் இதனைப் பயன்படுத்துவோருக்கும் இடையிலே நன்கு வரையறுத்தத் தொடர்புகளை உருவாக்குவதற்கும் இந்த ஒருங்கிணைப்புப் பணியை வலுப்படுத்த வேண்டும்.

தமிழ்நாட்டில் ஆராய்ச்சி வளர்ச்சியின் நெறிமுறைக் கோட் பாடுகள் :—

இத்தகைய ஒருங்கிணைப்புப் பணியில், அறிவியலை, திரட்டிச் சேகரிக்க வேண்டிய களஞ்சியமாகக் கருத வேண்டும். அதாவது, வளங்களைப் பற்றிய அறிவே, புதுப்பிக்கக் கூடியவை, புதுப்பித்தல்

சாதாரண, தொழில் இயற்கைச் சூழலியல் மனித ஆற்றல் ஆகிய அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். தொழில்நுட்பவியல் என்பது, அறிவியலை உகந்த அளவிற்குப் பயன் தரும் வாய்ப்புகளைக் கொண்ட அளவு கோல், கருவி என்று பொருள்படும். அறிவியலும் தொழில் நுட்பவியலும் ஒன்று சேர்ந்தால் அறிவு எல்லைக் கடந்து தெளிவு பெற்ற பகுதிகளாக விளங்குகிறது வளர்ச்சி என்பது, வணிக ரீதியில் அல்லது சமூக ரீதியில் சாத்தியமாகக் கூடிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதாகும். ஆராய்ச்சி-வளர்ச்சியினை ஒருமைப்படுத்தக் கூடிய கொள்கைகள் சிலவற்றைத் தற்போது பார்ப்போம்.

மாநில ஆராய்ச்சி-வளர்ச்சித் திட்டத்தின் முதல் நெறிமுறைக் கோட்பாடு, இம்மாநிலத்தில் உள்ள அறிவியல் தொழில் நுட்ப வசதிகள் வளர்ச்சி, பரவியுள்ள தன்மையின் அடிப்படையில், அமைய வேண்டுமென்பதாகும். இதனை முதியோர் கல்வி, பயிற்சித் திட்டங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள் ஆராய்ச்சிக் கூடங்கள், அதன் விளக்கப் பண்ணைகள் முன்னேற்றத் திட்டங்கள், பொது, தனியார், கூட்டுறவு துறையின் ஆராய்ச்சிப் பிரிவுகள் ஆகியவற்றின் மூலமான ஆராய்ச்சி வளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் பொதுவான அறிவியல் தொழில் நுட்பவியல் வல்லுநர்களின் ஆற்றலைக் கொண்டு இவை நிறைவேற்றப்படுகின்றன.

அனைத்து ஆராய்ச்சி, வளர்ச்சித் திட்டங்களும், அடக்கவிலை பயன் உத்திகளைப் பயன்படுத்திக் கிடைக்கும் வளங்களையும் நிதி வாயில்களையும் பொதுவில் மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துவதாக இருக்க வேண்டும். என்பதே இரண்டாவது நெறிமுறைக் கோட்பாடாக அமையும், மாநிலத்தின் குறைந்த நிதி வாயில்களைக் கொண்டு மிகுந்த பயனடையும் வகையில் பயன்படுத்த நடத்தப்படுகிற சோதனைகள் உரியவாறு பயன்தருகின்றன. மூன்றாவது நெறிமுறைக் கோட்பாடு என்னவெனில் அனைத்து ஆராய்ச்சி வளர்ச்சித் திட்டங்களும் தமிழ்நாடு திட்டத்தின் நோக்கங்களையும் நிறைவேற்றுவதாக இருக்க வேண் வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில், மாநில ஆராய்ச்சி வளர்ச்சித் திட்டம் செய்ய வேண்டியது என்ன, வேளாண்மை, மீன்வளம், சர்க்கரை, சமையல் எண்ணெய்கள், துணி, கல்வி, சுகாதாரம், குடிநீர் வழங்கல், சிறிய குடிசைத் தொழில்கள் ஆகிய துறைகளுக்குத் தற்போது ஆராய்ச்சி வளர்ச்சிப் பாங்கில் துணையும் ஆதரவும் ஏதும் இல்லை. இந்தத் துறைகளில் பெருவாரியான ஏழை மக்களுக்குத் தேவையான பொருள்கள், வணிக வசதிகளை முழு அளவிலும் மேம்பட்ட வகையிலும் தயாரித்தளிப்பதற்கான இன்றியமையாத அடிப்படை வசதிகளை உருவாக்கித் தருவதில் தங்கள் கவனத்தை ஒருமுகப்படுத்துவதுதான் மாநில ஆராய்ச்சி திட்டத்திற்குத் தேவைப்படுவதாகும்.





நான்காவதான நெறிமுறைக் கோட்பாடு அறிவியல்-தொழில் நுட்பவியல் திட்டங்கள் பலதுறைகளுகிடையிலான தொடர்புடையதாக அமைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் ஆராய்ச்சி-வளர்ச்சித் திட்டங்கள் குறிப்பிட்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் நோக்கில் அமைந்திடப் பெறல் வேண்டும். புன்செய் பயிர் வேளாண்மையில் உயர் உற்பத்தி வேண்டுமெனில் அதற்கு வேளாண்மை அறிவியல், சமூக அறிவியல் ஆகிய இரு துறைகளும் கூட்டாக ஒருங்கிணைந்து ஆராய்ச்சி முறைகளை மேற்கொள்ள வேண்டும் ; இந்த முயற்சிகளின் விளைவாக ஒரு புறம் புன்செய் பயிர்களுக்குத் தகுந்த உயர் விளைச்சல் ரகங்களை உற்பத்தி செய்யும் தொழில் நுட்பவியலை உருவாக்க வேண்டும்; மறுபுறம் அவற்றை புன்செய் பயிர்கள் பயிரிடும் உழவர்களுக்கு விரைவாக குறைந்த பொருட் செலவில் வழங்க வேண்டும் ; உழவர் அதனை ஏற்கவும் வேண்டும் ; மேலும் சேமித்து வைத்தல், விற்பனை செய்தல் போன்ற ஏனைய இரண்டாவது கட்ட பிரச்சினைகள் முதலியவற்றிற்கான தீர்வுகளும் எடுத்துரைக்கப்பட வேண்டும் ; மீண்டும் கருப்பஞ்சாற்றுக் கசண்டின் மீதான ஆக்கபூர்வ ஆய்வு பணிக்கு இரசாயண தொழில் நுட்பவியல் கருவிகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது மட்டுமல்லாமல், விற்பனை, நிருவாக தொழில் நுட்பயுக்திகளும் குறிப்பாக உள்நாட்டு, வெளிநாட்டு அங்காடிகளை மதிப்பிட்டு அறிந்து, பயன்தரும் வகையில் விலை உறுதி செய்யப்படவும் வேண்டும். சமூக ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், பண்பாட்டு வளர்ச்சி ஆகியவை குறித்த இலக்குகளை எய்த சமூகவியல், உளவியல், அரசியல், வேளாண்மையியல், பொறியியல் ஆகிய துறைகளின், அறிவியல், தொழில் நுட்ப யுக்திகளும் பயன்படுத்தப்படல் வேண்டும். இதைப்போலவே பல்துறை அளாவிய பொறியியல் அறிவியல் அணுகுமுறைகள் நகர்மயமாதலை பரவலாக்குவதற்கு திட்டமிடுதல் தேவைப்படுகின்றன நகர் மயமாதலை பரவலாக்குதல் அல்லது குறைத்தல் என்பதே ஏழாவது திட்டத்தில் சிறிய நடுத்தர நகரங்கள் வளர்ச்சியென்று குறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சிறிய நடுத்தர நகரங்கள் உருவாவது பெரு நகரங்களை நோக்கி மக்கள் குடி பெயர்ந்து செல்வதைத் தடுப்பதற்கும் நகர்ப்பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் நிலப் பயன்பாடு உரிய அளவில் பயன்படுவதற்கும் இவை " எதிர்மின் காந்தங்களாகச் " செயல்படும்.

தொழில்-ஆராய்ச்சி-வளர்ச்சித் திட்டங்கள் அனைத்திற்கும் நிறுவன ரீதியான தொடர்புகள், அதனுடன் சம்பந்தப்பட்ட சக தொழில் பிரிவுகளுடன் இருக்க வேண்டுமென்பதும், புதிய ஆராய்சசி வளர்ச்சித் திட்டங்களைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட தொழில் துறையிலேயே அல்லது அதன் ஒரு பகுதியிலேயே இடம் பெற்றுள்ளவற்றிற்கும் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்பதே ஐந்தாவது நெறிமுறைக் கோட்பாடாகும். ஆராய்ச்சி-வளர்சசி நிறுவனங்கள் அனைத்தும் அவற்றிற்கு பணியாற்றுவதற்கென்றே அமைக்கப்பட்டுள்ள

தொழிற்சாலைகளுடனும், தொழில்களுடனும் நேரடித் தொடர்புகொண்டவையாக இருக்க வேண்டும்; இவ்வாறு இருக்க வேண்டுமெனில், சம்பந்தப்பட்ட வணிக நிறுவனங்கள் அவற்றின் நிருவாக அமைப்புகளிலும் திட்டக் குழுக்களிலும், பிரதிநிதித்துவம் பெற்றிருக்க வேண்டும்; தொழில் நிறுவனங்கள் அவற்றின் தொழில் நுட்பத் தேவைக்கு இந்நிறுவனங்களை பயன்படுத்திக்கொள்ளும் என்ற நிலை ஏற்படுகிறது. இவ்வகையில் இம்மாநிலத்தில் தொடங்க முயற்சியொன்று மேற்கொள்ளும் இரண்டாவது சாத்தியம் இருக்கிறது. கல்பாக்கம் அணுமின்சக்தி அமைப்பு, திருச்சி பாரத் கனரகமின்சக்தி சாதனங்கள் உற்பத்தி நிறுவனம், பூண்டி நீரியல்-நீரழுத்தவியல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம், மேட்டூர் சிலிக்கான் (கன்மம்) தொழிற்சாலை ஆகியவை ஆராய்ச்சி வளர்ச்சிக்கு முன் உதாரணங்களாக கண்டுபிடிப்பு, உற்பத்தி, விற்பனை ஆகியவற்றின் மொத்த ஏற்பாட்டின் ஓர் பகுதியாகவிளங்குகின்றன. இந்நிலையில் அவ்வுற்பத்தி முறையில் ஒரு பகுதியாக அமைவதால், அவற்றை உற்பத்தியுடன் இணைத்துப் பார்க்கின்ற அவசியம் இல்லை. துணித் தொழில் ஆராய்ச்சி-வளர்ச்சியைப் பொறுத்தவரை, குறிப்பாக இம்மாநிலத்திலுள்ள பெரும்பான்மையினரான ஏழை மக்களுக்கு தரமான துணியை, உற்பத்தி செய்வதைப் பொறுத்தவரை ஆராய்ச்சி-வளர்ச்சிப் பணி தமிழ்நாட்டின் துணித்தொழில் முனைப்பு ஏற்பாட்டின் ஒரு பகுதியாக இடம் பெறலாம். அதேபோன்று, சர்க்கரை உற்பத்தித் துறையிலும் புதியதோர் ஆராய்ச்சி-வளர்ச்சித் திட்டம் தொடங்கப்படலாம். அதற்கு இம்மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் ஒரு பகுதியேனும் நிதியுதவி செய்யலாம்.

இம்மாநிலத்திற்கான ஆராய்ச்சி-வளர்ச்சித் திட்டம், அதன் நிதிவரம்புகளைக் கருத்திற்கொண்டு முன்னுரிமை அடிப்படைகொண்டு செயல்படவேண்டுமென்பது ஆறாவது நெறிமுறைக் கோட்பாடாகும். மாநிலத் திட்டத்தைப் பொறுத்தவரை, அது தேசீயத் திட்ட அளவில் சில வரையறைகளுக்குட்பட்டதாக இருக்கிறது. இம்மாநிலத் திட்டத்தைப் பொறுத்தவரை அத்தகைய வரையுறைகள் குறைந்தபட்சம் இரண்டாகிலும் உள்ளதெனக் கூறலாம். முதலாவதாக நிதியுதவியைப் பொறுத்தவரை, நிதி ஆதாரத்தைத் திரட்டி இந்நாட்டில் ஒரு அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் பெருமொத்த தேசீய உற்பத்திப் பொருள் கணக்கில் ஒரு சதவீதத்தையேனும் பத்தாண்டு இறுதிக்குள் அதாவது ஏழாம் திட்டத்தின் இறுதிக்குள் வழங்குவது எனும் தேசீய அளவிலான முடிவின் அடிப்படையில் செயல்பட வேண்டியுள்ளது. இதற்கு நிதி ஆதாரங்கள் பெரும் பகுதியைத் திரட்டி மாநில அரசின் ஆராய்ச்சி-வளர்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்கும் அறிவியல்-தொழில்நுட்ப அடிப்படை வளர்ச்சிக்கு ஆதரவாக அமையவும், அந்நிதி ஆதாரத்தை மாநில அரசிற்குக் கிடைக்கச் செய்யும் பொறுப்பு மத்திய அரசினு



னுடையதாகும். அதற்கிணங்க, இத்திட்டத்திற்கான நிதியுதவி மத்திய அரசு 70 சதவீதமும், மாநில அரசுகள் 30 சதவீதமும் பகிர்ந்துகொள்ளும் வகையில் திட்டம் இருக்க வேண்டும். இரண்டாவதாக, வெளிநாட்டு தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்துவது பற்றிய இரண்டாம் கொள்கை மத்திய அரசு அளவில் முடிவு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். அது இந்நாட்டில் இல்லாத ஒன்றை தருவிப்பதாக இருக்க வேண்டும்; அவ்வாறு தருவிக்கப்படுகிற, அல்லது இறக்குமதி செய்யப்படுகிற பொருள்கள், அல்லது தொழில்நுட்ப யுக்திகளை அக்கு அக்காகப் பிரித்து, ஆய்வு செய்ய வேண்டும்; அவற்றை இந்நாட்டின் தொழில், வேளாண்மைத் தேவைகள், நிலைமைகள் ஆகியவற்றிற்கு ஏற்றவையாக மாற்றியமைக்க வேண்டும். இதில் பற்றுக் கொண்டுள்ள நிறுவனங்கமி ஆராய்ச்சி-வளர்ச்சித் திட்டத்தில் முதலீடு செய்ய வரி சம்பந்தப்பட்ட, வரி சம்பந்தப்படாத ஊக்கச் சலுகைகளுக்கு வகை செய்வதாக இருக்க வேண்டும். இந்நாட்டில் கிடைக்கின்றவற்றை உரிய வகையில் பயன்படுத்திக்கொள்பவர் அனைவருக்கும் பொருந்தக்கூடிய, தகவலளிப்பு ஏற்பாட்டுடன் கூடிய, இங்கு கிடைக்கின்ற இறக்குமதி மற்றும் உள் நாட்டுத் தொழில்நுட்ப அறிவுகள் அனைத்தையும் தன்னுள் கொண்டமைய தகவல் வங்கி ஒன்றை பராமரிப்பதற்கு வகை செய்வதாக இருக்க வேண்டும்; இந்நிலையில் ஆராய்ச்சி-வளர்ச்சி முயற்சிகளைத் திரும்பத் திரும்ப மேற்கொள்ளுவதால் ஏற்படும் பெருமளவு சக்தி விரயத்தை குறைக்க இயலும்.

மாநிலத்திட்டம் அனைத்திந்திய அறிவியல்-தொழில் நுட்பவியல் தேசியத் திட்டத்துடன் ஒருங்கிணைந்ததாக ஒன்றோடொன்று தொடர்புடையதாக இருக்க வேண்டும் என்பதுதான் ஏழாம் நெறிமுறைக் கோட்பாடு ஆகும். இவ்வகையில்தான் மாநில அரசின் அறிவியல், தொழில் நுட்பத் திட்டத்திற்கும், மத்திய அரசின் அறிவியல்-தொழில்நுட்பத் திட்டத்திற்குமிடையே மோதலோ முரண்பாடோ இல்லாத நிலை உருவாகும். மாநிலத் திட்டமானது அடிப்படை கோட்பாடுகளின் விளைவே ஆகும். அது திட்டவட்டமான மாநிலப் பயனுக்குரிய வகையில் அமைந்த தேசீயத் திட்டத்தில் முன்னுரிமைகளும், திட்டங்களும் கொண்டிருக்கும்.

அறிவியல், தொழில் நுட்பவியல் திட்டமிடல்—மாநில திட்டக்குழுவால் 1971-இல் அமைத்த மாநில அரசு "இம்மாநிலத்தின் நிதி ஆதாரங்களை மிகச் சிறந்த முறையிலும் சீரான முறையிலும் பயன்படுத்துகின்ற நீண்டகால திட்டமொன்றை வகுக்க வேண்டும்" என்று அதைக் கேட்டுக்கொண்டது. இம்மாநிலத்தின் பத்தாண்டுத் தொலை நோக்குத் திட்டத்தை வகுக்குமாறு விடுத்த இந்த கட்டளையின் ஒரு பகுதியாக 1973இல் அமைக்கப்பட்ட திட்டக் குழுவானது 1974—84 ஆண்டுகளுக்கென அறிவியல், தொழில் நுட்பவியல் திட்டமொன்றைத் தயாரித்து

அரசுக்கு அனுப்பியது. அறிவியலாளர் குழுவினரைக் கொண்டு இவ்வறிக்கையை நாளது வரையிலான புதுமைகளைக்கொண்டதாகத் திருத்தியமைக்க 1986இல் அரசு ஏற்பாடு செய்தது. அறிக்கையை மேற்கொண்டும் ஆராய்ந்து அரசு, தமிழ்நாடு மாநில அறிவியல்-தொழில் நுட்பவியல் மன்றம் ஒன்றை 1984 மார்ச்சில் அமைப்பதென முடிவு செய்தது. (அரசாணை எண். 382) இம்மன்றம் முதல் அமைச்சரை அல்லது அவருடைய பிரதிநிதியைத் தலைவராகவும், அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தரை துணைத் தலைவராகவும், இயற்கை, அறிவியல், பொறியியல், மருத்துவம், சமூக அறிவியல் ஆகிய துறைகளைச் சேர்ந்த அரசு செயலாளர்கள் தொழில் அதிபர்கள் ஆகியோர் அடங்கிய 30 பேரை உறுப்பினர்களாகவும் கொண்டது.

1973 ஆம் ஆண்டு முதலாம் அறிவியல் அறிக்கை பரிந்துரைத்த மற்றோர் அறிவியல் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. அது இயற்கையியல், அறிவியல், பொறியியல், மருத்துவத்துறை, சமூக அறிவியல் துறை வல்லுநர்களைக் கொண்டதாக விளங்கியது. இவ்வறிவியலாளர் மன்றம் 1978இல் ஏற்படுத்தப்பட்டது. அது அறிவியல் ஏடுகளை வெளியிடுவதிலும், கருத்தரங்குகள், விரிவுரைகள் ஆகியவற்றை நடத்துவதிலும் தீவிரப்பங்காற்றி வருகிறது.

தேசீய அறிவியல் ஆலோசனை மன்றம் அல்லது தேசீய அறிவியல் வல்லுநர் மன்றம் போல் அல்லாது, தமிழ்நாடு மாநில அறிவியல்-தொழில்நுட்பவியல் மன்றமும், தமிழ்நாடு அறிவியல் வல்லுநர் மன்றமும், இயற்கையியல் வல்லுநர்கள் சமூக அறிவியல் வல்லுநர்கள் ஆகிய இரு சாராரையுங்கொண்டு இயங்கி வருகிறதென்பது மாநில அமைப்புகளின் தனிச் சிறப்பாகும். ஏனெனில், அரசு வறுமைப் பிரச்சினையை நேரடியாகத் தீர்ப்பதற்கு அறிவியலையும், தொழில்நுட்பவியலையும் பயன்படுத்த விரும்புகிறது. இதில், தேசிய மாதிரி ஆய்வின் 32 ஆம் மாநாட்டில் கூறியபடியும், மாநிலத்திட்டக் குழுவின் ஆய்வுகளின் படியும் 1977–78 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் ஒரிசா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம், பீகார் ஆகிய மாநிலங்களுக்கு அடுத்தபடியாக அதாவது ஆறாவதாக வறுமையில் வாடும் மக்கள் மிக அதிகமாக உள்ளனர். இதுபோன்று, கேரளத்தில் வேலைவாய்ப்பின்மையின் சதவீதம் 26 ஆக இருக்க இரண்டாவதாக இம்மாநிலத்தில் வேலைவாய்ப்பின்மை 16 சதவீதமென்று தெரிவிக்கப்படுகிறது. 1983–84 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் வறுமை மேலும் மோசமாகி, பிகார், ஒரிசா, உத்திரப்பிரதேசம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு அடுத்தபடியாக ஐந்தாவது இடத்தை வகிப்பதாக தேசீய மாதிரி ஆய்வின் 38 ஆம் மாநாடு காட்டுகிறது.



தலைமைச் செயலகத்தில் அறிவியல்-தொழில் நுட்பவியலுக்கான மைய ஏற்பாடாக அரசு, 1982 ஆம் ஆண்டில் அறிவியல் தொழில் நுட்பவியல் துறையை ஏற்படுத்தியது. இத்துறை மத்திய அரசின் அறிவியல்-தொழில் நுட்பவியல் துறையுடனும் தமிழ்நாடு அறிவியல்-தொழில் நுட்பவியல் மாநிலக் குழுவுடனும் தொடர்பு கொள்வதற்கும் அரசு தீர்மானிக்கின்றவாறு அறிவியல் தொழில் நுட்பவியல் திட்டங்கள் சிலவற்றைச் செயல்படுத்தவும் ஏற்படுத்தப்பட்டது.

அறிவியல்-தொழில் நுட்பவியல் திட்டம் :

மேற்சொன்ன அடிப்படையில், இம்மாநிலத்தின் அறிவியல் தொழில் நுட்பவியல் திட்டம் வருமாறு :—

மாநில அரசு, தொடக்கப் பள்ளிகளிலும், உயர்நிலைப்பள்ளிகளிலும் பெருமளவில் அறிவியலைப் பயிற்றுவித்து, மாணவர்களை தேசிய அறிவியல் திறமைப் போட்டியில் பங்குபெற செய்யும் அறிவியலை மாநில முதியோர் கல்வியில் ஒரு பகுதியாகச் செய்வதோடு குறிப்பாக முதியோர் கல்வியல் அறிவியலை பெருமளவில் சேர்க்கும்.

இது இராமநாதபுரம் மாவட்ட குன்றக்குடியில் உள்ளதைப் போன்று கிராம அறிவியல் மன்றத்தை ஏற்படுத்துவதற்கு உதவுவதோடு, கிராமத்தில் பொது நூலக முறையை விரிவுபடுத்துவதற்கும் அறிவியல் கண்காட்சிகள், அறிவியல் பொருட்காட்சிகள், வினாடி வினா நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நடத்துவதற்கு தமிழ்நாடு அறிவியல், தொழில் நுட்பவியல் மையங்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கும், அறிவியலை பிரபலப்படுத்துவதற்கும், மக்களிடையே அறிவியல் உணர்ச்சியை மேம்படுத்துவதற்கும், உரிய வழிகளாக அறிவியல் அரும் பொருட்காட்சியகங்களை ஏற்படுத்தவும் உதவும். இது முக்கியமானதும், கடினமானதும் ஆகும். ஏனெனில் நம்முடைய பண்பாடு மனித இன நலக் கோட்பாடு நயம் மிக்கதும் இலக்கிய நயம் வாய்ந்ததும் ஆகும். நம்முடைய பண்பாட்டுச் சூழலும் அறிவியல் முறையில் அமைந்திருக்கவேண்டும். எனவே, நம்முடைய பண்பாட்டில் அறிவியலை பயன்படுத்துவதும், நம்முடைய அன்றாட கிராம நகர்ப் பகுதிகளின் தேவைகளைச் சமாளிக்கத் தொழிற் நுட்பவியலை பயன்படுத்துவதும் இத்திட்டங்களின் நோக்கமாகும்.

அரசு பாலர் பள்ளி நிலையிலிருந்தே வாழ்க்கைத் தொழில் சார்ந்த கல்விக்கு முந்தைய கல்வியையும், அறிவியல் கல்வியையும் கற்பித்து, வேளாண்மை தொழில் திறமைகளை மெம்படுத்துவதற்காக வாழ்க்கைத் தொழில் சார்ந்த அறிவியல், தொழில்

நுட்பக் கல்வி கற்பிப்பதைத் தீவிரப்படுத்தும் தமிழ் நாட்டில்
பல்கலைக் கழக ஆராய்ச்சி நிறுவன மேம்பாட்டின் ஒரு பகுதியாக
பல்கலைக் கழகங்களிலும், வேளாண்மை, அது தொடர்பான
வற்றிலும் பொறியியல் மருத்துவக் கல்வி ஆகியவற்றிலும்,
அறிவியலில் தனி பயிற்சி அளிக்கப்படும்.

இம்மாநிலத்தில்
ஆராய்ச்சி-மேம்பாடு முன்னுரிமைகள் : உயர்த்தவும்
வறுமையில் வாடும் மக்களின் வாழ்க்கை நிலையை நிலைமை
ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும், வேலைவாய்ப்பற்ற நிலையையும்
யையும் தகுதிக்குக் குறைவாக வேலை புரியும் அளித்து
குறைக்கவும், பின்வருவனவற்றிற்கு முன்னுரிமை செயல்படுத்தப்படும்.
ஆராய்ச்சி-மேம்பாட்டுத் திட்டங்கள் பகுதிகளில்
வளர்ச்சி வட்டாரங்கள் வாரியாக கிராம, நகர் காரணங்
வறுமை நிலையும் ஏற்றத்தாழ்வுகளும் நிலவுவதற்கான திட்டம்.
களை ஆராய்தல், கிராம மேம்பாடு ஒருங்கிணைந்த பயிற்சி
சுயவேலைவாய்ப்புக்காக கிராம இளைஞர்களுக்குப் திட்டங்களின்
யளிக்கும் திட்டம்; ஆகிய மத்திய அரசுத் ஆராய்
பயன்களையும் நிலச்சீர்திருத்தத்திட்டத்தின் பயனையும் துறை
தல் தொடக்க நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை உரு
களிலும், குடிசைத் தொழில்களிலும் வேலை வாய்ப்பை பகுதி
வாக்கும் தொழில் நுட்ப உத்திகளை ஆராய்ந்து, நகர்ப் வேலை
களில் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினர் படித்த கிராமப்
வாய்ப்பற்றோர் ஆகியோரின் சுயவேலை வாய்ப்புக்காக அற்றோர்
புறதேசிய வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலம் அரசுத்
வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டம் ஆகிய மத்திய
திட்டங்களைப் பயன்படுத்துதல்.

நெல் பருப்பு வகைகள் ஆகியவற்றின் வளர்ச்சிகளை மேம்
படுத்துவதற்கும், உயர் வகை அல்லாத தானியங்கள், எண்
ணெய் வித்துக்கள், பருத்தி ஆகியவை விளையும் பகுதிகளில்
புன்செய் சாகுபடிக்குத் தேவைப்படும் தொழில் நுட்பவியலை
மேம்படுத்தவும், வேளாண்மை அது தொடர்பான துறைகள்
ஆகியவற்றில் ஆராய்ச்சி செய்து, அதன் பயனை உழவர்களுக்கு
அளித்தல்.

கிராமப் பகுதிகளில் பால் வழங்குவதை அதிகரிக்கும் பொருட்டு
பால் தரும் கால் நடைகள் குறித்து ஆராய்ச்சி செய்தல். உள்
நாட்டு நீர்-நிலை; மீனளம்; கடல் மீன்ளம் குறித்தும், வேகமாக
வளரும் மர வகைகள் குறித்தும் ஆராய்ச்சி செய்தல். இந்த
ஆராய்ச்சி முடிவுகளை மீனவர் தேவைகளை நிறைவு செய்யவும்,
வனப் பகுதிகளின் தேவைகளை நிறைவு செய்யவும் பயன்
படுத்தல்.



பாசன வசதிகள் குறித்து கணக்கிட்டுப் பொறி மூலம் ஆராய்தல் நீர் வழங்குவதை அதிகரிக்கும் வகையில் பயன்படுத்தி விணான நீரை பயன்படுத்து பற்றியும் வண்டல் படிவது பற்றியும், கழிவு நீரை சுத்தப்படுத்தி மீண்டும் பயன்படுத்துவது பற்றியும், செயற்கை நீரூற்றுகள், நிலத்தடி நீர் ஆகியவற்றை பயன்படுத்துவது பற்றியும் ஆராய்தல்.

இம்மாநிலத்தின் இரும்புப் தாதுப் பொருள்கள், பழுப்பு நிலக்கரி அலுமினியம், கருங்கல் ஆகிய கனிவள வாயில்களையும் அவற்றின் பொருத்தமான பயன்களையும் ஆராய்தல்.

மாநிலத்தில் துணித் தொழில், ஆட்டோமோபைல் துணைப் பாகங்கள். சிமிண்டு பொறியியல் உற்பத்திப் பொருள்கள், சர்க்கரை, தோல், மின்னணுவியல் ஆகிய முக்கிய தொழில்களில் தொழில் நுட்பவியலை நாளது வரையிலான ஆக்குவதற்குரிய வழிவகைகளையும், தொழிலாளர்கள் பணிக்கு வராதிருத்தல், தொழிலாளர்கள் செய்த பணி அளவு ஆராய்தல்.

மாநிலத்திலுள்ள மின்னணுவியல், தொலைச் செய்தித் தொடர்பு ஆகிய பகுதிகளின் நிறுவன மேம்பாட்டை ஆராய்வதோடு; அறிவியல்-தொழில் நுட்பவியல் துறைகள் அனைத்திலும் கணக்கிட்டுப் பொறி பயன்பாட்டினைத் தீவிரப்படுத்துதல்.

மின் ஏற்பாட்டு முறைகளையும், பி.எல்.எஃப்-ஐ மேம்படுத்துவதையும் மின் அழுத்த மாற்றிகளில் ஏற்படும் மின் இழப்பைக் குறைப்பது பற்றியும், வணிக நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மின் சக்தியை சிக்கனமாகப் பயன்படுத்துவதையும் நவீன கால மின் சத்தியைப் பயன்படுத்துவதை மேம்படுத்துவது குறித்தும் ஆராய்தல் ;

சாலைகள், அவற்றின் சுமை ஏற்கும் திறன், நீர் தங்கும் சாலைகள் பாலங்களின் கட்டுமான அமைப்புகள், முன்னரே தயாரிக்கப்பட்ட அமைப்புகளைக் கொண்டு கட்டப்பட்ட மதகுகள் ஆகியவை பற்றியும் போக்குவரத்துப் பிரச்சினைகள், பற்றியும் பெருமளவில் வீட்டுவசதி அளிப்பதையும், நகர்ப் பகுதி மேம்பாட்டையும் ஆராய்தல், உடற்கூறுயியல் இனப் பெருக்கம் குறித்து உயிர்-மருத்துவ ஆராய்சி செய்தல், சில நோய்கள் குறித்து உயிர் வேதியியல் ஆய்வு செய்தல், கிராமப் பகுதிகளிலுள்ள கருவுற்ற பெண்களிடேயே நிலவும் இரத்தச் சோகை பற்றி ஆராய்தல், பள்ளிச் சிறுவர்கள் கருவுற்ற பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்குத் தேவைப்படும் ஊட்டச் சத்து குறித்து ஆய்வு செய்தல்.

[1986 ஏப்ரல் 17

பள்ளிகளின் அதிகாரத்தை உயர்த்துவது பற்றியும், கல்விகாகச் செலவிடுவதைக் கண்காணிப்பது பற்றியும். பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் அகியவற்றின் செயல் வரம்பு பற்றியும் அறிவியல் முறையிலான தேர்வு முறையைக் கொண்டுவருவது பற்றியும் ஆய்வு செய்தல்.

வேளாண்மை சார்ந்த அமைப்புகளையும் நிலச் சீரமைப்பை துரிநப்படுத்துவதற்கான வழிவகைகளையும் ஆய்வு செய்யல் ;

முன்னுரிமை வழங்கப்பட்ட வேண்டிய துறைகளான இந்த 13 விரிவான துறைகள் ஒவ்வொரு திட்டக் காலத்திற்கும் 5 அல்லது 6 பின்தங்கிய பகுதிகளை அரசு தெரிந்தெடுத்து, வரையறுக்கப்பட்ட பயன்களை எய்தும் அளவிற்கு கால அளவு குறிப்பிடப்பட்டுள்ள செயல் திட்டங்களை மேற்கொள்வதற்குரிய ஆதாரங்களை அரசு ஏற்படுத்தும். தமிழ் நாடு அறிவியல், தொழில் நுட்பவியல் மாநிலக் குழு இச்செயல் திட்டங்களை நிறைவேற்ற வளர்ச்சித் துறைகள், மாநில ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகிய இரண்டின் ஆதாரங்களைப் பயன்படுத்துவதற்கும் ஒரு துறை அல்லது நிறுவனத்தின் வரம்பிற்குள் வராத ஆராய்ச்சி மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வதற்குரிய ஆண்டுத் திட்டத்தின்கீழ் போதிய ஆதாரங்களை குழுவிற்கு கிடைக்கச் செய்வதற்கும், இச்செயல் திட்டங்களை மேற்கொள்ளும் துறையின், ஆராய்ச்சி நிறுவனத்தின் குறைவான ஆதாரங்களை நிறைவு செய்வதற்கும் அரசு உறுதி செய்யும். இச்செயல் திட்டப் பகுதிகளில், ஆராய்ச்சி-மேம்பாட்டுத் திட்டங்களை தனியார் துறைகள் மேற்கொள்ள குழு மேம்படுத்துவதற்கும், இந்நோக்கத்திற்காக ஆராய்ச்சி-மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ளும் தனியார் நிறுவனங்களுக்கு செயலாக்கம் அளிக்கப்படுவதற்கும் அரசு உறுதி செய்யும்.

சென்னை-600 005.
136424